# இங்கிலாந்து தேச சரித்திரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 FEB 1928
MADRAS

சைதாபேட்டை, மாடல் ஹைஸ்கூல் சரித்திராசிரியர்

**N. வாசுதேவய்யர் M.A., L.T.**

இயற்றியது

3823
942

சைதாபேட்டை, டீசர்ஸ் காலேஜ் பேராசிரியர்

ம-ள-ள-ஸ்ரீ

**C. N. ஏகாம்பர முதலியார் அவர்கள், M.A., L.T.**

எழுதிய முகவுரையுடன் கூடியது

*Revised Edition*

77564

S. கணேசன்,

திருவல்லிக்கேணி, சென்னை.

## FOREWORD

I have great pleasure in writing a foreword to Mr. Vasudeva Aiyar's *Text book of English History* in Tamil. Now that schools have begun to employ the vernaculars of the Presidency as the media of instruction, the need for text-books on English History written in these vernaculars is rapidly increasing. Mr. Vasudeva Aiyar's book is an attempt to meet this growing need. He has been engaged in teaching English History for a number of years to the higher classes of the High school and possesses an intimate knowledge of the requirements of these classes. A perusal of the book will show that the author has brought his long experience to bear on his task. While paying due attention to stirring events and striking personalities he has endeavoured to give sufficient prominence to the social and economic life of the people at different periods. The book is written in a simple and flowing style and contains a number of useful maps, pictures and genealogical tables. The author has done well in providing a list of problems and exercises at the end of each chapter. These are mean not merely to help the reader to master all the essential facts but stimulate his mental activity. The book is eminently suitable for school use, and I hope it may serve to awaken an intelligent interest in the subject.

C. N. EKAMBARA MUDALIAR, M.A.,L.T.,

*Ag. Lecturer in History, Teacher's College, Saidapet*

ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தி.

மேரி மகாராணி.

# பொருளடக்கம்


| அதிகாரம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | **I நார்மானியருக்கு முன் ஆட்சி** | |
| 1. | பிரிட்டனின் இயற்கை அமைப்பு ... | 1 |
| 2. | பிரிட்டானியர் ... | 4 |
| 3. | பிரிட்டனில் ரோமன் ஆட்சி ... | 6 |
| 4. | ஆங்கிலேயர் பிரிட்டனில் குடியேறுதல் ... | 12 |
| 5. | ஆங்கிலேயர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதல் ... | 16 |
| 6. | ஆல்பிரட் அரசனும் டேனர்களும் ... | 20 |
| 7. | டன்ஸ்டனும் ஆல்பிரட்டுக்குப் பின் வந்த அரசர்களும் ... | 26 |
| 8. | கான்யூட் ... | 30 |
| 9. | நார்மன் படையெழுச்சி ... | 33 |
| | **II நார்மன் ஆஞ்ஜெவின் அரசர்கள்** | |
| 1. | நார்மன் ஆட்சி.—வில்லியமும் அவன் குமாரர்களும் ... | 40 |
| 2. | நார்மன் அரசாட்சியிலிருந்த ஒரு ஆங்கில கிராமத்தின் நிலைமை ... | 48 |
| 3. | இரண்டாம் ஹென்றியும் தாமஸ் பெக்கட்டும் ... | 52 |
| 4. | சிங்க நெஞ்சுடைய ரிச்சர்டும் மூன்றாவது சிலுவைப் போரும் ... | 58 |
| 5. | மதிகெட்ட ஜானும் மகா சாஸனப்பத்திரமும் | 61 |
| 6. | மூன்றாவது ஹென்றியும் ஸைமன் டி மாண்ட்போர்டும் ... | 66 |
| 7. | முதலாவது எட்வர்டு ... | 70 |

| அதிகாரம் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 8. | மூன்ருவது எட்வர்டும் நூறு வருடப் போரும் ... | 77 |
| 9. | இரண்டாவது ரிச்சர்டும் பண்ணையாட்கள் கூலியாட்களின் கலகமும் ... | 82 |
| 10. | ஜாப்ரி சாஸர் ... | 86 |

## III லங்காஸ்தர் ஆட்சி

| | | |
| --- | --- | --- |
| 1. | நான்காவது ஹென்றியும் லாலர்டுகளும் ... | 93 |
| 2. | ஐந்தாவது ஹென்றி ... | 97 |
| 3. | ஆருவது ஹென்றி ... | 101 |
| 4. | ரோஸஸ் யுத்தங்கள் ... | 106 |

## IV டியூடர் அரசாட்சி

| | | |
| --- | --- | --- |
| 1. | ஏழாவது ஹென்றி .... | 113 |
| 2. | எட்டாவது ஹென்றியும் உல்ஸியும் ... | 116 |
| 3. | ஹென்றியும் மதச் சீர்திருத்தமும் ... | 120 |
| 4. | ஆருவது எட்வர்டு ; மேரி அரசி .... | 123 |
| 5. | எலிஸபெத்தும் ஸ்காத்லாந்து அரசி மேரியும் ... | 126 |
| 6. | எலிஸபெத்தும் ஸ்பானிஷ் ஆர்மடாவும் ... | 132 |

## V ஸ்டூவர்ட் ஆட்சி.

| | | |
| --- | --- | --- |
| 1. | முதலாவது ஜேம்ஸ் ... | 140 |
| 2. | முதலாவது சார்லஸும் உள்நாட்டுப் பெரும் போரும் ... | 144 |
| 3. | கிராம்வெல்—முடி சூடாமன்னன் ... | 153 |
| 4. | இரண்டாவது சார்லஸ் ... | 157 |
| 5. | இரண்டாவது ஜேம்ஸும் புகழ்பெற்ற புரட்சியும் ... | 161 |
| 6. | மூன்ருவது வில்லியமும் ஆங்கில வார்ஸுப்போரும் ... | 166 |
| 7. | ஆன் அரசி—ஸ்பெயின் வார்ஸுப்போர்... | 169 |

| அதிகாரம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | VI ஹானோவர் ஆட்சி | |
| 1. | முதலாவது ஜ்யார்ஜும் இரண்டாவது ஜ்யார்ஜும் | 178 |
| 2. | ஸர் ராபர்ட் வால்போல்—ஆங்கில முதல் மந்திரி | 180 |
| 3. | ஜ்யார்ஜ் II (தொடர்ச்சி) | 185 |
| 4. | மூன்றாவது ஜ்யார்ஜ்—அமெரிக்க சுயாதீனப் போர் | 190 |
| 5. | மூன்றாவது ஜ்யார்ஜ்—பிரெஞ்சுப்புரட்சி | 195 |
| 6. | ஆலைகளின் வரவு—தொழிற் புரட்சி | 207 |
| 7. | விக்டோரியா மகாராணி | 210 |
| 8. | கிரிமியன் யுத்தம் | 213 |
| 9. | பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அபிவிருத்தி | 216 |
| 10. | நூதன விஷயங்கள்—ராணியார் ஆட்சியின் சிறப்பு | 218 |
| 11. | ஏழாவது எட்வர்டும் ஐந்தாவது ஜ்யார்ஜும் | 221 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 FEB 1928
MADRAS

# 1. நார்மானியருக்கு முன் ஆட்சி

---

## அதிகாரம் 1

## பிரிட்டனின் இயற்கை அமைப்பு

இருப்பிடம்.—இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் இவைகள் அடங்கிய தீவிற்குப் பிரிட்டன் என்று பெயர். ஐரோப்பா கண்டத்திற்கு வடமேற்கே அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் இடையே அஃது உள்ளது. இங்கிலீஷ் சானல் எனும் கடற்பாகம் அதை ஐரோப்பா கண்டத்தினின்றும் பிரிக்கின்றது. நாலா பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருத்தலால் இத்தேசத்திற்கு அநேக நன்மைகள் உண்டு. சத்துருக்கள் இதன்மேல் எளிதில் படையெடுக்க முடியாதவாறு கடல் ஓர் அரணாக அமைந்துளது. ஆதலின் பிற நாட்டார் தங்கள் சேனைகளுடன் இதனுள் பிரவேசித்தல் எளிதன்று. சமீபத்தில் நடந்த ஜர்மன் மகாயுத்தத்தில், பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய தேசங்களில் ஜர்மானியர் எளிதில் புகுந்து நாசம் விளைத்தனர். ஆனால் பிரிட்டிஷ் தீவுகள் பகைவரது படை புகமுடியாதபடி கடலிடையே தனித்து நிற்பதால் சீர்குலையாது நின்றன.

2. பிரிட்டன் நாட்டுக்குக் கடலே ஒரு பெரிய அரணாக அமைந்திருப்பதாகக் கூறினோம். எனினும், கண்டத்தில் நடக்கும் யுத்தங்கள் இதை அணுகாதபடி, பிரிட்டன் ஐரோப்பாவிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தாலும், வியாபாரம் குடியேற்றம் முதலிய நன்மைகளை அடைவதற்குப் போதுமான அளவு சமீபத்தில் இருக்கிறது. பிரிட்டன் தேசத்து மேற்குப் பாகத்தில் மலைகள் அடர்ந்தும் கிழக்குத் தெற்குப் பாகங்களில் செழித்த சமவெளிகள் நிரம்பியும் இருக்கின்றன. இச்சமவெளிகளும், ஐரோப்பாவிலுள்ள சமவெளிப் பிர

தேசங்களும் ஒன்றுக்கொன்று எதிர் நோக்கி யிருக்கின்றன. மேலும், இப்பிரதேசங்களில் புரண்டோடும் பெரிய ஆழமான நதிகள் வட கடலில் (North Sea) கலக்கின்றன. ஆகையால் இரண்டிற்கும் இயற்கையான தண்ணீர் மார்க்கம் ஏற்படுகின்றது. இக்காரணம் பற்றியே பண்டைக் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து அனேக ஜாதியார் பிரிட்டனில் அடிக்கடி குடியேறி வந்தார்கள். வந்த புதிபவர், பழைய குடிகளை மேற்கு மலைப்பிராந்தியங்களுக்குத் துரத்தினர். இவ்விதம் பிரிட்டன் தேசத்தின் தென்பாகம் ஐரோப்பா கண்டத்துடன் நெருங்கிப் பழகி வந்ததால் வியாபாரம், கல்வி, நாகரிகம் முதலியன மேன்மேலும் விருத்தியடையலாயின.

3. சீதோஷ்ண நிலை.—பிரிட்டன் 50°—60° அக்ஷ ரேகைக்கு மத்தியில் இருப்பதால், அது சம சீதோஷ்ண நிலையை அடைந்திருக்கிறது. இங்கு உள்ள மனிதர் உஷ்ண தேசங்களில் வசிப்பவர்களைப் போல் வேலை செய்து சீக்கிரத்தில் களைப்படைவதுமில்லை; குளிர் மண்டலத்தில் வாழும் மாந்தரைப்போல் உணவிற்கு வருந்துவதுமில்லை. இத்தேசத்திலுள்ள ஜனங்கள் எப்பொழுதும் சுருசுருப்புள்ளவர்களாகவும், வல்லமை மிகுந்தவர்களாகவும் இருப்பர். ஆதலின் கடினமான வேலைகளையும் ஆயாசமின்றி இவர்கள் செய்து முடிப்பர்.

4. மேலும் இத்தேசத்திற்குச் சமீபத்தில் சமுத்திரம் இருப்பதாலும், கல்ப் ஸ்ட்ரீம் (Gulf Stream) என்னும் உஷ்ண நீரோட்டம் இதன் அருகிற் போவதாலும், குளிர் காலத்தில் இங்கே குளிர் குறைந்து மிதமான வெப்பம் பொருந்தியிருக்கும். இந்நாட்டின் நதிகளிலும் குடாக்களிலும் உள்ள நீர் உறைவதில்லை; ஆகையால் போக்குவரவு, வியாபாரம் இவை இடையூறின்றி நடைபெறுகின்றன. இதே அக்ஷரேகையில் உள்ள ஐரோப்பா கண்டத்துத் தேசங்கள் கோரமான குளிரினால் பீடிக்கப்படுகின்றன. அங்குள்ளோர் குளிர்காலத்தை நினைத்தாலும் அவர்களுக்கு நடுக்கம் எடுக்கும்.

5. கடற்கரை.—பிரிட்டன் தேசத்தின் கடற்கரை நீண்டதாகவும் பல பிளவுபட்டதாகவும் இருக்கிறது. ஆதலின் அங்கு அநேக இயற்கைத் துறைமுகங்களும் அனேக துறைமுகப் பட்டினங்களும் உண்டாகிவிட்டன. ஆங்கிலேயருக்குப் படகுகளில் ஏறிக் கடலில் சென்று அலைந்து திரிவதில் ஆசை அதிகம்; தங்கள் விடுமுறை நாட்களை அவர்கள் இவ்விதமே கழிப்பார்கள்; இன்னும் சிலர் வடகடலில் மீன் பிடிக்கப் புறப்படுவார்கள். இவ்விதம் பாலியத்திலிருந்தே இவர்கள் சமுத்திரத்திற் போகப் பழகுகிறபடியால் சிறந்த மாலுமிகளாய் விளங்குகின்றனர். அன்றியும், இத்தீவு பழைய உலகத்திற்கும் புதிய உலகத்திற்கும் மத்தியில் இருப்பதால், வியாபாரத்திலும் குடியேற்றத்திலும் இந்நாட்டினர் மேன்மை யடைந்துளர். உலகத்தில் சிறந்த கப்பற்படை யுடையது இந்நாடே. ஆகையால் ஆங்கிலேயர் உலகெங்கும் சென்று அனேக தேசங்களை வென்று உலகத்தில் மூன்றில் ஒரு பாகத்தைத் தங்கள் ஆட்சியில் கொணர்ந்து விட்டார்கள்.

## அப்பியாசங்கள்

1. சீதோஷ்ண ஸ்திதி, கடற்கரை, இவை சம்பந்தமாகப் பிரிட்டனையும் இந்தியாவையும் ஒப்பிடுக.

2. படத்திலிருந்து பிற்கூறியவைகளைக் கண்டுபிடிக்க:—

i வடகடலில் விழும் பெரிய நதிகள்.

ii பிரிட்டனிலுள்ள குடாக்களும், நதியின் முகத்துவாரங்களும், முக்கிய துறைமுகப் பட்டினங்களும்.

iii பிரிட்டன் இருக்கும் அக்ஷரேகையில் உள்ள ஐரோப்பா கண்டத்து மற்றைத் தேசங்கள்.

அதிகாரம் 2

## பிரிட்டானியர்

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பிரிட்டன் தேசத்தில் கெல்ட் (Celt) என்னும் ஜாதியார் குடியிருந்தனர். இவர்களுக்கு முன்பு, ஐபீரியன் அல்லது குகை மனிதர்கள் என்ற வேறொரு ஜாதியார் குடியிருந்ததாகவும், அவர்கள் காடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்ததாகவும், சில சரித்திர நூலாசிரியர் கருதுகின்றனர். ஆனால் நமக்கு அவர்களைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லை. ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) எழுதிய குறிப்பிலிருந்தும், பூமியில் புதைந்து கிடக்கும் ஆயுதங்கள், ஆபரணங்களிலிருந்தும் கெல்ட் சாதியினரைக் குறித்து நாம் நன்கு அறிகிறோம்.

2. கெல்ட் ஜாதியார் இந்தியாவிற் குடியேறின ஆரியர்களை அனேக விதத்தில் ஒத்திருந்தார்கள். தென் பிரிட்டனில் குடியிருந்த கெல்டுகளுக்குப் பிரிட்டானியர் என்ற பெயர் வழங்கலாயிற்று. இது காரணமாகவே இத்தீவு பிரிட்டன் எனும் பெயர் பெற்றது. வடக்கே இருந்தவர்களுக்குப் பிக்ட் என்றும், அயர்லாந்தில் இருந்தவர்களுக்கு ஸ்காட் என்றும் பெயர் வழங்கலாயிற்று.

3. பிரிட்டானியர் நாகரிகம்.—தென் பாகத்தில் குடியிருந்த பிரிட்டானியர் ஐரோப்பா கண்டத்திற்குச் சமீபத்தில் இருந்ததால் மற்றைக் கெல்டுகளைக் காட்டிலும் நாகரிகமுற்றிருந்தனர்; தற்காலம் பிரான்ஸ் என்று சொல்லப்படுகிற தேசத்திலிருந்த கால்ஸ் என்பவர்களோடு அவர்களுக்குப் பழக்கம் மிகுதி. பிரிட்டானியர் கால் (Gaul) தேசத்துடனும், ரோமாபுரியைப் போன்ற தூர தேசங்களுடனும், வியாபாரம் செய்து வந்தனர். அவர்களது முக்கிய வியாபாரச் சாமான் வெள்ளீயம் (Tin). அது காரன்வால் சுரங்கங்களில் ஏராளமாக அகப்பட்டது. பிரிட்டானியர்கள் காடுகளை

அழித்து நாடாக்கியும், நிலத்தை பண்படுத்தியும், ஆட்டு மந்தைகளை வளர்த்தும் வாழ்ந்து வந்தார்கள். ஆடுகளின் ரோமத்திலிருந்து கம்பளி உடைகள் நெய்து அவர்கள் உடுத்துக்கொண்டார்கள் ; அனேக உலோகங்களைச் சுரங்கங் களிலிருந்து வெட்டி யெடுத்து, அவைகளினின்றும் ஆயுதங் களையும் மற்றைக் கருவிகளையும் செய்ய அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

4. பிரிட்டானிய ராஜ்யங்களும் அவைகளுள் போரும்.—அக்காலத்தில் பிரிட்டன் அனேக சிறிய இராஜ்யங்க ளாகப் பிரிந்திருந்தது. அவைகள் ஒன்றுக்கொன்று அடிக் கடி சண்டை தொடுத்து வந்தன. பிரிட்டானியர்க்குச் சண்டையிடுவதில் அதிக பிரியம். பகைவர்கள் கண்டு பயந் தோடுமாறு அவர்கள் உடலில் வெவ்வேறு வர்ணங்களைப் பூசிக்கொண்டு போருக்கு வருவது வழக்கம். அவர்களு டைய முக்கிய ஆயுதங்கள் வில், அம்பு, ஈட்டி கோடாரி முத லியன. தனிகராயின் குதிரை கட்டிய இரதங்களில்ஏறியுத்தத் திற்குச் செல்வார்கள். சேனையில் முக்கிய பாகம் காலாட் படையேயாம். அண்டை அயலிலுள்ள வேறு ஜாதியார் தம்மைப் பகைத்து வந்து தாக்காவண்ணம், மண் சுவர்களால் ஆகிய கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அவற்றில் வாழ்ந்து வந்தார்கள். அம் மண்கோட்டைகளுக்கு டன்ஸ் (Duns) என்று பெயர்.

5. பிரிட்டானியர் மதம்.—பிரிட்டானியர் ஆரியர்களைப் போலவே அனேக தெய்வங்களைத் தொழுதார்கள். அவர் களுடைய குருமார்களுக்கு ட்ரூயிட்ஸ் (Druids) என்று பெயர். அக்குருக்கள் நியாயாதிபதிகளாகவும், கவிகளாகவும், துதி பாடகர்களாகவும் இருந்து வந்தார்கள். அவர்களது பாடல்கள், வீரர்களை யுத்தகளத்தில் உற்சாகப் படுத்தும். ஆனால், நரபலியிடும் கொடிய வழக்கம் அவர்களிடம் இருந் தது. அதற்காக அவர்கள் அச்சமயங்களில் ஓக் (Oak) என்னும் மரத்தின் அடியில் கூடுவது வழக்கம். இந்துக்கள் அரசமரத்தை மேன்மையாகக் கருதுவதுபோலப் பிரிட்டா

னியர் ஓக் மரத்தைப் புனிதமாகக் கருதினர். அம் மரத்தில் வளரும் மிஸல்டோ (Mistletoe) என்னும் புல்லுருவியை, நாம் வில்வத்தையும் துளசியையும் மதிப்பதுபோல உயர்வாக மதித்து வந்தார்கள். அவர்கள் அதை முதன் முதலில் காணுங்கால், ஒரு திருவிழா நடத்துவார்கள். ஆரியர்களைப் போலவே அவர்களும் பிணங்களை எரிப்பது வழக்கம். ஆனால், சில சமயங்களில் சவங்களை ஆயுதங்களுடன் புதைத்து வந்ததாகச் சில சரித்திராசிரியர் அபிப்பிராயப் படுகின்றனர். பிரிட்டானியருடைய நாகரிக நிலை, கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பு இங்ஙனம் இருந்தது.

### அப்பியாசங்கள்

1. பிரிட்டானியர்களைப் பற்றிக் கூறும் ஆதாரங்கள் எவை?

2. பிரிட்டானியருடைய முக்கியமான வழக்கங்கள் யாவை?

3. பிரிட்டானியர்களுக்கும் ஆரியர்களுக்கும் உள்ள ஒற்றுமைகளை எழுதுக.

4. டுரூயிட்ஸ் என்பார் யாவர்? அவர்களைப் பிரிட்டானியர் எங்ஙனம் மதித்து வந்தனர்?

---

## அதிகாரம் 3

# பிரிட்டனில் ரோமன் ஆட்சி

**ஸீஸரின் படையெழுச்சிகள்.**—பண்டைக் காலத்தில் ரோமாபுரி உன்னதமான நிலையில் இருந்தது. மத்திய தரைக்கடலைச் சுற்றியுள்ள தேசங்கள் அனைத்தும் ரோமாபுரிக்கு அடங்கி இருந்தன. கி. மு. முதலாவது நூற்றாண்டின் மத்தியில் ஜூலியஸ் ஸீஸர் என்னும் பெயர் பெற்ற ரோம தளகர்த்தர் கால் என்னும் தேசத்தை

ஜயித்தார். கால் மரபினர் தங்கள் இனத்தைச் சேர்ந்தவராதலால், அவர்களுக்குப் பிரிட்டானியர் உதவி புரியலாயினர். அதனால் பிரிட்டானியர்மீது கோபங்கொண்ட ஸீஸர் பிரிட்டன்மீது இருமுறை படை எடுத்தார். ஸீஸர், பிரிட்டனில் புகாதபடி பிரிட்டானியர் எவ்வளவு தடுத்தும் அது பயன்படவில்லை. ஆகவே, ஸீஸர் பிரிட்டன் நாட்டின் தென்பாகத்தில் இருந்த அரசனைத் தோற்கடித்து அவனைக் கப்பம் கட்டும்படி செய்து ரோமாபுரிக்குத் திரும்பிவிட்டார். தன் தேசத்திற்குத் திரும்பிய ஸீஸர் நீண்டகாலம் வாழவில்லை. ரோமாபுரி வாசிகளில் சிலர் சதியாலோசனை செய்து ஸீஸரைக் கொன்றார்கள். ஸீஸர் மாண்ட பின்னர் ஒரு நூற்றாண்டு வரையில் பிரிட்டானியர் பராதீனப்படாமல் சுவாதீனம் பெற்று வாழ்ந்தனர்.

2. கி. பி. 43-ம் ஆண்டில் கிளாடியஸ் (Claudius) எனும் ரோமன் சக்கரவர்த்தி பிரிட்டனை ஜயிக்க விரும்பினான். பிரிட்டானியர் வெகு காலமாகக் கப்பம் கட்டவில்லை யென்னும் காரணங்கொண்டு அச் சக்கரவர்த்தி ரோம தளகர்த்தர்களைப் பெரும் படையுடன் அத்தேசத்திற்கு அனுப்பினான். அவர்கள் சிறிது சிறிதாகப் பிரிட்டனை ஜயிக்க ஆரம்பித்தனர். முதலில் தென் பாகத்தை வென்று, அவ்விடத்தில் காமுலோடனம் (Camulodanum) என்னும் ஊரை ஏற்படுத்தினார்கள்.

3. பிரிட்டானியர் ரோமானியர்களுடன் சண்டையிடாது எளிதில் கீழ்ப்படியவில்லை. காரடேகஸ் (Caratacus) என்னும் பிரிட்டானியத் தலைவன் வெகு காலம் ரோமன் தளகர்த்தர்களை எதிர்த்துப் போர் புரிந்தான். முடிவில் அவன் தோல்வியுற்று மேற்கு மலை நாட்டின்கண் ஓடி ஒளிந்து கொண்டான். ஆனால் ரோமானியர் அவனை விடாது பின்பற்றிக் கைதியாக்கி ரோமாபுரிக்குக் கொண்டு போய், ரோமன் சக்கரவர்த்தி முன்னிலையில் நிறுத்தினர். ரோம வேந்தன் அவன் வீரதீரத்தை வியந்து, அவனுக்கு மரண தண்டனை விதியாமல் விடுத்தனனேனும் பிரிட்

டனுக்குத், திரும்பிப்போக அவனுக்கு அனுமதி அளிக்கவில்லை.

4. போவடீஸியாவின் (Boadicea) கலகம்.—பிரிட்டனின் வடக்கு பாகத்திலும் காலக்கிரமத்தில் ரோமானியரின் கொடி பறக்கலாயிற்று. டுரூயிட்ஸ் குருமார்களால் ரோமானியர்களுக்கு அதிக தொந்தரவு ஏற்பட்டது. அவர்

பொவடீஸியா

களை அடக்க எண்ணி ரோமன் தளகர்த்தன் ஒருவன் 'மோனா' என்னும் தீவிற்குப் போய் அவ்விடத்திருந்த குருமார்களைக் கொன்றொழித்தான். பிரிட்டானியர் அது கேட்டு மனம் புழுங்கினர். மற்றும் ரோமன் கவர்னர்கள் பிரிட்டானியரிடம் அன்பு காட்டி, அவர்கள் ஆதரவைப் பெறுது கொடுங்கோல் அரசர்களைப்போல் ஆண்டுவந்தனர். ஆகவின்

பிரிட்டானியக் குடிகள், ரோமன் தளகர்த்தர்கள் இல்லாத சமயம் பார்த்துக் கலகம் செய்தனர். பொவடீஸியா என்னும் அரசிதான் கலகத் தீயை முதலில் மூட்டினுள். அவள் சேனையொன்று திரட்டி காமுலோடனம் என்னும் ரோமன் பட்டணத்தை எதிர்த்து, அங்குள்ள சுமார் 70,000 ரோமானியர்களை வாளுக்கு இரையாக்கினள். இப்படு கொலையைக் கேள்வியுற்ற ரோமன் தளகர்த்தன் தெற்கே ஓடி வந்து, பிரிட்டானியர்களை எதிர்த்தான். இருவருக்கும் கோரமான யுத்தம் நிகழ்ந்தது. அந்த யுத்தத்தில் பொவடீஸியா கவசம் அணிந்து போர்க்கோலம் பூண்டு ரதத்தில் ஏறிச்சென்று வீராவேசத்துடன் போர் புரிந்தாள். ஆயினும் ரோமானியர் படை, யுத்தத்தில் நற்பழக்கமும் ஆயுதப் பயிற்சியும் பெற்றிருந்தமையால், பிரிட்டானியர் தோல்வியுற நேர்ந்தது. அஞ்சா நெஞ்சுடன் அமர் புரிந்த வீரமாது உயிரினும் மானமே சிறந்ததெனத் துணிந்து விஷத்தைப் பருகி ஆவி நீத்தாள்.

5. அக்ரிகோலாவின் ஆட்சி.—இங்ஙனம் ரோமானியர் பிரிட்டன் முழுவதையும் வென்றனர். ரோமன் ஆட்சி பிரிட்டனில் 300 வருஷங்கள் வரைக்கும் நிலைத்திருந்தது. ரோமன் கவர்னர்களுள் மிகவும் பிரசித்திபெற்ற ஜூலியஸ் அக்ரிகோலா (Julius Agricola) என்பான் பிரிட்டானியர்களிடம் மிகுந்த பக்ஷம் பாராட்டினன். பிரிட்டானியர் ரோமானியரின் வழக்கங்களைச் சிறிது சிறிதாகக் கைக்கொள்ளலாயினர். வடக்கேயிருந்த பிக்ட்ஸ் என்னும் முரட்டு ஜாதியார் அடிக்கடி நாட்டில் புகுந்து எதிர்க்காதபடி பர்த் (Firth of Forth) குடாவிலிருந்து கிளைட் (Clyde) குடாவரையில் பல கோட்டைகளைத் தொடர்ச்சியாக அமைத்து வைத்தான். வெகு காலங் கழித்து அவைகளைச் சேர்த்து ஒரு சுவர் எழுப்பப்பட்டது. அவன் காலத்திற்குப் பிறகும் ஸால்வே மாஸிலிருந்து, டைன் நதிவரையில் மற்றொரு சுவரும் கட்டப்பட்டது. இதனுல் பிரிட்டன் உள்நாட்டுச் சண்டையின்றி அமைதியுற்று இருந்தது.

6. ரோமன் ரஸ்தாக்கள். — கொஞ்ச காலத்திற் கெல்லாம் பிரிட்டானியர் ரோமானியரை வெறுப்பதை விட்டு அவர்களுடன் பட்டணங்களில் சேர்ந்து வசித்துவரலாயினர்; ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போவதற்குச் சௌகரியமாக அனேக ரஸ்தாக்களை அமைத்தனர். அவைகளுள் முக்கியமானது வாட்லிங் ஸ்ட்ரீட் (Watling street) என்பது. அது டோவரிலிருந்து லண்டன் வழியாகச் செஸ்டர் என்னும் பட்டணம் வரையில் செல்லும். இந்த ரஸ்தாக்கள் ஒன்று கூடுமிடத்து ரோமானியர் சில சேனைப் பகுதிகளையும் இருத்தி வைத்தனர். ரோமானியர்கள் அமைத்த ரஸ்தாக்களும் சுவர்களும் அழிந்து கிடப்பதை இன்றும் காணலாம்.

7. ரோமன் ஆட்சியால் விளைந்த நன்மைகள் பலவாகும்; காடழித்து நாடாக்கிப் பூமியைப் பண்படுத்திப் பயிரிடும்படி செய்தனர். 'ஐரோப்பாவின் களஞ்சியம்' என்னுமாறு அக்காலத்தில் பிரிட்டனில் தான்யம் மிகுதியும் விளைந்தது. ரோமானியர் பாஷையாகிய லாடினைப் (Latin) பிரிட்டானியரில் பெரும் பான்மையோர் கற்றுக்கொள்ள முடியவில்லை. ரோமானியர் தமது கிறிஸ்தவ மதத்தைப் பிரிட்டனில் பரவச் செய்தார்கள். சொற்ப காலத்தில் பிரிட்டானியரும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவலும் நரபலி முதலிய கொடிய வழக்கங்கள் அகன்று பிரிட்டானியர் அதிக நாகரிகமடைந்தனர்.

8. ஐந்தாவது நூற்றுண்டின் துவக்கத்தில் ரோமன் ராஜ்யத்தை காத் (Goth) என்னும் முரட்டு ஜாதியார் எதிர்த்து கி.பி. 410-ம் வருஷம் ரோமாபுரியை அழித்தனர். ஆகையால் ரோமானியர் தமது தேசத்தைக் காப்பாற்ற வேண்டி எல்லாச் சேனைகளுடன் பிரிட்டனை விட்டுப்போக நேரிட்டது. அவர்கள் விட்டுப்போனதைக் குறித்துப் பிரிட்டானியர் மிகவும் துயருற்றனர். ரோமானியர் விட்டு நீங்கியதும் அயல் ஜாதியார் பிரிட்டானியருடன் சண்டை தொடுத்தனர். நாட்டில் எங்கும் போரும் கலகமும் முன்போல்

ஆரம்பித்தன. ஆகையால் ரோமானியர் அரசு இல்லாதது பிரிட்டானியர்க்குப் பெருந் துன்பமாகவே முடிந்தது.

அப்பியாசங்கள்

1. ரோமானியர் ஆளுகையினால் பிரிட்டானியர்கள் அடைந்த நன்மைகள் யாவை?

2. பிரிட்டன் தேசத்துப் படம் ஒன்று வரைந்து, அதில் ரோமானியர்கள் அமைத்த ரஸ்தாக்களையும், சுவர்களையும், பட்டணங்களையும் குறிக்க.

3. ரோமானியர்களை எதிர்த்த பிரிட்டானியத் தலைவர் யாவர்? அவர்கள் ஏன் எதிர்த்தனர்?

---

அதிகாரம் 4

## ஆங்கிலேயர் பிரிட்டனில் குடியேறுதல்

ஆங்கிலேயர் டியூடானிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் ஜூட்ஸ், ஆங்கில்ஸ், ஸாக்ஸன்ஸ் (Jutes, Angles, Saxons) என்று மூன்று பிரிவினராக ஜர்மனியின் வட பாகத்தில் வசித்து வந்தார்கள். ரோமானிய நாகரிகம் அப்பாகத்தில் பரவாதபடியால் அவர்கள் முரடர்களாகவும் கல்வியில்லாத மூடர்களாகவும் இருந்தனர். அவர்கள் ஹீதன் மதத்தைச் சேர்ந்தவர்கள். ஓடின், தார் (Woden, Thor) என்னும் தெய்வங்களை அவர்கள் வணங்குவது வழக்கம். அத்தெய்வங்கள் பெயரைக்கொண்டே வாரங்களுக்கு ஆங்கிலப் பெயர்கள் உண்டாயின. யுத்தத்தில் இறந்த வீரர்கள் வால் காலா என்னும் சுவர்க்கத்தை அடைவர் என்பது அவர்களது நம்பிக்கை. அவர்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் ஒன்றும் விளைவதில்லை. ஆதலின் அவர்கள் அடிக்கடி அயல் நாடுகளில் புகுந்து கொள்ளையடிப்பது வழக்கம். ரோமானியர் பிரிட்டனை ஆளும்போது இந்த உபத்திர


ஸ்ட்ராத் கிளைட்
நார்தம்பிரியா
யார்க்
மெர்ஸியா
செஸ்டர்
வேல்ஸ்
ஈஸ்ட்
ஆங்கிலியா
வெஸ்ஸெக்ஸ்
கெண்ட்
ஸஸ்ஸெக்ஸ்
காரன்வால்

சப்த இராஜ்யங்கள்

வத்திற்காகவே ஸாக்ஸன் கரைப் பிரபு (Count of the Saxon shore) என்னும் உத்தியோகஸ்தரை நியமித்துக் காத்து வந்தனர். ரோமானியர் பிரிட்டனை விட்டுப் போன பிறகு, ஆங்கிலேய ஜாதியார் அடிக்கடி கொள்ளை யடிக்கப் பிரிட்டனுக்குள் நுழைந்தனர். தாம் வாழும் பிர தேசத்தைவிட இந்தப் பிரிட்டன் வசிக்க யோக்கியமாயிருப் பதை அவர்கள் கண்டு அவ்விடத்திலேயே தங்கி நிலைத் திருக்க ஆரம்பித்தனர்.

2. இப்புது ஜாதியார் பிரிட்டனில் முதன் முதல் குடி யேறின விதத்தைப் பற்றி ஒரு கதை உண்டு. பிக்ட், ஸ்காட் என்கிற ஜாதியாரால் பீடிக்கப்பட்ட வார்டிஜர்ன் (Vortigern) என்னும் பிரிட்டானிய அரசன், அவர்களைத் துரத்தி யடிப்பதற்காக ஜுட் என்பவர்களுடைய உதவியை நாடி னான். ஹென்ஜிஸ்ட் (Hengist) ஹார்ஸா (Horsa) என் னும் ஜுட் தலைவர் இருவர் கி. பி. 449-ம் ஆண்டில் தானெட் (Thanet) என்னும் தீவில் ஒரு படையுடன் வந்து இறங்கினர். அன்னோர் வார்டிஜர்னின் விரோதிகளை அடித் துத் துரத்தியபின் அவனையும் தோற்கடித்து, கெண்ட் என் னும் மாகாணத்தைக் கைக்கொண்டு, அங்குத் தங்கி வசிக்க லாயினர். இது ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட் டிய கதையாய் முடிந்தது.

3. மேற்கூறிய சம்பவமே ஆங்கிலேயர் முதலில் பிரிட் டனில் குடியேறியதற்கு ஆரம்பமாகும். சுமார் ஒரு நூற் றூண்டு வரையில் இப்புது ஜாதியார் தங்கள் பெண்டு பிள்ளை களுடன் கூட்டங் கூட்டமாக வந்து குடியேறி, அனேக கிராமங்களை ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால் இவர்கள் பிரிட்டானியருடன் கோரமான யுத்தம்செய்ய வேண்டியிருந் தது. அப்பொழுது இப்புது ஜாதியார் சிறிதும் இரக்கமின் றிப் பிரிட்டானியருடைய கோயில்களை இடித்தும்,வீடுகளைக் கொளுத்தியும் நாசம் விளைத்தனர். சில வருஷங்களில் ரோமன் நாகரிகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. இப்போர்களில் இறந்த பிரிட்டானியருக்குக்

கணக்கில்லை. சிலர் கைதியாயினர்; இன்னும் சிலர் மேற்கு மலை நாடுகளில் ஓடி ஒளிந்தனர். இங்ஙனம் ஓடி ஒளிந்தவர்கள் அவ்விடம் கார்ன்வால் (Cornwall) வேல்ஸ் (Wales) ஸ்ட்ராத் கிளைட் (Strathclyde) என்னும் மூன்று ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு அவ்விடத்திலேயே தங்கலாயினர். புதிதாய் வந்த ஜாதியார் பிரிட்டானியர்களை வெல்ஷ் என்று அழைத்தார்கள்.

4. பிரிட்டானியர் இப்புது ஜாதியார்க்கு எளிதில் கீழ்ப்படியவில்லை. பேரும் புகழும் பெற்ற ஆர்தர் (Arthur) என்னும் பிரிட்டானிய அரசன், ஸாக்ஸன் ஜாதியாரைக் கி.பி. 500-ம் ஆண்டில் பாடன் (Badon) என்னுமிடத்தில் முறியடித்தான். ஆகையால் கார்ன்வால் என்னும் பாகமானது ஸாக்ஸானியர் கையில் வெகு காலம் வரையில் வராமலே இருந்தது. ஆர்தரின் தீரச் செயல்களைக் கூறும் கதைகள் பலவாகும். ஆனால் அவைகளிலிருந்து உண்மையைக் கண்டு பிடிப்பது கடினம். ஆர்தரை, நமது விக்கிரமாதித்த அரசனுக்கு ஒருவாறு ஒப்பிடலாகும். அவன் துணைவருக்கு வட்ட மேஜை வீரர்கள் (Knights of the Round Table) என்று பெயர். டென்னிஸன் (Tennyson) என்னும் ஆங்கிலக் கவி "Idylls of the King" என்னும் காவியத்தில் ஆர்தரைப்பற்றிச் சிறப்பாக எழுதியிருக்கிறார்.

5. ஆனால் வன்மையும் வெற்றியுமுடைய ஆங்கிலேயர் முன் ஒருவரும் நிற்க முடியவில்லை. அவர்கள் எல்லா இடையூறுகளையும் நீக்கிப் பல ராஜ்யங்களை ஸ்திரமாக ஏற்படுத்திக் கொண்டனர். இதற்கு ஒன்றரை நூற்றாண்டு பிடித்தது. ஆங்கில்ஸ் ஜாதியார் பிரிட்டனில் பெரும் பாகத்தில் பரவியபடியால் அவர்கள் பெயரே அத்தேசத்திற்கும் ஜனங்களுக்கும் வழங்கி வருகின்றது.

6. முதலில் இந்த ஜாதியார் சிறு கிராமங்களில் ஒவ்வொரு தலைவன் கீழ் இருந்து வந்தனர். பிரிட்டானியர்களுடன் சண்டையிடுவதற்காக இவர்கள் பலமுறை ஒன்று

கூட வேண்டியிருந்தது. காலக்கிரமத்தில் கிராமங்கள் ஒன்று சேர்ந்து அனேக இராஜ்யங்களாக மாறின. ஏழாவது நூற்றுண்டின் ஆரம்பத்தில் முக்யமாக இருந்த இராஜ்யங்கள் ஏழு. அவைகளை ஸப்த ராஜ்யங்கள் (Heptarchy) என்று சொல்வதுண்டு; கெண்ட் என்பது ஜூட் வகுப்பினர் மிகுந்த இராஜ்யம்; எஸ்ஸெக்ஸ், வெஸ்ஸெக்ஸ், ஸஸ்ஸெக்ஸ், என்பவைகள் ஸாக்ஸன் வகுப்பினர் மிகுந்த இராஜ்யங்கள்; ஈஸ்ட் ஆங்கிலியா, மெர்ஸியா, நார்தம்பர்லாந்து இவை ஆங்கில்ஸ் வகுப்பினர் மிகுந்த இராஜ்யங்கள்.

## அப்பியாசங்கள்

1. பிரிட்டனை ரோமானியர் ஜெயித்த விதத்தையும், ஆங்கிலேயர் அதனை ஜெயித்த விதத்தையும் ஆராய்ந்து இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக

2. ஸப்த ராஜ்யங்களைக் காண்பிக்கும் படம் ஒன்று வரைக.

3. ஆர்தர், ஹெஞ்சிஸ்ட், வார்டிஜர்ன் இவர்கள் இங்கிலாந்து சரித்திரத்தில் எங்ஙனம் சம்பந்தப்பட்டுளர்?

4. ஆங்கில ஜாதியாரது பூர்வீக நாகரிகத்தைப்பற்றி உங்கட்குத் தெரிந்ததைக் கூறுக.

---

## அதிகாரம் 5

# ஆங்கிலேயர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுதல்

**போப் கிரிகரி அகஸ்டினை இங்கிலாந்துக்கு அனுப்பியது.**—முந்திய அதிகாரத்தில் ஆங்கிலேயர் பல தெய்வங்களைத் தொழும் ஹீதன் மதத்தினர் என்றும், பிரிட்டானியர் கிறிஸ்தவர் என்றும் கூறினேம் அல்லவா? பிரிட்டனில் வந்து குடியேறி, பிரிட்டானியர் பக்கத்தில் நூறு வருஷங்களாக வசித்து வந்த போதிலும், ஆங்கிலேயர் பிரிட்டானி

யரையும் அவர்களது கிறிஸ்தவ மதத்தையும் வெறுத்தனர்; கிறிஸ்தவர்களிடம் பகைமை கொண்டு அவர்களைக் கொன்றும், அவர்கள் கோயில்களை எரித்தும் வந்தனர். ஒரு நாள் ரோமாபுரியின் கடைத்தெருவில் அடிமை வியாபாரி ஒருவன் சில ஆங்கிலச் சிறுவர்களை விற்கப் போனான். அச்சிறார்களின் அழகைக் கண்டு வியந்த கிரிகரி (Gregory) என்னும் கிறிஸ்தவ குரு "நீங்கள் யாவர்?" என்று வினவினார். அதற்கு அவர்கள் "ஐயா! நாங்கள் ஆங்கில்ஸ்" என்று விடையளித்தனர். அது கேட்ட கிரிகரி, "நன்று நன்று; உங்களை ஆங்கில்ஸ் என்று அழைப்பது பொருந்தாது; ஏஞ்ஜல்ஸ் என்று அழைப்பதே தகும்" என்று வேடிக்கையாகச் சொன்னார். அன்று முதல் அவர் இங்கிலாந்தில் கிறிஸ்தவமதத்தைப் பரவச் செய்யக் கருதினார். ரோமாபுரியில் வசிக்கும் போப் என்பவரே கிறிஸ்தவ மதத்தினருக்கெல்லாம் குரு ஆவர். சில நாளைக்கெல்லாம் கிரிகரி அப்பதவிக்கு வரலாயினர். தமக்கு அப்பதவி கிடைத்ததும், அகஸ்டின் (Augustine) என்னும் சன்னியாசியை மற்றும் நாற்பது பேர்களுடன் இங்கிலாந்துக்கு அனுப்பினார்.

2. கேண்ட், எஸ்ஸெக்ஸ் முதலிய இராஜ்யங்களில் கிறிஸ்தவமதம் பரவியது—அகஸ்டின் நாற்பது சன்னியாசிகளுடன் கெண்ட் ராஜ்யத்தில் கி. பி. 597-ம் ஆண்டில் வந்திறங்கினான். அத்தேசத்தரசனான எதல்பர்ட் (Ethelbert) அவர்களை நல் வரவு கூறி உபசரித்தான். ஏனெனில் அவன் மனைவி பிரான்ஸ் தேசத்துக் கிறிஸ்தவ அரசன் குமாரத்தி. அகஸ்டின் ஒரு பெரிய கூட்டம் கூட்டிக் கிறிஸ்தவ மதத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்தான். அச்சன்னியாசிக் கூட்டத்தினர் அழகிய பாடல்களைப் பாடிக் கொண்டு வரவே, பிரிட்டானியர்கள் மனம் அதில் ஈடுபட்டது. அரசனும் முக்கிய பிரபுக்களும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தனர். இப்புது மதம் விரைவில் கெண்ட் முழுவதும் பரவிப் பக்கத்திலுள்ள எஸ்ஸெக்ஸ், வெஸ்ஸெக்ஸ் முதலிய ராஜ்யங்களிலும் எட்டியது. காண்டர்பரி என்னு

மிடத்தில் பெரிய மாதா கோயில் ஒன்று கட்டப்பட்டது. அகஸ்டின் அக்கோயிலின் முதல் குருவாக நியமனம் பெற்ருன். அது முதல் இன்னும் இங்கிலாந்தின் முக்கிய குரு (Archbishop) அவ்விடத்திலேயே இருந்து வருகிருர். லண்டன் என்னுமிடத்திலும் பின்னர் ஒரு கோயில் கட்டப் பட்டது.

3. நார்தம்பர்லாந்தில் கிறிஸ்தவ மதம் பரவியது.— எட்வின் என்னும் நார்தம்பிரிய அரசன், எதல்பர்ட்டின் குமாரத்தியை மணந்தான். அவள், தன் புருஷன் வீட்டிற்குப் போகும்பொழுது தன்னுடன் பாலினஸ் (Paulinus) என்னும் கிறிஸ்தவ மதகுரு ஒருவரை அழைத்துப் போயினள்.

அவர் அத்தேசத்து ஜனங்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ப்பதற்காக மிகவும் முயன்ருர். பீட் (Bede) என்போர் எழுதிய மத நூலில், எட்வினும் அவன் குடிகளும் புதிய மதத்தில் சேர்ந்த விதத்தைப் பற்றி வெகு அழகாக எழுதியிருக்கிருர். எட்வின் ஒரு சபை கூட்டி, கிறிஸ்தவ மதத்திலுள்ள உயர்ந்த கோட்பாடுகளை எடுத்துரைக்கும்படி பாலினஸ்ஸை வேண்டிக் கொண்டான். அவர் பிரசங்கம் கேட்ட ஹீதன் மதத்து முக்கிய குரு எழுந்திருந்து, பழைய ஆலயத்தின்மீது தானே அவமதிப்புடன் ஒரு ஈட்டியை எறிந்து அதிலுள்ள விக்கிரகங்களை உடைக்கவும் கட்டளையிட்டார். பிறகு, எல்லா ஜனங்களும் புதிய மதத்தைச் சேர்ந்தனர். பாலினஸ், யார்க் என்ற பட்டணத்தின் முதற் குருவானர். அது முதல் அப்பட்டணத்தில் ஆர்ச்பிஷப் என்னும் குரு ஒருவர் இருந்து வருகிருர்.

4. பெண்டா கிறிஸ்தவர்களோடு போர் புரிதல்.— ஹீதன் மதத்தைச் சார்ந்த பெண்டா (Penda) என்னும் மெர்ஸியா அரசன் கிறிஸ்தவ மதம் பரவாதபடி நார்தம்பிரியர்களோடு அனேக தடவை சண்டையிட்டான். இரண்டு நார்தம்பிரிய அரசர்கள் அவனுல் கொலையுண்டனர். பாலினஸ் முதலான கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் கெண்ட் இராஜ்

யத்திற்கு ஓடிப் போய் விட்டார்கள். கிறிஸ்தவ மதமே இங்கிலாந்திலிருந்து ஒழிந்துவிடும்போல் தோன்றியது. கடைசியாக ஆஸ்வி (Oswy) என்னும் நார்தம்பர்லாந் தரசன் கி. பி. 655-ம் ஆண்டில் பெண்டாவை ஒரு சண்டையில் கொன்று விட்டான். அவன் மாண்ட பிறகு கிறிஸ்தவ மதம் வடபாகத்தில் வெகு சீக்கிரமாகப் பரவியது. மெர்ஸியா முதலிய சிலவிடங்கள் அயோனுவிலிருந்து வந்த பிரிட்டானிய கிறிஸ்தவ சன்னியாசிகளால் புதிய மதத்தைத் தழுவலாயின. அச் சன்னியாசிகளுள் முக்கியமானவர் ஐடான் (Aidan) என்பவர்.

5. விட்பி சபை.—இவ்விதம் அகஸ்டின் கெண்டில் வந்து இறங்கி அறுபது வருஷம் செல்வதற்குள், இங்கிலாந்து முழுவதும் இப்புதிய மதத்தில் சேர்ந்து விட்டது. ரோமாபுரியிலிருந்து வந்த பாதிரிமார்கள் அதன் கிழக்குத் தெற்குப் பாகங்களையும், கெல்ட் சன்னியாசிகள் வடக்கு மேற்குப் பாகங்களையும் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்தனர். இவ்விருதிறத்தாருக்கும் ஈஸ்டர் பண்டிகையை எப்பொழுது நடத்துவது என்பதைப்பற்றி விவாதம் ஏற்பட்டது. அதைத் தீர்ப்பதற்காக ஆஸ்வி அவ்விரு கக்ஷிக்காரருள் முக்கியமானவர்களை கி. பி. 664-ம் வருஷம் விட்பி என்னுமிடத்தில் வந்து கூடும்படி வரவழைத்தான். அவர்கள் பிரசங்கத்தைப் பொறுமையுடன் கேட்ட பிறகு ரோமன் பாதிரிமார் சொல்வதுதான் சரியென்று ஆஸ்வி தீர்மானித்து விட்டான். இவ்விதம் இங்கிலாந்து முழுவதும் ஒரே மதத்தை அனுசரிக்கலாயிற்று. கிறிஸ்தவ மதத்தை ஆங்கிலேயர் தழுவினபடியால் ஐரோப்பாவிலிருந்து மதப்பிரசாரகர்கள் அடிக்கடி வரத் தலைப்பட்டனர். இது மூலமாக ஐரோப்பா கண்டத்திலுண்டாகும் நூதனமான நாகரிக முறைகளையும் மாறுபாடுகளையும் ஆங்கிலேயர் அவ்வப்பொழுது தெரிந்து கொள்ளச் சாதகமாயிற்று. தேச முழுவதும் மதம் ஒன்ருகியது போலவே, அரசும் ஒன்ருக வேண்டுமென்று அனைவருக்கும் புலப்பட்டது.

அப்பியாசங்கள்

1. கிறிஸ்தவ மதத்தை இங்கிலாந்தில் பரவச் செய்தவர்கள் யாவர்? அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைக் கூறுக.

2. விட்பியில் சபை கூடியது ஏன்? அதனால் ஏற்பட்ட பயன்கள் யாவை?

3. கிறிஸ்தவ மதம் நாடெங்கும் பரவுவதற்கு உதவி புரிந்த ஆங்கில அரசர்கள் யாவர்? அவர்கள் எங்ஙனம் உதவி புரிந்தனர்?

---

அதிகாரம் 6

# ஆல்பிரட் அரசனும் டேனர்களும்

## (Alfred and the Danes)

**லெப்த** ராஜ்யங்கள் முதன்மை யடையச் சண்டையிடல்.—ஏழாவது எட்டாவது நூற்றுண்டுகளில் ஆங்கில ராஜ்யங்கள் ஏழும் முதன்மை அடைவதற்காக ஒன்றுக்கொன்று அடிக்கடி சண்டையிட்டு வந்தன. கெண்ட் முதல் ஒவ்வொரு ராஜ்யமும் ஒவ்வொரு சமயம் மேன்மை யடைந்து, பிறகு க்ஷீணித்துவிட்டது. கடைசியாக இங்கிலாந்து முழுவதையும் ஐக்கியப்படுத்தி ஆள வெஸ்ஸெக்ஸ் ராஜ்யத்துக்குத்தான் திறமை ஏற்பட்டது. வெஸ்ஸெக்ஸ் அரசர்கள் கார்ன்வாலை ஜெயித்துத் தங்கள் ராஜ்யத்தை மேல சமுத்திரம் வரையில் பரவச் செய்தனர். இது இப்படி யிருக்க, டேனர்கள் என்னும் கொள்ளைக்காரர்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்தார்கள்.

2. டேனர்கள்.—டேனர்களும் ஸாக்ஸன் ஜாதியாரைப் போல டியூடானிய வமிசத்தைச் சேர்ந்தவராதலால் இவ்விருவர்க்கும் அதிக ஒற்றுமை உண்டு. பூர்வீக ஆங்கிலேயர்களைப்

போலவே டேனர்களும் அனேக தெய்வங்களைத் தொழும் ஹீதன் மதஸ்தர்கள்; நூதன சமயமாகிய கிறிஸ்தவ மத துவேஷிகள்; கொடிய வீரர்கள். அவர்களுடைய வீரச் செயல்களை யெல்லாம் நார்ஸ் கிரந்தங்கள் விவரித்துக் கூறுகின்றன. டென்மார்க், நார்வே தேசங்களின் கடற்கரைகளில் இந்த டேனர்கள் வசித்து வந்தார்கள். தங்கள் தேசம் காடு முரடாகவும் செழுமையின்றியும் இருந்தமையால், அவர்கள் நீண்ட படகுகளில் ஏறி இதர தேசங்களுக்குப் போய்க் கொள்ளையடிப்பது வழக்கம். அவர்களில் முக்கியமானவர்களுக்கு வைகிங்ஸ் என்று பெயர். அவர்கள் கோடை காலங்களில் வெளி நாட்டுக்குப் போய்க் கொள்ளை யடித்துக் கொண்டு வந்து, மாரிகாலங்களில் தங்கள் வீடுகளில் தங்குவார்கள். முக்கியமாக அவர்கள் செல்வம் மிகுந்த கிறிஸ்தவ ஆலயங்களையும் மடங்களையும் கொள்ளை யடித்தார்கள். அவர்களைக் கண்டால் கிறிஸ்தவ சன்னியாசிகளுக்கு நடுக்கம். அக்காலத்தில் கிறிஸ்தவக் கோயில்களில் எல்லாம் முதல் பிரார்த்தனை "ஈசனே! எங்களை இந்தக் கொள்ளைக்காரரிடமிருந்து காப்பாற்றுவாயாக" என்பதேயாம்.

ஆல்பிரட்

3. டேனர்களின் குடியேற்றம்.—சுமார் கி. பி. 850-ம் வருஷத்தில் மாரிக் காலத்தில் கொள்ளையிட இங்கிலாந்துக்கு வந்த சில டேனர்கள், தங்கள் தேசத்திற்குத் திரும்பாமல்

இங்கிலாந்திலேயே தங்கிவிட்டார்கள். இங்கிலாந்து டேனர் தேசத்தைக் காட்டிலும் அதிக வசதிகள் நிரம்பியிருப்பதைக் கண்டு, பின்னரும் டேனர்கள் கூட்டம் கூட்டமாக வந்து அங்குக் குடியேறினர். இந்த டேனர்கள் முதலில் வடக்கே யுள்ள நார்தம்பர்லாந்து மெர்ஸியா முதலிய ராஜ்யங்களுடன் பொருது வெற்றி கொண்டார்கள். அப்பால் வெஸ்ஸெக்ஸை யும் அவர்கள் ஜயிக்க முயன்றனர். அப்பொழுது ஆல்பிரட் என்ற கீர்த்திபெற்ற அரசன் அவ்விராஜ்யத்தின் சிங்காதனம் ஏறினுன்.

4. ஆல்பிரட் ஒரு ஏழைக் குடியானவன் வீட்டில் ஒளிந்துகோண்டது.—ஆல்பிரட் சிங்காதனம் ஏறியதும், டேனர் அவன் ராஜ்யத்தை நாலா பக்கங்களிலும் தாக்கினர். தன் ராஜ்யத்தில் டேனர்கள் புகுந்து பாழாக்குவது கண்டு, எங்ஙனமாயினும் அவர்களை ஒழித்துவிட ஆல்பிரட் அரசன் தீர்மானித்தான். ஆனல் முதலில் அவனுக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஒரு சமயம் அவன் தோல்வியுற்றுத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அதல்னி (Athelney) என்னுமிடத்தில் ஒரு குடியானவன் வீட்டில் ஓடி ஒளிந்து கொண்டான். அவனை இன்னுன் என்று அக்குடியானவன் மனைவி அறியாள். அடுப்பில் வேகும் அடை தீய்ந்து போகா தவாறு பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அவள் வெளியே போனுள். அடுப்பண்டையில் உட்கார்ந்தபடியே தன் ராஜ்யத்தை டேனர்களிடமிருந்து எங்ஙனம் மீட்கலா கும் என்ற கருத்தில் ஆழ்ந்திருந்த ஆல்பிரட் அரசன் அடுப்பு வேலையை மறந்திருந்தான். திரும்பி வந்த குடியானவன் மனைவி, அடை தீய்ந்துவிட்டதைக் கண்டு ஆல்பிரட்டைக் கோபித்துக் கொண்டாள். பின்னர் அப்புதியவன் ஆல் பிரட் அரசன் என்று அவள் தெரிந்து கொண்டதும், அர சனை வணங்கித் தன்னை மன்னித்தருளுமாறு வேண்டிக் கொண்டாள்.

5. ஆல்பிரட் வெற்றி பெறுதல்.—அதன் பிறகு ஆல் பிரட் அவ்விடம் விட்டகன்று சேனையொன்று சேகரித்து


வடகடல்
யார்க்
வெட்மோர்
கிளாஸ்டன்பரி
லண்டன்
ராஜ்யம்
இங்கிலீஷ் சானல்

டேனர்களை எதிர்க்கலானான். அவர்கள் எதாண்டன் (Ethandun) என்னுமிடத்தில் கத்ரம் (Guthrum) என்பவனைத் தலைவனாகக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாக இருந்தனர். யுத்தத்திற்கு முதல்நாள் எதிரியின் பலாபலங்களைத் தெரிந்து கொள்ள விரும்பி ஆல்பிரட் ஒரு பாடகன் போல வேடம் பூண்டுக் கையில் வீணை தாங்கி, மாலை வேளையில் பகைவரது படை வீட்டில் நுழைந்தான். அவன் அங்கு டேனர்கள் குடி மயக்கங்கொண்டு ஆடியும் பாடியும் இருப்பதைக் கண்டனன். அவர்களை உற்சாகப் படுத்துவதுபோல் சில இனிய பாடல்களைப் பாடிய வண்ணமே அவர்களது யுத்த இரகசியங்களை அறிந்துகொண்டு நடு நிசியில் ஒருவரும் அறியாது தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான்.

6. மறுநாள் யுத்தம் தொடங்கியது. எதிரியின் மர்மத்தை நன்கு அறிந்த ஆல்பிரட் எளிதில் ஜெயமடைந்தான். டேனர் தலைவனாகிய கத்ரம் ஆல்பிரட்டை வெல்லுதல் அரிது [illegible] சமாதானம் செய்துகொள்ள விரும்பினான். வெட்மோர் (Wedmore) என்னுமிடத்தில் இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர். (கி. பி. 878.) அதன் படி டேனர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதாக வாக்களித்தனர். இங்கிலாந்தின் வடபாகம் டேனர் ஆட்சியில் இருக்க ஆல்பிரட் இணங்கினான். அந்தப் பாகத்தில் டேனர்கள் தங்கள் சட்டப்படிக்கும் வழக்கப்படிக்கும் ஆண்டு வந்தனர். டேனர் ஆண்டு வந்த அப்பாகத்திற்கு டேன்லா என்று பெயர் வழங்கி வந்தது. பழைய ரோமன் ரஸ்தாவாகிய வாட்லிங் ஸ்ட்ரீட், ஆல்பிரட் ராஜ்யத்தை டேன்லாவிலிருந்து பிரிக்கும் எல்லையாக இருந்தது.

7. ஆல்பிரட் தன் ராஜ்யத்தைப் பலப்படுத்தியது.—ஆல்பிரட் இங்கிலாந்தில் ஏற்கனவே வந்து தங்கிய டேனர்களைத் துரத்தாவிடினும், இனிமேல் புதிதாய் டேனர் வந்து தன் ராஜ்யத்தை எதிர்க்காதபடி சில ஏற்பாடுகளைச் செய்தான். டேனர்களிடம் கப்பற்படை மிகுந்திருந்தமையை அவன் அறிந்தான். டேனர் மேன்மேலும் இங்கிலாந்தில்

வந்து புகாவண்ணம் தடுக்கவேண்டின் தன்னிடமும் பெரிய கப்பற்படை இருத்தல் வேண்டும் என உணர்ந்து கப்பற் படையைப் பெருக்கினுன். மேலும் தன் சேனை எப்பொழு தும் யுத்தத்துக்கு ஆயத்தமா யிருக்கும்படி செய்தான். இப்பொழுது போல அக்காலத்தில் ஸ்திரமான ராணுவம் கிடையாது. போர் நிகழும்போது தான் படை திரட்டுவது வழக்கம். சத்துருக்கள் எதிர்க்கும்போது குடிகள் தங்கள் தொழிலை விட்டுவிட்டு ஆயுதம் எடுத்துச் சண்டைக்குப் போவார்கள். ஆல்பிரட், குடிகளில் சிலர் விவசாயத்தைக் கவனிக்கும்படியும், மற்றும் சிலர் யுத்தத்திற்குத் தயாரா யிருக்கும்படியும் திட்டம் செய்தான்.

8. ஆல்பிரட்டின் சீர்திருத்தங்கள்.—ஆல்பிரட் தன் ராஜ்பத்தை டேனர்களிடமிருந்து மீட்டுப் பின்னர் ஜனங் களுக்குப் பல நன்மைகளைச் செய்தான். டேனர்கள் பாழாக் கி.. கோயில்களையும் மடங்களையும் அவன் மீண்டும் கட்டு வித்தான். கல்வி அபிவிருத்திக்காக அனேக பாடசாலைகளை அவ்வரசன் ஏற்படுத்தி, லாடின் பாஷையிலிருந்த சில அரிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பித்தான். வித்து வான்களை அவ்வேந்தன் நன்கு ஆதரித்து வந்தமையால் அன்னிய நாட்டிலிருந்தும் அனேகர் வந்து இங்கிலாந்தில் வசிக்கலாயினர். அன்றியும் அம்மன்னன் சில பண்டிதர்களைக் கொண்டு ஸாக்ஸன் ஜனங்களுடைய சரித்திரத்தை எழுது வித்தான். அதற்கு ஸாக்ஸன் க்ரானிகில் (Saxon Chronicle) என்று பெயர். இங்ஙனம் பல நன்மைகளைச் செய்த அவ்வரசனைக் குடிகள் நன்கு நேசித்து வந்தனர். கி. பி. 901-ல் அவன் காலகதி யடைந்தான். வின்சேஸ்டர் என்னு மிடத்தில், இடது கையில் ஒரு கத்தியுடன் இருக்கும் அவ னது சிலையை இன்றும் காணலாம்.

## அப்பியாசங்கள்

1. ஆல்பிரட் எங்ஙனம் தன் ராஜ்பத்தைப் பலப் படுத்தினுன்?

2. டேனர்களின் நாகரிகம் எத்தன்மையது?

3. ஆல்பிரட்டின் முக்கியமான நற்குணங்கள் எவை? அவன் சரித்திரத்திலிருந்து அவைகளை நிரூபிக்க.

4. டேன்லாவைக் காட்டும் படம் ஒன்று வரைக.

5. ஆல்பிரட் அரசன் செய்த சீர்திருத்தங்கள யாவை?

---

அதிகாரம் 7

## டன்ஸ்டனும் (Dunstan) ஆல்பிரட்டிற்குப் பின் வந்த அரசர்களும்

டேன்லாவை ஜயித்தது.—ஆல்பிரட் இறந்த பின்னர் ஒரு நூற்றுண்டு வரையில் இங்கிலாந்துக்கு டேனர் பயம் இல்லாதிருந்தது. இங்கிலாந்தில் தங்கிய டேனர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி ஆங்கிலேயருடன் கலந்து விட்டனர். அவர்களுடைய ராஜ்யமாகிய டேன்லா பல சிறு பாகங்களாகப் பிரிவுற்றது. ஆகையால் ஆல்பிரட்டிற்குப் பின் அரசாண்ட வெஸ்ஸெக்ஸ் அரசர்கள் சுலபமாக டேன்லாவை ஜயித்து விட்டனர். ஆல்பிரட்டின் கொள்பேரனுகிய எட்கார்(Edgar) முதன் முதல் இங்கிலாந்து முழுவதையும் ஒரே அரசின் கீழ்க் கொண்டு வந்தான். அவ்வேலையில் அவனுக்கு மிகுதியும் துணைபுரிந்தவன் அவனது பிரதம மந்திரியாகிய டன்ஸ்டன் என்பவன்.

2. டன்ஸ்டனது பூர்வீக சரித்திரம்.—டன்ஸ்டன் கிளாஸ்டன்பரி (Glastonbury) என்னும் கிராமத்தில் ஒரு பிரபுவின் வமிசத்தில் பிறந்தவன். அவன் அவ்வூரிலேயே படித்து வந்தான். அவனுக்குச் சங்கீதத்தில் வெகு பிரியம். அவன் மடத்தில் ஒரு குருவாகித் துறவறம் பூண்டு வாழ வேண்டுமென்பது தந்தையின் விருப்பம். ஆனல் சிறுவனது

கல்வித் திறமையைக் கேள்வியுற்ற அதல்ஸ்டன் என்ற அரசன், அவனைத் தன் சபைக்கு வரவழைத்து அன்பும் ஆதரவும் காட்டினான். சபையோர் அது காணச் சகியாது பொருமை கொண்டு அவனைத் துரத்திவிட முயன்றார்கள். ஒரு நாள் அவன் குதிரைமீதேறித் தன்வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில், அவனது விரோதிகள் பின்னே வந்து திடீரென்று அவனை உதைத்துக் கீழே தள்ளினர். அவன் புரவியினின்றும் விழுந்து புவியில் புரள்வதைப் பார்த்து அகமகிழ்ந்தனர். டன்ஸ்டன் மெல்லென எழுந்து வீடுசேர்ந்தான். சேர்தலும் அவனுக்கு ஜுரம் கண்டது. அவன் இனி அரச சபைக்குப் போவதில்லையென்று சபதம்செய்து கொண்டான். உடம்பு தெளிந்ததும் அவன் சன்னியாசியாகிக் காலம் கழிக்கலாயினன்.

3. டன்ஸ்டன் மடாதிபதியானது.—ஒரு நாள் எட்மண்ட் எனும் அரசன் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். அவன் ஒரு மானைத் துரத்திக்கொண்டே ஒரு செங்குத்தான குன்றின் சிகரத்தைக் குறுகினன். அவன் ஏறிச்சென்ற பரிமா மிக்க ரோஷமுடன் விரைந்து செல்ல அதனை அடக்க முடியவில்லை. குதிரையின் கால் கொஞ்சம் தவறினால் அவன் ஆழமான பள்ளத்தில் விழுந்து உருக்குலைந்து போயிருப்பான். அச்சமயத்தில் எட்மண்ட் "டன்ஸ்டனை நல்ல பதவியில் வைக்கிறேன்; என்னைக் காப்பாற்றுக" என்று கடவுளை வேண்ட, உடனே அத்துரகம் வேகம் குன்றி அடங்கி நின்றது. பின்னர் அரசன் ஊருக்குத் திரும்பியதும் டன்ஸ்டனை கிளாஸ்டன்பரி மடாதிபதியாக்கினான். அப்பால் எட்ரெட் அரசனும் டன்ஸ்டனை மந்திரியாகச் செய்து கொண்டான்.

4. டன்ஸ்டன் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டது.—ஆனாலும் டன்ஸ்டனது துர்த்தசை இன்னும் முடிந்தபாடில்லை. எட்ரெட் இறந்த பின்னர் அவன் தமையன் புதல்வனான எட்விக்கு மகுடாபிஷேக காலத்தில் ஒரு விருந்து நடந்தது. அதற்கு எல்லா பிரபுக்களும் வந்திருந்தனர்.

விருந்தின் மத்தியில் எட்வி திடீரென்று எழுந்து வெளியே போயினன். பிரபுக்கள் எல்லாரும் அரசன் தங்களை அவமதித்ததாக நினைத்தார்கள். உடனே டன்ஸ்டன் அரசனது கையைப் பிடித்து, ஒரு சிறு பையனைப்போல இழுத்து வந்து எல்லாருடனும் உட்கார வைத்தான். இக்குற்றத்திற்காகவே அவனை எட்வி தேசத்தினின்றும் துரத்தினன்.

6. டன்ஸ்டன் செய்த நன்மைகள்.—எட்வியின் சகோதரனை எட்கார் பட்டத்துக்கு வந்ததும் டன்ஸ்டனைத் திரும்ப அழைத்து அவனைக் காண்டர்பரியின் ஆர்ச் பிஷப்பாகச் செய்ததுமன்றி, தன் முக்கிய மந்திரியாகவும் வைத்துக்கொண்டான். டன்ஸ்டன் இங்ஙனம் உன்னதமான பதவியை அடைந்தது அவன் குணத்தினலும் கல்வியினலுமன்றோ! ஆல்பிரட்டுக்குப் பின வந்த அரசர்களுக்குள் எட்கார் அரசனே மிகத் திறமை வாய்ந்தவன். அவனுக்கு டன்ஸ்டன் தகுந்தவாறு ஆலோசனை சொல்லியும் நல்வழி காட்டியும் வந்தான். அப்பொழுது ராஜாங்கத்திலும் மத விஷயத்திலும் அனேக சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. சன்னியாசிகளும் குருமார்களும் (Clergy) கல்வி கற்றுப் போதம் பெற அனேக பாடசாலைகளை அவன் ஏற்படுத்தினன். இங்கிலாந்து முழுவதையும் ஐக்கியப்படுத்தி ஒரு குடைக்கீழ் ஆள்வதற்கு அவன் செய்த முயற்சிகள் பலவாகும். இவன் ராஜ்யத்தில் வடபாகத்தில் இருந்த டேனர்களைத் தன் வசப்படுத்த அவர்களுக்கு ஆங்கிலேயர்களைப் போலவே எல்லா உரிமைகளையும் கொடுத்ததுமன்றிச் சிலருக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளையும் ஈந்தனன். டேனர்கள் மனம் களித்து மாறுபாடின்றி ஆங்கிலேயர்களுடன் தாராளமாகக் கலந்துகொண்டு ஒரே ஜாதியார்போல் ஆகிவிட்டனர். எட்கார் காலமாகிய பின்பு, டன்ஸ்டன் அரச சபையை விட்டகன்று, தனது கிராமத்தில் இருந்து ஈசனை வழிபட்டு, கி. பி. 880-ல் மரணமடைந்தான். சிற்றரசர் பலர் மிகுந்திருந்த இங்கிலாந்தை ஒருப்படுத்தி ஒரு குடைக் கீழ்க் கொண்டுவந்த பெருமை டன்ஸ்டனதேயாம்.

## அப்பியாசங்கள்

1. ஆல்பிரட் வமிசத்தார் டேன்லாவை எளிதில் வென்றது எங்ஙனம்?

2. டன்ஸ்டனது ஜீவிய சரித்திரத்தினின்று அவனுடைய குணாதிசயங்களை ஏற்ற உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

3. இங்கிலாந்துக்கு டன்ஸ்டன் செய்த நன்மைகள் யாவை?

- ஆல்பிரட் (கி.பி. 871–899)
  - எட்வர்டு (கி.பி. 899–924)
    - அதெல்ஸ்டன் (கி.பி. 924–940)
    - எட்மண்ட் (கி.பி. 940-946)
      - எட்வி (கி. பி. 955-959)
      - எட்கார் (கி. 959-975)
        - எட்வர்டு (கி.பி. 975-978)
        - எதல்ரெட் (கி.பி. 978 – 1016)
          - எட்வர்டு (மத பக்தியுடையோன்) (கி.பி. 1042 – 1066)
    - எட்ரெட் (கி.பி. 946-955)

அதிகாரம் 8

## கான்யூட் (Canute)

நற்புத்தி கேளாத எதல்ரேட்.—ஸாக்ஸானியருடைய உன்னத நிலை எட்காருடன் ஒழிந்து விட்டது. எட்காரின் புதல்வனான எதல்ரெட் நாளில் இடுக்கண்கள் பல உண்டாயின. எதல்ரெட் நன்மை தீமைகள் தானும் அறியான்; பிறர் சொல்லினும் கேளான். ஆகையால் இவனுக்கு நற்புத்தி கேளாதவன் (unready) என்று பட்டப் பெயர் வந்தது. இவன் அரசாட்சி வலி குன்றியிருப்பதைக் கண்டு டேனர்கள் மறுபடியும் இங்கிலாந்தைத் தாக்க ஆரம்பித்தனர். அவர்களை எதிர்த்துத் துரத்த அந்த மந்தபுத்தி மன்னனுக்குத் துணிவு இல்லை. வேண்டிய பணம் கொடுத்து அவர்களை அனுப்பிவிடலாமென்று அறிவிலா அரசன் கருதினன். 'உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்' என்பதும் பொய்யோ! நல்ல கொழுத்த கடா அகப்பட்டதென்று டேனர்கள் பணம் பறிக்க விரும்பி அடிக்கடி வரலாயினர். அரசன் பொக்கிஷமும் வறண்டு போயிற்று. மூட மன்னன் குடிகளை வருத்தி டேனர்களுக்குக் கொடுப்பதற்காக டேன் கேல்ட் (Danegeld) என்ற புது வரியை வசூலித்துப் பகைவர் வரும்போதெல்லாம் வாய்முட்டுப் போட்டுவந்தான். என்ன கொடுத்தும் டேனர்களைத் திருப்தி செய்ய முடியவில்லை. புத்தியில்லா அரசன் கைப்பொருளெல்லாம் இழந்து கருத்தழிந்து கலங்கி நின்றான். குடிகள் வீரமிலா அரசனது அவலச் செய்கையைக் கண்டு வெறுத்தனர். அவ்வேளை மீண்டும் டேனர்கள்வருவதைக் கேட்ட வேந்தன்மனம் கொதித்து வெகுண்டெழுந்து தன் தேசத்திலுள்ள டேனர் அனைவரையும் கொன்றொழிக்குமாறு கட்டளையிட்டான். இப்பெருங் கொலையில் நார்வே நாட்டு மன்னனது உடன் பிறந்தாளும் கொலையுண்டாள்.

2. இப்படுகொலையைக் கேள்வியுற்றான் நார்வே அரசனாகிய ஸ்வேயின் (Sweyn) என்போன். பழிக்குப் பழி

வாங்க நினைத்து அம்மன்னன் பெரிய சேனையுடன் புறப்பட்டுச் சுமார் பத்து வருஷ காலம் இங்கிலாந்தின் கரையோர நாடுகளைப் பாழாக்கி இங்கிலாந்தில் வந்திறங்கினான். எதிரியின் வருகையைக் கேட்டதும் எதல்ரெட் நார்மண்டிக்கு ஓட்டம் பிடித்தான். இங்கிலாந்து ஸ்வேயின் வசம் ஆகியது. ஆனால் இந்த வெற்றிக்குப் பிறகு ஸ்வேயின் இறந்துவிட்டான். பிறகு அவனது புதல்வர்களாகிய கான்யூட்டும் எட்மண்டும் இந்த ராஜ்யத்துக்காகச் சண்டையிட்டனர். முடிவில் ராஜ்யத்தை இருவருமாகப் பங்கிட்டுக்கொள்ள உடன்பட்டனர். அவ்வேளை எட்மண்ட் இறக்கவே, கான்யூட் அரசனே இங்கிலாந்து முழுவதையும் ஆளத் தொடங்கினான்.

3. கான்யூட்டின் ஆட்சி.—கான்யூட் அரசன் நீதி தவறாமல் நாட்டினை ஆண்டுவந்தான்; குடிகளின் அன்பைப் பெற விரும்பி அவர்களுக்குள்ள உரிமைகள் அனைத்தும் வழங்கினான். ஆகையால் குடிகள் கான்யூட்டை அன்னியனாக நினைக்காமல், தங்கள் ராஜ குலத்தைச் சேர்ந்தவனாகவே மதித்து நேசித்து வந்தார்கள். அவன் கிறிஸ்தவ மதத்தில் பற்றுக்கொண்டு இரு முறை ரோமாபுரிக்கு யாத்திரை போனான். தன் தகப்பன் பாழாக்கிய மடங்களைக் கட்டுவதற்காக அவன் ஏராளமான பணத்தைச் செலவிட்டான். ஒரு சமயம் ஈலி (Ely) மடத்திலுள்ள துறவிகளை அவன் காணச் சென்றான். அன்று நீர் அலையின்றி அமைதியுற்றிருந்தது. நிச்சப்தமாயிருந்த அவ்வேளையில் படகேறிச் சென்ற கான்யூட்டின் காதில் அத்துறவிகள் பாடும் தேவகானம் விழுந்தது. அதை மிக்க கவனமாகக் கேட்டு இன்புற்ற அரசன் அதைப்பற்றி ஒரு கவி இயற்றியுள்ளான்.

4. ஒரு நாள் அவனது சபையோர்கள் அவனைப் பார்த்து, "எமது அரசே! இப்பூமிக்கு மாத்திரமே நீர் அரசர் என்று சொல்லுதல் பொருந்தாது; வானமும் கடலும் கூட நுமது ஆணைக்கு அஞ்சி நடக்கும்" என்று முகஸ்துதியாகக் கூறினர். அரசன் அப்புகழுரையைக் கேட்டு மயங்கினானில்லை. தன் ஆசனத்தைக் கடற்கரையோரத்தில்போடும்

படி கட்டளையிட்டான். அலைகள் அவன் காலில் வந்து மோதவே, அவன் சமுத்திரத்தைப் பார்த்து " கடலே! நான் உன் அரசன் ; என் காலை நனையாதே" என்று சொன்னான். அலைகளோ ஓய்வின்றிச் சுருண்டுவந்து மேன்மேலும் தாக்கின. தம் மொழி பொய்த்ததை அறிந்த சபையோர் வெட்கி நின்றனர். கான்யூட் அவர்களை நோக்கி, " அன்பர்களே ! இனி நீங்கள் முகஸ்துதி செய்யாதொழிக ! பஞ்ச பூதங்கட்கும் நாயகன் கடவுளே ; அவனைப் புகழ்ந்து துதித்து வழிபட்டு வாருங்கள் " என்று புத்தி புகட்டினன்.

5. அவனுடைய அன்பான ஆட்சியில் தேசம் நன்னிலையை அடைந்தது. கான்யூட் இங்கிலாந்தைத் தவிர டென்மார்க் நார்வே ஸ்வீடன் முதலிய தேசங்களையும் ஆண்டுவந்தபடியால், அத்தேசங்களுடன் இங்கிலாந்து மிகுதியும் வியாபாரம் செய்யத் தலைப்பட்டது. கான்யூட் கி. பி. 1035-ம் ஆண்டில் இறந்தபோது குடிகள் அதிகமாகத் துக்கித்தார்கள். அவனுக்குப் பிறகு அவன் இருகுமாரர்களும் இங்கிலாந்தைக் கொஞ்சகாலமே ஆண்டனர். அவர்கள் கான்யூட்டைப் போல் சமர்த்தரல்லராதலால் ஜனங்கள் அவர்களை வெறுக்கலாயினர். அவர்களுக்குப் பின் பழைய ஸாக்ஸானிய அரசன் சிங்காதனம் ஏறினன்.

## அப்பியாசங்கள்

1. எதல்ரெட்டின் மூடத்தனத்தைக் காட்டும் சில சம்பவங்கள் கூறுக.

2. கான்யூட்டை ஆல்பிரட்டுடன் ஒப்பிட்டு நோக்குக.

அதிகாரம் 9.

## நார்மன் படையெழுச்சி

எட்வர்டின் அரசாட்சி.—ஸாக்ஸானிய அரசர்களில் கடைசியானவன் கி. பி. 1042-ம் ஆண்டில் பட்டத்திற்கு வந்த எட்வர்டு என்பவன். அவன் நார்மண்டியில் பிறந்து வளர்ந்தவன்; அவன் தாயாகிய எம்மா (Emma)நார்மானிய மாது; ஆதலால் எட்வர்டு நார்மனை அதிகமாக ஒத்திருந்தான். அவன் இங்கிலாந்துக்கு வரும்பொழுது அவனுடன் நார்மன் சிநேகிதர்கள் பலரும் உடன் வந்தனர். அவன் தனது நண்பர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களையும் பெரிய ஜமீன்களையும் கொடுத்தான். இது ஆங்கிலக் குடிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் காட்வின் (Godwin) என்னும் பிரபுவின் தலைமையின்கீழ் ஆங்கிலேயர்கள் ஒன்று சேர்ந்து நார்மன் சபையோர்களைத் துரத்த முயன்றனர்.

2. காட்வினின் தேசப்பிரஷ்டமும் வில்லியத்தின் விஜயமும்.—காட்வின் என்போன் வெஸ்ஸெக்ஸ் மாகாணத்து ஜமீன்தார். அவனுடையகுமாரர்களாகியஹாரல்ட்(Harold) டாஸ்டிக் (Tostig) என்பவர்கள் வேறு ஜில்லா ஜமீன்தார்கள். ஆகையால் காட்வினுக்கு அதிக செல்வாக்கு உண்டு. அக்காலங்களில் ஒவ்வொரு பெரிய ஜில்லாவும் ஒரு எர்ல் (Earl) அல்லது ஜமீன்தாரால் ஆளப்பட்டு வந்தது. பெரும்பாலும் அவர்கள் ஒருவரோடொருவர் அடிக்கடி சச்சரவு இடுதல் வழக்கம். எட்வர்டு உரமும் திறமும் வாய்ந்தவனல்லன். ஆதலால் அவர்களை அடக்கி ஆள அவனால் முடியவில்லை. அவனுடைய சபையிலிருந்த நார்மானியக் கட்சியினரும் ஆங்கிலக் கட்சியினரும் சண்டையிடலாயினர். ஒரு சமயம் அரசன் ஆணைக்கு அடங்கி நடவாமைக்காகக் காட்வின் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டான். ஆனால் அவன் சீக்கிரம் திரும்பிவந்து பழையபடியே தன் அதிகாரத்தை அடைந்தான். அவன் வெளியூருக்குப் போயிருக்கும் வேளையில்

நார்மண்டியை ஆண்டுவந்த வில்லியம் இங்கிலாந்துக்கு வந்தான். அவன் எட்வர்டுக்குத் தாய் வழியில் உறவினன். எட்வர்டுக்குப் புத்திரனில்லை. ஆதலின் அவன் இங்கிலாந்தின் அரசைத் தனக்குப் பிறகு வில்லியத்துக்கே கொடுப்பதாக வாக்களித்தான். பிறகு வில்லியம் இங்கிலாந்து இராஜ்யம் தன்னைச் சேர்ந்தது என்று உரிமை கொண்டாட இதுவே காரணமாயிற்று.

3. எட்வர்டின் மதபக்தி —எட்வர்டு தன் வாழ்நாளை மத நூல்களைப் படிப்பதிலும் ஜபதபம் செய்வதிலுமே கழித்தான். அவன் வெஸ்ட்மின்ஸ்டர் அப்பே (Westminster Abbey) என்னும் மடத்தைக் கட்டினான். அக்கட்டிடத்திலேயே அவனது விருப்பத்துக்கிணங்க அவனது சமாதி ஏற்படுத்தப்பட்டது. அவனை மதாபிமானமுடைய எட்வர்டு (Edward the Confessor) என்று அழைப்பது வழக்கம்.

4. ஹாரல்ட்.—கி. பி. 1066-ல் எட்வர்டு காலஞ் சென்ற பிறகு ஹாரல்டு என்னும் வெஸ்ஸெக்ஸ் ஜமீன்தார் விடான் (Witan) சபையால் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். விடான் என்பது பெரிய ஜமீன்தார்கள், பிரபுக்கள், பிஷப்புக்கள் அடங்கிய ஒரு சபை. அதற்கு அரசனைத் தேர்ந்தெடுக்கவும் நீக்கவும் உரிமை உண்டு. ஆனால் இந்த அதிகாரத்தை அது அடிக்கடி செலுத்துவதில்லை. இப்பொழுது ராஜவமிசத்தைச் சேராத ஒருவனை அது அரசனாக நியமித்ததும், மற்ற ஜமீன்தார்கள் எல்லாரும் ஹாரல்ட் மீது பொறாமை கொண்டனர். இங்ஙனம் பொறாமை கொண்டோர்களில் முக்கியமானவன் ஹாரல்டின் தம்பியாகிய டாஸ்டிக் என்பவனே.

5. ஸ்டாம்பர்டு பிரிட்ஜ் (Stamford Bridge) யுத்தம்.—ஹாரல்டுக்கு மகுடாபிஷேகம் நன்கு நடந்தேறியது. பின்னர், நார்மண்டியின் அதிபனான வில்லியம் இங்கிலாந்தை ஜெயிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதாக ஹாரல்ட் கேள்வியுற்றான். இதற்குள் அவன் தம்பி டாஸ்டிக், தமையன் அபகரித்துக் கொண்ட தனது ஜமீனை மீட்க நார்வே அர

சன் உதவியை நாடி அவனுடன் இங்கிலாந்தின் வட பாகத்தில் வந்திறங்கினான். ஹாரல்ட் அவர்களை எதிர்க்க வடக்கே சென்று, அவர்கள் சேனையை ஸ்டாம்பர்ட் பிரிட்ஜ் என்னுமிடத்தில் சந்தித்தான். போர் தொடங்குமுன் ஹாரல்ட் தன் தம்பியுடன் சமாதானம் செய்து கொள்வதே தகுதி என நினைத்து அவன் ஜமீனைத் திருப்பிக் கொடுப்ப தாகச் சொன்னான். அதற்கு டாஸ்டிக், "என் சினேகித னாகிய நார்வே அரசனுக்கு யாது கொடுப்பாய்?" என்று கேட்டான். "ஏழடி பூமி கொடுப்பேன்; ஆனால் அவன் உயரமாயிருப்பதால் இன்னும் ஒரு அடி சேர்த்துக் கொடுக் கிறேன்" என்று இறுமாப்புடன் பதில் அளித்தான் துடுக் குச் சொல்லால் தீமையே விளையுமன்றோ? இரு வகுப்பின ரும் எதிர்த்துச் சண்டையிட்டனர். அதில் டாஸ்டிக்கும் நார்வே அரசனும் இறந்தனர்.

6. இந்த வெற்றியினால் ஹாரல்ட் இறுமாப்படைந்து தன் படையுடன் யார்க் பட்டணம் சேர்ந்து அங்குக் களி யாட்டத்தில் அயர்ந்திருந்தான். இவர்கள் விருந்துண்ணும் வேளையில் ஒரு தூதன் பதைபதைத்து, உடல் நடுங்க, நாக் குழற வியர்த்தோடி வந்து, "எடுங்கள் ஆயுதங்களை; நார் மன் வந்துவிட்டான். [illegible] அவன் கப்பல்கள் வந்துவிட்டன" என்று கூவினான். உடனே ஹாரல்ட் உண வும் கொள்ளாமல் தன் படைகளுடன் தெற்கு நோக்கி விரைந்து சென்றான். இதற்குள் வில்லியம் தன் சேனையை ஹேஸ்டிங்ஸ் என்னுமிடத்தில் அணிவகுத்து நின்றான். அந்த இடத்தைச் சேர்வதற்குள் ஹாரல்டின் மனிதர்கள் தளர்ந்து சோர்ந்துவிட்டனர். ஜமீன்தார்கள் சிலர் ஹாரல்டி னிடம் கொண்ட பொறாமையால் அவனுக்கு உதவிசெய் யாது ஒதுங்கி நின்றனர்.

7. ஹேஸ்டிங்ஸ் யுத்தம்.—சண்டைக்கு முந்திய இர வில் நார்மானியர் கடவுளைத் தொழுவதும் யுத்த வியூகம் வகுப்பதுமாய் இருந்தனர். ஸாக்ஸானியர்களோ குடிப்பதி லும் ஆடுவதிலும் பாடுவதிலும் காலத்தைக் கழித்தார்கள்.

ஆயினும் மறுநாள் காலையில் ஸாக்ஸானியர் அதிக உக்கிரமுடனும் உற்சாகத்துடனும் சமர் புரிந்தனர். அவர்கள் ஒரு சுவர்போல நெருங்கி நின்று நார்மானியர்மீது சரமாரி பொழிந்தனர். நார்மானியக் குதிரை வீரர் ஸாக்ஸானியர் வரிசையைப் பிளந்து செல்லப் பலபடி முயன்றும் பயன்பெருது போயினர். ஆகையால் தந்திரத்தினால் பகைவர்களை ஏமாற்றத் தீர்மானித்த வில்லியம் தன் சேனையைத் தோற்று விட்டதுபோல் புறங்காட்டி ஓடச் செய்தான். இச்சூதினை அறியாத ஸாக்ஸானியர், பகைவர்கள் தோற்றோடுவதாக எண்ணித் தாறுமாறுய் அவர்களைப் பின்தொடர்ந்து துரத்தினர். உடனே வில்லியம் தன் சேனையை அணிவகுத்து ஆங்கிலேயப் படையைத் தாக்கி அழித்தான். ஹாரல்ட் கண்ணில் ஓர் அம்பு பாயவே அவன் யுத்த களத்தில் உயிர் துறந்தான். இந்த வெற்றிக்காக வில்லியத்திற்கு "வெற்றி வேந்தன்" (The Conqueror) என்ற பெயர் கிடைத்தது. வில்லியம் உடனே இங்கிலாந்து அரசனென லண்டனில் முடிசூட்டப்பட்டான்.

## அப்பியாசங்கள்

1. எட்வர்ட் அரசாட்சியில் நடந்த முக்கிய சம்பவங்கள் எவை?

2 ஹேஸ்டிங்ஸ் யுத்தத்தில் ஆங்கிலேயர் தோல்வியுற்றதேன்?

3. பின் வருபவைகளைப் பற்றி உங்கட்கு என்ன தெரியும்:—

i விடான்; ii ஸ்டாம்பர்ட் பிரிட்ஜ்.

4. காட்வின், டாஸ்டிக் இவர்களைக் குறித்து நீங்கள் படித்ததைச் சுருக்கி எழுதுக.

## நார்மானிய அரசாட்சிக்கு முன்பு நடந்த முக்கிய சம்பவங்கள்.

கி. மு. 55 ஜூலியஸ் ஸீஸரின் படையெழுச்சி.

கி. பி. 43 ரோமானியர் பிரிட்டனை ஜெயித்தது.

,, 410 ரோமானியர் பிரிட்டனினின்றும் போனது.

,, 447 ஹெஞ்ஜிஸ்ட் ஹார்ஸா கெண்டில் வந்திறங்கியது; ஆங்கிலேயரின் வருகை.

கி. பி. 500 பாடன் யுத்தம்.

,, 597 அகஸ்டின் இங்கிலாந்தில் வந்து இறங்கியது.

,, 664 விட்பி சபை கூடியது.

,, 850 டேனர்கள் இங்கிலாந்தில் தங்கியது.

,, 871 ஆல்பிரட் சிங்காதனம் ஏறுதல்.

,, 878 வெட்மோர் உடன்படிக்கை.

,, 901 ஆல்பிரட்டின் மரணம்.

,, 978 டேனர்கள் மீண்டும் படையெடுத்தல்.

,, 1002 இங்கிலாந்தில் டேனரின் கொலை.

,, 1016 கான்யூட் இங்கிலாந்தை ஜெயித்தது.

,, 1042 ஸாக்ஸானிய அரசன் மீட்சி.

,, 1066 ஹேஸ்டிங்ஸ் யுத்தம்; இங்கிலாந்தை நார்மானியர் வென்றது.

# II. நார்மன் ஆஞ்ஜெவின் அரசர்கள்

## நார்மன் வம்சாவளி

வில்லியம்
(கி. பி. 1066—1087)

- ராபர்ட், நார்மண்டியின் பிரபு
- வில்லியம் II (கி. பி. 1087–1100)
- ஹென்றி I = (கி. பி. 1100–1135) மடில்டா ஸ்காட்லாந்து அரசகுமாரி
  - மடில்டா = ஜாப்ரி ஆஞ்ஜெவின் பிரபு
    - ஹென்றி II முதல் ஆஞ்செவின் அரசன்.
  - வில்லியம் கி. பி. 1020-ல் முழுகிப் போனான்
- அடிலா
  - ஸ்டீவன் (கி.பி. 1135-1154)

அதிகாரம் 1.

# நார்மன் ஆட்சி

## வில்லியமும் அவன் குமாரர்களும்

**வில்லியம் இங்கிலாந்து முழுவதையும் வென்றது.**— ஹேஸ்டிங்ஸ் யுத்தத்திற்குப் பிறகும் வில்லியம் ஆங்கிலேயருடன் அதிக சண்டையிட வேண்டியிருந்தது. ஏனெனில் அவனுக்கு விரோதமாகக் கலகங்கள் தேசமெங்கும் ஏற்பட்டன. ஆனால் அவை ஒன்றன்பின் ஒன்ருக உண்டானமையாலும், கலகக்காரர்களுக்குள் ஒற்றுமை இல்லாமையாலும், வில்லியம் எளிதில் அவைகளை அடக்கி விட்டான். ஆனல் ஈலி (Ely) என்னும் தீவில் ஆங்கிலேயர் ஹேரிவர்ட் தி வேக் (Hereward the Wake) என்னும் தலைவன் கீழ் நெடுநாள் வரைக்கும் நார்மானியருக்குக் கீழ்ப்படியாது தொந்தரவு கொடுத்து வந்தனர். ஹேரிவர்டின் தீரச் செயல்களை சார்லஸ் கிங்ஸ்லி (Charles Kingsley) இயற்றிய ஹேரிவர்ட் தி வேக் என்னும் கதைப் புத்தகம் விவரமாகக் கூறும். கி. பி. 1071-ல் வில்லியம், ஹேரிவர்டைக் கைது செய்துவிடவே, பின்னர் எதிர்ப்போர் ஒருவரும் இல்லாமற் போய்விட்டது. அதன் பிறகு இங்கிலாந்து முழுவதும் அவன் ஆளுகைக்குள் வந்துவிட்டது.

2. உம்பிளிக்கை ஏற்பாடு (Feudalism).— தனக்கு விரோதமாகக் கலகம் செய்த ஆங்கிலேயரிடமிருந்த நிலங்களையெல்லாம் வில்லியம் பிடுங்கித் தனக்கு உதவி செய்த நார்மானியர்களுக்குக் கொடுத்தான். இங்ஙனம் நிலம்பெற்ற நார்மானியர்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகவும் யுத்த காலத்தில் அவனுக்கு உதவுவதாகவும் வாக்களித்தனர். வில்லியம் நிலங்களை அளிக்கும்போது ஒரே இடத்தில் தொடர்ச்சியாக அளியாது, அநேக இடங்களில் பிரித்துப் பிரித்துக் கொடுத்தான். அதன் நோக்கம் என்ன

வெனில், நார்மானியர்கள் திடீரென்று தங்கள் ஆட்களைச் சேகரித்து, அரசனுக்கு விரோதமாகக் கலகம் செய்யமுடியா தென்பதே. நார்மானிய பிரபுக்கள் அந்த நிலங்களைப் பாகித்து டெனன்ட்ஸ் (Tenants) என்பவர்களுக்குக் கொடுத்தார்கள். அவர்களும் தங்கள் கீழ் உள்ள குடியானவர்களுக்குச் சிறிது சிறிதாகப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். நிலம் பெற்றவர்கள் அதற்குப் பதிலாக, வேண்டிய பொழுதெல்லாம் ஆட்களை அனுப்பி உதவவேண்டும். இவ்விதம் ஊழியம் செய்வதற்காக நிலத்தை அளிக்கும் ஏற்பாட்டிற்கு உம்பிளிக்கை ஏற்பாடு (Feudalism) என்று பெயர்.

அரசன்

நார்மன் பிரபுக்கள்

டெனன்டுகள்

குடியானவர்கள்.

3. நார்மன் கோட்டைகள்.—மேலே கூறியபடி வில்லியத்துக்குச் சண்டையில் உதவிய நார்மானியர்கள் பெரிய ஜமீன்களை அடைந்து ஜமீன்தார்களாக விளங்கினர். அரசன் அவர்களுக்கு அனேக சுதந்திரங்களையும் அதிகாரங்களையும் கொடுத்தான். பெரும்பாலும் ஆங்கிலேயர் தங்கள் சுதந்தரத்தை இழந்து பண்ணை ஆட்களாக ஆயினர். நார்மன் பிரபுக்கள் தங்கள் ஜமீன்களில் பலத்த கோட்டைகளைக் கட்டி, அவைகளைக் காக்கவேண்டி அனேக வீரர்களையும் வைத்துக் கொண்டார்கள். ஆங்கிலேயர் அந்தப் பிரபுக்களின் படை வலிக்குப் பயந்து வசிக்கலாயினர்; இழந்த நிலங்களையும் சுதந்தரங்களையும் நினைந்து அவர்கள்

நார்மானிய பிரபுக்களை வெறுத்து வந்தனர். நார்மானிய அரசர்களும் அநேக கோட்டைகளைக் கட்டினார்கள். அவைகளில் முக்கியமானவை, முதலாவது வில்லியத்தால் கட்டப்பட்ட டவர் ஆப் லண்டனும் (Tower of London) முத

டவர் ஆப் லண்டன்.

லாவது ஹென்றியினால் கட்டப்பட்ட ரோசேஸ்டர் கோட்டையுமே. (Rochester Castle.)

4. டூம்ஸ்டே புத்தகம் (Domesday Book) (கி.பி. 1085).—வில்லியம் தன் இராஜ்யத்திலுள்ள மிராசுதாரர்

கள் தொகையையும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக உள்ள நிலத்தின் விஸ்தீர்ணத்தையும் செவ்வையாகத் தெரிந்து கொள்ள விரும்பினன். அதற்காக அவன், பல அதிகாரிகளை நாடெங்கும் சுற்றி அறிந்து வருமாறு அனுப்பினன். அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் நகரத்திற்கும் சென்று அங்குள்ள மிராசுதாரர்களது நிலத்தின் அளவு, அவரிடமுள்ள வேலையாட்களின் தொகை முதலிய எல்லா விஷயங்களையும் நன்கு விசாரித்தனர். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஜனங்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் விடையளித்தனர். சித்திரகுப்தன் முன்னிலையில் கணக்கை ஒப்பிப்பதுபோல ஒன்றையும் ஒளியாது அனைவரும் கூறினர். இவ்விதம் விசாரித்தறிந்த விஷயங்களைப் பதிந்து வைத்த புத்தகத்திற்கு டூம்ஸ்டே புத்தகம் என்று பெயர். இதைப்பற்றி ஸாக்ஸன் கிரானிகல் என்னும் சரித்திர நூல் "வில்லியம் தன் அதிகாரிகளை இங்கிலாந்து முழுவதும் அனுப்பி ஒவ்வோரிடத்திலும் எவ்வளவு ஹைட் (Hide) நிலங்கள் இருந்தனவென்றும், ஒவ்வொரு குடித்தனக்காரன் வசத்திலிருந்த நிலம், கால்நடை இவ்வளவென்றும் தெரிந்து வருமாறு கட்டளையிட்டான். அவ்வதிகாரிகள் ஒரு எருதையேனும், பசுவையேனும், பன்றியையேனும் அக்கணக்கில் கூருது விட்டார்களில்லை" என்று கூறுகின்றது. அக்காலத்திலிருந்த நிலையை இப்புத்தகம் நன்கு தெரிவிப்பதால், இது லண்டனில் வெகு கவனமாக இன்னமும் காக்கப்பட்டு வருகிறது. அதே வருஷத்தில் சோழ மன்னனுகிய குலோத்துங்கன் தென்னிந்தியாவிலுள்ள நிலங்களை அளவிட்டதாகத் தெரிகிறது.

வில்லியம் கி. பி. 1086-ல் எல்லாப் பிரபுக்களையும் டெனன்டுகளையும் ஸால்ஸ்பரி (Salisbury) என்னுமிடத்தில் வரவழைத்தான். அவர்கள் யாவரும், உண்மையாயும் தனது ஆணையை ஏற்று அடங்கியும் வாழவேண்டும் என்று நேரே தனக்கு உறுதிமொழி கூறுமாறு கட்டாயப் படுத்தினன். இதற்கு ஸால்ஸ்பரி பிரதிஜ்ஞை என்று பெயர்.

5. கர்பியூ மணி (Curfew Bell).—அக்காலங்களில் பெரும்பாலும் வீடுகளெல்லாம் மரத்தினால் கட்டப்பட்டிருந்தன. சில சமயங்களில் விளக்குகள் அஜாக்கிரதையாக வைக்கப்பட்டதால் வீடுகள் தீப்பிடித்து நாசம் அடிக்கடி விளைந்ததுண்டு. அப்படிப்பட்ட விபத்தைத் தடுப்பதற்காக வில்லியம் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் இரவு 8-மணி ஆனதும் எங்கும் கேட்குமாறு ஒரு மணி அடிக்கவேண்டுமென்றும், உடனே எல்லோரும் விளக்குகளையும் வேறு நெருப்புகளையும் அணைத்துவிட்டுப் படுக்கைக்குச் செல்லவேண்டுமென்றும் திட்டம் செய்தான். அந்த மணிக்குத்தான் கர்பியூ மணி என்று பெயர். இங்கிலாந்தின் சில பாகங்களில் இன்னமும் இந்த மணி அடிக்கப்பட்டு வருகிறது.

6. புதுக் கானகம்.—வில்லியத்திற்கு வேட்டையாடுவதில் வெகு பிரியம். நியூஹாம்ஷயர் மாகாணத்திலுள்ள காடுகள் முழுமையும் வேட்டையாடுவதற்கென்றே அவன் விட்டு வைத்தான். வன பரிபாலன சம்பந்தமாக அநேக கொடூரமான சட்டங்களை ஏற்படுத்தினான். கானகத்தில் எவனேனும் மீறி நடக்கினும், அங்குள்ள மிருகங்களைக் கொல்ல முயலினும், அவனுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு வந்தது. ஒரு தகப்பன் பிள்ளையை நேசிப்பதுபோல் வனத்திலுள்ள மானினங்களை வில்லியம் நேசித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

7. இரண்டாவது வில்லியம்—கி. பி. 1087-ல் வில்லியம் குதிரையினின்றும் கீழே விழுந்து மரணமடைந்தான். அவனுக்குக் குமாரர்கள் மூவர். மூத்த குமாரனாகிய ராபர்ட் முன்னமே நார்மண்டியின் அதிபனாக இருந்தான். இரண்டாவது குமாரனாகிய வில்லியம் ரூபஸ் தகப்பன் இறந்த பிறகு இங்கிலாந்துக்கு அரசனாகிவிட்டான். ராபர்ட்டை அதிகமாக நேசித்து வந்த நார்மன் பிரபுக்கள், அவனையே இங்கிலாந்துக்கு அரசனாகச் செய்யப் பல முறை கலகம் செய்தனர். ஆனால் அம்முயற்சிகள் பயன்படவில்லை. வில்லியம் ரூபஸ் அவர்கள் கலகங்களை அடக்கித் தன் சாமர்த்தியத்தால்

எல்லோரையும் தன் ஆதீனத்துக்குள் வைத்துக்கொண்டான். அவர்கள் கொடுக்கவேண்டிய வரிகளை அதிகப்படுத்தினான். இங்ஙனம் நார்மன் பிரபுக்களின் பலம் ஒடுங்கியது ஆங்கிலேயருக்குச் சந்தோஷமாகவே இருந்தது. இவ்விஷயத்தில் அவன் செய்தது நன்மையே. ஆனாலும், அவனிடம் மூர்க்க குணமும் துஷ்ட புத்தியும் குடிகொண்டிருந்தன. குருமார்களை அவன் லக்ஷ்யம் பண்ணவில்லை. சில சமயங்களில் கோயில் நிலங்களின் வருமானத்தை அவனே எடுத்துக்கொண்டான். அவனது முரட்டுத்தனத்தைக் கண்டு ஆர்ச்பிஷப்பும் நடுங்கினார். தனக்கு விரோதமாக இருந்த ஆர்ச்பிஷப்பை வில்லியம் அனேக விதங்களில் உபத்திரவித்தான்.

வில்லியம் தன் தகப்பனைப்போல வேட்டை யாடுதலில் பிரியமுள்ளவன். கி. பி. 1100-ம் வருஷத்தில் ஒரு நாள் வில்லியம் புதுக்கானகத்தில் வேட்டையாடும் பொழுது யாரோ ஒருவனுடைய அம்பினால் அடிபட்டு இறந்தான். கரி எரிப்பவன் ஒருவன் அவன் சவத்தைக் கண்டு, தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தான். பிறகு வின்செஸ்டரிலுள்ள மாதா கோயிலில் அது புதைக்கப்பட்டது.

5. ஹென்றி I.—ராபர்ட்டுக்கு அப்பொழுதும் பட்டம் கிடைக்கவில்லை. அவன் தம்பியாகிய ஹென்றி அரசனாகிவிட்டான். மறுபடியும் நார்மன் பிரபுக்கள், ராபர்ட்டுக்கு முடி சூட்டவேண்டுமென்று கலகம் செய்தனர். ஹென்றி அக்கலகத்தை ஒழித்து, ராபர்ட்டைக் கைது செய்து கார்டிப் கோட்டையில் (Cardiff Castle) சிறை வைத்தான். சாகுமளவும் அவனை விடுதலை செய்யவில்லை. ஹென்றி, ஸ்காட்லாந்து தேசத்து ராஜகுமாரியாகிய மடில்டாவை மணந்துகொண்டான். அவள் பழைய ஸாக்ஸானிய ராஜ வம்சத்தைச் சேர்ந்தவள்; எதல்ரெட்டின் கொள் பேத்தி. இந்த விவாகத்தினால் நார்மானியரிடம் ஆங்கிலேயர்களுக்கிருந்த துவேஷம் மறைய ஆரம்பித்தது. ஆதலின் ஆங்கிலேயர் வரவர நார்மானியருடன் கூடிக்குலாவ ஆரம்பித்தனர். ஹென்றி நல்ல படிப்பாளி; நீதி மார்க்கத்தில்

பற்றுள்ளவன்; நியாயாதிபதிகளை நாடெங்கும் சுற்றி வரச் செய்து, அங்கங்கே நடக்கும் குற்றங்களை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுமாறு அவன் ஏற்படுத்தினான். அவன் அரசாட்சியின் கீழ், நாடு முழுவதும் அமைதி யுற்றிருந்தது. கி. பி. 1120-ல் அவன் ஏக புத்திரனாகிய வில்லியம் என்பவன் நார்மண்டியி லிருந்து ஒய்ட் என்னும் கப்பலில் இங்கிலாந்துக் குத் திரும்பி வரும்போது சமுத்திரத்தில் முழுகிப்போனான். இப்புத்திரசோகம் ஹென்றியை உயிர் உள்ள மட்டும் வருத்தி வந்தது.

9. உள்நாட்டுப்போர்.—தன் புத்திரன் இறந்த பிறகு தனது குமாரியாகிய மடில்டாவைத் தனக்குப் பிற்காலம் அரசியாக ஏற்றுக்கொள்ளும்படி ஹென்றி எல்லாப் பிரபுக் களையும் கேட்டுக்கொண்டான். அவர்களும் அதற்கு இணங்கி னார்கள். ஆனால் கி. பி. 1135-ல் ஹென்றி இறந்ததும், தாங் கள் கொடுத்த வாக்குக்கு விரோதமாக வில்லியத்தின் பேரனாகிய ஸ்டீவனை அவர்கள் அரசனாக்கிவிட்டனர். ஸ்டீவனோ பிரஜைகளை அடக்கியாளும் திறமையற்றவன். ஆதலின் பெரிய ஜமீன்தார்கள் எல்லாம் தங்கள் இஷ்டம் போல் நடக்க ஆரம்பித்தார்கள். இச்செய்தியைக் கேட்ட தும் மடில்டா ஆஞ்சோ நாட்டி லிருந்து இங்கிலாந்திற்கு வந்து, தன் ராஜ்யத்தைப் பெறச் சண்டை தொடுக்க லானாள். அவளுக்கு நெருங்கிய பந்துவாகிய ஸ்காட்லாந்து அரசன், அவளுக்கு உதவி புரிய ஒரு சேனையை அனுப்பி னான். இங்கிலாந்திலுள்ள ஜமீன்தார்களில் சிலர் மடில்டா பக்கமும் சிலர் ஸ்டீவன் பக்கமும் சேர்ந்துகொண்டனர். ஸ்டீவன் ஆளுகை முழுவதும் உள்நாட்டுப் போர் ஓயாது நடந்து வந்தது. சில சமயம் ஸ்டீவனுக்கும் சில சமயம் மடில்டாவுக்கும் ஜயம் கிடைத்தது. எவ்வளவு முயன்றும் ஸ்டீவனைச் சிம்மாதனத்தி லிருந்து துரத்த முடியவில்லை. ஆதலின் மடில்டா ஆஞ்சோவிற்குத் திரும்பிப் போய்விட் டாள். சில வருஷங்களுக்குப் பிறகு மடில்டாவின் புதல்வ னான ஹென்றி இங்கிலாந்துக்கு வந்து மறுபடியும் சண்டை

யிட ஆரம்பித்தான். முடிவில் இருதிறத்தாரும் சமாதானத்தை விரும்பினர். கி.பி. 1153-ல் செய்த வாலிங்போர்ட் (Wallingford) உடன் படிக்கையின்படி ஸ்டீவன் தன் வாழ் நாள் முழுவதும் ஆளுவதாகவும், அவனுக்குப் பிறகு ஹென்றி பட்டத்திற்கு வருவதெனவும் தீர்மானிக்கப்பட்டன.

10. பத்தொன்பது கோரமான வருஷங்கள்.—ஸ்டீவன் ஆண்ட 19 வருஷ காலமும் தேசமெங்கும் அமைதியின்றிக் கலகமும் போருமே தலையெடுத்து நின்றன. அக்காலத்தைப் பற்றி ஒரு ஆங்கில புத்தகத்தில் பின்வருமாறு கூறியுள்ளது:—“ ஜமீன்தார்கள் புதிது புதிதாகக் கோட்டைகள் கட்டி, அவைகளில் அனேக துஷ்டர்களை இருத்தினர். குடிகளை வருத்தி, அவர்களின் செல்வத்தை யெல்லாம் பறித்து வந்தனர். செல்வத்தைக் கொடுக்க மறுத்தவர்களைக் கொடிய தண்டனைக்கு ஆளாக்கினர். சிலரைத் தலைகீழாகத் தொங்கவிட்டுக் கீழே துர்நாற்றமுள்ள புகையை இட்டும், மற்றும் சிலரைப் பாம்பு, தேளை முதலிய விஷ ஜந்துக்கள் நிரம்பிய இருட்டறைகளில் அடைத்தும் துன்புறுத்தி வந்தார்கள்.” ஸ்டீவன் ஆண்ட 19 வருஷங்களும் தேசத்தின் நிலை மிகவும் கேவலமா யிருந்தது.

## அப்பியாசங்கள்

1. வில்லியத்தின் அரசாட்சியால் நேர்ந்த நன்மைகள் யாவை?

2. வில்லியம் ஜமீன்தாரர்களுடைய அதிகாரத்தை ஓங்க விடாது ஒடுக்கிய வகையை விவரிக்க.

3. உள்நாட்டுப் போரால் இங்கிலாந்து சீர் குலைந்த வரலாற்றினை எழுதுக.

4. ஈலி, ஸால்ஸ்பரி, கார்டிப் கோட்டை, ஒய்ட்ஷிப், வாலிங் போர்ட்.—இவைகளைக் குறித்து உங்கட்கு என்ன தெரியும்?

அதிகாரம் 2.

# நார்மன் அரசாட்சியிலிருந்த ஒரு ஆங்கில கிராமத்தின் நிலைமை.

கிராமத்தின் வீடுகள்.—கிராமத்தின் மத்தியில் மரத்தால் கட்டிய மாதா கோயிலும், அதற்கு அருகாமையில் ஜமீன் வீடும் இருக்கும். குடியானவர்களும் கூலியாட்களும் புகைபோககி யில்லாத சிறிய குடிசைகளில் வசித்து வந்தார்கள். ஜமீன்தார் இருந்த வீடு (Manor house) மற்ற வீடுகளைக் காட்டிலும் பெரியதாகவும் சௌகரியமாகவும் இருந்தது. அதில் அக்குடும்பத்தார் உண்ணவும் உறங்கவும் ஒரு பெரிய கூடமும் (Hall) அதற்குக் கீழே ஒரு சாராய அறையும் குதிரை லாயங்களும் நெற் களஞ்சியங்களும் இருப்பது வழக்கம்.

2. வில்லேன்ஸ் (Villeins):—முதலாம் வில்லியத்தின் கீழ் யுத்த வீரனுக இருந்ததற்காக பெரிய ஜமீன்களைப் பல நார்மானியர் பெற்றனரன்றோ? அப்பிரபுக்கள் அவரவர்கள் கிராமத்திற்கு அதிபர்களாக இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்த உபயோகத்திற்காகப் பாதி நன் செய் நிலத்தை வைத்துக்கொண்டு, மற்றதை அக்கிராமத்தார்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். இச்சிறு பங்கைப் பெற்றவர்கள் பெரும்பாலும் ஆங்கிலேயர்கள். நிலங்களை வாங்கிக் கொண்டதற்காக ஜமீன்தாரது நிலத்தில் ஒருவாரத்தில் சில நாட்கள் அவர்கள் வேலை செய்யவேண்டும். அப்படி வேலை செய்யும் வரைக்கும் அந்நிலங்களும் குடிசைகளும் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கும். பரம்பரையாக அவர் புத்திரர்களும் அவைகளை அடையலாம். ஆனால் ஜமீன்தார் உத்தரவு இல்லாமல் கிராமத்தைவிட்டு வேறெங்கும் அவர்கள் போகக்கூடாது. அக்காரணம் பற்றி அவர்களுக்கு வில்லேன்ஸ் அல்லது சுதந்திரமற்ற குடியானவர்கள் என்று

பெயர். அக்கிராமத்துக்கு ஒரு குரு (Priest) உண்டு. அவனுக்கும் மற்ற கிராமத்தாரைப் போலச் சில நிலங்கள் இருந்தாலும் மற்றவர்களைக் காட்டிலும் அவனுக்கு அதிக சுதந்தரமுண்டு.

3. கிராமத்தின் சமிர்த்தி.—கிராமத்துக்குப் பொதுவாக ஒரு மாவரைப்போன் இருப்பான். கலப்பை முதலிய கருவிகளைச் செய்து கொடுக்கவும் பழுது பார்க்கவும் ஒரு கொல்லனும் உண்டு. தமக்கு வேண்டிய உணவையும் உடையையும் அக்கிராமவாசிகள் தாங்களே தயாரித்து வந்தனர். ஆட்டு ரோமத்திலிருந்து கம்பளி ஆடைகள் செய்வது பெரும்பாலும் பெண்பிள்ளைகளின் வேலை. பின்னர் ஆங்கிலேயர் தங்கள் தேசத்தில் அகப்படும் ரோமத்தைப் பிளான்டர்ஸ் தேசத்திற்கு அனுப்பலாயினர். வீட்டில் செய்த ரொட்டி, சாராயம், பாலடைக்கட்டி, வெங்காயம் இவைகளே அவர்களுக்கு முக்கிய உணவு. அவர்கள் சில சமயம் சமீபத்திலுள்ள நதியிலிருந்து மீன்களையும் பிடித்துக் கொள்வார்கள். இவ்விதம் கிராமவாசிகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே தேடிக்கொண்டு சுகமாக வாழ்ந்தார்கள். ஜமீன்தார் முரட்டுச் சுபாவமுள்ளவராய் இருந்தால் மட்டும் அவர்களுக்குத் துன்பம் ஏற்படும். ஏனெனில், கிராமத்தை விட்டு வெளியே அதிகமாகப் போகாதபடியால் அவர்களுக்கு வேறு புதிய மாதிரிகள் தெரியமாட்டா.

4. சாகுபடி செய்யும் விதம்.—படத்தில் காட்டியுள்ளபடி நன்செய் நிலம் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பாகத்தில் கோதுமையும், இரண்டாவது பாகத்தில் பார்லி தானியமும் பயிரிட்டு, மூன்றாவது பாகத்தைத் தரிசாகப் போட்டுவிடுவார்கள். ஒவ்வொரு வருஷமும் ஒரு பாகம் முறையே தரிசாக விடப்படும். ஒவ்வொரு குடியானவனது நிலமும் ஓரே இடத்தில் இராமல் பல இடங்களில் பிரிந்தும், இடையிடையே ஜமீன்தார் நிலங்களும் விரவியிருக்கும். ஒருவர் நிலத்துக்கும் மற்றொருவர் நிலத்துக்கும் இடையில் வேலி கிடையாது.




ஆங்கில கிராமம்

ஆனால் குறுகிய வரப்புத்தான் எல்லையாக இருந்தது. நன்செய் நிலங்களைத் தாண்டிப் புல்வெளி இருக்கும். அது கிராமத்தார்க்குப் பொது. ஒவ்வொருவனுக்கும் அதில் தன் ஆடுகளை மேய்க்கப் பாத்யம் உண்டு. சமீபத்திலிருந்த காட்டிலிருந்து அவர்கள் கட்டை வெட்டிக்கொண்டு வருவார்கள். ஷெரிப் என்னும் அதிகாரி ஜமீன்தாரிடம் வரி வாங்குவதற்காக வருஷத்துக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை கிராமத்துக்கு வருவது வழக்கம்.

5. வழக்குகளை விசாரிக்கும் விதம்.—மேற் கூறிய விஷயங்களினின்றும் கிராமவாசிகளுக்குள் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படுமென்று நாம் ஊகிக்கலாம். சில சமயங்களில் அவ்வழக்குகள் ஜமீன்தாரால் தம் ஜமீன் நியாயஸ்தலத்தில் விசாரிக்கப்பட்டுத் தீர்க்கப்படும். அக்காலத்தில் வழக்குகளை விசாரிக்கும் விதம் விசித்திரமாக இருந்தது. ஒரே நிலத்தில் இருவர் பாத்தியம் கொண்டாடினால் தங்கள் வழக்கைத் தீர்க்க இருவரும் கைகலந்து சண்டை போடுவர். அதில் எவன் ஜயித்தானோ அவனுக்கே அந்நிலம் சொந்தமாகும். இந்த ஏற்பாட்டிற்குத் தோந்தவ யுத்த நீதி முறை (Trial by Combat) என்று பெயர். கிரிமினல் வழக்குகளைத் தீர்க்கும் விதம் வேறு. கொலை, களவு முதலிய குற்றம் சாட்டப்பட்ட ஒருவன், எரியும் தீயை மிதிக்க வேண்டும்; இல்லாவிடின் கொதிக்கும் தண்ணீரில் கையிட வேண்டும். தீயினால் ஊனம் உண்டாகாதிருப்பின் அவன் குற்றவாளியல்லன் என்று விட்டு விடுவார்கள். இல்லாவிடில் அவனுக்குத் தண்டனை விதிப்பார்கள். இங்ஙனம் தெய்வம் குற்றவாளிகளைக் காட்டி விடுமென்று அக்காலத்தவர் மூட நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதற்கு விதி விசாரணை (Trial by Ordeal) என்று பெயர்.

## அப்பியாசங்கள்

1. வில்லேன்ஸ் என்பவர் யார்? அவர்களுடைய உரிமைகளும் கடமைகளும் யாவை?

2. ஜமீன் நிலத்தைப் பயிரிட்டவர் யார்?

3. அக்காலங்களில் வழக்குகள் எங்ஙனம் தீர்க்கப் பட்டன? இப்பொழுது எப்படித் தீர்க்கப்படுகின்றன?

---

அதிகாரம் 3

## இரண்டாம் ஹென்றியும் தாமஸ் பெக்கட்டும் (Thomas Becket)

(கி. பி. 1154-1189)

ஹென்றியின் இராஜ்யம்.—வாலிங்போர்ட் உடன் படிக்கையின்படி கி. பி. 1154-ல் ஸ்டீவன் இறந்த பிறகு முதலாவதுஹென்றியின் பேரனுகிய இரண்டாவது ஹென்றி இங்கிலாந்துக்கு அரசனுனன். பிரான்ஸிலும் அவனுக்கு அநேக மாகாணங்கள் சொந்தமா யிருந்தன. தன் தாய் வழி யில் நார்மண்டியையும் தகப்பனிடமிருந்து ஆஞ்ஜோவையும் அவன் அடைந்தான். இதனுல்தான் ஹென்றிக்கும் அவன் வமிசத்தார்க்கும் ஆஞ்ஜெவின் அரசர்கள் என்று பெயர். இலியனர் (Eleanor) என்னும் மாதை மணந்து கொண்ட தால் ஆக்விடேன் (Aquitaine) என்னும் பிரதேசம் இவன் இராஜ்யத்தோடு சேர்ந்துவிட்டது. தன்னுடைய புதல் வரில் ஒருவனுக்குப் பிரிட்டனி பிரபு குமாரியை விவாகம் செய்ததால் அம்மாகாணமும் ஹென்றியின்வசம் வந்து விட் டது. இவ்விதம் பிரான்ஸ் தேசத்தில் பாதி பாகத்துக்குமேல் இவன் வசமாகிவிட்டது. மேலும் ஹென்றி அயர்லாந்துக்கு ஒரு தடவை போய், அங்குள்ள தலைவர்களைத் தனக்கு வணங் கச் செய்து அயர்லாந்தின் அதிபன் என்னும் பட்டத்தையும் அணிந்து கொண்டான்.

ஹென்றி செய்த சீர்திருத்தங்கள்.—ஸ்டீவன் காலத்தில் சீர்குலைந்த இங்கிலாந்தின் நிலையை ஒழுங்கு படுத்துவது




ஹென்றியின் பிரெஞ்சு மாகாணங்கள்

ஹென்றியின் முதற் கடமையாக இருந்தது. ஸ்டீவன் காலத்தில் கட்டிய கோட்டைகளை இடித்தும், அவைகளில் உள்ள துஷ்டர்களைத் துரத்தியும், அவ்வரசன் ஜமீன்தார்களின் பலத்தை ஒடுக்கித் தேசத்தில் அமைதியை உண்டு பண்ணினுன். யுத்தகாலத்தில் ஜமீன்தார் தயவை எதிர்பாரா வண்ணம் அவர்கள் ஆட்களைச் சண்டைக்கு அனுப்புவதற்குப் பதிலாகப் பணத்தைக் கொடுத்துவிடும்படி அவன் விதித்தான். ஜமீன்தார்கள் தங்கள் நியாயஸ்தலத்தில் சட்டம் சரியாக அனுசரியாதது கண்டு, எல்லா வழக்குகளையும் அரசன் நியமித்த நீதிபதிகளே விசரிக்க வேண்டுமென்று அவன் திட்டம் செய்தான். நீதிபதிகளை அடிக்கடி தேசமெங்கும் சுற்றி, குற்றங்களை விசாரிக்குமாறு உத்தரவு செய்தான். பழைய குரூரமான விசாரணை முறைகளை ஒழித்து ஜூரி விசாரணையை ஏற்படுத்தினுன். அதாவது நியாயாதிபதிகள் கிராமம் கிராமமாகப் போகும்போது அங்கங்கே சிலர் சத்தியத்தையே பேசுவதாகப் பிரதிக்கினை செய்து கொண்டு-(Jurors) ஜூரர்கள்-அவ்வூரில் குற்றம் செய்தவர்களை நியாயாதிபதிகளின் முன்பு விசாரணைக்குக் கொண்டு வருவார்கள். இவ்வழக்கமே சிற்சில மாறுதல்களுடன் இக்காலத்திலும் அனுஷ்டானத்தில் இருக்கிறது.

3. பெக்கட்டின் வரலாறு.— இவ் வேலைகளில் எல்லாம் ஹென்றிக்கு உதவியவன் தாமஸ் பெக்கட் என்னும் நன் மந்திரி. அவன் லண்டனில் வசித்து வந்த ஒரு நார்மன் வியாபாரியின் புதல்வன். அவன் கல்வியில் மிகத் தேர்ச்சி பெற்று, ஐரோப்பா முழுவதும் பிரயாணம் செய்தவன். யாவரும் அவனைப் புத்திசாலி என்று மதித்தார்கள். தியோபால்ட் (Theobald) என்னும் ஆர்ச்பிஷப் அவன் படிப்பிற்கு மெச்சி, அவனைத் தன்னிடமே உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டு அவனை அதிக பட்சத்துடன் நடத்தினுன். ஹென்றியும் அவன் திறமையைக் கேள்வியுற்று இராஜாங்கத்தில் அவனுக்கு உத்தியோகம் கொடுத்தான். சீக்கிரம் தாமஸ் தன் படிப்பினுலும் சாதுர்யத்தாலும் மேன் மேலும்

உயர்ந்த பதவியை அடைந்து, கடைசியாக முதல் மந்திரி ஸ்தானத்திற்கும் வந்து விட்டான். கஜானு வரவு செலவு களையும் மற்ற முக்கியமான இராஜாங்க விஷயங்களையும் அவனே கவனித்து வந்தான். மேலும், அவன் பிரபுக்களின் சபைக்குத் தலைவனுகவும் விளங்கினுன்.

4. அரசனின் ஆப்தன்.—பெக்கட் மிக்க அழகும் கம்பீரமுமான தோற்றமுள்ளவன். விரல்களில் மோதிரங்களும், கழுத்தில் தங்கச் சங்கிலியும் அணிந்து, பெக்கட் அரசனினும் அழகுபெற விளங்குவான். ஹென்றியும் பெக்கட்டும் ஆப்த நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒருவர் தோளில் ஒருவர் கையைப் போட்டுக்கொண்டு வீதிகளில் உலாவுவார்கள். ஒரு சமயம் மாரி காலத்தில் இருவரும் லண்டன் நகரத்து வீதிகளின் வழியாகச் சவாரி செய்யும்போது குளிரினுல் உடல் நடுங்கும் ஒரு கிழவன் பிச்சை கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டனர். அரசன் உயர்ந்த உடை தரித்திருக்கும் தன் மந்திரியினிடம் திரும்பி, அவன்மேலிருக்கும் பட்டாடையைக் கிழித்தெடுத்து, அதை அந்தப் பிச்சைக்காரனிடம் எறிந்தான். அரசனுக்குத் தன்னிடமிருக்கும் பிரியத்தையும் சுவாதீனத்தையும் பெக்கெட் நினைத்து உளங் களித்தான்.

5. பெக்கட் ஆர்ச்பிஷப்பாக இருந்து செய்த வேலை.—மத விஷயங்களிலும் பல சீர்திருத்தங்களைச் செவ்வனே நிறைவேற்ற எண்ணிய ஹென்றி, பெக்கட்டைக் காண்டர்பரியின் ஆர்ச்பிஷப்பாக நியமித்தான். ஆனுல் பெக்கட் அப் புதிய பதவிக்கு வந்ததும், அப்பதவிக்கு ஏற்றவாறு பட்டாடைகளையும் ஆபரணங்களையும் விடுத்துத் துறவியாகி வசிக்கலாயினன். மேலும் சர்ச்சின் உரிமைகளை எவ்விதத்திலும் பாதுகாப்பதாக அவன் தீர்மானித்துக்கொண்டான். முன் காலத்தில் சர்ச் சம்பந்தமான குற்றவாளிகள் அங்குள்ள நியாயஸ்தலங்களிலேயே விசாரிக்கப்பட்டனர். பெருங் குற்றங்களுக்குக்கூட சொற்ப தண்டனைதான் அவர்களுக்கு விதிக்கப்படும். சாதாரண மனிதர்களாயின், அதே குற்றங்

களுக்குக் கடுந்தண்டனை கிடைக்கும். நீதி முறையில் இவ்விதம் தன் பிரஜைகளுக்குள் வித்தியாச மிருப்பது கண்டு சர்ச் குற்றவாளிகளையும் சாதாரண நியாயஸ்தலத்திலேயே விசாரிக்கவேண்டு மென்று ஹென்றி தீர்மானித்தான். பெக்கட் இதைக் கேள்வியுற்றதும் கடுங்கோபங் கொண்டு அரசனுடைய எண்ணம் கைகூடாதவாறு தடுக்க ஆரம்பித்தான்.

6. பெக்கட்டுடன் விவாதம்.—மேற் கூறிய விஷயத்தில் இருவருக்கும் ஆறு வருஷகாலம் நீடித்த விவாதம் ஏற்பட்டது. ஹென்றி அதைத் தீர்த்துக்கொள்ளக் கிளாரண்டன் (Clarendon) என்னுமிடத்தில் பெக்கட்டை வரவழைத்துக் கேட்டபோது, பெக்கட் அரசனுடைய அதிகாரத்தை அலட்சியம் செய்து இறுமாப்புடன் பதில் அளித்தான். ஆகவே இருவருக்கும் பகை மூண்டது. முடிவில் பெக்கட் பிரான்ஸுக்கு ஓடி விட்டான். ஆறு வருஷம் கழித்து ராஜி செய்துகொள்வதாகக் கூறி, ஹென்றி பெக்கட்டை இங்கிலாந்துக்கு வரும்படி வேண்டினான். பெக்கட்டோ பழையவாறே பிடிவாதமுடன் சர்ச்சின் உரிமைகளைத் தாங்கிப் பேசியதுமன்றித் தான் இல்லாதிருந்த சமயத்தில் ஹென்றியின் புதல்வனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்துவைத்த பிஷப்புமார்களை வேலையினின்றும் நீக்கி விட்டான்.

பெக்கட்டின் கொலை.

7. பெக்கட்டின் கொலை. கி.பி. 1170.-அப்பொழுது நார்மண்டியிலிருந்த ஹென்றி இந்தப் புதிய விவாதத்தைக்

கேட்டதும் வெகு கோபங்கொண்டு, "என் சோற்றை உண்டு வரும் மாந்தரில் உபத்திரவிக்கும் இந்தக் குருவை ஒழிக்க ஒரு வீரனும் இலனோ?" என்று கூறினான். நான்கு வீரர்கள் அரசன் வார்த்தையைக் கேட்டு, இங்கிலாந்துக்குக் கடிந்து வந்து காண்டர்பரி கோயிலை அடைந்தனர். அப்பொழுது சாயங்காலத்துப் பூஜை நடந்து கொண்டிருந்தது. அவர்கள் கதவுகளைப் படீர் என்று இடித்துத் தள்ளி "இராஜத் துரோகி எங்கே?" எனக் கூவிக்கொண்டே உள்ளே நுழைந்தனர். அது கேட்ட பெக்கெட் அவர்கள் முன்னே வந்து நின்று, "நான் இராஜத் துரோகி யல்லன்; தெய்வ பக்தியுள்ள குரு" என்று விடையளித்தான். உடனே அந்நால்வரும் அவனைத் தாக்கிக் கத்திகளாற் குத்திக் கொன்றனர். அரசன் கோபங்கொண்டு கூறியபோது, இவ்விதம் நேருமென்று சிறிதும் நினைத்தானல்லன். அவன் பின்னர் நிகழ்ந்தவை கேட்டு மிகவும் மனம் வருந்தினான். இப்படுகொலையைக் கேட்டதும் ஜனங்கள் அரசனை நிந்திக்க ஆரம்பித்தார்கள். அநேகர் பெக்கட்டின் சமாதிக்கு யாத்திரை போயினர். அப்படிச் சென்ற ஒரு யாத்திரைக் கூட்டத்தாரைப் பற்றிச் சாஸர் என்னும் கவி அனேக கதைகள் எழுதியிருக்கிறார். அரசன்கூடத் தன் பாவத்தைப் போக்கிக் கொள்ளக் கருதி, அச் சமாதிக்குப் போய் அங்குத் தவம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றுதொட்டு சர்ச்சின் உரிமைகள் ஒடுங்காது முன்னிலும் அதிகரித்து வரலாயின.

## அப்பியாசங்கள்

1. ஹென்றிக்குப் பிரான்ஸில் சொந்தமான மாகாணங்கள் எவை?

அவன் அவைகளை எவ்விதம் அடைந்தான்?

2. ஹென்றியின் பிரெஞ்சு மாகாணங்களைக் காண்பிக்கும் படம் ஒன்று வரைக.

3. பெக்கட்டுக்கும் ஹென்றிக்கும் ஏற்பட்ட விவாதத்தை விவரிக்க.

4. பெக்கட் மந்திரியா யிருந்தபோதும் ஆர்ச்பிஷப்பாக இருந்தபோதும் நடந்த ஒரு முக்கியமான விஷயம் கூறுக.

---

அதிகாரம் 4

## சிங்க நெஞ்சுடைய ரிச்சர்டும் மூன்றாவது சிலுவைப் போரும்

## (Richard the Lionheart and III Crusade)

ரிச்சர்டின் குணாதிசயங்கள்.—இரண்டாவது ஹென்றி இறந்ததும், அவன் மூத்த குமாரனாகிய ரிச்சர்டு சிங்காதனம் ஏறினான். அவன் நீண்ட உருவமும் பருத்த தேகமுமுடையவன். அவன் வில்லை வேறொருவராலும் வளைக்க முடியாது. அவன் அஞ்சா நெஞ்சினனாதலால், அவனைச் 'சிங்க நெஞ்சுடையோன்' என்று கூறுவது வழக்கம். கெடுதி செய்தவரையும் மன்னிக்கும் உயர் வீரன் அவன். தன் இராஜ்ய விவகாரங்களைக் கவனிப்பதில் அவன் மனம் செல்லவில்லை. சண்டைசெய்து கீர்த்தியடையவேண்டுமென்பதே அவனது பேராவல். அவன் வீரச் செயல்களைப்பற்றி வந்திகள் பாடினார். ரிச்சர்டும் சங்கீதத்தில் பிரியமுள்ளவனானபடியால், அவர்களுக்கு மரியாதை செய்தான். வீணை முதலிய வாத்தியங்களை வாசிக்கும் திறமையும் அவனுக்கு உண்டு.

2. சிலுவைப்போரின் காரணங்கள்.—ரிச்சர்டு சிங்காதனம் ஏறியபோது ஐரோப்பியக் கிறிஸ்தவர்களுக்கும் பாலஸ்தீனில் உள்ள மகம்மதியர்களுக்கும் யுத்தம் நேரிட்டது. ஸலடின் (Saladin) என்னும் துருக்கிய சுல்தான் பாலஸ்தீனைவென்று (Jerusalem) ஜெருசலத்திலுள்ள கிறிஸ்தவர்

களைத் துரத்திவிட்டான். கிறிஸ்துவின் சமாதி இருக்கும் ஜெருசலம் கிறிஸ்தவர்க்கு அதிக புனிதமானது. வருஷா வருஷம் அங்கு அனேகர் யாத்திரை போவதுண்டு. ஜெருசலம் துருக்கியர் கையில் அகப்பட்டுக் கொண்டதால் கிறிஸ்தவ யாத்திரிகள் அப்புனிதமான சமாதியைத் தரிசித்து வர முடியாமற் போயிற்று. ஆகையால் ஜெருசலத்தை மீட்பதற்காக எல்லா ஐரோப்பிய அரசர்களும் ஒன்று சேர்ந்து துருக்கியர்களோடு சண்டை தொடுத்தனர். அச்சண்டைக்குப் போன வீரர்களெல்லாம் கிறிஸ்தவ மதக் குறியாகிய சிலுவையை அணிந்துகொண்டபடியால் அதற்குச் சிலுவைப் போர் என்று பெயர் வந்தது.

3. ரிச்சர்டும் சிலுவைப் போரும்.—ரிச்சர்டு காலத்தில் நேர்ந்தது மூன்றுவது சிலுவைப் போராகும். இரணகளத்தில் கீர்த்தியடைய வேண்டுமென்று விருப்பங் கொண்டே ரிச்சர்டு அப்போருக்குப் போயினன். பிரான்ஸ் தேசத்துப் பார்த்திபனுகிய பிலிப்பும் (Philip) ஆஸ்திரியாவின் அதிபனுன லெபால்டும் (Leopold) இவனுக்கு முன்னமே பாலஸ்தீனுக்குப் போய்விட்டனர். அவர்கள் ரிச்சர்டுடன் சேர்ந்துகொண்டு ஏகர் (Acre) என்னும் பட்டணத்தை முற்றுகை போட்டுப் பிடித்துக்கொண்டனர். ரிச்சர்டினுடைய ஆண்மையை யாவரும் வியந்தனர். ஆனுல் அவனது இறுமாப்பும் முரட்டுத்தனமும் மற்ற அரசர்கள் மனத்தைப் புண்படுத்தின. ஆதலின், அவர்கள் அவனைத் தனியே விட்டுவிட்டு வெறுப்புடன் தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிட்டனர். ஆயினும் ரிச்சர்டு வீரம் குன்றுது அங்கிருந்து பொருதான். பின்னர், கிறிஸ்தவ யாத்திரிகள் தடையின்றி வழக்கம்போல் ஜெருசலத்துக்குப் போய்வரலாம் என்ற நிபந்தனையை ஸலடின் அங்கீகரிக்க, அவன் ஊருக்குத் திரும்பினுன்.

4. ரிச்சர்டின் சிறை.—ரிச்சர்டுக்கு அனேக ஐரோப்பிய அரசர்கள் விரோதிகளானபடியால், அவர்களின் கண்ணில் படாமல் ஊருக்குவர அவன் மாறுவேஷம் பூண்டான். அப்பொழுதும் லெபால்டு அவனைத் தெரிந்துகொண்டு

அவனைப் பிடித்து ஜர்மன் சக்கரவர்த்தியிடம் ஒப்பிக்கவே, அவன் ரிச்சர்டை ஒரு வருஷத்துக்குமேல் சிறையிலிட்டான். நெடுநாள் ரிச்சர்டு திரும்பிவராதது கண்டு, அவனிடம் பிரியமுள்ள பிளாண்டல் (Blondel) என்னும் வந்தி அவனைத் தேடிப் புறப்பட்டான். அவன் ஒவ்வொரு சிறை வாயிலிலும் சென்று ரிச்சர்டுக்குப் பிரியமுள்ள பாடல்களைப் பாடிக் கொண்டே ஜர்மன் தேசம் முழுவதும் சுற்றினான். இவ்வாறு சுற்றிவருகையில் ஒரு சிறையிலிருந்து பதில் பாட்டு ஒன்று கேட்டது. குரலிலிருந்து தன் எஜமானன் அங்கு இருப்பதை வந்தி அறிந்துகொண்டு அச்சமாசாரத்தை இங்கிலாந்திலுள்ள மந்திரிகளுக்குத் தெரிவித்தான். மீட்புப் பணம் கொடுத்தாலொழிய விடுதலை செய்ய முடியாதென்று ஜர்மன் சக்கரவர்த்தி சொல்ல மந்திரிகள் ஜனங்களிடமிருந்து பெருந்தொகையை வசூலித்து அரசனை கி.பி. 1194-ல் சிறையிலிருந்து மீட்டுவந்தார்கள்.

5. பின்னர், ரிச்சர்டு பிரான்ஸ் அரசனோடு யுத்தம் செய்தான். 1199-ல் தன் கீழுள்ள ஜமீன்தாருக்குச் சொந்தமான ஷாலுஸ் (Chalus) என்னும் கோட்டையை முற்றுகையிடும்பொழுது அம்பினால் அடிபட்டு உயிர் துறந்தான். இவன் வெளியூர்களிலேயே நெடுநாள் திரிந்து வந்தமையால் இராஜாங்க விஷயங்களை மந்திரிகளே பார்த்து வந்தனர்.

6. ராபின் ஹூட்டும் அவன் கூட்டத்தாரும்.-ரிச்சர்டு காலத்தில்தான் ராபின்ஹூட் (Robinhood) என்னும் வழிபறித் தலைவனும் அவன் கூட்டத்தாரும் தேசப்பிரஷ்டர்களாகி 'நாட்டிங்காம்' ஜில்லாவில் உள்ள காடுகளில் வசித்து வந்தார்கள். அவர்களது வில்வித்தையின் திறத்தைப் பற்றியும், ஏழைகள்பால் காட்டிய இரக்கத்தைப் பற்றியும் அனேக கதைகள் வழங்கி வருகின்றன. அவர்களைப் பிடிக்கச் சென்ற ஷெரிப் என்னும் உத்தியோகஸ்தனை அனேக தடவைகளில் ஏமாற்றித் தப்பித்துக் கொண்டனர். அக்காடுகளின் வழியாகப் போகும் நார்மன் தனிகர்களுக்கு அவர்கள் விருந்திட்

டுப் பிறகு கொள்ளை யடிப்பார்கள். அப்படிக் கிடைத்த செல்வத்தை ஏழைகளுக்கு அவர்கள் உதவுவது வழக்கம். ஒரு தடவை ரிச்சர்டு ராபின் ஹூட்டைக் காட்டில் சந்தித்து, அவன் தீரத்துக்கு வியந்து, அவன் குற்றங்களை மன்னித்து நாட்டிற்குத் திரும்பிவர அனுமதி கொடுத்தான். ஆனால் அவனுக்குப் பின் வந்த அரசன் அதை ரத்துசெய்து விட்டபடியால், தன் வாழ் நாள் முழுவதும் ராபின்ஹூட் காட்டிலேயே தங்க நேரிட்டது.

### அப்பியாசங்கள்

1. ரிச்சர்டின் நற்குணங்கள் எவை?
2. சிலுவைப் போரின் காரணம் என்ன?
3. ரிச்சர்டு சிறையிலிருந்து மீண்ட வகையினைக் கூறுக.
4. பிளாண்டல், லெபால்டு, ஏகர், ஸலடின், ராபின் ஹூட், ஷாலுஸ் இவைகளைக் குறித்து ஒவ்வொரு முக்கிய விஷயம் கூறுக.

---

## அதிகாரம் 5

# மதிகெட்ட ஜானும் மகா சாஸன பத்திரமும்
## (Magna Carta)

ஹென்றி II

| ரிச்சர்டு | ஜாப்ரி (கி.பி. 1186-ல் இறந்தான்) | ஜான் (கி.பி. 1199 — 1216) |

ஜாப்ரி →
ஆர்தர் இளவரசன் கொலையுண்டான் (கி.பி. 1203)

ஜான் பிரெஞ்சு மாகாணங்களை இழந்தது.— கி. பி. 1199-ல் ரிச்சர்டு இறந்ததும், ஹென்றியின் கனிஷ்ட குமாரனான ஜான் இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் தமையனாகிய ஜாப்ரியின் புதல்வன் ஆர்தர் என்னும் இளவரசன் உயிருடன் இருந்தபடியால், இராஜ்யம் ஜானுக்கு நியாயப்படி உரியதாகாது. ஆர்தர் சிறுவனாக இருந்தமையால், ஜான் பலாத்காரமாக இராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டான். பிரெஞ்சு அரசனாகிய பிலிப்பும் சில நார்மன் பிரபுக்களும் ஆர்தருக்கு உதவி புரிந்தனர். தனக்குரிய இராஜ்யத்தை அடைய ஆர்தர் ஒரு முறை முயன்றான். அப்போது ஜானின் கையில் அவன் அகப்பட்டுக் கொண்டான். பிறகு ரூவாங் (Rouen) பட்டணத்தில் சிறைபட்டு கி. பி. 1203-ல் கொலை செய்யப்பட்டான். இதைக் கேள்விப் பட்டதும் பிரெஞ்சு அரசன் கோபங்கொண்டு நார்மண்டியின்மீது படை யெடுத்தான். தன் அண்ணன் மகனைக் கள்ளத்தனமாகக் கொன்ற ஜான், பிரெஞ்சுப் படை முன்பு நிற்கமுடியாது அபஜயம் அடைந்து ஓடிவிட்டான். சில வருஷங்களில் காஸ்கனியைத் தவிர, இரண்டாவது ஹென்றிக்குச் சொந்தமான மற்றெல்லா மாகாணங்களையும் ஜான் இழக்க நேரிட்டது. இது ஜானுக்குப் பெருத்த அவமானமாய் இருந்தபோதிலும் இங்கிலாந்துக்கு நன்மையே விளைவித்தது. ஏனெனில், சில நார்மன் பிரபுக்களும் அரசனும் முந்தி பிரான்ஸில் சில ஜில்லாக்களை வைத்துக் கொண்டிருந்த படியால், அங்குமிங்குமாகத் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். இப்பொழுது யாவரும் அன்னிய நாட்டில் நிலங்களை இழந்ததால் அவர்கள் இங்கிலாந்தின் நன்மையையே கருத ஆரம்பித்தனர். அதன் பிறகு நார்மானியரும் ஆங்கிலேயரும் ஒருங்குகூடி வாழ்ந்து ஒரே ஜாதியாகக் கலந்துவிட்டனர்.

2. போப்புடன் விவாதம்.—கி. பி. 1205-ல் காண்டர்பரியின் ஆர்ச்பிஷப் இறக்கவே அங்குள்ள குருமார்கள் தங்கள் ப்ரயரை (Prior) அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தனர். ஜான் அதற்கு இணங்காது, வேறொருவனை அவ்வேலைக்கு

நியமித்தான். இருதிறத்தாரும் இந்த விவகாரத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பிப் போப்பினிடம் தெரிவித்தனர். போப் மகாகுரு அவ்விருவரையும் தள்ளிவிட்டு, அதிக படிப்பும் தெய்வ பக்தியுமுள்ள ஸ்டீவன் லாங்க்டன் (Stephen Langton) என்னும் ஆங்கிலச் சன்னியாசியை நியமித்தார். ஆனால் ஜான் அவனை ஆர்ச்பிஷப்பாக வைத்துக்கொள்ள மறுக்கவே, ஜானுக்கும் போப்புக்கும் பெருத்த விவாதம் ஏற்பட்டது. ஜானின் பிடிவாதத்துக்காகப் போப் இண்டர்டிக்ட் (Interdict) என்னும் கிறிஸ்தவ மதத் தடை உத்தரவை இங்கிலாந்தின்மீது விதித்தார். அதன்படி கோயில்கள் மூடப்பட்டன; துதிகள் நிறுத்தப்பட்டன; சவங்கள் உத்தரக்கிரியைகள் ஏதுமின்றிப் புதைக்கப்பட்டன. தேசமெங்கும் துர்த்தேவதைகள் வியாபித்ததாக ஜனங்கள் நினைத்தார்கள். என்ன செய்தும் ஜான் இணங்கி வாராதது கண்டு, போப் அவனை மதப் பிரஷ்டனாக்கினார். ஆனால் ஜான் ஒன்றையும் இலக்ஷியம் பண்ணாமல் சர்ச் நிலங்களைத் தானே கைப்பற்றி அனுபவித்து வரலானான்.

3. ஜான் போப்புக்குக் கீழ்ப்படிதல்.—தம் முயற்சிகள் எல்லாம் வீணானமை கண்டு, போப் கடைசியாக, இங்கிலாந்தின்மீது படையெடுத்து ஜானைச் சிங்காதனத்திலிருந்து நீக்குமாறு பிரெஞ்சு அரசனுக்குக் கட்டளையிட்டார். இச்செய்தியைக் கேட்டதும் ஜான் மிகப் பயந்து, தான் கீழ்ப்படிவதாகப் போப்புக்குத் தெரிவித்தான். போப் நியமித்த ஸ்டீவன் லாங்கடனை ஆர்ச்பிஷப்பாக ஏற்றுக்கொண்டான். அன்றியும் போப்பின் தூதனது பாதங்களில் விழுந்து, தனது மணிமுடி வணங்கிச் சரணாகதி செய்தான். மேலும் வருடந்தோறும் போப்புக்குக் கப்பம் செலுத்துவதாகவும் அவன் ஒத்துக்கொண்டான். இங்ஙனம் மானவமானம் கருதாது இழிவு படுத்திக்கொண்ட அரசன் வேறொருவனும் இல்லை.

4. மகாசாஸன பத்திரம்.—பிரெஞ்சு யுத்தங்களின் செலவுக்காக ஜனங்களின்மீது ஜான் அதிக வரியைச் சுமத்

தியும், சரியான விசாரணை யின்றி அனேகரைச் சிறையில் அடைத்தும், இன்னும் அனேக விதங்களில் குடிகளை வருத்தியும் வந்தான். அவனது கொடுங் கோலினால் யாவரும் அவனுக்கு விரோதிகளாயினர். பிரபுக்களும் பொது ஜனங்களும் சர்ச் மனிதர்களும் ஒன்று சேர்ந்து லாங்கடனைத் தலைவனாகக்கொண்டு நீதியில்லா அரசனுக்கு எங்ஙனம் நன்மதி புகட்டலாம் என்று ஆலோசித்தனர். லாங்கடன் கூறிய யோசனையின்படியே குடிகளது உரிமைகள் அடங்கிய பத்திரம் ஒன்று தயாரித்தனர். அதற்குத்தான் மகா சாஸன பத்திரம் (Magna Carta) என்று பெயர்.

5. பிரபுக்கள் அரசனை கி. பி. 1215-ல் ரன்னிமீட் (Runnymede) என்னுமிடத்தில் சந்தித்தனர். ஆயுத பாணிகளாகச் தன்னைச் சூழ்ந்து நிற்கும் அப்பெருங் கூட்டத்தைக் கண்டு ஜான் நடுங்கினன். ஆர்ச்பிஷப் லாங்கடன் அப்பத்திரத்தில் கையெழுத் திடுமாறு அரசன்முன் அதனை நீட்ட, வஞ்சக நெஞ்சுள்ள ஜானும் வேறு வழியில்லாமல் புன்சிரிப்புடன் அப்பத்திரத்தின் அடியில் கையொப்ப மிட்டான். உடனே அக்கூட்டத்தில் பெருத்த ஆரவாரம் உண்டாயது. அப்பொழுது ஜான், “இருக்கட்டும்: இவர்கள் இப்பொழுது கூச்சலிடட்டும்; நானு இதைச் ட்டை பண்ணுகிறவன்? ஒரு நாளும் நான் இதை நிறைவேற்றப் போகிறதில்லை. இதைவிட்டு வெளியேறிப் பழையபடி என் அரச பலத்தை அடைந்தால் இவர்களை என்னபாடு படுத்துகிறேன் பார். என்னைக் கையெழுத்திடக் கட்டாயப் படுத்தினதற்காக இவர்களை ஆட்டுவிக்கிறேன் காண்” என மனத்துள் நினைத்தான். தான் எண்ணியவாறே அவ்விடத்தை விட்டகன்றதும், ஜான் மகா சாஸனப் பத்திரத்தின்படி நடக்கமுடியாதென்று தெரிவித்தான். ஆகையால் பிரபுக்கள் பிரெஞ்சு அரசன் உதவியை நாடினர். அவனும் அதற்கு இணங்கி ஒரு சேனையை அனுப்பினன். அப்போது பெருத்த உள்நாட்டுப் போர் நடக்கும் போலிருந்தது. தெய்வாதீனமாக கி. பி. 1216-ல் ஜான் இறக்கவே, எல்லாத் துன்பங்களும் ஒழிந்தன.

இவ்வளவு துயரங்களுக்கும் காரணமா யிருந்த ஜானின் ஆட்சி, இங்கிலாந்து சரித்திரத்தில் மிகவும் கேவலமான தென்று சொல்லுவது பொருத்தமாகும்.

6. மகாசாஸன பத்திரத்தில் கண்ட முக்கிய விஷயங்கள்.—1. ஆலோசனை சபையின் அனுமதி யில்லாமல் ஜனங்களின்மீது அரசன் வரி போடக்கூடாது.

2. சட்டத்தை மீறியேனும், சரியானவிசாரணையின்றியேனும் ஒரு குடியையும் சிறை யிடுதலும் தேசப் பிரஷ்டம் செய்தலும் கூடாது.

3. ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய சுதந்திரத்தையும் நியாயத்தையும் அரசன் எக்காலத்தும் மறுக்கவொண்ணாது.

இவைபோன்ற சுமார் 64-ஷரத்துக்கள் இச்சாஸனத்தில் அடங்கி யிருக்கின்றன. ஜனங்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளேயும் பாத்தியதைகளேயும் நன்கு திட்டப்படுத்தி விளங்கும் இதற்கு மகா சாஸனப் பத்திரம் என்று பெயர். ஆங்கிலேயர்கள் இனி இன்னும் மிகுந்த சுதந்திரங்களேப் பெறுவதற்கு இச்சாஸனமே ஒரு பெரிய ஆதாரமாயிற்று. ஆங்கில அரசாட்சி முறை மேன்மேலும் வளர்வதற்கு அடிப்படையாகவும் இருந்தது. ஆகையால் இப்பத்திரத்தை ஆங்கிலேயர், தாங்கள் பெற்றுள்ள சுதந்திர வாழ்க்கைக்கு உயிர் நிலேயாக மதிக்கிறார்கள்.

## அப்பியாசங்கள்

1. இண்டர்டிக்ட், மதப்பிரஷ்டம் இவைகளேத் தெளிவாக விளக்குக.

2. ஜானுக்கு விரோதமாக ஜனங்கள் கலகம் செய்தது ஏன்?

3. பிரெஞ்சு மாகாணங்களே ஜான் எங்ஙனம் இழந்தான்?

4. துரோகம், கோழைத்தனம், வஞ்சகம் முதலிய தீக்குணங்கள் ஜானிடம் இருந்தனவாகச் சொல்வதற்கு ஏற்ற ஆதாரம் காட்டுக.

5. மகா சாஸனப் பத்திரத்தின் முக்கிய ஷரத்துக்கள் எவை? அப்பத்திரம் ஏன் முக்கியமானது?

---

அதிகாரம் 6

## மூன்ருவது ஹென்றியும் ஸைமன் டி மாண்ட் பர்டும் (Simon de Montfort). (கி பி. 1216—1272).

ஹென்றியின் கெட்டரசு.—ஜான் இறந்ததும், அவன் குமாரன் ஹென்றி பட்டத்திற்கு வந்தான். ஆனால் அவன் இளம்பிராயத்தனுய் இருந்தபடியால், இரு பிரபுக்கள் இராஜ்யபாரத்தை வகித்து வந்தனர். அவர்கள் மகா சாஸனத்தை ஒட்டிச் சரிவர ஆண்டனர். ஹென்றி மேஜராகிச் செங்கோல் செலுத்த ஆரம்பித்ததும், எல்லாம் தாறுமாருய்ப் போயின. ஹென்றி தகப்பனைப்போல் துரோகியும் அல்லன்; வஞ்சகனு மல்லன்; ஆனல் பெரும் மூடன்; ஆளத் திறமையற்றவன். தனது மனைவியின் சுற்றத்தார்களைப் பிரான்ஸிலிருந்து வரவழைத்து, அவர்களுக்கு அவன் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்தான். நாளுக்கு நாள் அரசனின் அயல் நாட்டு ஆப்தர் அதிகரித்தனர். அவர்கள் சொல்லைப் பத்தியமாய் நினைத்து ஹென்றி மகா சாஸனத்தை மீறி நடக்கவும் துணிந்தான். முன்பு தன் தகப்பன் இழந்த பிரெஞ்சு மகாணங்களை ஜெயிக்க எண்ணிப் பிரெஞ்சு அரசனுடன் போர் புரிந்து தோல்வியுற்ருன். அதனல் ஏற்பட்ட செலவிற்காக ஜனங்கள் மீது வரியைச் சுமத்த வேண்டியதாயிற்று. மேலும் போப்பக்குக் கட்ட வேண்டிய கப்பத்துக்காகப் புதிய வரி ஒன்று போடவேண்டியும் வந்தது. ஒருவித பிரதிப் பிரயோஜனமும் இன்றி ஏராளமான வரி வருடாந்

தோறும் கட்ட நேர்ந்ததைக் குறித்துக் குடிகள் வருந்தி அரசனை வெறுக்க ஆரம்பித்தனர். இத்தறுவாயில் ஸைமன் என்னும் அன்னிய நாட்டான் ஒருவன் இராஜ்ய விவகாரங்களைச் சீர்படுத்துவதற்கு முன் வந்தது அதிர்ஷ்டவசமேயாம்.

2. ஸைமனின் பூர்வீக சரித்திரம்.—சில வருஷங்களுக்கு முன் நல்ல பதவியையும் செல்வத்தையும் அடையக் கருதி இங்கிலாந்துக்கு வந்தவன் ஸைமன். இவன் தகப்பன் வழியில் பிரெஞ்சுக்காரனாயினும், தாய் வழியில் லீஸ்டர் ஜமீனுக்கு உரியவன். அதை வசப்படுத்தும் நிமித்தம் இங்கிலாந்துக்கு வந்த சமயம் அரசனது ஆதரவைப் பெற்றதுமன்றி, அவன் சகோதரி இலியநேரையும் (Eleanor) கி.பி. 1238-ல் மணந்துகொண்டான். பிறகு காஸ்கனி மாகாணத்தில் கோட்டைகளைக் கட்டியும், குடிகளைக் கொள்ளையடித்தும், அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்த பிரபுக்களை அடக்கத் தகுந்தவன் ஸைமன்தான் என்று கண்டு, ஹென்றி அவனை அம்மாகாண கவர்னராக நியமித்தான். தங்கள் கொட்டம் இவனிடம் பலியாதென்று தெரிந்து காஸ்கனி பிரபுக்கள் அவனை ஒழித்துவிட எண்ணி, அரசனிடம் அவனைப் பற்றிப் பொய்க் குற்றம் சாட்டினார்கள். ஹென்றி மூடத்தனமாக, அவைகளை உண்மையென நம்பி ஸைமனை அவ்வேலையினின்றும் நீக்கிவிட்டான்.

3. ஆக்ஸ்வோர்ட்டில் கூடிய சபை. கி. பி. 1258. (The Council at Oxford).—ஸைமன் அதிருப்தியுடன் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்ததும், தேசம் அமைதியற்றிருப்பதையும் அரசனுக்கு விரோதமாகக் குடிகள் கலகம் செய்ய ஆயத்தமா யிருப்பதையும், ஆனால் அவர்களுக்குத் தகுந்த தலைவன் ஒருவன் இல்லாததையும் அறிந்தான். குடிகள் அனைவரும் அவனைத் தலைவனாக்கிக்கொண்டார்கள். பிரபுக்களும் ஒன்று சேர்ந்து ஸைமன் உதவியைக் கொண்டு அநீதி அரசை ஒழிக்கத் தீர்மானித்துத் தங்கள் படைகளைச் சேகரித்து ஆயுதபாணிகளாய் ஆக்ஸ்வோர்ட் என்னுமிடத்தில் அரசனைச் சந்தித்தனர். அப்பெரும்

படையைக் கண்டு திகிலடைந்த அரசன் "என்னே இது! நான் இப்பொழுது நுமது கைதியோ?" என்று வின வினன். "அன்று, அன்று! தாங்கள் இன்னமும் எங்கள் அரசரே; தங்களுக்கு வேண்டிய அளவு தனம் தரப் போகின்றோம். தங்கள் நன்மையும் குடிகள் நன்மையும் நாடி நாம் சில சட்டங்களைத் தயாரித்திருக்கின்றோம்; தாங்கள் அப்பத்திரத்தில் கையெழுத்திடல் வேண்டும்" என்றார் ஒரு பிரபு. இனி மறுப்பதில் பயனில்லையென அறிந்த அரசன் அப்பத்திரத்தில் கையொப்பமிட்டான்.

4. ஆக்ஸ்வோர்ட் ஷரத்துக்கள் (Provisions of Oxford).—ஆக்ஸ்வோர்ட் என்னும் பட்டணத்தில் தயாரிக்கப்பட்டபடியால் அவ்விதிகளுக்கு ஆக்ஸ்வோர்ட் ஷரத்துக்கள் என்று பெயர் வழங்கலாயிற்று. அயல் நாட்டு இராஜப்பிரியர்களை அப்புறப்படுத்தும்படியும், பதினைந்து பிரபுக்கள் கொண்ட ஆலோசனை சபை ஒன்றை ஏற்படுத்தி, அதன் அநுமதியின்றி அரசன் வரிகள் விதிக்கக் கூடாதென்றும் அப்பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தன. பின்னர், அரசனின் ஆப்தர்கள் ஆக்ஸ்வோர்ட் சபையைப் பைத்தியக்காரச் சபையென்று (Mad Parliament) அழைத்தனர்.

5. பிரபுக்கள் யுத்தம் (Barons' War).—சில மாதங்கள் கழிந்த பின்னர் பிரபுக்களில் சிலர் ஸைமன்மீது பொறாமை கொண்டு, தங்களுக்குள் கலகம் செய்ய ஆரம்பித்தனர். அச்சமயத்தை ஆவலுடன் எதிர் பார்த்த ஹென்றி ஒரு சேனையைத் தயாரித்துப் பிரபுக்களுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். கி. பி. 1264-ல் லூயிஸ் (Lewis) என்னுமிடத்தில் ஸைமனுக்கும் அரசனுக்கும் சண்டை நேர்ந்தது. அதில் ஸைமன் ஜயமடைந்ததுமன்றி அரசனையும் அவன் மகனையும் கைது செய்துவிட்டான்.

6. ஸைமனின் பார்லிமெண்ட்.—இவ்விதம் இராஜாங்கத்தைக் கைப்பற்றிய ஸைமன், தான் தனியே ஆள நினைக்கவில்லை. அவன் பொதுஜன சம்மதப்படி நடக்க எண்ணி, கி. பி. 1265-ல் லண்டனில் ஒரு சபை கூட்டினான். அதற்

குத் தன்னிடம் பற்றுள்ள பிரபுக்களையும் ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும், கௌண்டி (County)யிலிருந்தும் இரண்டு பொதுஜனப் பிரதிநிதிகளையும் வரவழைத்தான். வரிகள் விதிப்பதற்கும் தேசத்தை ஆள்வதற்கும் அவர்கள் யோசனையை ஏற்றுக் கொண்டான். இதற்குமுன் இப்படிப்பட்ட கூட்டங்களுக்குப் பிரபுக்களையும் உயர்தர குருமார்களையும் தான் வரவழைப்பது வழக்கம். ஸைமனே குடிகளின் பிரதிநிதிகளையும் கூட்டியபடியால் ஸைமனைப் "பொதுஜன சபை ஸ்தாபகன்" (Founder of the House of Commons) எனச் சொல்லலாகும்.

7. ஸைமனின் மரணமும் ஹென்றியின் மீட்பும்.—அடுத்த வருடம் எட்வர்ட் இளவரசன் சிறையிலிருந்து தப்பி வந்து, சேனையைத் தயாரித்து ஸைமனை ஈவ்ஷாம் (Evesham) என்னுமிடத்தில் சந்தித்தான், ஸைமனிடமே யுத்தப் பயிற்சி செய்த எட்வர்ட் அதிக சமர்த்தன். சில பிரபுக்கள் ஸைமனை விட்டோடியபடியால் ஸைமனின் சேனையும் குன்றி விட்டது. ஆகவே ஸைமன் சண்டையில் தோல்வியுற்று மரணமடைந்தான். யாவரும் அவனை, 'ஜனங்கள் நன்மையின் பொருட்டு உயிர் துறந்த மகான்' என்று புகழ்ந்தார்கள். ஹென்றி திரும்பவும் தன் இராஜ்யத்தை அடைந்தான்.

## அப்பியாசங்கள்

1. ஹென்றியின் அரசாட்சியில் நேர்ந்த தீமைகள் எவை ?

2. லூயிஸ், ஈவ்ஷாம் யுத்தங்களால் உண்டாகிய பலன்கள் யாவை ?

3. 'பிரபுக்கள்' யுத்தத்திற்குக் காரணம் யாது ?

4. 'பொதுஜன சபை ஸ்தாபகன்' என்று ஸைமனுக்கு ஏன் பெயர் வந்தது ?

அதிகாரம் 7

# முதலாவது எட்வர்டு கி. பி. (1272—1307)

## I. வேல்ஸை வென்றது.

எட்வர்டின் குணாதிசயங்கள்.—இங்கிலாந்தைச் சீருடன் ஆண்ட நல்லரசர்களுள் எட்வர்டு ஒருவன். அவன் தன் தகப்பனது கெட்ட வழியை விட்டு ஸைமன் காட்டிய நல்வழியைப் பின்பற்றிப் பொதுஜன சம்மதத்திற்கு இணங்கியே தன் அதிகாரத்தைச் செலுத்தக் கருதினான். எட்வர்டு நீதி நெறி தவறாதவன்; நல்நம்பிக்கை யுடையவன். "உன் வாக்குக்கு விரோதமாக ஒருநாளும் நடவாதே" என்பது அவனது பொன் மொழி. பிரிட்டனின் வெவ்வேறு பாகங்களையும் ஒரே குடையில் ஆள எண்ணியவன். அதன் பொருட்டே தன் வாழ் நாள் முழுவதும் உழைத்து வந்த உத்தமன். அவன் முயற்சி எம்மட்டும் பலித்தது என்பதை இனிப் பார்ப்போம்.

2. வேல்ஸில் நார்மானியர் பரவியது.—ஆங்கிலேயர் பிரிட்டனை ஜயித்துக் குடியேறின சமயத்தில் பிரிட்டானியர் அவர்களுக்குப் பயந்தோடி மேற்கு மலைப் பிரதேசங்களில் தங்கினார்கள் என்று முன்பே கூறியுள்ளோ மன்றோ? அது முதல் அப்பிரிட்டானியர் அல்லது வெல்ஷ்காரர்கள் தங்கள் தலைவர்களின் கீழ் சுயேச்சையாய் இருந்து வந்தனர். இங்கிலாந்து நார்மானியர் வசமான பின்பு, எல்லைகளில் இருந்த நார்மன் பிரபுக்களில் சிலர் வேல்ஸின் தெற்கு பாகத்தை ஜயிக்க அரசனிடம் அனுமதி பெற்றனர். அவர்கள் அந்நாட்டின் தென்பாகத்தைச் சிறிது சிறிதாகப் பிடித்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் குடிகள் கலகம் செய்யாதவாறு ஒரு கோட்டையைக் கட்டி அதில் அனேக வீரர்களை வைத்தனர். எண்ணிலாக் கோட்டைகள் ஏற்பட்டபடியால் தென் வேல்ஸுக்குக் கோட்டை நாடு என்று பெயர் வந்தது.

மேற் கூறிய பிரபுக்களுக்கு எல்லைப் பிரபுக்கள் (Marcher Lords) என்று பெயர். வேல்ஸின் வடபாகத்தில் அதிக மலைகள் அடர்ந்திருந்தமையால் அதை நார்மன் பிரபுக்கள் எளிதில் ஜயிக்க முடியவில்லை. அங்கு ஒரு சிற்றரசன் சுயேச்சையாக ஆண்டுகொண் டிருந்தான்.

3. எட்வர்டு வேல்ஸை ஜயித்தது.—தெய்வ பக்தியுடைய எட்வர்டு நாள் முதலாக வெல்ஷ் அரசர்கள் ஆங்கில அரசர்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டியவர் என்று கருதப்பட்டு வந்தனர். மூன்றாவது ஹென்றியின் காலத்தில் லெவ்லின் (Llewelyn) என்ற வேல்ஸ் அரசன் இங்கிலாந்தின் நிலைமை அலங்கோலமா யிருப்பது கண்டு, எல்லையிலுள்ள பிரபுக்களை ஓட்டிவிட்டான். இந்த வெற்றியால் லெவ்லின் தைரியம் மிகவும் அடைந்து, எட்வர்டுக்குக் கீழ்ப்படிய மறுத்தான். உடனே எட்வர்டு கி.பி. 1276-ல் தன் சேனையை வட வேல்ஸில் செலுத்தி, அனேக இடங்களில் அவனைத்தோற்கடித்தான். கடைசியில் லெவ்லின் ஸ்நோடன் (Snowdon) என்னும் மலைப் பிரதேசத்தில் ஓடி ஒளிந்து கொள்ளலாயினன். பிறகு எட்வர்டு, லெவ்லின் முந்தி ஜயித்த இடங்களைப் பிடுங்கிக்கொண்டு, தன்னை மேலதிகாரியென்று ஒத்துக் கொண்ட தன் பேரில், அவன் தன் சிறிய மாகாணத்தில் ஆண்டுவரச் சம்மதித்தான்.

4. அடுத்த ஐந்து வருஷங்களில் வேல்ஸின் மற்றப் பாகங்களையும் ஒழுங்கு படுத்த எட்வர்டு மிகவும் பிரயாசைப் பட்டான். அவ்விடம் அனுப்பிய ஆங்கில உத்தியோகஸ்தர்கள் கடுமையாகக் குடிகளை நடத்தியபடியாலும், வெல்ஷ் காரர் ஆங்கிலேயர்களை அன்னியர் என்று வெறுத்தபடியாலும் குடிகள் எல்லாம் கலகம் செய்ய ஆரம்பித்தனர். லெவ்லினும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஆங்கில ஆளுகையி லிருந்த மாகாணங்களை நாசம் செய்தான். இரண்டாம் முறை எட்வர்டு தன் சேனையுடன் சென்று முன்போல் லெவ்லினை மலைநாட்டுக்குத் துரத்தி ஸ்நோடன் கோட்டையில் அவனை முற்றுகை யிட்டான். அதினின்றும் தப்பி

யோடி வய் (Wye) என்ற நதிப்பிரதேசத்தில் மற்றொரு கலகத்தைக் கிளப்பி, எதிர்பாராத ஒரு சிறு சண்டையில் லெவ்லின் கொலையுண்டான். அவன் இறந்ததும் வெல்ஷ்காரர் மனம் உளைந்து கலகத்தை நிறுத்தி விட்டனர். அவன் சகோதரன் டேவிட் (David) ஒரு வருடகாலம் அங்குமிங்கும் அலைந்து முடிவில் எட்வர்டின் கையில சிக்கினன். பின்னர் வேல்ஸ் இங்கிலாந்தோடு சேர்க்கப்பட்டது. வடவேல்ஸில் அனேக கோட்டைகளைக் கட்டி, அதன் ஆளுகைக்குத்



கார்நார்வன் கோட்டை

தகுந்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கையில் கார்நார்வன் (Carnarvon) என்னுமிடத்தில் எட்வர்டுக்கு ஒருபுதல்வன் பிறந்தான். தன் ஜயத்தின் ஞாபகார்த்தமாய் அக்குமாரனை வேல்ஸ் இளவரசன் (Prince of Wales) என்றழைத்தான். அதுமுதல் நாளது வரையில் இங்கிலாந்து அரசரது மூத்த குமாரர்களுக்கு அப்பட்டம் வழங்கி வருகிறது.

## II. எட்வர்டு ஸ்காட்லாந்தை ஜயிக்க முயன்றது.

5. நார்வே கன்னி.—கி. பி. 1286-ல் ஸ்காட் அரசனாகிய மூன்றும் அலெக்ஸாண்டர் இறந்தான். நார்வேயிலிருந்த அவன் பேத்தி ஒருத்திதான் அவனுடைய வார்ஸ்.

அவள் நார்வேயில் இருந்தமையால் அவளை நார்வே கன்னி யென்று ஸ்காட்லாந்து ஜனங்கள் அழைப்பார்கள். அவளைத் தன் குமாரனுக்கு விவாகம் செய்து கொண்டால் இரண்டு இராஜ்யங்களையும் ஒன்று சேர்த்து விடலாமென்று எட்வர்டு எண்ணி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். ஆனால் அப்பெண் ஸ்காட்லாந்துக்குத் திரும்பி வருகையில் மரண மடைந்தாள். ஆதலின் எட்வர்டின் எண்ணம் வீணாயிற்று.

6. வார்ஸ் தகரார்.—அதன் பிறகு அனேகர் ஸ்காட் லாந்து அரசிற்கு வார்ஸ்தார் என்று பாத்தியம் கொண் டாடலாயினர். அவர்களுள் முக்கிய பாத்தியஸ்தர்கள் ஜான் பாலியலும் (John Balliol) ராபர்ட் ப்ரூஸூம் (Robert Bruce). பெருத்த யுத்தம் விளையுமெனப் பயந்து, ஸ்காட் பிரபுக்கள் அவ்விவாதத்தைத் தீர்க்குமாறு எட்வர்டை வேண்டிக்கொண்டனர். எட்வர்டு ஸகாட்லாந்து பட்டத் திற்கு யார் வந்தாலும் தனக்கு உட்பட்ட சிற்றரசனாக இருக்கவேண்டு மென்று நிர்ப்பந்தித்தான். அதற்கு அவர் கள் சம்மதித்ததன்மேல் ட்வீட் (Tweed) என்னுமிடத்தில் விசாரணை செய்து பாலியல் தான் சரியான பாத்தியஸ்தன் என்று தீர்மானித்தான். கி. பி. 1292-ல் பாலியல் அவ் விதமே ஸ்காட் அரசனென முடி சூட்டப்பட்டான்.

7. எட்வர்டின் முதல் படையெடுப்பு.—ஸ்காட் ஜனங் கள் தங்கள் அரசன் மற்றொருவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க நேரிட்டதைக் குறித்து மனம் வருந்தி, அப்படிப்பட்ட அவ மானத்தை ஏற்றுக்கொண்டதற்காக அவனை டூம் டாபார்ட் (Toom Tabard)என நிந்தையாக அழைத்தனர். கோழை மனது கொண்ட பாலியலும், கடைசியில் கலகம் செய்யத் தைரியம்கொண்டான். கி.பி. 1295-ல் ஸ்காட்லாந்தர் பிரெஞ் சுக்காரருடன் இங்கிலாந்துக்கு விரோதமாகச் சேர்ந்துகொண் டனர். அதன்மேல் எட்வர்டு சேனையுடன் சென்று, பாலியலை டன்பார் (Dunbar) என்னுமிடத்தில் தோற்கடித்துச் சிம்மாதனத்திலிருந்து அவனைநீக்கினான். ஓர் ஆங்கில கவர்ன ரையும் சேனையையும் அங்கு வைத்துவிட்டு, ஸ்காட் அரசர்

கள் தொன்றுதொட்டு வழக்கமாய் முடிசூட்டிக்கொள்ளும் புனிதமான கல்லை ஸ்கோன் (Scone) என்னும் பட்டணத்திலிருந்து கைப்பற்றிக்கொண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தான். அக்கல்லை இன்னமும் வெஸ்ட் மின்ஸ்டர் மடாலயத்தில் காணலாம்.

8. வாலஸின் கலகம்.—ஸ்காட்லாந்தர் ஆங்கில கவர்னரின் இறுமாப்பையும் கொடுங் கோன்மையையும் சகியாது மறுபடியும் கலகம் செய்ய ஆரம்பித்தனர். வில்லியம் வாலஸ் (William Wallace) என்னும் வீரன் அவர்கள் தலைவனாக நின்று கி.பி. 1297-ல் ஆங்கில சேனையை ஸ்டர்லிங் (Stirling) கோட்டையில் முற்றுகை செய்துகொண்டிருந்தான். இச்செய்தி எட்வர்டுக்கு எட்டியதும், அவன் சேனையுடன் துரிதமாகச் சென்று பால்கர்க் (Falkirk) என்னுமிடத்தில் கலகக்காரரை முறியடித்து, சில வருஷங்களில் வாலஸைச் சிறை பிடித்து, இராஜத்துரோகி என்று குற்றம் சாட்டி அவனைத் தூக்கிலிட்டான்.

9. புரூஸின் கலகம்.—ஸ்காட்லாந்தர், தங்கள் முயற்சிகள் அனைத்தும் வீணானமை கண்டு மனம் புழுங்கினாலும், தங்கள் சுயாதீனத்தை ஸ்தாபிக்கும் வரையில் ஓய்வதில்லையென்று தீர்மானித்து, அடிக்கடி கலகம் செய்ய ஆரம்பித்தனர். ஒவ்வொரு தடவையும் அவர்களுக்குத் தக்க தலைவனும் கிடைத்தான். ஒரு தேசம் இவ்விதம் ஐக்கியத்துடன் இருந்தால் அதை ஜயிப்பது எளிதாகுமோ? கி.பி. 1292-ல் அரசுக்கு வாதாடின புரூஸின் பேரனான ராபர்ட் புரூஸ் கி.பி. 1306-ல் ஸ்காட் தேசத்தின் தலைமை அடைந்து, ஸ்கோனில் முடியும் சூட்டப்பட்டான் ஆனால் ஆரம்பத்தில் ஆங்கில சேனையால் தோல்வியுற்று உயிர் தப்பி ஓடி ஒரு மலைக் குகையில் போய் ஒளிந்துகொண்டான். அங்கு இனிமேல் தனக்கு ஜயம் வரமாட்டாதென்று மனம் சோர்ந்து படுத்திருக்கையில், ஒரு சிலந்தியினிட மிருந்து பொறுமை, விடா முயற்சி எனும் அரிய குணங்களைத் தெரிந்துகொண்டான். பின்னர், அவ்விடம் விட்டகன்று, கடைசி முறையாகத் தன்

படைகளைத் திரட்டிக்கொண்டு அதிக உற்சாகத்துடன் யுத்தத்துக்குப் புறப்பட்டு, ஆங்கில சேனையைச் சின்னபின்னமாக்கினான். கி.பி. 1307-ல் இதைக் கேள்வியுற்ற எட்வர்டு மூன்றும் தடவை ஸ்காட்லாந்துமீது படை யெடுத்தான். வயது முதிர்ச்சியாலும் வேலை மிகுதியாலும் தேகம் மெலிந்து போனதால் போகும் வழியிலேயே உயிர் துறந்தான். அப்பொழுதுகூட, "புரூஸை ஜயித்து, ஸ்காட்லாந்தைக் கைப்பற்றுவது உனது முக்கிய கடமை" என்று தன் புதல்வனுக்குக் கட்டளையிட்டே உயிர் விட்டான்.

## III. இரண்டாவது எட்வர்டும், ஸ்காட்லாந்து சுயாதீனமடைந்ததும். (கி.பி. 1307—1327)

10. பன்னுக்பரன் யுத்தம்.—குணத்திலும் புத்தியிலும் தன் தகப்பனைக் கொஞ்சமேனும் ஒத்திராத இந்த இரண்டாவது எட்வர்டு, தனக்கு இன்பம் தேடுவதைத் தவிர வேறொன்றையும் கவனியாமலே இருந்தான். சேனையைக் கலைத்துவிட்டு, பியர்ஸ் காவஸ்டின் (Piers Gaveston) என்றவனைப் போன்ற துஷ்டர்களைத் தோழராகக் கொண்டான். இதற்குள் புரூஸின் சேனை நாளுக்குநாள் விருத்தியடைந்து, கடைசியாக ஆங்கிலேயரிடம் தங்கியிருந்த ஸ்டார்லிங் கோட்டையை முற்றுகை செய்து கொண்டிருந்தது. இனிச் சும்மா இருந்தால் காரியம் கெட்டுப்போமென்று எண்ணி எட்வர்டு, லக்ஷம் வீரர்களுடன் சென்று புரூஸைப் பன்னுக்பரன் (Bannockburn) என்ற குன்றுக்குச் சமீபத்தில் சந்தித்தான். தன்னிடம் வீரர்கள் அதிகமிருப்பதால் வெற்றி தனக்கு நிச்சயம் என்று எண்ணி எட்வர்டு உண்பதிலும் பாடுவதிலும் அன்றிரவைக்கழித்தான். ஸ்காட் வீரர்களோ தங்களுக்கு எதிரில் இருந்த நிலத்தில் அனேக குழிகள் தோண்டி, அவை வெளியில் தெரியாவண்ணம் மறைத்து வைத்தனர். மறுநாள் யுத்தம் ஆரம்பித்ததும் ஆங்கிலக் குதிரைவீரர்கள் அக்குழிகளில் தடுமாறி விழுந்து கலவரம் அடைந்தனர். எட்வர்டுக்குச் சேனையை நடத்தும் திறமை கிடையாதாகையால், பாதி வீரர்களுக்குமேல் சண்

டையில் மாய்ந்தனர் ; மற்றவர் பயந்தோடி விட்டனர். இவ்விதம் எட்வர்டு அபஜபமும் அவமானமும் அடைந்து, சில வீரர்களுடன் புறங்காட்டி யோடி டன்பார் என்னும் ஊரையடைந்து, அங்கிருந்து கப்பலேறித் தன் தேசம் சென்றான். அவ்வெற்றியே ஸ்காட்லாந்தின் சுயாதீனத்தை ஸ்தாபித்தது. இரண்டு இராஜ்யங்களேயும் ஒன்று சேர்க்கும் எண்ணமும் இத்துடன் ஒழிந்தது. சுமார் 300-வருடங்கள் இவை தனித்திருந்தன.

11. ஜனங்களது நன்மையை நாடாது தன் தோழர்களுடன் சேர்ந்துகொண்டு வீண் செலவு செய்யும் அரசனை யாவரும் வெறுத்தனர். மேலும் சில பிரபுக்களும் அவன் இராணியாகிய இஸபெல்லாவும்(Isabella) அவனுக்குவிரோதிகளாகி, கி. பி. 1327-ல் அவனைச் சிங்காதனத்திலிருந்து விலக்கி, அவன் குமாரனுக்குப் பட்டம் கட்டியதுமன்றி, எட்வர்டைப் பர்க்லி (Berkley) என்ற கோட்டையில் சிறை வைத்தனர். பிறகு அவன் அங்குக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டான்.

## அப்பியாசங்கள்

1. 'எல்லைப்பிரபுக்கள்' என்போர் யாவர்?

அவர்கள் வேல்ஸை ஜயிப்பதில் எவ்விதம் உதவினார்கள்?

2. வேல்ஸிலுள்ள முக்கியமான இரண்டு கோட்டைகளின் பெயரையும், அவைகளில் நடந்த சம்பவத்தையும் கூறுக.

3. ஸ்காட்லாந்து யுத்தத்தில் சம்பந்தப்பட்ட முக்கிய ஸ்தலங்களின் பெயர்களேயும், அவைகளைப் பற்றிய ஒரு முக்கிய நிகழ்ச்சியையும் எழுதுக.

4. எட்வர்டு எத்தனை தடவை ஸ்காட்லாந்து மீது படையெடுத்தான்? ஒவ்வொரு தடவையும் நடந்த முக்கிய சம்பவம் யாது?

5. ஸ்காட்லாந்தின் சுயாதீனத்தை ஸ்தாபித்தது யார்? எங்ஙனம்?

6. ஸ்காட்லாந்தின் சுயாதீனத்துக்காகச் சண்டை செய்தவர்கள் யாவர்? ஒவ்வொருவரையும் குறித்து ஒரு முக்கிய விஷயம் எழுதுக.

---

அதிகாரம் 8

## மூன்றுவது எட்வர்டும் நூறு வருடப் போரும்.

### (கி. பி. 1327—1377)

நூறு வருடப் போரின் காரணங்கள்.—மூன்றுவது எட்வர்டு தன் பாட்டனைப்போல் பெரிய வீரனுகையால், ஜான் காலத்தில் இழந்த பிரெஞ்சு மாகாணங்களை மீண்டும் ஜயிக்கத் தீர்மானித்தான். இவன் பிரான்ஸுடன் போர் தொடுக்க இன்னும் அனேக காரணங்களும் ஏற்பட்டன. அந்நாள் வரைக்கும் ஆங்கிலேயர் கையில் இருந்த காஸ்கனி மாகாணத்தைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ள வெகு காலமாகப் பிரெஞ்சு அரசர்கள் பிரயாசைப்பட்டனர். எட்வர்டு பட்டத்திற்கு வந்ததும் பிரெஞ்சு அரசன் காஸ்கனியிலுள்ள அனேக பட்டணங்களைக் கைப்பற்றி, அவைகளைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டான். இங்கிலாந்திலிருந்து அனுப்பி வந்த உரோமத்தை ஆடைகளாக நெய்து உதவிய பிளாண்டர்ஸ் ஜனங்களைத் தொந்தரவு செய்து, அவர்கள் சுதந்திரத்தை அழிப்பதில் பிரெஞ்சு அரசர்கள் நோக்கமா யிருந்தனர். பிளாண்டர்ஸ் நாடு பிரெஞ்சு அரசன் வசமாகிவிட்டால், தங்கள் உரோம வியாபாரம் கெட்டுவிடு மென்று பயந்த ஆங்கிலேயர், இரகசியமாக அவர்களுக்கு உதவி புரிந்து வந்தனர். யுத்தத்திற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.

2. மேலும் முதலாவது எட்வர்டின் நாள்முதல் ஸ்காட்லாந்திற்கும் பிரான்ஸுக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்

டிருந்தது. அதிலிருந்து சுமார் 300-வருடகாலம் ஸ்காட்லாந்தார் இங்கிலாந்தின் மீது படையெடுத்த போதெல்லாம் பிரெஞ்சு அரசன் அவர்களுக்கு உதவிச் சேனை அனுப்பிக் கொண்டு வந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் ஏதேனுமொரு முகாந்தரத்தை முன்னிட்டுச் சண்டையைத் துவக்க எண்ணிய எட்வர்டு, தானே பிரெஞ்சு சிம்மாதனத்திற்குத் தன் தாய்வழியில் நெருங்கிய வார்ஸ்தார் என்றுபாத்தியம் கொண்டாடினான். அவன் பாத்தியம் சரியல்லவென்று பிரெஞ்சுக்காரர் தள்ளிவிட்டபடியால், கி.பி. 1340-ல் எட்வர்டு யுத்தத்துக்கு ஆரம்பித்தான். அதுமுதல் நூறுவருடங்கள் வரையில் அவ்விரு தேசத்தினரும் நிரந்தரமாகச் சண்டையிட்டுக் கொண்டிராவிடினும் விரோதம் பூண்டு அடிக்கடி அமர் செய்து வந்தபடியால் இதற்கு நூறு வருடப் போர் என்று பெயர் வந்தது.

மூன்றாவது பிலிப்
(பிரான்ஸ் அரசன்)

- நான்காவது பிலிப்
  - இஸபெல்லா = இரண்டாவது எட்வர்டு இங்கிலாந்து அரசன்
    - மூன்றாவது எட்வர்டு
- சார்லஸ்
  - வெலூவா ஆறாவது பிலிப்
    - ஜான்

3. கப்பற் சண்டை.—கி.பி. 1340-ம் வருடம் பிளாண்டர்ஸில் உள்ள ஸ்லாஸ் (Sluys) பட்டணத்துக்கு அருகாமையில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக் கப்பற் படையைத் தோற்கடித்தனர். இவ்வெற்றியால் அவர்களுக்கு அதிக பயன் உண்

டாயிற்று. ஏனெனில், இனிப் பயமின்றிப் பிரான்ஸுக்குத் தங்கள் வீரர்களைக் கப்பலேற்றிச் செல்லலாம் அன்றோ?

4. கிரேஸ்ஸி (Crecy) யுத்தம். கி.பி. 1346.—இந்த யுத்தம் ஆரம்பித்தவுடன் காஸ்கனி முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்ளுமாறு பிரெஞ்சு அரசனாகிய பிலிப், தன் சேனை




நூறாண்டுப் போர்

முழுவதையும் அவ்விடம் அனுப்பிவிட்டான். காஸ்கனியை உத்தேசித்து, எட்வர்டு புறப்படத் தயாராயிருக்கையில் ஒரு புயல் அடிக்கவே அவன் தன் ஏற்பாட்டை மாற்றிக் காஸ்கனியிலுள்ள பிரெஞ்சு சேனையைப் பிரிக்க எண்ணி, நார்மண்டியில் போய் இறங்கினான். நார்மண்டியைக் கடந்து, பிரான்

ஸின் தலைநகராகிய பாரிஸுக்கு (Paris) 15-மைல் சமீபம் வருமளவும் ஒருவரும் அவனைத் தடுக்கவில்லை. ஆனால் அதற்குள்ளாகப் பிலிப் ஒரு பெருத்த சேனையைத்தயாரித்து விட்டான். அதைத் தெரிந்து கொண்டு எட்வர்டு தன் சேனையை வடக்கே நடத்திச் சென்றான். அவர்கள் ஸேன்

பிளாக் பிரின்ஸ்

(Seine) நதியைக் கடக்குமுன் பிரெஞ்சு சேனை அவர் களுக்கும், கடற் கரைக்கும் மத்தியில் புகுந்து, ஆங்கி லேயர் பாதையைத் தடுத்தது. இரு திறத்தாருக்கும் கிரேஸ்ஸி என்னுமிடத்தில் கோரமான யுத்தம் நடந் தது. ஆங்கிலச் சேனையை நடத்தியவன் எட்வர்ட் இள வரசன். அவன் கவசத்தின் நிறத்திலிருந்து அவனுக்கு

பிளாக் பிரின்ஸ் (Black Prince)என்ற பெயர் வழங்கிற்று. பிரெஞ்சு சேனை சின்ன பின்னமான போதிலும் இவ்வெற்றியில் ஆங்கிலேயருக்கு ஒரு பயனும் ஏற்படவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் தேசத்திற்குச் சுலபமாகப் போய்விட முடிந்தது. அவர்கள் போகும் வழியில் கலே (Calais) என்னும் முக்கிய துறைமுகப் பட்டினத்தை முற்றுகை யிட்டுத் தங்கள் வசமாக்கிக்கொண்டனர்.

5. ஸ்காட்லாந்தர் படையெடுப்பு.—ஸ்காட் ஜனங்கள் பிரெஞ்சுக்காரருக்கு ஆப்த சினேகிதமானபடியால் ஆபத்தில் உதவுவது தங்கள் கடமையென்று உணர்ந்து, இங்கிலாந்தின்மீது படையெடுத்து, எல்லையிலுள்ள ஜில்லாக்களைச் சூறையாடினர். வடக்கு மாகாணங்களில் உள்ள ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஸ்காட் சேனையை நெவில்ஸ் கிராஸ் (Neville's Cross) என்னுமிடத்தில் தோற்கடித்து, ஸ்காட் அரசனையும் கைது செய்துவிட்டனர்.

6. பாயிடியர்ஸ் சண்டை (Poitiers) கி.பி. 1356.—கிரெஸ்ஸி சண்டைக்குச் சுமார் பத்து வருஷங்களுக்குப் பிறகு பிளாக் பிரின்ஸ், போர்டோ (Bordeaux) என்னும் நகரைக் காஸ்கனியின் தலைநகராக்கி அங்கு வசிக்கலாயினன். அங்கிருந்து அடிக்கடி பிரான்ஸினுள் படையெடுத்துப் போய்க் கிராமங்களைக் கொள்ளையடித்து வந்தான். ஒரு சமயம் அவன் அப்படித் திரும்பி வருகையில் ஒரு பிரெஞ்சு சேனை பாயிடியர்ஸ் என்னுமிடத்தில் ஆங்கிலேயரை மடக்கிக் கொண்டது. பிரெஞ்சுக்காரரின் படைத் தொகை அதிகமிருந்தும் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். அன்றியும் பிரெஞ்சு அரசனாகிய ஜானையும் சிறைசெய்து இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டனர்.

7. பிரிடன்னே (Bretigny) சமாதானம்.—இங்ஙனம் சில வருஷங்கள் சண்டையிட்டபின் பிரெஞ்சுக்காரர் பிரிடன்னே சமாதானத்தைச் செய்துகொண்டனர். அதன்படி கலேயும் லுவா நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்களும் ஆங்கிலேயர் வசமாயின. ஆனால் அம்மாகாணத்துக் குடிகள் ஆங்

கில அரசாட்சியை வெறுத்தபடியால், கலகம் செய்து சொற்ப காலத்தில் சுயேச்சை அடைந்தனர். மேலும் ஆங்கிலக் கப்பற் படையும் நாசமடைந்தது. வெற்றிக் கொடியுடைய இளவரசனும் இறந்தான். ஆகையால் மூன்றாவது எட்வர்டு அரசாட்சியின் இறுதியில் போர்டோவைச் சுற்றிக் கொஞ்ச பூமியும் கலேயும்தான் ஆங்கிலேயருக்கு மிகுந்திருந்தன.

அப்பியாசங்கள்

1. நூறு வருடப் போருக்குக் காரணங்கள் எவை?

2. எட்வர்டு பிரான்ஸில் போன வழியைப் படத்தில் வரைந்து காட்டுக.

3. நூறுவருடப் போரில் நடந்த யுத்தங்கள் எவை? அவைகளால் உடனே ஏற்பட்ட பயன்கள் யாவை?

4. பிரிடன்னே உடன்படிக்கையால் ஆங்கிலேயருக்கு எந்தெந்த தேசங்கள் கிடைத்தன? கடைசியில் மிகுந்தவை எவை? அவைகளை இழந்ததற்குக் காரணம் என்ன?

---

அதிகாரம் 9

## இரண்டாவது ரிச்சர்டும், பண்ணையாட்கள் கூலியாட்களின் கலகமும் (Peasants' Revolt)

(கி. பி. 1381)

எட்வர்டு இறந்தபொழுது அவன் பேரனாகிய ரிச்சர்டு இளம்பிள்ளையாக இருந்தபடியால் அவன் சிற்றப்பனாகிய ஜான் ஆப் காண்ட் (John of Gaunt) பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். அவன் சுயநலவாகி; ஜனங்களின்மீது அதிக வரியைச் சுமத்திக் கஷ்டப்படுத்தினான். யாவரும் அவன் அரசை வெறுத்தார்கள். கூலிக்குடிகளுக்கோ அவன் ஆட்சி சகிக்க முடியவில்லை. ஆகையால் ஜனங்கள் அக்கொடுங்கோன்மையினின்றும் நிவர்த்தி பண்ணிக் கொள்ளக் கலகம் செய்தனர்.

2. கறுப்புக் கொள்ளைநோயும் அதன் பலன்களும்.—கலகம் ஏற்பட இவையன்றி வேறு சில காரணங்களும் உண்டு. நூறுவருடப் போர் நடக்கும் சமயத்தில் இங்கிலாந்தில் ஒரு கொடிய கொள்ளைநோய் பரவிப் பீடித்தது. அந்நோயினால் சுமார் மூன்றில் ஒரு பங்கு ஜனங்கள் மாண்டனர். பண்ணை வேலை செய்பவர்களில் பலர் இறந்து விட்டபடியால் பாதி நிலங்கள் தரிசாகிக் கிடந்தன. உணவுப் பொருள்களின் விலை அதிகரித்தது. தொழிலாளிகள் குறையவே, அவர்கள் அதிக கூலி கேட்டனர். அதைக் கொடுக்க மனமில்லாத ஜமீன்தார்கள், பார்லிமெண்டில் தங்களுக்குச் செல்வாக்கிருந்தபடியால் பழைய கூலிக்கே வேலை செய்ய வேண்டுமென ஒரு தொழிலாளர் சட்டம் (Statute of Labourers) ஏற்படுத்தினர். அச்சட்டத்திற்கு விரோதமாக வேலை செய்ய மறுக்கும் தொழிலாளருக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது.

3. வில்லேன்ஸ் அல்லது பண்ணையாட்களின் குறைகள்.—மூன்றும் அதிகாரத்தில், ஜமீன் நிலங்களைப் பயிரிடுவோர்க்குச் சுதந்திரமில்லை யென்றும், அவர்கள் எஜமானன் அனுமதியின்றி வேறொரு இடத்துக்கும் போகக்கூடாதென்றும் படித்திருக்கிறீர்கள். ஆனால் அனேகர் தங்கள் எஜமானர்களுக்குப் பெருந்தொகை கொடுத்துச் சுதந்திரம் அடைந்துவிட்டனர். கறுப்புக் கொள்ளைநோய் வந்த பிறகு பிரபுக்களுக்கு நிலங்களைப் பயிரிடப் போதுமான கூலியாட்கள் கிடைக்காமையால், முன்போல் பண்ணையாட்களுக்குச் சுதந்திரம் கொடுக்க மறுத்ததுமன்றி, முன்பு ஓடிப்போய் விட்டவர்களையும் திரும்பிக் கொண்டுவர முயன்றனர். அவர்களைக் கண்டுபிடித்துக் கொடூரமாகத் தண்டித்தும், அவர்கள் துரோகத்துக்கு அறிகுறியாக F என்னும் எழுத்தைப் போல் அவர்கள் தேகத்தில் சூட்டும் இம்சித்தனர். இவ்விதம் சுதந்திரமுள்ள கூலியாட்களும் சுதந்திரமற்ற பண்ணையாட்களும் துன்பமுற்றனர்.

4. ஆள் வரி (Poll Tax).—இத்தருணத்தில் பொக்கி

ஷத்தில் பணமில்லாதது கண்டு, பிரதிநிதியாகிய ஜான் ஒரு புதிய ஆள் வரியை விதித்தனன். தனிகராயினும் ஏழையராயினும் அவ்வரியைச் செலுத்தவேண்டுமென்று அவன் கட்டளையிட்டான். அன்றியும் வரி வசூலிக்கும் அதிகாரிகள், நெஞ்சில் ஈரமின்றிச் செய்த கொடுமைகள் அளவிட முடியா. அவர்கள் ஒரு சமயம் கெண்ட் மாகாணத்தில் வாட் டைலர் (Wat Tyler) என்னும் குடியானவனது மகளை அவமானப் படுத்தினர்.

5. இச்சம்பவம், புகைந்துகொண் டிருந்த கலகத் தீயை நன்கு மூட்டிவிட்டது. வில், அம்பு முதலிய ஆயுதங்களைக் கொண்டு குடியானவர்களும் கூலியாட்களும் டைலரின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்து தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள லண்டன் நகருக்கு ஏகினர். எஸ்ஸெக்ஸ் மகாணத்திலும் ஒரு கலகம் ஏற்பட்டது. கலகக்காரர் லண்டனுக்குள் நுழைந்து, ஜானின் மாளிகையை எரித்தும் டவர் என்னும் சிறைச்சாலையைத் தாக்கியும் சேதம் செய்தனர். ஜான் அவர்களுக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டான்.

6. ரிச்சர்டு கலகத்தை அடக்கியது.—ரிச்சர்டு பதினாறு வயதுள்ள வாலிபனாயினும் லண்டன் நகராதிபதியுடனும் மற்றும் சில வீரருடனும் அஞ்சாமல் கலகக்காரர் மத்தியில் பிரவேசித்தான். ரிச்சர்டு அவர்கள் ஆத்திரத்தைத் தணிக்க முயலுகையில் அவன் வீரர்களில் ஒருவன், "அதோ கெண்டின் பக்காத் திருடன் நிற்கிறான்" என்று டைலரை நோக்கி உரைத்தான். அதைக் கேட்டு டைலர் சினங்கொண்டு அவ்வீரனைத் தன் ஈட்டியால் குத்த ஓடினான். நகராதிபதி அதைக் கண்ணுற்று இடையில் தான் நின்று தன் கேடயத்தால் தடுத்து, தன் வாளை உருவி டைலரை வெட்டிவிட்டான். கணப்பொழுதில் கலகக்காரர் யாவரும் தங்கள் வில்லை வளைத்து, அரசனைக் குறிவைத்து, அம்புகளைத் தொடுக்க எத்தனித்தனர். ரிச்சர்டின் மனவமைதியும் சமயோசித புத்தியுமே அவனை அவ்வாபத்தினின்றும் காப்

பாற்றின. "உங்கள் அரசனை அடிப்பதும் அழகோ? டைலருக்குப் பதில் நானே உங்கள் தலைவனாகி நிற்கிறேன்; என் பின்னே வாருங்கள்; நீங்கள் கேட்கும் சுதந்திரம் அனைத்தும் கொடுக்கிறேன்" என்று ரிச்சர்டு கூறினன். அதைக் கேட்டுக் கலகக்காரர் அடங்கி, அரசன் வாக்குக்குச் சந்தோஷித்துத் தங்கள் கிராமங்களுக்குச் சென்றனர்.

7. ஆனால் அரசன் கூறிய இனிய மொழிகள் வீணாயின. கூலியாட்கள் முன்னைக்காட்டிலும் அதிக துன்பம் அனுபவிக்க நேரிட்டது. பிரபுக்கள், அரசனைத் தனது வாக்குப்படி நடக்க விடவில்லை. நீதிபதிகளை நாடெங்கும் அனுப்பிக் கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களைத் தூக்கிடச் செய்தனர். ஆனாலும் கொஞ்ச காலத்தில் குடிகளைத் துன்புறுத்துவது தங்களுக்கு நன்மை தராது என்று பிரபுக்களும் அறிந்தனர். ஆகையால் குடியானவர் தங்கள் ஜமீன்தாரின் கொடுமையிலிருந்து விடுபட்டனர்.

8. ரிச்சர்டு சிம்மாதனத்திலிருந்து நீக்கப்பட்டமை.—மேஜராகித் தானே செங்கோல் செலுத்த ஆரம்பித்ததும் ரிச்சர்டு அநீதியாகவும் கொடூரமாகவும் நடக்க ஆரம்பித்தான். ஜான் ஆப் காண்டையும் அவன் வம்சத்தாரையும் ஒழிக்க நினைத்தான். ஜான் இறந்ததும், தன் வாக்குக்கு விரோதமாக ஜானின் நிலங்களைப் பற்றிக்கொண்டு அவன் புதல்வனைத் தேசப் பிரஷ்டம் செய்துவிட்டான். ஜானின் மகன் ஹென்றி எவ்விதமாவது தன் சொத்தை அடையத் தீர்மானித்து இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தான். உடனே ரிச்சர்டின் அரசை வெறுத்த பிரபுக்களும் அவனுடன் சேர்ந்து, ரிச்சர்டைச் சிம்மாசனத்தினின்று நீக்கிச் சிறையில் அடைத்து, ஹென்றிக்கு முடிசூட்டினர். ரிச்சர்டு சிறையில் பசியால் வருந்தி இறந்ததாகச் சொல்லப்படுகிறது.

## அப்பியாசங்கள்

1. குடியானவர்களின் குறைகள் எவை?

2. அவர்கள் கலகத்தால் என்ன நன்மைகள் ஏற்பட்டன?

3. ரிச்சர்டு, தன் சமயோசித புத்தியை எவ்விதம் காண்பித்தான்?

4. ரிச்சர்டு சிம்மாதனத்தினின்றும் தள்ளப்பட்டதற்குக் காரணம் யாது?

---

## அதிகாரம் 10

# ஜாப்ரி சாஸர் (Geoffrey Chaucer)

இளமைப் பருவம்.—ஆங்கில பாஷா கவிகளுக்குப் பிதாவாகிய சாஸர், மூன்றாவது எட்வர்டு, இரண்டாவது ரிச்சர்ட்

ஜாப்ரி சாஸர்

இவர்களின் அரசாட்சி காலத்தில் வசித்தான். அவன் லண்டனில் கி. பி. 1340-ம் ஆண்டில் ஒரு சாராய வியாபாரிக்குப் பிறந்தவன். அந்நகரிலேயே அனேகமாய்த் தன் இளமைப்

பருவத்தைக் கழித்தான். தீர்க்க புத்தியுள்ளவனுகையால், சாஸர் தன்னைச் சுற்றியுள்ள மனிதரின் நடவடிக்கைகளை நன்கு கவனித்து வந்தான். பதினறு வயதில் கிளாரென்ஸ் கோமகனுகிய லயனல் மனையில் ஒரு பணிப்பையனுக (Page) அமர்ந்தான். பத்தொன்பதாம் பிராயத்தில் இராணுவத்தில் போர் வீரனுகிப் பிரான்ஸில் நடந்த சண்டைகளுக்குப் போனுன். அங்கு ஒரு யுத்தத்தில் எதிரியால் கைதியாக் கப்பட்டான். பின்னர் விடுதலை அடைந்து அவ்வேலையி னின்றும் நீங்கி இராஜ சேவையில் அமர்ந்தான். அப்பொழு தும் அவன் அழகிய சிறு பாடல்களைப் பாடிச் சபையோர் களைக் களிக்கச் செய்வான்.

2. இராஜ சேவை —சாஸர் சில காலம் கழித்து இராஜ காரியமாக இடாலி தேசத்திற்கு ஏகநேரிட்டது. அத்தேசம் முழுவதும் பிரயாணம் செய்து, விநோதமான காட்சிகளைக் கண்ணுற்று, இடாலி கவிராயர்கள் எழுதிய பாடல்களையும் சரிதைகளையும் மனப்பாடம் செய்தான. அவன் திரும்பி ஊர் வந்ததும், அவைகளைப்பற்றி ஆங்கிலத்தில் அழகிய கவிகள் இயற்றினுன். பிறகு, கஸ்டம்ஸ் இலாகாவின் முக்கிய அதிகாரியாயினன். கி பி. 1386-ல் கெண்ட் ஜில்லா ஜனங்கள் அவனைத் தங்கள் பிரதிநிதியாகப் பார்லிமெண்ட் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். கி. பி. 1400-ல் சாஸர் மரண மடைந்தான். அவன் சவம், வெஸ்ட்மின்ஸ்டர் மடாலயத்தில் சகல மரியாதைகளுடன் புதைக்கப்பட்டது.

3. காண்டர்பரிக் கதைகள் (Canterbury Tales).— ஆங்கில மகா கவிகளில் சாஸர் சிறந்தவர். அவர் இயற்றிய நூல்களில் முக்கியமானது காண்டர்பரிக் கதைகளே. அவை காண்டர்பரிக்குப் போகும் யாத்திரிகர்கள் பொழுதுபோக் காக ஒருவருக்கொருவர் சொல்லிய கதைகள். அக்காலத்தில் ஆங்கிலேயர் அடிக்கடி காண்டர்பரிக்குப் போய்ப் பெக்கட் டின் சமாதியைத் தொழுவது வழக்கம். அப்படிப்பட்ட ஒரு யாத்திரிகர் கூட்டத்தைப் பற்றித்தான் சாஸர் தன் புத்தகத் தில் வர்ணித்துளன். அக்கூட்டத்தில் அனேக வகுப்பினர் அடங்கியிருந்தனர். அவர்கள் முப்பத்து நால்வரும் புறப்

படுமுன், டாபர்டு எனும் ஹோடலில் ஒன்று சேர்ந்து கொண்டனர். தற்செயலாய் அவ்விடமிருந்த சாஸரும், அவர்கள் ஒவ்வொருவரும் ஹோடலில் உட்புகும்பொழுது கவனித்தான். எட்வர்டும் ரிச்சர்டும் அரசுபுரிந்த நாளில் உள்ள ஜனங்களின் நடை உடை பாவனைகள் பேச்சுகள் யாவும் அவன் யாத்திரிகர்கள் வருணனையிலிருந்து நன்கு புலப்படுகின்றன. அந்நூலில் அழகிய குதிரையின் மீதேறிய வீரன், கொழுத்த சன்னியாசி (Monk), சோம்பேறி ப்ரயர் (Friar), இன்னும் நானுவித மனிதர்களைப் பற்றியும் விவரங்கள் காணலாம். அக்காலத்துச் சர்ச் உத்தியோகஸ்தர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாததற்காக அவர்களைப் பற்றி நிந்தையாகவும் பரிகாசமாகவும் சாஸர் எழுதுகிறார். அக்காலத்துச் சன்னியாசிகள் அனேக குதிரைகளையும், செந்நாய்களையும் கொண்டு வேட்டையாடுவதிலேயே நோக்கமுடையவரென்றும், பயிரிடுவோர் நன்னடக்கையும் தரும சிந்தனையும் உடையோரென்றும் அவர் கூறுகிறார்.

4. சாஸர் பிறக்குமுன் ஆங்கில பாஷைக்கு கௌரவமில்லை. ஏனெனில் வில்லியம் இங்கிலாந்தை ஜயித்த நாள் முதலாக இராஜாங்கத்தில் நார்மானியர் பேசும் பிரெஞ்சு பாஷையே வழங்கி வந்தது. ஆங்கிலரும் நார்மானியரும் ஒருங்கு கூடி வாழ ஆரம்பித்த பிறகு சிறிது மாறுதல் ஏற்பட்டது. மேலும் ஆங்கில வில்லாளிகள் நூறு வருடப் போரில் ஜயம் அடையவே, யாவரும் அபஜயமடைந்த எதிரியின் பாஷை கௌரவத்தி லிருப்பதைக் கண்டு அருவருப்புற்றனர். ஆகையால் கி.பி. 1362-ல் எட்வர்டு அரசன் இனி ஆங்கில பாஷையே இராஜாங்கத்தில் (Court) வழங்க வேண்டுமெனக் கட்டளையிட்டான். சாஸர் மகாகவி ஆங்கிலத்தில் எழுதிய பின் அப்பாஷையின் கௌரவம் அதிகரிக்கலாயிற்று. அவன் கவிகளில் வார்த்தைகள் பழைய மாதிரியில் இருப்பதாலும், பிரெஞ்சு வார்த்தைகள் பல கலந்திருப்பதாலும் நம் நாட்டுச் சிறுவர்களால் அவைகளைச் சுலபமாக வாசித்தறிந்துகொள்ள முடியாது.

## ஆஞ்ஜேவின் அரச வம்சாவளி

**இரண்டாவது ஹென்றி (கி.பி. 1154—1189)**

- முதலாவது ரிச்சர்டு கி.பி. 1189—1199
- ஜாப்ரி
  - ஆர்தர் (பிரிட்டானியின் அதிபன்)
- ஜான் (கி.பி. 1199—1216)
  - மூன்றாவது ஹென்றி (கி.பி. 1216—1272)
    - முதலாவது எட்வர்டு (கி.பி. 1272—1307)
    - இரண்டாவது எட்வர்டு (கி.பி. 1307—1327)
    - மூன்றாவது எட்வர்டு (கி.பி. 1327—1377)
    - பிளாக் பிரின்ஸ் (கி.பி. 1376-ல் மரணமடைந்தான்)
    - இரண்டாவது ரிச்சர்டு (கி.பி. 1377—1399)
  - இலியனர் = ஸைமன்

## நார்மன் ஆஞ்ஜெவின் காலத்து முக்கிய சம்பவங்கள்

கி. பி. 1071-ஹெரிவார்டின் கலகத்தை அடக்கியது.
,, 1085-டூம்ஸ்டே புத்தகம் தயாரிக்கப் பட்டது.
,, 1086-ஸால்ஸ்பரி பிரதிக்ஞை.
,, 1087-இரண்டாவது வில்லியம் பட்டத்திற்கு [வருதல்.
,, 1100-புதுக் கானகத்தில் வில்லியத்தின் மரணம்.
,, 1120-ஒய்ட்ஷிப் முழுகிப் போனது.
,, 1135-உள் நாட்டுப் போர் ஆரம்பம்.
,, 1154-இரண்டாவது ஹென்றி சிம்மாசனம் ஏறுதல்.
,, 1170-பெக்கட்டின் கொலை.
,, 1189-முதலாவது ரிச்சர்டு; மூன்றாவது சிலுவைப் [போர்
,, 1199-ஜான் பட்டம் அடைதல்.
,, 1204-பிரெஞ்சு மாகாணங்களை இழத்தல்.
,, 1215-மகா சாஸனப்பத்திரம் ஆமோதிக்கப்பட்டது.
,, 1216-மூன்றாவது ஹென்றியின் அரசாரம்பம்.
,, 1258-ஆக்ஸ்வோர்ட் ஷரத்துக்கள்.
,, 1264-லூயிஸ் சண்டை.
,, 1265-ஸைமனின் பார்லிமெண்ட் கூடுதல்.
,, 1272-முதலாவது எட்வர்டு மகுடம் தரித்தல்.
,, 1296-டன்பார் சண்டையும் பாலியலின் [தோல்வியும்.
,, 1297-பால்கர்க் யுத்தம்.
,, 1307-எட்வர்டின் மரணம்.
,, 1314-பன்னக்பர்ன் யுத்தமும் ஸ்காட்லாந்து [சுயாதீனம் அடைந்ததும்.

கி. பி. 1327-இரண்டாவது எட்வர்டு மகுடம் இழந்தது.
,, 1340-நூறு வருடப் போர் ஆரம்பம்.
,, 1346-கிரெஸ்ஸி யுத்தம்.
,, 1348-கறுப்புக் கொள்ளைநோய்.
,, 1349-தொழிலாளர் சட்டம்.
,, 1356-பாய்டியர்ஸ் யுத்தம்.
,, 1360-பிரிடன்னே சமாதானம்.
,, 1381-கூலியாட்களின் கலகம்.
,, 1399-ரிச்சர்டு சிம்மாசனத்திலிருந்து நீக்கப் [பட்டான்.

# III லங்காஸ்தர் யார்க் வம்சங்கள்

## வம்சாவளி

- எட்வர்டு III.
  - பிளாக் பிரின்ஸ்
    - ரிச்சர்டு II
  - லயனல், கிளாரென்ஸ் கோமகன்
    - பிலிப்பா
      - ரோஜர் மார்டிமர்
        - ஆன் மார்டிமர் = ரிச்சர்டு
          - ரிச்சர்டு, யார்க் கோமகன்
            - எட்வர்டு IV 1461–1483
              - எட்வர்டு V 1483
              - ரிச்சர்டு
              - எலிஸபெத் = ஹென்றி VII
            - ரிச்சர்டு III 1483-85
  - எட்மண்ட், யார்க் கோமகன்
  - ஜான், லங்காஸ்தர் கோமகன்
    - ஹென்றி IV 1399-1413
      - ஹென்றி V 1413-22
        - ஹென்றி VI 1422-61
          - எட்வர்டு
    - ஜான் போபர்ட். பாட்டனுர்
      - மார்காட் = எட்மண்ட் டியூடர்

அதிகாரம் 1

## நான்காவது ஹென்றியும் லாலர்டுகளும்

கி.பி. 1399—1413

**பா**ர்லிமெண்ட் சபை ஹென்றியை அரசனாகத் தேர்ந்தெடுத்தது. மூன்றாவது எட்வர்டின் இரண்டாவது ஸந்ததியின் வார்ஸுகள் இருக்கும்பொழுது நான்காவது ஸந்ததியின் மகனான இந்த ஹென்றிக்கு உரிமை கிடையாது. எனினும், தேசத்தில் செல்வாக்குள்ள பிரபுக்கள் அவன் பக்கத்திலிருந்தபடியால் ஹென்றிக்குப் பட்டம் கிடைத்தது. பார்லிமெண்டின் உதவியைக்கொண்டு அரசனான ஹென்றி அதன் எண்ணத்திற்கு விரோதமாக எந்தக் காரியத்தையும் செய்யத் துணியவில்லை. அதன் அனுமதி யின்றி வரி விதிப்பதில்லை. ஆகையால் லங்காஸ்தர் வமிசத்து அரசர்கள் நாளில், பார்லிமெண்ட் நல்ல அதிகாரமும் மேன்மையும் அடையலாயிற்று.

2. சர்ச்சில் ஏற்பட்ட கெட்ட வழக்கங்கள்.—14-வது நூற்றாண்டில் சர்ச்சின் மதிப்பு மிகக் குறைந்துவிட்டது. பண்டைக் காலத்தில் தனிகர்களும், அரசர்களும் தமது ஏராளமான ஐசுவரியத்தை ஆலயங்களுக்கும் மடங்களுக்கும் தானம் கொடுத்து வந்தனர். அந்தச் செல்வத்தைக்கொண்டு மடாதிபதிகளும் பிஷப்மார்களும் ஏழைகளுக்கு உணவு அளித்தும், வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தியும், கல்வியைப் பரவச் செய்தும் பல நற்றொழில்களை இயற்றிவந்தனர். சில ஆண்டுகள் சென்ற பின்னர், மடாதிபதிகளும் மதபோதகர்களும் உண்பதிலும், உடுப்பதிலும், இராஜகுமாரர்களும் பின்வாங்கும்படி நடக்கலாயினர். வரவர அவர்கள் கல்வி கேள்விகளில் பழகி நல்லறிவு பெறாது, தெய்வபக்தியும் இல்லாது, பொதுநல உழைப்பை மறந்து, சுயநல வாதிகளாயினர். சாஸர் தன் காண்டர்பரிக் கதைகளில் "ஒரு சந்நியாசி குதிரை சவாரி செய்கையில், கோயிலின் மணியோசைபோல் அவன்

குதிரையின் கடிவாளம் சப்திக்கும். அவன் தன் மடத்தினுள் உட்கார்ந்து படிப்பதுமில்லை; காசரணுதிகளால் கடவுளை வணங்கிப் பூசை இயற்றுவதுமில்லை. விலையுயர்ந்த ஜரிகை உடை உடுத்தியும், முக படாத்தைத் தங்க ஊசியால் மோவாயின் கீழ் இறுகப் பிணித்தும், உயர்ந்த உணவாகும் கொழுத்த அன்னப் பட்சியை உண்டு களித்தும், சுகபோகங்களில் காலத்தைப் போக்கினன்" என்று கூறியுள்ளான்.

3. ஜான் விக்ளிப் (John Wycliffe).—ஜனங்களுக்குச் சர்ச்சில் இருந்த மதிப்பு நாளுக்கு நாள் குறையத் தலைப்பட்டது. பல துராசாரங்கள் ஆலயங்களில் நிகழ்வது கண்டு சில புத்திமான்கள் அவைகளை நீக்கி நல்வழிப்

ஜான் விக்ளிப்

படுத்தக் கருதினர். அவர்களுள் முக்கியமானவன் ஜான் விக்ளிப். அவன் யார்க் ஜில்லாவில் இரண்டாவது எட்வர்டின் காலத்தில் பிறந்தவன். அவன் இளமைப் பருவத்தைப் பற்றிய விவரம் நன்றாகப் புலப்படவில்லை. அவன் ஆக்ஸ்வோர்டில்

சில வருஷங்கள் வசித்து வந்தான். இப்பொழுதுபோல அக்காலத்திலும் அந்நகரம் உயர்தரப் படிப்பிற்கு நிலபமாக வும், கல்விமான்கள் நானு தேசங்களிலிருந்து வந்து கூடுமிட மாகவும் இருந்தது. ஆங்குள்ள அறிவாளிகள் ஜனங்களுக்கு நேரும் தீங்கை நிவர்த்திக்க முற்பட்டு நின்றனர். அப்படிப் பட்ட நகரில் வாழ்ந்து வந்த விக்ளிப் தன் ஞானத்தை விருத்திபண்ணிக்கொண்டும் சில சமயங்களில் மதப்பிர சாரம் செய்துகொண்டும் தன் வாழ்நாளைப் போக்கினுன். கி.பி. 1374 முதல் 1384 வரையில் அவன் லட்டர்வர்த் கிராம குருவாகவு மிருந்தான்.

4. பின்னர் மடங்களிலும், ஆலயங்களிலும் நடந்த அக்கிரமங்களைக் கண்டனம் செய்து விக்ளிப் பேச ஆரம் பித்தபோது அவன் வயது முதிர்ந்தவனுகிவிட்டான். சன்னி யாசிகளைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவர, அவர்களிட மிருக்கும் செல்வத்தைப் பிடுங்குவதைத் தவிர, வேறு உபா யம் பலியாது என்று அவன் வெளிப்படையாகச் சொன் னுன். மதத் தலைவனுக இருக்கவும், ஜனங்களிடம் வரி வசூ லிக்கவும், மதவேதமாகிய பைபிளின்படி போப் அதிகாரம் பெற்றவனல்லன் என்று அவன் சாதித்தான். அக்காலத் தில் வழங்கி வந்த அனேக மதக்கொள்கைகளை அவன் மறுத் தான். பொதுஜனங்கள் தாங்களே படித் தறிந்துகொள்ளு மாறு பைபிலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தான். அதை வாசிக்க வாசிக்க ஜனங்களுக்குச் சர்ச்சின்மீது வெறுப்பு அதிகரித்தது. பொது ஜனங்களைப் போலவே பிரபுக்களும் விக்ளிப்பின் பிரசங்கத்தை ஆமோதித்தனர். ஏனெனில், வெகு காலமாக குருமார்களின் செல்வத்தைக் கண்டு பொறுமை கொண்டிருந்தபடியால் அவர்களது செல்வச் செருக்கை அடக்க இதுவே தருணம் என அனைவரும் சந் தோஷித்தனர்.

5. லாலர்டுகள்.—தன் கொள்கைகளைத் தேச மெங் கும் பரவச் செய்ய வெண்ணி விக்ளிப் சில ஏழைகளை ஒருங்கு கூட்டி அவர்களைத் தன் வழியில் நன்ருப் படிப்பித்து

கிராமந்தோறும் போய் மதப் பிரசங்கம் செய்ய அனுப்பினுன். அவர்கள் பாடும் துதிகளைக் கேட்டுப் பழைய முறையில் பற்றுள்ளவர்கள் அவர்களை "லாலர்டுகள்" அல்லது "உளறுகிறவர்கள்" என்ற நிந்தைப் பெயரிட்டழைத்தனர். இரண்டாவது ரிச்சர்டு அரசன், மைனராயிருந்த நாளில் லண்டன் நகரத்து பிஷப், சர்ச்சுக்கு விரோதமாகப் பிரசங்கம் செய்ததற்காக விக்ளிப்பின் மீது குற்றஞ் சாட்டி, விசாரணைக்குக் கொண்டுபோனுன். அப்பொழுது பிரதிநிதியாக இருந்த ஜான், பிஷப்புகளிடம் வெறுப்புடையவனுதலால், விக்ளிப்பை விடுதலை செய்துவிட்டான். அதன் பிறகு விக்ளிப் தன் கிராமத்திலேயே தங்கியிருந்து கி. பி. 1384-ல் மரணமடைந்தான். அவன் செய்த ஏற்பாட்டிற்காக அவனை "மதச் சீர்திருத்தம் செய்யவந்த மதாச்சாரியர்" என ஜனங்கள் மதித்தனர்.

6. லாலர்டுகள் லங்காஸ்தர் அரசர்களால் பீடிக்கப் பட்டமை.—லாலர்டார் விக்ளிப் இறந்த பிறகுகூட நாளுக்கு நாள் விருத்தி யடைந்தனர். "தெருவில் சந்திக்கும் இரண்டாவது மனிதன் லாலர்டாக விருந்தான்" என்று கி. பி. 1390-ல் ஒருவர் எழுதியுள்ளார். பழைய மத குருக்களும், இன்னும் சிலரும் அவர்களை வெறுத்தபோதிலும் நான்காவது ஹென்றி பட்டத்திற்கு வருமளவும் அவர்களை அடக்க முடியவில்லை. ஹென்றியும் பார்லிமெண்டும் அவர்களை மத விரோதிகளென எண்ணி வேருடன் களைந்துவிட அனேக சட்டங்களைப் பிறப்பித்தார்கள். அவைகளில் ஒன்றில் லாலர்டுகளை உயிருடன் எரித்துவிடக் கட்டளையிட்டிருந்தது. ஆயினும் அவர்கள் தங்கள் கொள்கைகளைக் கைவிடாது மத வைராக்கியத்துடன் உயிர் துறந்தனர். இக் குரூரமான தண்டனை விதித்த பிறகும் லாலர்டுகள் அடங்கிவிடவில்லை. ஹென்றியின் கடைசி நாட்களில் அவனது ஆப்த சினேகனுன ஸர் ஜான் ஓல்ட் காஸ்ல் என்ற போர்த் தலைவன்கீழ் அவர்கள் மறுபடியும் பிரபல மடைந்தனர். பழைய மதமுறைகளில் வைத்த பற்றுக்காக அரசனை

ஒழிக்க அவர்கள் அநேக சூழ்ச்சிகள் செய்தனர். இதை உத்தேசித்தே ஆங்கிலக் கவியும் "மகுடம் தரிப்பவன் மனம் கவலை கொண்டிருக்கும்" என்று கூறியுள்ளார். கி. பி. 1417-ல் ஓல்ட் காஸ்லைப் பிடித்துத் தீயின்மேல் தலைகீழாய்த் தொங்கவிட்டுப் பொசுக்கிக் கொன்றுவிட்டார்கள். அச் சம்பவத்திற்குப் பிறகு லாலர்டுகள் தலையெடுக்கவில்லை. இவ்விதம் லங்காஸ்தர் அரசர்களால் மதச் சீர்திருத்த ஆரம்பம் தடுக்கப்பட்டது.

### அப்பியாசங்கள்

1. 14-வது நூற்றாண்டில் சர்ச்சின் நிலைமை எப்படியிருந்தது?

2. விக்ளிப் பிரசங்கம் செய்த முக்கிய விஷயங்கள் யாவை?

3. லாலர்டுகள் யார்? அவர்கள் யாரால் எவ்விதம் அடக்கப்பட்டனர்?

---

## அதிகாரம் 2

## ஐந்தாவது ஹென்றி (கி. பி. 1413—22) நூறுவருடப் போரின் தொடர்ச்சி

ஹென்றி, இளவரசனு யிருக்கையில் தீய நண்பர்களுடன் கூடி, தகப்பனுக்கு அடங்காமல் திரிந்தான். அப்பொழுதே அவனிடம் சில மேன்மையான குணங்கள் காணப்பட்டன. ஒரு சமயம் அவன் தோழரில் ஒருவன் ஏதோ ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டான். விசாரணை முடிந்ததும் நீதிபதி தீர்ப்புச் சொன்னவுடன், தோழனுக்குத் துணையாய் வந்த ஹென்றிக்குக் கோபம் வந்துவிட்டது. அக் கோபாவேசத்தால் அவன் தன்னை மறந்து தன் வாளை உறையிலிருந்து உருவினுன். அது நியாயஸ்தலத்தை அவமதித்த

தாயிற்று. அதைக் கண்ட நீதிபதி, சட்டத்தைமீறி நடப்பவன் யாவனுயினும், அவனைத் தண்டிப்பதே தன் கடமை எனத் தீர்மானித்து, இளவரசனைச் சிறையிடுமாறு கட்டளையிட்டான். ஹென்றியும் தான் செய்தது குற்றமென




நூறு வருடப்போர்.

உணர்ந்து அத்தண்டனையைச் சாந்தமாக ஏற்றுக்கொண்டான். அச்சமாசாரத்தைக் கேள்வியுற்ற அரசன், "பக்ஷபாத மில்லாத ஒரு நீதிபதியையும், தானும் சட்டத்திற்குட்பட்டவன் என அறிந்த ஒரு குமாரனையுமுடைய என்

போன்ற அரசனே, உண்மையில் அதிர்ஷ்டசாலி'' என்று கூறினான்.

2. பிரான்ஸின் பரிதாபகரமான நிலை.—ஹென்றி பட்டத்திற்கு வந்ததும் தன் பழைய நண்பர்களை விடுத்து அரசனுக்குரிய நற்குணங்களைக் கைக்கொண்டான். பிரான்ஸில் இழந்துபோன மாகாணங்களைத் திரும்ப அடையத் தீர்மானித்தான். மூன்றாவது எட்வர்ட் வம்சத்தில் பிறந்ததைக் கொண்டு பிரெஞ்சு பட்டத்திற்குப் பாத்தியங் கொண்டாடினான். பிரான்ஸோ அக்காலம் சீர்குலைந்த நிலையிலிருந்தது. பிரெஞ்சு அரசன் பித்துப் பிடித்திருந்தான். அந்நாட்டிலுள்ள பிரபுக்களும், ஜமீன்தார்களும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இவர்களை அடக்க டாபினுக்கு (அத்தேசத்து இளவரசனுக்கு)த் திறமையில்லை. ஒரு சமயம், டாபின் எதிரிலேயே பர்கண்டியின் பிரபுவாகிய ஜான், வேறொரு ஜமீன்தாரால் கொலையுண்டான். ஜான் அரசனைக் காட்டிலும் அதிக நாடுகளை ஆண்டு வந்தபடியால் அவனுக்குச் செல்வாக்கு அதிகமுண்டு. அக்கொரேச் செயலைக் கண்ணுற்று சும்மா விருந்ததற்காக டாபினையும், மற்ற பிரபுக்களையும் ஹதம் செய்துவிடுவதாக ஜானின் மகன் சபதம் செய்து அவர்களுக்கு விரோதமாக ஒரு கக்ஷியை ஏற்படுத்தினான். இவ்விதம் அத்தேசத்து நிலை தாறுமாறாக விருந்தமையால், ஹென்றி படையெடுத்துச் செல்ல அதுவே தக்க தருணமாயிற்று.

3. அழான்கோர் யுத்தம் கி. பி. 1415. (Agincourt).—ஹென்றி கி.பி. 1415-ல் ஸேன் நதி முகத்துவாரத்தில் வந்திறங்கி, ஆங்குள்ள ஹார்ப்ளோர் (Harfleur) என்னும் பட்டணத்தை ஏழு வாரம் முற்றுகை போட்டுப் பிடித்தான். அதற்குள் அவன் சேனை கொஞ்சம் சேதமாகி விட்டபடியால் கடற்கரை யோரமாகக் கலே நகருக்குப் போய் அங்கு இங்கிலாந்திலிருந்து புதுத் துருப்பு வருமளவும் காத்திருப்பதாகத் தீர்மானித்தான். ஸாம் நதியைக் கடந்ததும் ஹென்றி தன் சேனையைப் போல் ஐந்து மடங்கு பெரிய

பிரெஞ்சு சேனை யொன்று வழியைத் தடுத்துக்கொண்டிருப் பதைக் கண்டான். மறுநாள் அஜின்கோர் என்ற இடத்தில் யுத்தம் நடந்தது. பிரெஞ்சு வீரர்கள் கனத்த ஆயுதங்களும், கவசங்களும் பூண்டிருந்தபடியால், சேறான பூமியில் ஓடிச் சத்துருக்களை எதிர்க்க முடியவில்லை. ஆங்கில வில்லாளிகளோ, தூரத்திலிருந்தே எதிரிகள்மீது அம்பு மாரி பொழிய ஆரம் பித்தனர். மூன்று மணி நேரத்தில் பதினோராயிரம் பிரெஞ்சு வீரர்கள் மாண்டுவிட்டனர். பிரெஞ்சு பிரபுக்களிலும் அநேகர் மடிந்தனர். இவ்விதம் அச்சேனையை முறியடித்த பிறகு, ஜயபேரிகையுடன் ஹென்றி இங்கிலாந்திற்குத் திரும்பி விட்டான்.

4. டுருவா உடன்படிக்கை கி.பி. 1420. (Treaty of Troyes).—இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர், ஹென்றி மறுபடியும் பிரான்ஸ் மீது படையெடுத்து, கி.பி. 1419-க்குள் நார்மண்டி முழுமையும் ஜயித்து விட்டான். அதன் தலைநகராகிய ரூவாங் (Rouen) நகர் அவன் வசமாகி விட்டது. டாபினுக்கு ஜன்மத் துவேஷியாகிய பர்கண்டி பிரபு ஆங்கிலேயருடன் கலந்து கொண்டான். அவர்களுடன் போர் புரிய வல்லமையில்லா டாபின், பாரிஸ் நகரை விட்டு விட்டுத் தெற்கிலுள்ள தன் மாகாணத்திற்கு ஓடிவிட்டான். மதியிழந்த அவன் தந்தை ஹென்றியுடன் டுருவா உடன் படிக்கையைச் செய்துகொண்டான். அதன்படி டாபின் பிரெஞ்சு பட்டத்தினின்று விலக்கப்பட வேண்டுமென்றும், ஹென்றி பிரெஞ்சு அரசகுமாரியை மணந்து இராஜப் பிரதிநிதியாக விருந்து, அவனுக்குப் பிற்காலம் பிரெஞ்சு சிம்மாதனத்தில் ஏறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டன. இங்ஙனம் பிரான்ஸின் வடபாகம் முழுதும் ஹென்றியிடம் வந்துவிட்டது. இவ்விதம் வெற்றி முழங்க கி.பி. 1422-ல் ஹென்றி காலஞ்சென்றான்.

V561
N28

## அதிகாரம் 3

# ஆறுவது ஹென்றி (கி. பி. 1422-1461)

## நூறுவருடப் போரின் தொடர்ச்சி

பெட்வோர்டும் ஆர்லேயாங் (Orleans) முற்றுகையும்.—ஆறுவது ஹென்றி மைனராக இருந்ததால் அவன் சிற்றப்பனாகிய ஜான் பெட்வோர்டு கோமகன் ரக்ஷகனாக நியமிக்கப்பட்டான். ஐந்தாவது ஹென்றிக்குத் தகுந்த தம்பியாகிய அவன் ஆங்கிலேயரது அதிகாரம் பிரான்ஸில் குன்றாதபடி பாதுகாக்க முயன்றான். சித்தப்பிரமையுடைய சார்லஸ் இறந்ததும், ட்ருவா உடன்படிக்கைப்படி பிரான்ஸ் இராஜ்யத்திற்கு வார்ஸுதாரன் ஆறுவது ஹென்றி. லுவா நதிக்குத் தென் பாகத்திலிருந்த டாபின் தான் பாத்தியஸ்தன் எனக்கொண்டாடினான். ஆங்கில அரசன் உரிமையை நிலைநிறுத்த பெட்போர்டு சண்டையிட்டு வெற்றியடைந்து வடபாகத்தில் ஹென்றியை அரசனென ஸ்தாபித்தான். பின்னர் அவன் டாபினைத் தோற்கடிக்கத் தன் சேனையைத் தென்பாகத்தில் செலுத்த எண்ணி ஆர்லேயாங் பட்டணத்தை முற்றுகை போட்டான்.

2. படத்தைப் பார்த்தால் அப்பட்டணம் எவ்விதம் முக்கியமானதென்பது நன்கு தெரியும். ஆங்கு லுவா நதியைக் கடக்க நேர்த்தியான பாலமொன்றுண்டு. பாரிஸிலிருந்து தெற்கே போகும் பெரிய ரஸ்தா அதன் வழியாகத்தான் சென்றது. ஆங்கிலேயர் அந்நகரைக் கைப்பற்றிவிட்டால் அவர்கள் சேனையைத் தெற்கே நடத்திக்கொண்டு போய் எளிதில் டாபினை ஜயித்துவிடலாம். அந்நகரைக் காக்க 20,000 படை வீரர்களும் அனேக பீரங்கிகளுமிருந்தன. ஆயினும் ஆங்கிலேயர் விடாது முற்றுகை போட்டுக் கொண்டிருந்தனர். கூடிய சீக்கிரத்தில் ஆர்லேயாங் நகர் பிடிபட்டு விடும் போலிருந்தது.

77564

3. ஆர்லேயாங் நகரை ஆர்க் சிறுமி காப்பாற்றியது.— அப்பொழுது ஆச்சரியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதாவது, ஜோன் என்னும் பெயருள்ள குடியானச் சிறுமி தோன்றி அப்பட்டணத்தை ரக்ஷித்தாள். அவள் டாம்ரிமி என்னும் கிராமத்தில் பிறந்தவள். ஆடுகளை மேய்ப்பதே அவள் தொழில். ஒரு நாள் அவள் ஆடுகளை மேய்க்க ஓட்டிக் கொண்டு போகையில் ஒரு அபூர்வமான தோற்றம் எதிரில் நின்று "நீ பிரான்ஸுக்குப்போய் ஆர்லேயாங் பட்டணத்தை முற்றுகையினின்றும் விடுவிக்க வேண்டும்" என்று சொல் லும் சத்தத்தைக் கேட்டாள்.

17 வயது வாய்ந்த சிறுமியாயினும் தனக்குத் தெய்வீக மாக உண்டாகிய கட்டளையைத் தலைமேற்கொண்டு அவள் தைரியமாகப் புறப்பட்டாள். அவளுடைய மாமன் உதவி யால் ஒரு சிறுவன்போல் அவள் ஆண்வேஷம் பூண்டு டாபின் இருந்த ஷினன் (Chinon) என்னும் ஊருக்குப் போனாள். அவனைக் கண்டு மண்டியிட்டுப் பின்வருமாறு கூறினாள். "அழகு மிக்க இளவரசே! ரீம்ஸ் (Rheims) பட்டணத் தில் நுமக்கு மகுடாபிஷேகம் நடக்கும் என ஆண்டவன் அருளினான். அதனைச் சொல்லவே உம்மிடம் வந்தேன்." அதைக் கேட்டு, முதலில் டாபின் சிரித்தான். ஆயினும் உய் யும் வகை எதும் அறியாமையால் அவளுடன் ஒரு சிறு சேனையை அனுப்பச் சம்மதித்தான். அவள் மார்பில் கவசம் தரித்து, கையில் வாள் ஏந்திக் குதிரையின் மீதேறி அச் சேனையை வீரமுடன் நடத்தி ஆர்லேயாங் நகர் முன்பு வந்து நின்றாள். அவள் தலைமையின் கீழ் பிரெஞ்சு வீரர்கள் ஊக் கமும் உற்சாகமும் கொண்டு சண்டையிட்டு ஆங்கிலேயரை அடித்துத் துரத்தி அப்பட்டணத்தை விடுவித்தனர்.

4. சார்லஸின் மகுடாபிஷேகம்.—ஜோன் புரிந்த இன்னு மொரு துணிகரமான செயலுண்டு. சத்துருக்கள் வசமிருந்த தேசத்தின் வழியாய் டாபினை அழைத்துப் போய் ரீம்ஸ் பட் டணத்தில் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்தாள். அச்சடங்கு நடந்தேறுகையில் அவ்வீர மாது கண்டோரனை

வரும் வியக்குமாறு வெற்றிக் கொடியைக் கரத்தில் தாங்கி அழகுபெற அவன் பக்கத்தில் நின்றாள். முடி சூடிய பின்னர் அவள் கண்களினின்றும் நீர் சொரிய "அரசே! இப்பொழுதுதான் ஆண்டவன் அருளியவாறு எல்லாம் நிறைவேறின. மகுடம் சூடிய நீரே பிரான்ஸின் உண்மை அரசர்" என்று ஆனந்தமுடன் கூவினாள்.

5. ஜோனின் கதி.—ஆங்கிலப் படை பிரான்ஸ் தேசத்தினின்றும் துரத்தப்படாமையால், ஜோனின் வேலை இன்

ஜோன்

னமும் முற்றிலும் முடிந்தபாடில்லை. சார்லஸ் தன் சுக போகத்தைக் கவனித்தானே யொழிய, தான் இழந்த இராஜ்யத்தை மீண்டும் அடைய எள்ளளவும் பிரயாசைப்படவில்லை. அன்றியும் சில பிரபுக்கள் அவளிடம் பொறாமை கொண்ட

னர். ஆதலால் ஜோனுக்கு ஆங்கிலேயரை ஜயிப்பது வெகு கடினமாயிற்று. இருந்தாலும் அவள் அஞ்சாத நெஞ்சத்துடன் ஆங்கிலேயரும், பர்கண்டியரும் முற்றுகை போட்டிருந்த ஒரு பட்டணத்தை விடுவிக்கக் கருதி அங்கே விரைந்து போயினாள். அப்போது பர்கண்டியர் கையில் அவள் அகப்பட்டுக் கொண்டாள். அவர்கள் அவளை ஆங்கிலேயரிடம் ஒப்புவிக்க, அவர்களும் அவளைப் பெண்ணென்றும் பாராது சிறிதும் ஈவிரக்கமின்றி மகத் துரோகி என்று குற்றஞ்சாட்டி கி. பி. 1431-ல் தீயில் தள்ளிவிட்டனர்.

6. ஆங்கிலேயரின் அபஜயம்.—ஒரு பாவமுமறியாத அச்சிறுமியை எரித்த பாவம் ஆங்கிலேயர்களைச் சும்மா விடவில்லை. அபஜயத்திற்கு மேல் அபஜயமடைந்து ஆங்கிலேயர் இருபது வருடங்களுக்குள் பிரான்ஸிலிருந்து துரத்தப்பட்டனர். தேச நன்மைக்காக ஜோன் ஆவியைத் துறந்தது பிரெஞ்சு ஜனங்களது கண்களைத் திறந்து விட்டதுபோலாயிற்று. இதுகாறும் கக்ஷிப் பிரதிகக்ஷியைக் கொண்டு வீண் சண்டையிட்டுக் கொண்டிருந்த பர்கண்டி பிரபு, தேச சத்துருவாகிய ஆங்கிலேயருக்கு உதவுவது மதியீனமென்றறிந்தான். பெட்வோர்ட் கோமகனுடன் ஒரு விவாதமேற்பட அதையே முகாந்திரமாகக் கொண்டு ஆங்கிலேயரைக் கைவிட்டு டாபினுடன் சேர்ந்துகொண்டான். மேலும் பெட்வோர்டு இறந்ததும் ஆங்கிலேயருக்குத் தகுந்த போர்த் தலைவன் ஒருவனும் கிடைக்கவில்லை. ஆகையால் அவர்கள் நார்மண்டியில் உள்ள ஒவ்வொரு நகரிலிருந்தும் துரத்தப்பட்டனர். கி. பி. 1453-ல் இந்தக் கொடிய யுத்தம் முடிவிற்கு வந்தது. அப்பொழுது ஆங்கிலேயர் கலே நகரைத் தவிர மற்றெல்லா நாடுகளையும் இழந்துவிட்டனர்.

7. சண்டையின் பயன்கள்.—இந்த நீடித்த யுத்தம் இங்கிலாந்திற்கு ஒரு நன்மையையும் விளைவிக்கவில்லை. சண்டைச் செலவிற்காக வரிகள் உயரவே ஜனங்கள் அச்சுமையைத் தாங்கமாட்டாமல் தவிக்கலாயினர். யுத்தத்திலிருந்து திரும்பி வந்த வீரர்கள் பிழைப்பதற்கு வேலையொன்றுமில்

லாது அமைதியற்றிருந்தனர். வீரச் செயல்களை விரும்பிய அவர்களுக்குச் சாதாரணமாக ஒரு தொழிலில் அமர இஷ்டமில்லை. ஜமீன்தார்களும் தங்கள் விவாதங்களையெல்லாம் நீதிஸ்தலங்களில் வழக்குத் தொடுத்துத் தீர்க்கக் கருதாமல் சண்டையிட்டே தீர்த்துக்கொள்ள முயன்ருர்கள். இங்ஙனம் இங்கிலாந்தில் கலகமும் குழப்பமும் மிகுந்து, உள் நாட்டுப் போர் ஏற்படவும் நூருண்டுப் போரே காரணமாயிற்று. ஆயினும் ஆங்கில வில்லாளிகள் வெற்றி யடைந்ததிலிருந்து பொது ஜனங்கள் தாங்களும் பிரபுக்கள் போலவே தேசத்திற்கு முக்கியமானவர்கள் என்று உணரலாயினர். இது ஒரு நன்மையாயிற்று.

## அப்பியாசங்கள்

1. கி. பி. 1415 முதல் கி. பி. 1453 வரையில் நடந்த யுத்தங்களையும், முற்றுகைகளையும் வரிசையாக எழுதுக. இவ்விடங்களை ஒரு படத்தில் குறிக்க.

2. ட்ருவா உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் அடைந்த நாடுகள் யாவை?

3. ஆங்கிலேயர் அபஜய மடைந்ததற்கு இரண்டு முக்கிய காரணங்களைக் கூறுக.

.4 ஜோன், பெட்வோர்டு, டாபின், ஜான், பர்கண்டிப் பிரபு இவர்கள் ஒவ்வொருவரைப்பற்றி ஒரு முக்கிய விஷயம் கூறுக.

அதிகாரம் 3

## ரோஸஸ் யுத்தங்கள்

**கா**ரணங்கள்.—ஆருவது ஹென்றி அரசன், ஆளும் திறமையற்ற வனுதலால், பிரபுக்கள் அவனுக்கு அடங்காமல் ஜனங்களைப் பீடித்தனர். நீடித்த பிரெஞ்சு யுத்தத்தால் ஏற்பட்ட ஏராளமான செலவிற்காகப் பிரஜைகள்மீது வரி சுமத்தப்பட்டது. மேலும் யுத்தமும் அபஜயமாக முடிந்தது. ஆங்கிலேயர் வசமிருந்த மாகாணங்கள் எல்லாம் ஒழிந்து போயின. இவ்வளவு அவமானத்திற்கும், துயரத்திற்கும் காரணம் அரசனும், ஸாமர்ஸெட் எனும் முக்கிய மந்திரியும் தான் என்று ஜனங்கள் எண்ணினர். ஸாமர்ஸெட் ஒழிந்தால் தங்கள் துன்பம் தீரும் என்று கெண்ட் குடியானவர்கள் நினைத்துக் கலகஞ்செய்து ஜாக் கேட் (Jack Cade) என்னும் தலைவனுடன் லண்டன் பட்டணத்தில் புகுந்தனர். அவர்கள் சில இராஜ உத்தியோகஸ்தர்களைக் கொன்றும், நகரைக் கொள்ளையடித்தும் அதம் செய்தனர். இது ஜனங்களின் அதிருப்தியையும், துரைத்தனத்தாரது பலஹீனத்தையும் எடுத்துக் காட்டியது. கலகக்காரர்களை வெளியில் துரத்துவது அரசாங்கத்தாருக்கு வெகு கடினமாயிற்று.

2. துன்பம் வருங்கால் அடுக்கடுக்காய் வருமன்றோ? "பட்டகாலிலே படும்" எனும் பழமொழிக்கிணங்க இத்தருவாயில் அரசனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. ஆகையால் பிரபுக்கள் ஒன்று சேர்ந்து ஸாமர்ஸெட்டை நீக்கி, லயனல் வம்சத்தில் பிறந்த ரிச்சர்டு கோமகனை ரக்ஷகனாக நியமித்தனர். ஹென்றியைக் காட்டிலும் தனக்கு அரசில் அதிக பாத்தியமுண்டு என்றும், ஹென்றிக்குப் புத்திரனில்லாததால் அவனுக்குப் பிற்காலம் தனக்கே பட்டம் கிடைக்குமென்றும் அதுவரையில் தானே ரக்ஷகனாக விருக்கலாமென்றும் ரிச்சர்டு எண்ணினன். சீக்கிரத்தில் அவன் எண்ண

மெல்லாம் வீணாயின. ஏனெனில், ஹென்றியின் பயித்தியம் தெளிந்து விட்டது; அவனுக்கு ஒரு குமாரனும் பிறந்து விட்டான். மார்கரட் அரசியின் உதவிபெற்ற ஸாமர்ஸெட் இழந்த அதிகாரத்தைத் திரும்பவும் அடைந்தான். ரிச்சர்டு இனிச் சண்டையிட்டுத்தான் அரசினை அடையவேண்டு மெனத் தீர்மானித்து, படையொன்று தயாரித்து, அரசன் சேனையை ஸெண்ட் ஆல்பன்ஸ் (St. Albans) என்னுமிடத் தில் கி.பி. 1455-ல் தாக்கினான். அதில் ஸாமர்ஸெட் மரண மடைந்தான். ஹென்றி கைது செய்யப்பட்டான். நாட்டி லுள்ள பிரபுக்கள் இரண்டு கக்ஷிகளாகப் பிரிந்து நின்றனர். ஹென்றியைச் சார்ந்தவர் சிவப்பு ரோஜாவை அடையாள மாகக் கொண்டும், யார்க் கோமகனைச் சார்ந்தவர் வெள்ளை ரோஜாவைத் தரித்தும் நீண்ட காலம் போர்தொடுத்து வர லாயினர். இதனால், இந்த யுத்தத்திற்கு ரோஸஸ் (ரோஜாக் கள்) யுத்தம் என்று பெயர்வந்தது.

3. லங்காஸ்தர் தோல்வி.-மார்கரட் அரசி இல்லாதிருந் தால் இந்த யுத்தம் அதி சீக்கிரம் முடிந்திருக்கும். அவள் தன் படைகளைக் கூட்டிக் கொண்டு கி. பி. 1460-ல் வேக்ஃபீல்ட் (Wakefield) என்னுமிடத்தில் யார்க் கக்ஷி யாரைத் தோற்கடித்து ஹென்றியைச் சிறை மீட்டனள். ரிச்சர்டும் சண்டையில் இறந்தான். ஆனாலும் லண்டன் நகரத் தார் ஹென்றியின் ஆளுகையில் வெறுப்புக்கொண்டு அவனை நகரில் வரவொட்டாமல் தடுத்தனர். இதற்குள் ரிச்சர்டின் குமாரன் எட்வர்டு தன் கக்ஷிக்காரருடன் லண்டனுக்கு வர, அவனை நல்வரவேற்றனர். மேலும் அவன், அதிக செல்வாக் குள்ள வாரிக் பிரபுவின் உதவியை அடைந்து லங்காஸ்தர் படையைத் தொடர்ந்து வடக்கே சென்று கி.பி. 1461-ல் டௌடன் (Towton) என்னு மிடத்தில் அதனை முறி யடித்தான். மார்கரட் பிரான்ஸுக்கு ஓடிவிட்டாள். ஹென் றியோ லண்டன் பெரிய சிறையில் இடப்பட்டான். இதன் பிறகு, எட்வர்டு நான்காவது எட்வர்ட் அரசனெனச் சிம்மா ஸன மேறினான்.

3. எட்வர்டும் வாரிக்கும்.—எட்வர்டு தேசத்தைச் சமாதானமாக அதிக நாள் ஆள முடியவில்லை. ஏனெனில், தனக்கு இதுவரையில் ஆதாரவாக விருந்த வாரிக்குடன் சண்டை யிட்டுக் கொண்டான். வாரிக் ஒரு பிரெஞ்சு இராஜ குமாரியை மணக்குமாறு எட்வர்டுக்குப் போதித்தான். ஆனால் அதற்கு விரோதமாக அவன் எலிஸபெத் வுட்வில் (Elizabeth Woodville) என்னும் அழகிய ஆங்கில மாதை மணந்துகொண்டான். அவ்வரசியின் உறவினர் வாரிக்கின்மீது விரோதம் பூண்டனர். ஆகையால் அவன் எட்வர்டைச் சிம்மாதனத்திலிருந்து நீக்கவும், அவன் தம்பியாகிய கிளாரென்ஸ் கோமகனை ஸ்தாபிக்கவும் சூழ்ச்சிகள் செய்தான். பிறகு அவன் அது பயன்படா தென்றறிந்து பிரான்ஸுக்குப் போய் மார்கரட்டுடன் சேர்ந்து கொண்டான். லங்காஸ்தர் அரசரைத் திரும்பவும் ஸ்தாபிக்க அவ்விருவரும் இங்கிலாந்தில் வந்திறங்கினர். அதைக்கண்டு எட்வர்ட்டு பிளாண்டர்ஸுக்கு ஓடவே, வாரிக் ஹென்றியைச் சிறையிலிருந்து மீட்டுச் சிம்மாதனத்தில் வைத்தான். அதற்காக "அரசாக்கும் வாரிக்" என்ற பட்டப் பெயரை அவன் அடைந்தான். சில மாதங்களுக்குள் எட்வர்டு திரும்பி வந்ததும் லண்டன் நகரத்தார் அவனைப் பின்பற்றலாயினர். கி.பி. 1471-ல் டியூக்ஸ்பரி (Tewkesbury) என்னுமிடத்தில் நடந்த சண்டையில் லங்காஸ்தர் கக்ஷி முற்றிலும் அழிந்துவிட்டது. மார்கரட் மறுபடியும் பிரான்ஸுக்கு ஓடிவிட்டாள். ஹென்றி சிறையில் தள்ளப்பட்டான். அவன் மகனாகிய எட்வர்ட் இளவரசன் பிடிக்கப்பட்டுக் கொரோமாகக் கொலை செய்யப்பட்டான். பார்னேட் (Barnet) என்ற விடத்தில் மற்றொரு யுத்தம் நடந்தது. அதில் வாரிக் உயிரை இழந்தான்.

லிட்டன் எழுதிய "கடைசி ஜமீன்தார்" (Last of the Barons) என்ற பெயரையுடைய நாவலில் இவனைப் பற்றி மாணாக்கர் விவரமாக வாசித்தறியலாம்.

4. நான்காவது எட்வர்டின் அரசு.—பார்னெட் யுத்தத்திற்குப் பிறகு எட்வர்டு சுமார் 10 வருடங்கள் அமைதியாக

இங்கிலாந்தை ஆண்டு வந்தான். எட்வர்டு தொழிலாளர்களை யும், வியாபாரிகளையும் மிக்க நேசித்து அவர்கள் வர்த்தக மும், தொழிலும் விருத்தியடையத் தகுந்த மார்க்கத்தைத் தேடினான். யுத்தம் பெரும்பாலும் பிரபுக்களுக்குள் நடந்த தால், பொது ஜனங்கள் எப்பொழுதும் போல் தங்கள் வேலையை யாதொரு தடையுமின்றிக் கவனித்து வந்தனர். எட்வர்டு தனக்குப் பணம் வேண்டும்போதெல்லாம் பார்லி மெண்டை அழைக்காமல் ஜனங்களிடமிருந்து "இனாம் பணம்" (Free Gift) வாங்க ஆரம்பித்தான். ஆனால் அதை எல்லாரும் கட்டாயமாகக் கொடுக்கவேண்டி யிருந்ததால், அது வரியைவிடப் பெரும் சுமையாயிற்று. ஆகையால் அவன் வல்லரசு நடத்தி வந்தானென்று சொல்லலாம்.

5. மூன்றாவது ரிச்சர்டும் பாஸ்வர்த் யுத்தமும்.—கி. பி. 1483-ல் எட்வர்டு இறந்ததும், அவன் இரு குமாரர்களும் சிறுவர்களா யிருந்தனர். 12 வயதுள்ள மூத்த குமாரன் ஐந் தாவது எட்வர்டு என்று சிம்மாதனத்தி லேற்றப்பட்டான். அவன் சிற்றப்பன் ரிச்சர்டு கிளஸ்டர் கோமகன் (Richard Duke of Gloucester) ரக்ஷகனாக நியமிக்கப்பட்டான். அதன் பிறகு ரிச்சர்டு அவ்விரு இளவரசர்களையும் கைப்பற்றி லண்டன் சிறையில் தள்ளி, தன்னையே அரச னாக்கிக்கொண்டு இரகசியமாக அவ்விருவரையும் கொலை செய்து விட்டான். அதைக் கண்டு ஜனங்கள் அவனி டம் அருவருப்படைந்தனர். கி. பி. 1485-ல் லங்காஸ்தர் வம்சத்தைச் சார்ந்த ஹென்றி டியூடர் (Henry Tudor) என்பான் வேல்ஸில் வந்திறங்கிச் சண்டை தொடுத்தான். ரிச் சர்டு அவனைத் துரத்த நினைத்துச் சேனையை மேற்கே நடத்த பாஸ்வர்த் யுத்தம் நேர்ந்தது. அதுதான் ரோஸஸ் போரின் கடைசி யுத்தம். மிகுந்த பிரபுக்கள் ரிச்சர்டின் கட்சியைக் கைவிட்டமையால் எளிதில் ஹென்றி ஜயமடைந் தான். ரிச்சர்டு சண்டையில் மரணமடையவே ஹென்றி முதல் டியூடர் அரசனாகி விட்டான்.

6. இச்சண்டையில் பழைய பிரபுக்களில் அனேகர்




ரோஸஸ் யுத்தங்கள்

மடிந்தனர். அவர்கள் கள்ளத்தனமாகவும், கொடூரமாகவும் நடந்தமையால் பொதுஜனங்கள் அவர்களை வெறுக்கலாயி னர். ஜனங்களுக்கு வல்லரசே மேல் என்று தோன்றிற்று. ஆகையால் டியூடர் வம்சத்தார் தங்கள் இஷ்டப்பிரகாரம் வல்லரசு நடத்த எளிதாயிற்று.

## அப்பியாசங்கள்

1. ரோஸஸ் யுத்தத்திற்குக் காரணங்கள் எவை?

2. வேக்வீல்ட், பார்னெட், பாஸ்வர்த் இச்சண்டைகளில் இறந்தவர்கள் யார்?

3. ஜாக் கேட், வாரிக், கிளாரென்ஸ் கோமகன் இவர்களைப் பற்றிப் படித்ததைச் சுருக்கி வரைக.

4. எட்வர்டுக்கும் வாரிக்குக்கும் ஏன் விவாதம் ஏற்பட்டது?

5. ரோஸஸ் யுத்தங்களால் உண்டாகிய ஒரு பெரும் பயனைக் கூறுக.

# IV டியூடர் அரசாட்சி

## டியூடர் வம்சாவளி

- ஏழாவது ஹென்றி (கி. பி. 1485—1509)
  - ஆர்தர் கி. பி. 1502-ல் மரணமடைந்தான்.
  - எட்டாவது ஹென்றி (கி. பி. 1509—1549)
    - மேரி (கி. பி. (1553—58)
    - எலிஸபெத் (கி. பி. (1559—1603)
    - ஆறாவது எட்வர்டு (கி. பி. 1549—53)
  - மார்கரெட் = நான்காவது ஜேம்ஸ், ஸ்காட்லாந்து அரசன்
    - ஐந்தாவது ஜேம்ஸ்
      - மேரி அரசி
        - ஆறாவது ஜேம்ஸ் (இங்கிலாந்தில் முதலாவது.)

அதிகாரம் 1

# ஏழாவது ஹென்றி (கி. பி. 1485—1509)

**யா**ர்க் கலகங்கள் — பாஸ்வர்த் யுத்தத்தில் கிடைத்த வெற்றியின் பலனாக ஹென்றி மகுடம் சூடினும், அதனை நிலைத்துத் தரித்திருக்க அவன் அதிக பிரயாசைப்பட வேண்டி யிருந்தது. ஏனெனில் யார்க் வம்சத்தைச் சார்ந்தவர்கள் அவனைச் சிம்மாதனத்திலிருந்து நீக்க இரு முறை கலகம் செய்தனர். அவைகளுள் பெரியதான கலகத்தை விளைவித்தவன் பெர்கின் வார்பெக் (Perkin Warbeck) என்போன். மூன்றாவது ரிச்சர்டினால் கொலையுண்டதாகச் சொல்லப்பட்ட நான்காவது எட்வர்டின் இளைய குமாரன் தான் என அவன் நடித்தான். அது உண்மையாயின் ஹென்றியைக் காட்டிலும் அவனுக்கே பாத்திய மதிகம். ஆனாலும் ஹென்றி திறமையுடனும் சாதுரியமுடனும் சுலபத்தில் அக் கலகங்களை அடக்கிவிட்டான். மேலும் அவன் யார்க் வம்சத்தாரை ஒருவாறு திருப்தி செய்யக் கருதி நான்காவது எட்வர்டின் குமாரி எலிஸபெத்தை மணந்துகொண்டான்.

இவ்விதம் விரோதம் பூண்ட இரண்டு வம்சங்களும் ஒன்று சேர்ந்து ஐக்கியமாயின.

2. ஹென்றி ஜமீன்தார்களின் பலத்தை ஒடுக்கியது.— ரோஸஸ் யுத்தங்களில் தப்பிப் பிழைத்த ஜமீன்தார்களின் எல்லா அதிகாரங்களையும், பலத்தையும் ஹென்றி ஒழிக்க நினைத்தான். ஒவ்வொரு ஜமீன்தாரும் அவரவர் வில்லைத் தரித்த அனேக ஆயுதபாணிகளைத் தங்கள் சேவையில் வைத்துக்கொள்ள உரிமை பெற்றிருந்தனர். ஆகையால் அவர்கள் ஏதேனும் ஒரு சிறிய முகாந்திரத்தைக்கொண்டு ஒருவரோடொருவர் சண்டையிட்டு வரலாயினர். அன்றியும் சில வேளைகளில் அவர்கள் அரசனுக்கு விரோதமாகவும்

சண்டையிட ஆயத்தமாயிருந்தனர். அவர்கள் உரத்தைத் தொலைக்க எண்ணி, ஹென்றி ஒருவரும் ஆயுதபாணிகளை வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டமேற்படுத்தினான். மேலும் சாதாரண நியாயஸ்தலங்களில் நீதிபதிகள் விசாரிக்கப் பயந்த தனிகர்களையும், ஜமீன்தார்களையும் குற்ற விசாரணை செய்ய ஒரு புதிய நியாயஸ்தலத்தை ஏற்படுத்தினான். அந்நீதிபதிகள் விசாரணை செய்யும் மண்டபம் நக்ஷத்திரங்களைப் போன்ற சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தமையால் அதற்கு "நக்ஷத்திர நீதிமண்டபம்" (Star Chamber Court) எனப் பெயர் வந்தது.

3. ஹென்றி திரவியம் சேகரித்த விதம்.—நான்காவது எட்வர்டைப் போலவே ஹென்றியும் பார்லிமெண்டை அழையாமலே மந்திரிகளைக் கொண்டு வரி வசூலிக்கச் செய்தான். இவனும் அதை இனாம் பணமென்றே கூறினான். அவனிடமிருந்த மார்டன் என்னும் மந்திரி வெகு தந்திரசாலி. ஆடம்பரமாக வசிப்போரிடம் ஏராளமான பணமிருக்கவேண்டுமென்றும் ஆகையால் அவர்கள் அரசனுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அவன் வாதிப்பான். மற்றும் சிலர் எளியராய்க் காணப்பட்டால் அவர்கள் உலோபத்தனத்தால் சொத்து மிகுத்து வைத்திருப்பார்கள் என்றும் அதில் ஒரு பாகம் அரசனுக்குக் கொடுப்பதுதான் நியாயம் என்றும் அவன் சாதிப்பான். யமன் கையினின்றும் தப்புவதரிதேபோல் ஒருவரும் அவன் கையினின்றும் தப்பமுடியாது. ஆகையால் அவன் ஏற்பாட்டிற்கு மார்டன்ஸ் போர்க் ("Morton's fork") எனப் பெயர் வழங்கலாயிற்று.

4. ஹென்றியின் விவாக உடன்படிக்கைகள்.—ஹென்றி பிறதேசங்களுடன் நட்புக்கொண்டிருக்க விரும்பினான். உள் நாட்டுப் போரினால் உண்டான துன்பம் முற்றிலும் நீங்காதபடியால் அப்பொழுது பிறநாடுகளுடன் யுத்தத்திற்குப் போவது மதியீனம் என்றும் அவன் நன்குணர்ந்தான். பிறநாட்டு அரசர்களுடன் விவாகசம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதே இதற்குத் தகுந்த வழி என்று

நினைத்து வெகுகால விரோதியாகிய ஸ்காட்லாந்து அரசன் நான்காவது ஜேம்ஸுக்குத் தன் குமாரத்தி மார்கரட்டை விவாகம் செய்து கொடுத்தான். இது நடந்த சுமார் நூறு வருடங்களுக்குப் பின், மார்கரெட்டின் கொள் பேரனாகிய ஆறாவது ஜேம்ஸ் இங்கிலாந்து சிம்மாதன மேறியதால் ஹென்றியின் எண்ணம் கைகூடிற்று. அக்காலத்தில் ஸ்பெயின் தேசம் நாளுக்கு நாள் பலமடைந்து வந்தது. ஆகையால் அதனுடன் விரோத மின்றி ஒற்றுமையாயிருக்கக் கருதி ஸ்பெயின் இராஜகுமாரி காதரீனைத் தன் மூத்த குமாரன் ஆர்தருக்கு மணம் முடித்தான். தெய்வ ஸங்கல்பத்தால் கி. பி. 1502-ல் ஆர்தர் இறக்கவே, ஸ்பெயின் சம்பந்தத்தை விட மனமில்லாமல், அவன் காதரீனைத் தன் இளைய குமாரன் ஹென்றிக்கு மணந்துகொள்ள நிச்சயம் பண்ணிவிட்டான். தமயனது மனைவி தம்பியை மணப்பது மதச்சட்டத்திற்கு விரோதமாகையால் போப்பினிடமிருந்து அதற்கு அனுமதியையும் ஹென்றி பெற்றான்.

5. நவீன காலத் துவக்கம்.—ஹென்றி அரசு புரியும் நாட்களில் அனேக நூதன சம்பவங்கள் நிகழ்ந்தன. வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) இங்கிலாந்தில் அச்சு இயந்திரத்தை ஏற்படுத்தினான். அதனால் புத்தகங்கள் சீக்கிரம் அச்சிடப்பட்டுக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. அதே சமயத்தில் கான்ஸ்டான்டிநோபிலை (Constantinople) கி. பி. 1453-ல் துருக்கியர்கள் கைப்பற்றிய காரணமாக கிரேக்கக் கல்விமான்கள் மேற்கு தேசங்களுக்கு ஓடி வந்து தங்கள் புராதனக் கல்வியை அவ்விடம் பரவச்செய்தனர். கி. பி. 1492-ல் கொலம்பஸ் (Columbus) என்னும் ஸ்பெயின் தேசத்து மாலுமி அமெரிக்கா என்னும் புதிய கண்டத்தைக் கண்டு பிடித்தான். கி. பி. 1498-ல் வாஸ்கோடிகாமா (Vascode Gama) என்னும் போர்ச்சுகேயன் ஆப்பிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவுக்கு வருவதற்கு ஒரு கப்பல் மார்க்கத்தைக் கண்டு பிடித்தான். இதனால் ஐரோப்பிய வர்த்தகம் பெருகலாயிற்று.

### அப்பியாசங்கள்

1. ஜமீன்தார்களின் பலத்தை ஒடுக்க ஹென்றி கையாண்ட உபாயங்கள் யாவை?

2. "மார்டன்ஸ் போர்க்" என்பது யாது?

3. ஹென்றி எத்தேசங்களுடன் விவாக உடன்படிக்கைகள் செய்தான்? அப்படிச் செய்ததில் அவன் நோக்கம் என்ன?

4. ஹென்றி அரசுபுரியும் காலத்தில் நிகழ்ந்த புதிய சம்பவங்கள் யாவை?

---

### அதிகாரம் 2

## எட்டாவது ஹென்றியும் உல்ஸியும் (Wolsey)

ஹென்றியின் குணாதிசயங்கள்.—ஹென்றி பட்டத்திற்கு வரும்போது அவன் அழகுள்ள வாலிபனாயிருந்தான்; கல்வியிலும், போரிலும் சிறந்தவன். அவனது மேன்மையான குணத்திற்காக ஜனங்கள் அவனைப் புகழ்ந்தார்கள். தன் தகப்பன் தேடிவைத்த பொருளைத் தாராளமாக அவன் செலவிட்டான். அவனது களங்கமற்ற சுபாவத்திற்கும், குதூஹல குணத்திற்கும் ஜனங்கள் அவனைத் "தமாஷான ஹால் அரசன்" என்றழைத்தனர். அவன் தன் காரியங்களை நன்கு செய்து முடிக்கத் திறமை வாய்ந்த மனிதர்களை நியமித்து அவர்களுக்குப் போதுமான அளவு திரவியத்தையும், பதவியையும் கொடுத்தான். முதல் இருபது வருடங்கள் வரையில் ஹென்றியின் ஆப்தனாயிருந்தவன் தாமஸ் உல்ஸி.

2. உல்ஸியின் சரிதை.—உல்ஸி 'இப்ஸ்விச்' நகரத்து வியாபாரியின் குமாரன். ஆக்ஸ்வோர்டு கலாசாலையில் படித்துப் பதினாறு வயதுக்குள் பி.ஏ. பரீக்ஷையில் தேறினவன்.

பிறகு ஒரு பிரபுவுக்குத் தோத்திர புத்தகம் வாசிப்பவனாக அமர்ந்தான். ஏழாவது ஹென்றி அவனது படிப்பின் திறத்தைக் கேட்டு அகமகிழ்ந்து அவனை லிங்கன் பட்டணத்து பிஷப்பாக நியமித்தான். சிலகாலம் சென்றதும் யார்க்கின் ஆர்ச் பிஷப் பதவியும் உல்ஸிக்குக் கிடைத்தது. எட்

உல்ஸி

டாவது ஹென்றி அவனைத் தன் ஆப்தனாகவும், பொக்கிஷாதிகாரியாகவும், முதன் மந்திரியாகவும் நியமித்துக் கொண்டான். உல்ஸியின் செல்வத்திற்கும் அதிகாரத்திற்கும் அளவேயில்லை. தான் வசிப்பதற்காக, ஹாம்படன் கோர்டிலும், ஒயிட் ஹாலிலும் நேர்த்தியான அரண்மனைகளை அவன் கட்டுவித்தான். ஒயிட் ஹால் (Whitehall) அரண்மனையைத் தன் எஜமானனுக்கு அளித்தான். அவன் இறுமாப்பையும், செல்வாக்கையும் கண்ட பிரபுக்கள் அவனிடம் பொறாமை கொண்டனர். ஆனால் பொது ஜனங்கள் அவனை நேசித்தனர்.

3. வெளி நாட்டுச் சண்டை.—தன் சாமர்த்தியத்தால் இங்கிலாந்தை ஐரோப்பிய தேசங்களுக்குள் ஒரு முக்கிய தேசமாக உல்ஸி செய்தான். ஸ்பெயின், பிரான்ஸ் முதலிய மற்ற தேசங்கள் எல்லாம் இங்கிலாந்தின் சிநேகத்தைச் சம்பாதிக்க விரும்பின. ஸ்பெயின் நாட்டினை அப்பொழுது ஆண்டுவந்த அரசன் பெயர் பெர்டினன்டு (Ferdinand). அமெரிக்காவின் சுரங்கங்களிலிருந்து ஏராளமான செல்வம் அவனுக்குக் கிடைத்தது. பிரஞ்சு அரசன் அவனுக்குப் போட்டியாக ஏற்பட்டு இடாலியின் வடபாகத்தை ஜயித்துக்கொண்டான். அவனை இடாலியினின்றும் துரத்த, போப்பும் ஸ்பெயின் அரசனும் சேர்ந்துகொண்டனர். ஹென்றி தன் மாமன் கக்ஷியில் சேர்ந்து பிரான்ஸில் இழந்துபோன மகாணங்களை ஜயிக்கலாமென்று வீண் எண்ணம் கொண்டான். கி. பி. 1513-ல் பிரான்ஸின் மீது படையெடுத்து ஸ்பர்ஸ் என்னும் யுத்தத்தில் (Battle of the Spurs) ஜயித்தான். ஆங்கிலப் படையைக் கண்டு பிரெஞ்சுத் துருப்புகள் பயந்து தங்கள் பரிகளை முட்கோலால் தூண்டி முதுகு காட்டி ஓடினர். ஆகையால் அந்த யுத்தத்திற்கு அப்பெயர் கிடைத்தது. அதே வருடம் பிரெஞ்சுக்காரரது உண்மை நண்பர்களான ஸ்காட்லாந்தர், தங்கள் அரசனுடன் இங்கிலாந்தின்மீது படை யெடுத்தனர். பிளாடன் (Flodden) என்னுமிடத்தில் நடந்த யுத்தத்தில் அனேக ஸ்காட்லாந்தர் மாண்டனர். அதில் நான்காவது ஜேம்ஸ் அரசனும் இறந்தான். அதன் பிறகு வெகு காலம்வரை ஸ்காட்லாந்தர் இங்கிலாந்தை எதிர்க்க வன்மையற்றிருந்தனர். இந்த யுத்தங்களால் ஒரு லாபத்தையுமடையாத ஹென்றி, பிரெஞ்சு அரசனுடன் சமாதானஞ் செய்து. தன் சகோதரியையும் அவனுக்கு மணம் செய்வித்தான்.

4. நாலைந்து வருடங்களுக்குள் மறுபடியும் பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கும் யுத்தம் நேர்ந்தது. அவைகளுள் ஒரு நாடும் அதிக பலத்தை அடைவது கூடாது என்ற நோக்கத்தை உல்ஸி போதித்தபடியால் அதன்படி ஹென்றி

ஒரு சமயம் ஒரு கக்ஷியிலும் மற்றொரு சமயம் இன்னொரு கக்ஷியிலும் சேர்ந்து வந்தான். பிரெஞ்சு அரசனான பிரான்ஸிஸும் (Francis) ஸ்பெயின் அரசனான சார்லஸும் (Charles) ஹென்றியின் உதவியை நாடினார்கள். கலேக்குச் சமீபத்தில் பிரெஞ்சு ஆங்கில அரசர்கள் சந்தித்தார்கள். ஆடையிலும், ஆடம்பரத்திலும் அதிக பணம் செலவழித்தபடியால் அவ்விடத்திற்குப் "பொன்னுடை பூமி" எனப் பெயர் வந்தது. ஆயினும், சார்லஸின் உதவியால் உல்ஸி போப் பதவியை அடையலாமென்றெண்ணி அவனுடன் சேரும்படி ஹென்றிக்குப் போதித்தான் கி.பி. 1522-ல் இங்கிலாந்து பிரான்ஸுடன் போர்புரியலாயிற்று. இங்கிலாந்திற்கு வெற்றி கிடைக்கவில்லை; உல்ஸியும் ஏமாந்துபோனான். ஆகையால், கி. பி. 1525-ல் பிரான்ஸோடு சமாதானம் செய்ய நேர்ந்தது. அயல் நாட்டாரால் இங்கிலாந்துக்கு அதிகமாக மதிப்பு ஏற்பட்டது என்பதைத் தவிர வேறொரு லாபமும் அதற்கு ஏற்படவில்லை.

5. இங்கிலாந்தின் நன்மையை விருத்திபண்ண உல்ஸி அதிக முயற்சி எடுத்துக்கொண்டான். இராஜ உத்தியோகஸ்தர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நடத்துகிறார்களா என்று கவனிக்குமாறு தக்க ஏற்பாடுகள் செய்தான்; இப்ஸ்விச்சிலும், ஆக்ஸ்வோர்டிலும் கலாசாலைகள் கட்டுவித்தான்; கப்பற்படையை ஸ்தாபிக்க அரசனுக்கு உதவியாயிருந்தான். 46 புதிய படைக்கலங்கள் தயாரிக்கப்பட்டன. அவைகளுள் மிகப் பெரியது "கிரேட் ஹாரி" என்பதாகும்.

6. உல்ஸியின் வீழ்ச்சி.—உல்ஸி எவ்வளவு துரிதமாக உன்னத பதவியை அடைந்தானோ அவ்வளவு வேகமாக அதை இழந்தான். ஹென்றி தன் அரசியாகிய காதரீனைத் தள்ளிவிட்டு வேறொரு ஸ்திரீயை மணக்க விரும்பினான். அதற்கு வேண்டிய அனுமதியைப் போப்பினிடமிருந்து வாங்கத் தன் மந்திரியை ஏவினான். அப்போது போப், அதிக பலம் படைத்த சார்லஸின் உறவினளைத் தள்ள அனுமதி எப்படிக் கொடுப்பதென்று தயங்கினான். ஹென்றி தன் புதிய

விவாகத்திற்கு இடையூறு உல்ஸியால் ஏற்படுகிறது என்று நினைத்து அவன்மீது இராஜத் துரோகக் குற்றம் சாட்டி அவனைக் கைதுசெய்ய உத்தரவிட்டான். உல்ஸி லண்டனுக்கு வரும் மார்க்கத்தில் நோய் கண்டு இறந்தான. அவன் இறக்கும் தருவாயில் "நான் அரசனுக்கு உழைத்தது போல் அரைவாசி அன்புடன் கடவுளுக்கு உழைத்திருப்பின், இவ்வந்திய காலத்தில் அவர் என்னைக் கைவிட்டிருக்கமாட்டார்" என்று இரங்கிக் கூறினான்.

---

அதிகாரம் 3

## ஹென்றியும் மதச்சீர்திருத்தமும் (Reformation)

ஐரோப்பாவில் மதச்சீர்திருத்த இயக்கம்.—பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் சர்ச்சில் இருந்த துராசாரங்களைப் பார்த்து யாவரும் சர்ச்சையும் போப்பையும் வெறுக்கலாயினர். கல்வி பரவப் பரவ அவைகள் யாவர்க்கும் வெகு தெளிவாகத் தெரிந்தன. முன்போல், குருமார் வாக்குக்குக் கௌரவ மில்லாமற் போயிற்று. நன்றாகக் கற்றுணர்ந்தவர்கள் சர்ச்சில் நடப்பதெல்லாம் தவறு என்று எடுத்துக் காட்டலாயினர். அவர்களுள் மார்டின் லியூதர் (Martin Luther) என்னும் ஜர்மானியன் முக்கியமானவன். போப்பின் அதிகாரத்தை ஒழித்தாலன்றி சர்ச்சினை நன்கு சீர்திருத்த முடியாது என்று அவன் எங்கும் பிரசங்கித்தான். போப்பின் அதிகாரத்தை மறுத்த அவனுக்கும், அவன் வகுப்பினருக்கும் 'பிராடெஸ்டன்ட்ஸ்' அல்லது 'மறுப்போர்கள்' என்று பெயர்வந்தது. போப்பின் அதிகாரத்தை இன்னமும் ஏற்றுக் கொண்டவர்களுக்கு 'காதலிக்ஸ்' என்னும் பெயர் வழங்கிற்று. இவ்விதம் பதினாறும் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் இரண்டு வகுப்பாகப் பிரிந்தனர்.

2. இங்கிலாந்தில் சீர்திருத்தம் ஏற்பட்ட காரணம்.—இங்கிலாந்திலும், ஆக்ஸ்வோர்ட் என்னும் நகரில் இருந்த தாமஸ் மோர் (Thomas More), இராஸ்மஸ் (Erasmus) முதலிய அனேக கல்விமான்கள் நாளுக்கு நாள் சர்ச்சு கெட்டுப் போவதைக் கண்டு மதத்திருத்தம் அவசியமென்று கருதினர். ஆனால் அவர்களுக்குப் போப்பின் அதிகாரத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணமில்லை. அதே சமயத்தில் ஹென்றி போப்புக்குச் சினேகனாக நின்று, லியூதரின் கொள்கைகளைக் கண்டித்து எழுதினான். அதற்காக போப் ஹென்றியைப் புகழ்ந்து "மதக் காவலன்" (Defender of the Faith) என்னும் பட்டத்தை அவனுக்கு அளித்தான். அரசனது உதவியில்லாமையால் ஆக்ஸ்வோர்டு சீர்திருத்தக்காரர்களுக்கு இருந்த கொஞ்ச ஊக்கமும் பறந்து போயிற்று.

3. ஹென்றி போப்பின் அதிகாரத்தை எடுத்து விட்டது—தன் இராணியை விலக்க அனுமதி கொடாததற்காக ஹென்றி போப்பின்மீது கோபங்கொண்டான். அன்னி பொலீன் என்னும் அழகிய மாதினிடம் அன்புபூண்ட ஹென்றி காதரீனைச் சீக்கிரம் விலக்க முயன்றான். போப்பை எதிர்பார்ப்பது வீண் என்று கண்டு, சர்ச் விஷயங்களிலும் அரசனே சர்வாதிகாரி யென்று சொல்லி அதை அமுலுக்குக் கொண்டுவர ஒரு பார்லிமெண்டைக் கூட்டினான். அதற்கு மதச் சீர்திருத்த பார்லிமெண்டு என்று பெயர். அச்சபையின் உதவியைக்கொண்டு மத விஷயத்திலும் அரசனே மேலதிகாரி, போப்பல்லன் என்பதை ஸ்தாபித்தான். இச்சட்டத்திற்கு இராஜ மதாதிகாரச் சட்டம் (Act of Supremacy) என்று பெயர். அதன் பிறகு தன இஷ்டம்போல் அன்னிபொலீனை அவன் மணந்துகொண்டான். இவ்விதம் திடீரென்று ஏற்பட்ட மாறுதலுக்கு அனேகர் ஒத்துக்கொள்ளவில்லை. அவர்களை இராஜத்துரோகிகளென்று குற்றஞ்சாட்டி ஹென்றி தண்டித்தான். அதற்காகவே தாமஸ் மோர் எனும் புலவனும் உயிரை இழக்க நேரிட்டது.

4. ஹென்றி மடங்களை மூடியது.—உல்ஸியின் சேடனு கிய தாமஸ் கிராம்வெல், அரசனுக்கு மத விஷயங்களில் ஆலோசனை சொல்லி வந்தான். அரசனுக்குப் பணத்தேவை அதிகரிக்கபடியால் கிராம்வெல், மடங்களிலுள்ள ஏராள மான செல்வத்தை மன்னவன் எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று போதித்தான். அதன்படி கி.பி. 1536-ல் மடங்களையெல்லாம் மூடிவிட வேண்டும் என்று ஹென்றி உத்திரவிட்டான். மடத்துச் சொத்து நல்வழியில் வெகு நாளாகச் செலவழிக்கப் படாமையால் ஜனங்களுக்கு அம் மடங்களை மூடியதில் அதிக வருத்தமில்லை. அவைகளி லிருந்து கிடைத்த செல்வத்தை அரசனும் அவன் ஆப்தர் களும் பங்கிட்டுக் கொண்டனர்.

5. மேற்கூறியவைகளைச் செய்த பின்னர், ஹென்றி தான் வேகமாக மதச் சீர்திருத்தம் செய்வதாக எண்ணி, பழைய மதக்கொள்கைகளடங்கிய ஒரு சட் டத்தை கி.பி. 1539-ல் இயற்றி அதை யாவரும் அனுசரிக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். அதற்கு ஆறு கொள் கைச் சட்டம் (Statute of Six Articles) என்று பெயர். போப்பின் அதிகாரத்திலிருந்து ஆங்கில சர்ச்சை விடுவித்த போதிலும் பழைய மதக் கொள்கைகளில் முக்கிய மானவைகளைப் பெருப்பாலும் ஹென்றி அனுசரித்தான். ஆதலின் அவனது மதம் இரண்டு பிரிவிற்கும் மத்தியி லிருந்தது என்று சொல்லலாம்.

## அப்பியாசங்கள்

1. உல்ஸியின் உட்கருத்து யாது? அதை அவன் நிறைவேற்ற முயன்றது எங்ஙனம்?

2. மத விஷயங்களில் ஹென்றி உண்டாக்கிய மாறு தல்கள் யாவை?

3. இங்கிலாந்தின் நிலையை உயர்த்தவெண்ணி உல்ஸி கைக்கொண்ட இரண்டு மார்க்கங்கள் யாவை?

4. ஹென்றியின் காலத்தில் இங்கிலாந்தில் வசித்த முக்கிய மனிதர்கள் யாவர்? அவர்களைப்பற்றி ஒரு முக்கிய விஷயம் கூறுக.

---

அதிகாரம் 4

## ஆருவது எட்வர்டு; மேரி அரசி

ஆருவது எட்வர்டு.—ஹென்றி இறந்தபோது எட்வர்டுக்கு வயது ஒன்பது. ஆகையால் தேசத்தை ஆள்வதற்குப் பிரதிநிதி சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. எட்வர்டின் மாமனாகிய ஸாமர்ஸெட் கோமகன் ரக்ஷகனாக நியமிக்கப்பட்டான். மடத்து நிலங்களை அடைந்த சில பிரபுக்கள் அச்சபையிலிருந்தபடியால் அவர்கள் மதச் சீர்திருத்தத்தை முழுமையும் நிறைவேற்ற முயன்றனர். மாதா கோயில்களிலுள்ள விக்கிரகங்களையும், மடங்களையும் அவர்கள் பாழாக்கினார்கள்; ஹென்றியினால் நியமிக்கப்பட்ட அநேக பிஷப்புகளை வேலையினின்றும் நீக்கிச் சிறையிலிட்டனர். ஆறு கொள்கைகள் என்ற சட்டத்தை ரத்து செய்து, குருமார்கள் விவாகஞ் செய்து கொள்ளலாமென்றும் அவர்கள் அனுமதி தந்தனர். அதுவரையிலும் ஆலயங்களில் தோத்திரங்களை லாடின் பாஷையில் சொல்லித் துதிப்பது வழக்கம். இப்பொழுது ஆர்ச்பிஷப் கிரான்மர் ஆங்கிலத்தில் இயற்றிய தோத்திர புத்தகத்தையே எல்லா மாதா கோயில்களிலும் வாசிக்க வேண்டுமென்று திட்டம் செய்யப்பட்டது. அதிசீக்கிரத்தில் மேன்மேலு மேற்பட்ட மாறுதல்கள் ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டுபண்ணின. வெகு நாளாகத் தாங்கள் பயபக்தியுடன் பூஜித்து வந்த விக்கிரகங்கள் எல்லாம் அழிக்கப்பட்டமைகண்டு குடிகள் மனங்கலங்கிக் கலகஞ்

செய்யலாயினர். அக்கலகத்தை அடக்க முடியாததால் ரக்ஷக ஞக யிருந்த ஸாமர்ஸெட் அந்த அதிகாரத்தினின்றும் நீக்கப் பட்டான். பின்னர் நார்த்தம்பர்லாந்து பிரபு அப்பதவியை யடைந்தான். அவனும் புதிய மதத்தைச் சார்ந்தவனுதலால் இன்னமும் புதிய மாறுதல்களைச் செய்ய அவன் துணிந் தான். ஆலயங்களின் உபயோகத்திற்கு இன்னொரு தோத் திர புத்தகம் அவன் தயாரித்தான். எட்வர்டு வியாதியால் பீடிக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் தன் மருமகளாகிய ஜேன் கிரேயைச் சிம்மாதனத்தில் வைக்க நார்த்தம்பர் லாந்து பிரபு ஒரு சூழ்ச்சி செய்தான். ஆனல் அவன் எண் ணம் கைகூடாதபடி ஏனைய பிரபுக்கள் தடுத்துவிட்டார்கள். எட்வர்ட் இறந்ததும் காதரீனின் குமாரியாகிய மேரி சிம் மாதன மேறினுள்.

2. மேரி இராணி, காதலிக் மதத்தைச் சேர்ந்தவள்; மேலும் தன் தாயின் அவமானத்திற்குக் காரணமாயிருந்த புதிய மதத்தை அவள் முற்றிலும் வெறுத்தவள். ஆகையால் பிராடெஸ்டன்டு மதத்தை வேரறுத்துக் காதலிக் மதத் தையே நிலைநிறுத்த முயன்ருள். புதிய மதச் சம்பந்தமாக உண்டான எல்லா மாறுதல்களையும் அவள் ரத்து செய்தாள். பிராடெஸ்டன்டு பிஷப்புமார்களைச் சிறையிலடைத்தாள். இராஜ மதாதிகாரச் சட்டத்தை ரத்து செய்து போப்பின் அதிகாரத்தை முன்போல் கொண்டு வர அவள் பிரயத்தனப் பட்டாள். அதற்காகப் புதிய மதத்திற்குப் பரம விரோதியா யிருந்த பிலிப் என்னும் ஸ்பெயின் தேசத்துக் காதலிக் அர சனை அவ்வரசி மணந்தாள். இங்கிலாந்தில் பெரும்பான்மை யோர் போப்பின் அதிகாரத்தை விரும்பவில்லை. ஆதலின் மேரியின் செயல்களைக்கண்டு அனைவரும் அருவருப்புற்றனர். ஆனல் மேரி இராணி ஓரே பிடிவாதமாகப் பிராடெஸ்டன்டு மதத்தினர் கெட்டவர்களென்றும் துரோகிகளென்றும் அவர் களை ஒழிக்க ஆரம்பித்தாள். சுமார் முன்னூறு பேருக்குமேல் புதிய பிராடெஸ்டன்டு மதத்தினர் உயிரு டன் கொளுத்தப்பட்டார்கள். இக்காரணம் பற்றி "கொடூர

குணமுள்ள மேரி" என்று யாவரும் அவளைப் பழித்தார்கள். தங்கள் கொள்கைக்காக உயிர் துறந்தவர்களுள் லாடிமரும், ரிட்லியும் (Latimer, Ridley) முக்கியமானவர்கள். லாடிமர் தான் எரிக்கப்படும் முன்னர் ரிட்லியைப் பார்த்து "ரிட்லி! மன அமைதியுடனும், உத்ஸாகத்துடனுமிரு; இன்று நாம் ஏற்றும் சுடர் ஆண்டவனருளால் ஒருபோதும் அணையாது" என்று சொன்னான். இக்கொடுஞ் செயல்கள் மேரி எண்ணியபடி பலனை அளிக்கவுமில்லை. எட்வர்டின் நாளில் ஜனங்களுக்குப் புதிய மதப் பிரசாரகர்களிடம் முழு நம்பிக்கை ஏற்படவில்லை. பின்னர் பலர் புதிய மதத்தில் கொண்ட பற்றினல் ஆவி துறந்தது கண்டு குடிகள் அனைவரும் அம்மதம் மேன்மையானது என்று நம்பி அதைப் பின்பற்றலாயினர்.

## அப்பியாசங்கள்

1. எட்வர்டு காலத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள் எவை?

2. எட்வர்டு காலத்தில் கலகங்கள் ஏன் உண்டாயின?

3. ஸ்பெயின் அரசனை மேரி மணந்தது ஜனங்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணியதேன்?

4. கிரான்மர், லாடிமர், ஜேன் கிரே மாது இவர்களைக் குறித்து உங்களுக்கு என்ன தெரியும்?

5. மேரி அரசி பிராடெஸ்டன்டுகளைப் பீடித்ததனல் உண்டான பயன் யாது?

அதிகாரம். 5

## எலிஸபெத்தும் ஸ்காட்லாந்து அரசி மேரியும்

கி. பி. 1558—1603

எலிஸபெத்தின் குணதிசயங்கள்.—எலிஸபெத் இராணியினது நீடித்த அரசினையும் அக்காலத்தில் நிகழ்ந்த அபூர்வ சம்பவங்களையும் நினைந்து பிரஜைகள் அவளுக்கு "பெஸ் நல்லரசி" என்ற செல்வப் பெயரிட்டார்கள். அவள் அரசாட்சி

எலிஸபெத்

யில் பல பெரியோர்கள் அரும் பெரும் காரியங்களை நன்கு செய்து முடிக்க முயன்றனர். தேசத்தின் தேவை இன்னதென்று எலிஸபெத் அறிந்தனள். ஜனங்களின் நன்மையே

தனக்கும் நன்மையெனக் கருதி அவள் நடக்கலாயினள். அவள் கூட்டிய முதல் பார்லிமெண்டில் "எனது குடிகளின் அன்பு, ஆதரவு இவைகளேயன்றி வேறு எதுவும் எனக்கு இவ்வுலகில் இன்பம் தருவதாகக் காணப்படவில்லை" என்று அவள் ஒரு சமயம் பிரசங்கித்தாள். இவ்வரசி நிய விஷயங்களைக் கவனிக்கத் தகுந்த மந்திரிக... Cecil) என்ப மித்தாள். வில்லியம் ஸெஸில் (Wil... கு முக்கிய மந்திரியா வன் நாற்பது வருடங்கள் அ... எலிஸபெத்தைப் போலவே யிருந்து வந்தான். அவ... நாடி உழைத்து வந்தான். ஜனங்களின் நன்மை...

2. ...த நிர்ணயம்.—தேசத்திலிருந்த மதக் குழப்பத் ...ர்ப்பது எலிஸபெத்தின் முதல் வேலையாயிற்று. அவளுக்கு உண்மையில் பழைய மதத்தில் அபிமான மிருந்தாலும் கால தேச வர்த்தமானத்தை அனுசரித்துப் பிராடெஸ்டண்டு மதத்தைப் பின்பற்றுவது அவசியமென்று அம்மாது கண்டு கொண்டாள். மேரியின் காலத்தில் பலர் புதிய மதத்தைத் தழுவினரேனும், பாதி ஜனங்கள் இன்னமும் காதலிக்காகஇருந்தனர். நடு நிலைமையை வகித்து இரு கக்ஷிகளையும் திருப்திபண்ணுவதே ஏற்றது என்று அவள் தீர்மானித்து இராஜ மதாதிகாரச் சட்டத்தைப் புதுப்பித்தாள். இவள் காலத்தில் எட்வர்டின் இரண்டாவது தோத்திர புத்தகமே சிற்சில மாறுதல்களுடன் எங்கும் வழங்கிவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயினும், ஞான ஸ்நான காலத்தில் சிலுவையை அணிதல், கலியாணங்களில் மோதிரம் மாற்றுதல் முதலிய பழைய மத வழக்கங்கள் மாறுபடாது அங்ஙனமே அனுஷ்டிக்கப்படலாயின. இவள் செய்த இந்த ஏற்பாடுகளில் அதிருப்தியுடனிருந்த சில பிராடெஸ்டண்டுகளுக்குப் பியூரிடன்ஸ் (பரிசுத்தர்கள்) எனும் பெயருண்டாயிற்று. மேரி அரசி செய்ததுபோல் இவள் தன் மத ஏற்பாட்டிற்கு விரோதமானவர்களைக் கொலை செய்யவில்லை. சர்ச்சுக்கு வரச் சம்மதமில்லாத காதலிக்குகள் சொற்ப தொகையை அபராதமாகக் கொடுத்துவிட்டால் போதுமென்று இவ்வரசி

கட்டளையிட்டாள். எலிஸபெத் செய்த இவ்வேற்பாடுக ளனைத்தும் ஆங்கிலேயால் பெரும்பான்மையோருக்குச் சம் மதமாயிருந்தன. இவள் ஸ்தாபித்த மத ஏற்பாட்டிற்கு ஆங் கிலிகன் சர்ச் (Anglican church) என்று பெயர்.

திற்கு வந்ஸ்காட்லாந்தில் மதப்புரட்சி.—எலிஸபெத் பட்டத் அரசியாகிய மே..முதற்கொண்டு அவளுக்கு ஸ்காட்லாந்து ஏனெனில் சில காதல் ...ல் ஓயாத கவலை இருந்து வந்தது. என்று எண்ணினர்கள். மே... ...ள் மேரியே சரியான வார்ஸ்தார் ஸ...க்குப் போய் அங்கே பிரெஞ்சு ... பிராயத்திலேயே பிரான் டாள். அவள் தாய் அரசியின் பிர... ...சனை மணந்துகொண் ...யாக ஸ்காட் லாந்தை ஆண்டுவந்தாள். அப்பொழுது ஸ்காட்ல...தில் ஒரு மதப்புரட்சி ஏற்பட்டது. ஜான் நாக்ஸ் (John K...x) என்பவன் ஐரோப்பா கண்டத்தில் சில வருடங்கள் தங்கி யிருந்து அங்கு வழங்கிய புதிய மதத்தை அப்பியஸித்துத் தன் நாட்டில் அதைப் பற்றி எங்கும் பிரசங்கம் செய்ய லானன். அவன் போதித்த வண்ணம் ஸ்காட்லாந்தர் தங்கள் பழைய மதத்தை அறவே யொழித்து, நூதன மதத்தைப் பூரணமாக அனுசரிக்கலாயினர். அவர்களது சர்ச்சுக்குப் பிரெஸ்பிடீரியன்(Presbyterian)சர்ச் என்று பெயர். அவர் கள் மதத்தில் பிஷப்மார்கள் ஸ்தானத்தில் பெரியோரடங்கிய சபை (Council of Elders) உண்டாகி அவர்களால் சர்ச்சு நடைபெற்றது. மேலும் அவர்கள் தோத்திர புத்தகத்தை உபயோகிக்கவில்லை. தான் ஸ்தாபித்த ஆங்கிலிகன் சர்ச்சுக்கு அம்மதம் ஒத்திராவிட்டாலும் எலிஸபெத் அம்மத ஸ்தாபகர் களுக்கு இரகசியமாய் உதவி புரிந்தாள்.

4. மேரி திரும்பிவந்தது.—கி.பி. 1561-ல் தன் கணவ னகிய பிரான்ஸிஸ் இறந்ததும் மேரி ஸ்காட்லாந்திற்குத் திரும்பி வந்து விட்டாள். மலைகளடர்ந்த ஸ்காட்லாந்து தேசத்துக் குடிகள் முரட்டுக் குணமுடையோர்; அந்த நாட் டுப் பிரபுக்களோ சதா சண்டையிடுவதில் விருப்பம் மிகவும் கொண்டவர்கள். ஆதலின் அந்நாட்டினைச் சாதாரண காலத்

மேரி, ஸ்காட்லாந்து அரசி

திலேயே அமைதியுடன் ஆள்வது கடினமாகும். இப்பொழுதோ அங்கு மதக் குழப்பம் ஏற்பட்டு விட்டதால் ஆட்சியின் சிரமத்தைச் சொல்லவும் வேண்டுமோ. மேரி அரசி கண்கவர் வனப்பும், வசீகரத் தோற்றமும் பெற்றிருந்தும் எலிஸபெத்தைப்போல் தேச நலத்தையும், குடிநலத்தையும் கோராது சுய நலத்தையே மேலாகக் கருதினபடியால் ஜனாபிமானத்தைச் சம்பாதிக்க அவளால் முடியவில்லை.

5. டாண்லி (Darnley) பிரபுவைத் தன் இரண்டாவது கணவனாக மேரி வரித்துக் கொண்டாள். சீக்கிரத்தில் டாண்லி, மேரியின் ஆப்தனாயிருந்த ரிஸ்ஸியோ (Rizzio) என்னும் இடாலியனிடம் பொறாமை கொண்டு அவனைக் கொலை செய்யச் சிலரை ஏவினான். ரிஸ்ஸியோவின் கொலைக்குத் தன் கணவனே காரணமென்றறிந்த மேரி அவனுடன் வாழ உடன்படவில்லை. அடுத்த வருடம் எடின்பரோவிற்குச் சமீபத்தில் ஒரு தனி விடுதியில் வியாதியாய்க் கிடந்த டாண்லி கொலையுண்டான் என்ற சமாசாரத்தைக் கேட்கவே, தேசம் முழுதும் பதைத்தது. பாத்வெல் என்னும் பிரபுவைக் கொண்டு மேரியே அக்கொலை புரிந்தனளோ என்று ஜனங்கள் ஐயுற்றனர். அதற்கேற்றவாறு மூன்று மாதங்களுக்குள் பாத்வெலை மேரி மணந்தாள். ஜனங்களின் சந்தேகத்தை உறுதிப்படுத்த வேறு சாக்ஷியம் வேண்டுமோ? ஜனங்கள் கோபங்கொண்டு “இனி இவள் நமக்கு இராணியாயிருப்பது சரியல்ல” என்று துணிந்து, அவள் அரண்மனையைத்தாக்கி, அவளைப் பிடித்து லாக்லீவன் கோட்டையில் சிறை வைத்தனர். ஒரு வயதுள்ள அவளுடைய புத்திரனைச் சிம்மாதனத்தில் வைத்து அவனுக்குப் பிரதிநிதியாக ஒரு சபையையும் ஏற்படுத்திவிட்டனர்.

6. மேரி எலிஸபெத்தைச் சரணமடைதல்.—ஒரு வருடம் சிறையிலிருந்த பிறகு மேரி அதினின்றும் எப்படியோ தப்பியோடித் தன் பதவியைத் திரும்பவும் அடையமுயன்றாள். அம்முயற்சியில் ஜயம் கிடைக்காமையால் அவள் இங்கிலாந்திற்கு ஓடிவந்து எலிஸபெத்தைக் கண்டு சரணமடைந்தாள்.

எலிஸபெத்துக்கோ அவளை யாது செய்வதென்று தோன்ற வில்லை. மீண்டும் அவளை ஸ்காட் சிம்மாதனத்தில் கொண்டு வைக்கத் தைரியமுமில்லை; மனமுமில்லை. ஆகையால் அவளை இங்கிலாந்திலேயே கைதியாக வைத்துக்கொள்ளத் தீர்மானித் தாள். அவள் சிறையிலிருந்த இருபதுவருடகாலமும் எலிஸ பெத்துக்கு ஆபத்தாயிருந்தது. பாபிங்டன் முதலிய அநேக காதலிக்குகள் எலிஸபெத்தைச் சிம்மாதனத்தினின்றும் நீக் கச் சதியாலோசனை பல செய்தனர். அவர்களுக்கு ஸ்பெயின் அரசனும் உதவிபுரிந்தான். ஆங்கிலேயரில் பெரும்பான்மை யோர் தங்கள் இராணியை மனமார நேசித்தபடியால் அச்சதி யாலோசனைகளெல்லாம் பயன்படாமற் போயின. அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் தக்கவாறு தண்டனை யடைந்தனர். மேரியையும் விசாரணைக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஜனங்கள் கூக்குரலிட்டனர். அதன் பிரகாரம் அச்சதிகளில் மேரி சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ் சாட்டி அவளுக்கு மரண தண்டனை விதித்து கி.பி. 1587-ல் பாதிரிங்கே கோட்டையில் அவளைத் தூக்கிலிட்டனர். இராணிகளுக்குள் அதிக அழ குள்ள மேரியின் கதி இங்ஙனம் துக்ககரமாக முடிந்தது.

## அப்பியாசங்கள்

1. எலிஸபெத் ஏன் மதத்தில் நடுவழியைப் பின் பற்றினாள் ?

2. மேரி யரசியால் எவ்விதம் எலிஸபெத்துக்குக் கஷ் டங்கள் ஏற்பட்டன ?

3. இங்கிலாந்தின் சர்ச்சுக்கும் ஸ்காட்லாந்தின் சர்ச் சுக்கும் உள்ள இரண்டு வேற்றுமைகளைக் கூறுக.

4. மேரியின் காலத்தில் ஸ்காட்லாந்தில் வசித்த முக் கிய மனிதர்களின் பெயரையும் அவர்களைப் பற்றிய விவரங் களையும் எழுதுக.

5. மேரியின் சரித்திரத்தில் அடியில் குறித்த வருடங்களில் என்ன நிகழ்ந்தது என்று கூறுக.

1. கி. பி. 1561
2. கி. பி. 1567
3. கி. பி. 1587

---

அதிகாரம் 6

## எலிஸபெத்தும் ஸ்பானிஷ் ஆர்மடாவும்

ஆங்கில மாலுமிகள்சிறப்புறுதல்.—எலிஸபெத் இராணியார் காலத்தில்தான் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட கண்டத்தின் உபயோகத்தை ஆங்கிலேயர் அறியலாயினர். ஸ்பெயின் அடையும் லாபத்தில் தங்களுக்கும் பங்கு கிடைக்குமென்றெண்ணி ஆங்கிலேயர் கப்பல் யாத்திரை செய்வாராயினர். ஸ்பானியர் தாங்கள் முதலில் கண்டுபிடித்த தேசத்தில் வேறொருவருக்கும் பாத்தியமில்லை என்றது மன்றி அன்னியர்களை அங்கு வாராமல் தடுக்கவும் முயன்றார்கள். ஆனால் ஆங்கிலேயரிற் சிலர் எவ்விதத்திலாவது ஸ்பெயினது ஏகபோக உரிமையை ஒழித்துவிடத் தீர்மானித்தார்கள். அவர்கள் இங்கிலாந்தில் தேசீய வீரர்களென்று கருதப்பட்டனர். ஸ்பானியர் அவர்களைக் கடற் கொள்ளைக்காரரென்று இகழ்ந்துரைத்தனர்.

2. ஹாகின்ஸூம் டிரேக்கும். (Hawkins and Drake). — அக்கொள்ளைக்காரர்களுள் பிரசித்திபெற்ற ஹாகின்ஸ், டிரேக் என்போர் பெயர்களைக் கேட்ட மாத்திரத்தில் ஸ்பானியர் நடுங்க ஆரம்பித்தனர். ஜான் ஹாகின்ஸ் ஆப்பிரிக்காவிலிருந்து நீக்கிரோக்களைப் பிடித்து அமெரிக்காவிலிருந்த ஸ்பானிஷ் குடியானவர்களிடம் அடிமைகளாக

விற்று வந்தான். அவன் தன் தேசத்துக்குத் திரும்பி வரும் வழியில் ஸ்பானிஷ் கப்பல்களைக் கொள்ளை யடிப்பது வழக்கம். டிரேக் என்னும் ஆங்கிலேயன் முதல் தடவை உலகத்தைச் சுற்றி யாத்திரை செய்தவன். அவன் டிவான்ஷைய ரில் பிறந்து, அதிபால்யத்தில் கப்பற் படையில் சேர்ந்து படைத் தலைவனாயினான். அவன் அமெரிக்காவிலுள்ள ஸ்பா

டிரேக்

னியர்களை எதிர்த்து ஏராளமான திரவியத்தை இங்கிலாந்திற்குக் கொண்டுவந்தான். அவன் கி. பி. 1577-ல் ப்ளிமத் (Plymouth) துறைமுகத்திலிருந்து "கோல்டன் ஹிண்ட்" (Golden Hind) என்னும் கப்பலில் பிரயாணப்பட்டு தென் அமெரிக்காவைக் கடந்து பசிபிக் மகா சமுத்திரத்தை யடைந்து ஸ்பெயின் கப்பல்களைக் கொள்ளையடித்து, அச்

சமுத்திரத்தையும் தாண்டி, நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு, புறப்பட்ட இடத்திற்கே மூன்று வருடங் கழித்து வந்து சேர்ந்தான். எலிஸபெத் மகாராணி அவன் கப்பலில் போய் அவனுக்கு நல்வரவு கூறி, அவன் தீரச் செயல்களைக் கொண்டாடி அவனுக்கு வீரப்பட்டமும் அளித்தாள்.

3. வால்டர் ராலே (Walter Raleigh) ஹம்பரி கில்பெர்ட் (Humphrey Gilbert)எனும் சில புகழ்பெற்ற மாலுமிகள் ஸ்பானியர்களைப் போலவே அமெரிக்காவில் புகுந்து குடியேற எண்ணினார்கள். கில்பர்ட் என்போன் நியூபௌண்ட்லாந்தில் சிலரைக் குடியேறச் செய்தான். அங்குக் குளிரும், பனியும் அதிகமா யிருந்தபடியால் அவர்கள் திரும்பி வந்துவிட்டனர். ராலேயும் அதே மாதிரி அமெரிக்கா கண்டத்தில் ஒரு காலனியை (குடியேற்ற நாடு) ஸ்தாபிக்க வெண்ணிச் சில ஆங்கிலேயரைக் கிழக்குக் கடற்கரையில் இறக்கிவிட்டுக் கன்னி இராணியின் (Virgin Queen) ஞாபகார்த்தமாக அவ்விடத்திற்கு வர்ஜினியா (Virginia) என்று பெயரிட்டான். அந்நாட்டு ஜனங்களாகும் அமெரிக்க இந்தியர்கள் ஆங்கிலேயரை அடித்துத் துரத்திவிட்டதனால் ராலேயின் முயற்சி சிறிதும் பயன் பெறவில்லை. பின்பு அவன் புகையிலையையும் உருளைக் கிழங்கையும் அவ்விடத்திலிருந்து இங்கிலாந்தில் பயிரிடக் கொண்டுவந்தான்.

4. ஆர்மடா கடற் சண்டைக்குக் காரணங்கள்.—கடல் நாய்களென்று யாவராலும் அழைக்கப் பெற்ற ஆங்கிலேயக் கடற் கொள்ளைக்காரர் (Sea Dogs) ஸ்பெயினுக்குத் தொந்திரவு கொடுத்து வந்தனர். இது தவிர இவ்விரு தேசங்களுக்கும் இன்னும் அனேக விதத்தில் துவேஷம் ஏற்பட்டது. அதனுள் மதத் துவேஷமே மிகவும் முக்கியமானது. ஸ்பெயின் அரசன் பிலிப் என்பான் இங்கிலாந்திலுள்ள காதலிக்குகளைக் கலகஞ் செய்யத் தூண்டினான். அன்றியும் அவன், நெதர்லாந்திலிருந்த பிராடெஸ்டன்டுகளைக் கொடூரமாக நடத்தவே; அவர்கள் தங்கள் சுதந்திரத்தை அடையக்

கலகஞ் செய்தனர். எலிஸபெத் அவர்களுக்கு முதலில் இரகசியமாகவும் பிறகு வெளிப்படையாகவும் உதவி செய்தாள். மேரி அரசி கொலை யுண்டதைக் கேள்வியுற்றதும் பிலிப் இங்கிலாந்தின்மீது படையெடுக்கத் தீர்மானித்து கேடிஸ் (Cadiz) துறைமுகத்தில் அனேக மரக்கலங்களைத் தயார் செய்தான். டிரேக் தந்திரமாக அத்துறைமுகத்துக்குள் நுழைந்து அக்கப்பல்களுக்குத் தீ வைத்து விட்டான். அதனால் 80 கப்பல்கள் எரியுண்டன. இந்தச் சம்பவத்தை ஸ்பெயின் அரசனது தாடியைக் கொளுத்தியதாக ஆங்கிலேயர் கொண்டாடினார்கள்.

5. தோல்வியுறு ஆர்மடா.—கி. பி 1588-ம் வருடத்தில் பிலிப் மறுபடியும் சில கப்பல்களைத் தயாரித்தான். ஸ்பானியர் அக்கப்பற்படை தோல்வியுறாது என்று கர்வமுற்று "தோல்வியுறு ஆர்மடா" என்று பெயரிட்டனர். ஒவ்வொரு கப்பலும் கடலில் கட்டிய கோட்டை எனலாம்படி அவ்வளவு பெரிதாயிருந்தது. 130 கலங்கள் அடங்கிய அப்படைக்கு மெடினு ஸிடோனியா கோமகன் (Duke of Medina Sidonia) தலைவனாக விளங்கினான். அவன் நெதர்லாந்திலிருந்த பார்மா கோமகனுடன் சேர்ந்து இங்கிலாந்தில் பிரவேசிக்க வேண்டுமென்பது பிலிப்பின் எண்ணம். அப்பொழுது இங்கிலாந்திலுள்ள காதலிக்குகளும் தன்னுடன் சேர்ந்து கலகஞ் செய்வார்களென்று பிலிப் எதிர் பார்த்தான். ஆர்மடா லிஸ்பனிலிருந்து புறப்பட்டு இங்கிலீஷ் சானலுக்கு வந்தபோது எல்லா ஆங்கிலேயரும் காதலிக், பிராடெஸ்டன்டு என்ற வித்தியாச மில்லாமல் ஒருங்கு சேர்ந்து பிலிப்பின் எண்ணத்துக்கு விரோதமாகத் தங்கள் தேசத்தைக் காப்பாற்றத் தயாராக நின்றார்கள். ஆங்கில மாலுமிகள் ஹோவர்ட் (Howard) பிரபுவின் உத்திரவுப்படி பிளிமத் துறைமுகத்திலிருந்து ஸ்பானிஷ் கப்பல்களின் போக்கைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

6. ஆர்மடாவின் தோல்வி.—சானலில் ஆர்மடா கொஞ்ச தூரம் போன பிறகு, ஆங்கிலேயர் அதன் பின்




ஆர்மடா சென்ற வழி

பாகத்தைத் தாக்கலாயினர். அதினின்றும் தப்பிக்க ஆர்மடா கலேக்குச் சமீபத்தில் நிறுத்தப்பட்டது. இரவில் ஆங்கிலேயர், தீப்பற்றக்கூடிய சில சரக்குகளை எட்டுக் கலங்களில் நிரப்பி ஆர்மடாவின் மத்தியில் தள்ளிவிட்டனர். தீக்குப் பயந்து ஸ்பானிய கப்பல்கள் நடு சமுத்திரத்தில் தாறுமாறாகப் புறப்பட்டுவிட்டன. இது தான் சமயமென்று ஆங்கிலேயர் அதை கிரேவ்லயன்ஸுக்குச் சமீபத்தில் தாக்கி முறியடித்தனர்.

7. ஆர்மடா இங்கிலீஷ் சானல் வழியாக ஊருக்குத் திரும்பிப் போகவும் பயந்து ஸ்காட்லாந்து கடற்கரையைச் சுற்றிப் போயிற்று. அங்கும் தீவினை அதனைச் சூழ்ந்து கொண்டது. பெருத்த புயலில் அடிபட்டு அனேக கப்பல்கள் உடைந்து போயின. சுமார் ஐம்பது கப்பல்கள் தான் ஸ்பெயினுக்குத் திரும்பிவந்தன. ஆங்கிலக் கப்பல்களில் ஒன்றும் சேதமாகவில்லை; 100 ஆங்கிலேயருக்கு மேல் இறக்கவுமில்லை. இந்த வெற்றிக்குப் பிறகு ஸ்பெயினிடத்தில் ஆங்கிலேயருக்குப் பயம் நீங்கியது. அதினின்றும் ஆங்கிலேயருக்குச் சமுத்திரத்தில் ஆதிபத்திய முண்டாயிற்று. ஆங்கில வியாபாரிகள் கீழ் நாடுகளிலும், மேல் நாடுகளிலும் துணிவுடன் போய் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்த ஆரம்பித்தார்கள். கி.பி. 1601-ல் ஒரு லண்டன் வியாபாரக் கூட்டத்தார் இந்தியாவுடன் வியாபாரம் செய்ய மகாராணியிடமிருந்து ஒரு சாஸனம் பெற்றனர். அவர்கள் தாம் இந்திய சாம்ராஜ்யத்தைப் பிற்பாடு இங்கிலாந்திற்குச் சம்பாதித்துக் கொடுத்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கு ஆதியானவர்கள்.

## அப்பியாசங்கள்

1. ஸ்பெயினுக்கும், இங்கிலாந்திற்கும் ஏற்பட்ட சண்டைக்கு மூன்று காரணங்கள் கூறுக.

2. எலிஸபெத் காலத்தில் இருந்த மாலுமிகளின் பெயர்களையும் அவர்கள் தீரச்செயல்களையும் எழுதுக.

3. ஆர்மடா தோற்றுப்போனதற்கு இரண்டு காரணங்கள் எழுதுக.

4. பிளிமத்துக்குச் சமீபத்தில் ஏன் ஆர்மடா தங்கவில்லை ?

5. ஆர்மடா வெற்றியினுல் இங்கிலாந்திற்கு என்ன நன்மை ஏற்பட்டது ?

6. கில்பர்ட், ராலே இவர்கள் ஸ்தாபிக்க எண்ணிய குடியேற்ற நாடுகள் எவை? ஏன் அவர்களது முயற்சி வீணுயிற்று ?

## டியூடர் காலத்து முக்கிய சம்பவங்கள்

கி. பி. 1485 ஏழாவது ஹென்றி சிம்மாஸனம் ஏறியது.
„ 1487 ஸ்டார் சேம்பர் கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டது.
„ 1492 கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது.
„ 1498 வாஸ்கோடி காமா இந்தியாவிற்குக் கேப் மார்க்கத்தைக் கண்டு பிடித்தது.
„ 1501 ஆர்தருக்கும், காதரீனுக்கும் விவாகம்.
„ 1509 எட்டாவது ஹென்றி அரசுக்கு வந்தது.
„ 1511 ஹென்றி கண்டத்துப் போரில் சம்பந்தப் படுதல்.
„ 1513 ஸ்பர்ஸ், பிளாடன் யுத்தங்கள்.
„ 1520 பொன்னுடை பூமி சந்திப்பு.
„ 1525 பிரான்ஸுடன் சமாதானம்.
„ 1530 உல்ஸியின் வீழ்ச்சி.
„ 1534 இராஜ மதாதிகாரச் சட்டம் ஏற்பட்டது.
„ 1536 மடங்கள் மூடப்பட்டன.
„ 1539 ஆறுகொள்கைச் சட்டம்.

கி. பி. 1547 ஆருவது எட்வர்ட் பட்டத்திற்கு வந்தது.
,, 1549 ஆங்கிலத் தோத்திர புத்தகம் மாதா கோயில்களில் படிக்க ஆரம்பித்தல்.
,, 1553 மேரி அரசிற்கு வந்தது.
,, 1554 மேரிக்கும் ஸ்பெயின் அரசன் பிலிப்புக்கும் விவாஹம்.
,, 1556 சில பிராடெஸ்டன்டுகள் தீயில் எரிக்கப்பட்டமை.
,, 1558 எலிஸபெத் மஹாராணி சிம்மாஸனம் ஏறியது.
,, 1595 மத நிர்ணயம்.
,, ,, ஜான் நாக்ஸ் ஸ்காட்லாந்தில் மதப்பிரசங்கம் செய்தது.
,, 1561 ஸ்காட்லாந்தரசி மேரி தன் தேசம் திரும்பி வந்தது.
,, 1567 மேரி தன் பிரஜைகளால் தோற்கடிக்கப்பட்டு இங்கிலாந்திற்கு ஓடிவந்து சிறையில் வைக்கப் பட்டமை.
,, 1577 டிரேக் உலக யாத்திரைக்குப் புறப்படுதல்.
,, 1581 வர்ஜினியாவில் குடியேற ராலேயின் முயற்சி.
,, 1585 நெதர்லாந்துக்கு எலிஸபெத் தன் சேனையை அனுப்பி உதவியது.
,, 1587 ஸ்காட்லாந்து அரசி மேரி தூக்கிடப்பட்டது.
,, ,, கேடிஸ் துறைமுகத்தில் டிரேக்கின் தீரச் செயல்.
,, 1588 ஆர்மடாவோடு யுத்தம்.
,, 1592 எலிஸபெத்தின் முக்கிய மந்திரியாகிய ஸெஸிலின் மரணம்.
,, 1601 ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் வியாபார சாஸனம் பெற்றது.
,, 1603 எலிஸபெத் மஹாராணியின் மரணம்.

# V. ஸ்டூவர்ட் ஆட்சி (Stuart Period)

## ஸ்டூவர்ட் வம்சாவளி

ஜேம்ஸ் I
(ஸ்காட்லாந்தில் ஜேம்ஸ் VI)

- சார்ல்ஸ் I
  - சார்லஸ் II
  - ஜேம்ஸ் II
    - மேரி = ஆரன்ஜ் இளவரசன் (இங்கிலாந்தில் மூன்றுவது வில்லியம்.)
    - ஆன் அரசி
    - ஜேம்ஸ்
      - சார்லஸ்.
- எலிஸபெத் பிரிடெரிக் பாலடேன் எலக்டர்
  - ரூபர்ட்

---

### அதிகாரம் 1

## முதலாவது ஜேம்ஸ் (கி. பி. 1603-1625)

இரண்டு மகுடங்களும் ஒன்று சேர்க்கப்பட்டமை.—எலிஸபெத்துக்கு ஸந்ததி யில்லாமையால் அவளுக்குப் பின் ஸ்காட்லாந்து அரசனுகிய ஜேம்ஸ் இங்கிலாந்தின் அரசை யடைந்தான். அவன் எலிஸபெத்தின் அத்தையாகிய மார்கரெட்டின் கொள் பேரன். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய இரண்டிற்கும் ஜேம்ஸ் அரசனுனது அவ்விரு தேசங்களுக்கும் நன்மையே உண்டாக்கியது. இதுகாறும் ஜன்ம விரோதம் பூண்டிருந்த இவ்விரு நாடுகள் இப்பொழுது ஒரே அரசன் ஆளுகையில் அடங்கியதால் அவை தங்கள் பழைய விரோதத்தை மறக்கலாயின. ஆயினும் தங்கள் இராஜாங்கத்

தையும், சட்டங்களையும், நீதிஸ்தலங்களையும் மாத்திரம் பிரத்தியேகமாக வைத்துக் கொண்டன. கி. பி. 1707-ல் தான் இவ்விரு தேசங்களுக்கும் ஒரே பார்லிமெண்டும் துரைத்தனமும் ஏற்பட்டன.

2. ஜேம்ஸின் குணவிசேஷங்கள்.—ஜேம்ஸ் சிங்காதன மேறும்போது அவனை ஜனங்கள் நல்வரவேற்றனர். அவனும் எலிஸபெத் மகாராணியைப்போல் ஆட்சிபுரிய விரும்பி

முதலாவது ஜேம்ஸ்

னான். ஆனால் சாமர்த்தியமும் தந்திரமும் கொஞ்சமேனும் அவனிடம் கிடையா. அவன் முகத்தில் இராஜ களையே தென்படவில்லை. நன்றாய்ப் படித்திருந்தும் மூடத்தனமாகக் காரி

யங்களை அவன் செய்தமையால் அவனைப் பிரெஞ்சு அரசன் "கற்றறி மூடன்" என்றான். அவன் பலதடவை பார்லிமெண்டைக் கூட்டி அடிக்கடி அதனுடன் சண்டையிடலானான்.

3. துர் மந்திரிகளின் போதனையால் அவன் அநீதியான வரிகளை விதித்தான். குடிகளின் மனப் போக்கிற்கு மாறாகத் தன் மகனுக்குக் காதலிக் மதத்தைச் சார்ந்த ஸ்பெயின் தேசத்து இராஜ குமாரியை மணம் செய்விக்க விரும்பினான். அது ஜனங்களுக்கு இஷ்டமில்லாததால் பார்லிமெண்டார் அதைத் தடுக்க எண்ணினர். அவன் தன் எண்ணத்தைத் தடுக்க யாருக்கும் அதிகார மில்லையென்றும் இனிமேல் அவர்கள் அவ்விஷயத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்றும் கண்டித்தான். ஆனாலும் பார்லிமெண்டிலுள்ள பொதுஜனப் பிரதிநிதிகள் தங்களுக்கு எல்லாச் சுதந்திரங்களும் உண்டென்று பார்லிமெண்ட் ஜர்னலில் எழுதி வைத்தார்கள். ஜேம்ஸ் அதைக் கண்டு கோபாவேசங்கொண்டு அப்புத்தகத்தினின்றும் அப்பக்கங்களைக் கிழித்தெறிந்து, பார்லிமெண்டைக் கலைத்தது மன்றி, சில முக்கிய மெம்பர்களையும் சிறையிலிட்டான்.

4. வெடி மருந்து சதியாலோசனை. கி. பி. 1605.—ஜேம்ஸின் தாய் காதலிக்காயினும் அவன் பிராடெஸ்டண்டுகளிடம் வளர்ந்து வந்தான். ஆதலின் எலிஸபெத் ஏற்படுத்திய ஆங்கில சர்ச்சை அவன் ஏற்றுக்கொண்டது மன்றியில் காதலிக்குகளுக்கு விதிக்கப்பட்டிருந்த அபராதங்களையும் தண்டனைகளையும் அதிகப்படுத்தினான். கி. பி. 1604-ல் சுமார் 6,000 காதலிக்குகள் தண்டிக்கப்பட்டனர். சிலர் அரசனையும் பார்லிமெண்டையும் ஒரே தடவையில் ஒழித்துவிடச் சதியாலோசனை செய்தனர். அவர்களுள் வாரிக்ஷயரிலிருந்த ராபர்ட் காட்ஸ்பியும் (Robert Catesby) கை பாக்ஸ் (Guy Fawkes) என்னும் மாஜி ஸோல்ஜரும் முக்கியமானவர்கள். அரசன் கி. பி. 1605-ஞு நவம்பர்-மீ 5-தேதி பார்லிமெண்ட் சபையை முதல்தடவை கூட்

டுவதாக நிச்சயித்தான். அதற்குள் கலகக்காரர்கள் பிரபுக்கள் சபைக்குக் கீழிருந்த ஓர் நிலவறையை வாடகைக்கு வாங்கி அதில் 36 பீப்பாய்கள் வெடி மருந்தை நிரப்பினார்கள். கை பாக்ஸ் அதைத் தீமூட்ட நியமிக்கப்பட்டான். ஆனால் கலகக்காரர்களில் ஒருவன், தனக்கு நண்பனாகிய ஒரு பார்லிமெண்ட் மெம்பருக்கு அன்றைய தினம் பார்லிமெண்டுக்குப் போகவேண்டாம் என்று கடிதம் எழுதினான். இந்தக் கடிதத்தை அவன் அரசனிடம் கொடுத்துவிட்டான். அரசன் உடனே தன் வீரர்களுக்கு அச்சதியை வெளிப்படுத்தக் கட்டளையிட்டான். அவர்கள் நிலவறையில் நின்றுகொண்டிருந்த கை பாக்ஸைப் பிடித்துக் கைது செய்தனர். சதியில் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் கண்டு பிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர். அதன் பிறகு காதலிக்குகளின் கதி முன்னிலும் கேவலமாயிற்று.

5. யாத்திரை சென்ற பெரியோர் (Pilgrim Fathers):—பியூரிடன்களைப் பற்றி ஜேம்ஸ் அரசன் "அவர்களை நான் ஆங்கில சர்ச்சை ஏற்கும்படி செய்வேன்; அல்லது நாட்டைவிட்டுத் துரத்திவிடுவேன்" என்று வீரவாதம் கூறினான். அதுகண்டு அஞ்சா நெஞ்சமுள்ள சில பியூரிடன்கள் தங்கள் மதத்தைக் கைவிடத் துணியாது, தாய் நாடு துறந்து அமெரிக்காவில் குடியேறப் புறப்பட்டனர். பியூரிடன்களடங்கிய ஒரு கூட்டத்தார் பிளிமத் துறைமுகத்திலிருந்து "மேப்ளவர்" (Mayflower) என்னும் கப்பலில் ஏறிப் பிரயாணமாயினர். அவர்களுக்குத்தான் "யாத்திரை சென்ற பெரியோர்" என்று பெயர். அவர்கள் அமெரிக்காவிற்குப் போய்ச் சேர ஆறு மாதங்களுக்கு மேலாயின. வழியில் நேர்ந்த கஷ்டங்களோ பல. முடிவில் அமெரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள காட்முனைக்கு(Cape Cod)ச் சமீபத்தில் அவர்கள் ஓர் வாசஸ்தலத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அங்குப் போய்ச் சேர்ந்த பிறகும் குளிரின் கொடுமையாலும் சுதேசிகளின் விரோதத்தாலும் அவர்கள் மிகத் துயரமுற்றனர். ஆயினும் அவர்கள் பொறுமையுடனும்,

தைரியத்துடனும் எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு வீடுவாசல்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். பிறந்து வளர்ந்த தாய் நாட்டினை மறக்கவும் ஒண்ணுமோ? தாங்கள் கடைசியாக விட்டுவந்த ஆங்கிலப்பட்டணத்தின் ஞாபகார்த்த மாக அந்த விடத்திற்குப் 'ப்ளிமத்' என்று அவர்கள் பெய ரிட்டனர். கி.பி. 1640-ம் வருடத்திற்குள் அந்த ஸ்தலத்தில் இங்கிலாந்திலிருந்து 22,000 பியூரிடன்கள் குடியேறிவிட் டார்கள். அவர்கள் தங்களுக்குள் ஒரு கவர்னரைத் தேர்ந் தெடுத்துக்கொண்டு சில சட்டதிட்டங்களையும் பிறப்பித்து அவைகளுக்கு அடங்கி யாவரும் நடப்பதாகத் தீர்மானித் தார்கள்.

### அப்பியாசங்கள்

1. வெடிமருந்து சதியாலோசனைக்குக் காரணமென்ன? அது எவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டது?

2. எந்த இரண்டு விஷயங்களில் ஜேம்ஸ் பார்லிமெண் டுடன் சண்டையிட்டான்?

3. யாத்திரை சென்ற பெரியோர் அனுபவித்த கஷ்டங் கள் எவை?

---

## அதிகாரம் 2

# முதலாவது சார்லஸூம் உள்நாட்டுப் பெரும் போரும்

**சா**ர்லஸூம் பார்லிமெண்டும்.—தகப்பனைப் போலவே ச்சார்லஸூம் தன் எண்ணத்திற்கு விரோதமாக யாரும் நடக் கக் கூடாதென்று நினைத்தான். அவன் பிரான்ஸ் இராஜகுமாரி யாகிய ஹென்றியாடாவை விவாகஞ் செய்துகொண்டது ஒரு வருக்கும் சம்மதமில்லை. மேலும் அவனது முக்கிய மந்திரி யாகிய பக்கிங்ஹாம் பிரபுவை அனைவரும் வெறுத்தனர்.

சார்லஸ் சிங்காதன மேறியபோது ஐரோப்பாக் கண்டத்தில் "முப்பது ஆண்டுப் போர்" நடந்துகொண்டிருந்தது. அதில் காதலிக் அரசனாகிய பெர்டினண்டும், சார்லஸின் தங்கை புருஷனாகிய பிரிடெரிக் என்னும் ஜர்மன் சிற்றரசனும்தான் முக்கிய விரோதிகள். பிரிடெரிக்குக்கு உதவிச்சேனை யனுப்பப் பணம் தேவையாயிருந்ததால் சார்லஸ் ஒரு பார்லிமெண்டைக் கூட்டினான். பார்லிமெண்டார் பக்கிங்ஹாம் பிரபுவை வேலையிலிருந்து நீக்கினாலொழிய ஒரு காசு கூடக் கொடுக்க மறுத்தமையால் அவன் பார்லிமெண்டைக் கலைத்து விட்டான். ஆயினும் அடுத்த வருடம் பிரான்ஸூடன் போர் புரிய வேண்டியிருந்தமையால் மற்றொரு பார்லிமெண்டைக் கூட்டினான். அதிலுள்ள மெம்பர்கள் உடனே பக்கிங்ஹாமைத் தேசத் துரோகி என்ற குற்றஞ் சாட்டி விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். சார்லஸ் தன் மந்திரியைக் காப்பாற்ற மறுபடியும் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு ஜனங்களிடம் கட்டாயக் கடன் வாங்க ஆரம்பித்தான்.

2. உரிமை விண்ணப்பம் (Petition of Rights) கி.பி. 1628.—போதுமான பணம் கடனாகவும் கிடைக்காததால் கி.பி. 1628-ல் இன்னுமொரு பார்லிமெண்டைக் கூட்டினான். மெம்பர்கள் சார்லஸின் கொடுங் கோன்மையைச் சீர்திருத்த நினைத்து, உரிமை விண்ணப்பம் ஒன்று தயாரித்து அதில் அவனைக் கையெழுத்திடும்படி கட்டாயப் படுத்தினர். அதில் கண்ட முக்கிய உரிமைகளாவன:—

1. பார்லிமெண்டின் உத்திரவன்றியில் அரசன் ஒரு வரியும் விதிக்கக் கூடாது.

2. சரியான விசாரணையின்றி எவரையும் சிறையிடக் கூடாது.

3. படை வீரர்களைக் குடிகள் வீட்டிற்கு அனுப்பித் தொந்திரவு செய்யக் கூடாது.

சார்லஸ் அதன்படி நடக்க ஒத்துக்கொண்ட பிறகே பார்லிமெண்ட் பணம் தந்து உதவிற்று. பக்கிங்ஹாமைத் தள்ளி விடும்படி பார்லிமெண்டார் கேட்டபோது அவன்

அதைக் கலைத்துவிட்டு அதன் தலைவனாகிய ஸர் ஜான் இலியட்டைச் சிறையிலிட்டான். பக்கிங்ஹாமும் அதற்குப் பிறகு அதிக நாள் வாழவில்லை. ஒரு துஷ்டன் அவனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். ஆகையால் சார்லஸ் உடனே பிரான்ஸோடு சமாதானம் செய்து கொண்டான்.

3. 11 வருடக் கொடுங்கோன்மை கி.பி.1629-1640.— அடுத்த 11 வருடங்கள் பார்லிமெண்டையே கூட்டாமல் சார்லஸ் தன் துர்மந்திரிகளாகிய ஸ்ட்ராபோர்டு, லாட் (Strafford, Laud) என்பவர்களின் போதனையின்படியே ஆண்டு வந்தான். ஸ்ட்ராபோர்டு அயர்லாந்துக்குக் கவர்னராக நியமனம் பெற்றான். அவன் அங்குப் போய் ஜனங்களை வருத்தி வந்தமையால் அவர்கள் கலகஞ் செய்வதற்குத் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். லாட் என்பவனோ மதத்தில் சில மாறுதல்களைச் செய்து பியூரிடன்களைப் பீடித்து வந்தான். சார்லஸ் குடிகளிடமிருந்து "கப்பல் வரி" எனும் ஒரு அநீதி வரியை வாங்கினான். முன் காலங்களில் யுத்தம் நேரும்போது கப்பல்கள் கட்டுவதற்காக அரசர்களால் துறைமுகப் பட்டினங்களில் அவ்வரி விதித்ததுண்டு. சார்லஸோ சமாதான காலத்திலும் உள்நாட்டுப் பட்டணங்களிலும் அவ்வரியை விதித்துக் குடிகளை நிர்ப்பந்தப் படுத்தினான். பக்கிங்ஹாம் ஜில்லாவிலுள்ள ஜான் ஹாம்படன் (John Hampden) எனும் தீரன் ஒருவன் அவ்வரியைக் கொடுக்க மறுத்தான். அவனை விசாரணைக்குக் கொண்டுவர, நீதிபதிகள் பன்னிருவரில் எழுவர் மாத்திரமே அரசனுக்கு வரி போட அதிகாரமுண்டென்றும், ஹாம்படன் குற்றவாளியே என்றும் தீர்ப்புச் சொன்னார்கள். அத்தீர்ப்பினால் அரசனுக்கு நன்மை விளையவில்லை. ஜனங்களுக்கு ஹாம்படன் செய்தது நியாயமென்றே புலப்பட்டது. இங்ஙனம் சார்லஸின் அரசாட்சியில் ஜனங்களுக்கு வெறுப்பு மிகுதியாக இருந்தாலும் கலகம் என்ற பேச்சே ஓர் இடத்திலும் கேட்கப்படவில்லை. பின்னர் கி.பி.1640-ம் ஆண்டில் சார்லஸ் ஒரு பார்லிமெண்டைக் கூட்டியிராவிடின் கலகமே நடந்திராது.

4. நீடித்த பார்லிமேண்ட் (Long Parliament) (கி.பி. 1640).—லாட், ஸ்காட்லாந்தில் தோத்திர புத்தகத்தை அனுசரிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தவே ஸ்காட் ஜனங்கள் யுத்தத்திற்குக் கிளம்பினர். அதில் சார்லஸ் ஜயம் பெறவில்லை. அவனுக்குப் பண முட்டுப்பாடு மிகுதியும் உண்டாயிற்று. அதற்காக ஒரு பார்லிமெண்டைக் கூட்டினான். இந்தப் பார்லிமெண்ட் சுமார் 20 வருடகாலம் நீடித்திருந்ததால், நீடித்த பார்லிமெண்ட் என்று இதனை ஆங்கிலேயர் அழைத்தனர். தேசத்தின் நாசத்திற்குக் காரணமாயிருந்த பல தோஷங்களையும் வேருடன் களைந்துவிடத் தீர்மானங்கொண்டு அந்தச் சபைக்கு அனேகர் வந்திருந்தனர். அவர்கள் அரசனுக்குப் பணம் கொடாமல், சென்ற 11 வருடத்தில் நடந்த அக்கிரமங்களை இனி நடவாது ஒழிக்க ஆரம்பித்து முதலில் கப்பல் வரியை அடியோடு தொலைத்தார்கள். பிறகு ஸ்ட்ராபோர்டின்மீது இராஜத் துரோகக் குற்றஞ்சாட்டி அவனுக்கு மரண தண்டனை விதித்தார்கள். அதை யறிந்த அரசன் "ஒருவரும் உனது மயிர்க் காலையும் தொடாதபடி நான் பார்த்துக்கொள்வேன்" என்று அவனுக்கு வாக்களித்திருந்தபோதிலும், அவனது கொலை யுத்திரவில் கையெழுத்திட வேண்டிவந்தது. மந்திரி "அரசர்களை நம்பி மோசம் போகாதீர்" என்று உரைத்துக் கொலையுண்டான்.

5. லாடும் சிறையில் தள்ளப்பட்டுச் சொற்ப காலத்துக்குள் தூக்கிடப்பட்டான். பின், ஹாம்படன், என்ற இரு பார்லிமெண்ட் மெம்பர்கள் குடிகளின் குறைகளடங்கிய ஒரு பத்திரத்தைத் தயாரித்துவர அதைப் பார்லிமெண்டார் அங்கீகரித்து நிறைவேற்றிவிட்டனர். அது கேட்டு அரசன் உளம் கொதித்து எழுந்து பொதுஜன சபையிலுள்ள ஐந்து மெம்பர்களைக் கைது செய்யத் தன் வீரர்களுடன் போனான். இதை யறிந்த அவ்வைவரும் அங்கிருந்து ஓடி விட்டார்கள். அவர்களைக் காணாததால் சினங்கொண்டு அரசன் திரும்பி வந்துவிட்டான். லண்டனில் குழப்பம் அதிகமாயிருந்தபடி

யால் அங்கு இனித் தங்குவது ஆபத்துக்கிடமென்று சார்லஸ் வடக்கு நோக்கிச் சென்றான்.

6. போரின் ஆரம்பம்.—மேலான அதிகாரம் பார்லிமெண்டுக்கு உண்டா, அல்லது அரசனுக்கு உண்டா என்று தீர்மானிக்க இருதிறத்தார்களும் யுத்தத்திற்குத் தயார் செய்தனர். இங்கிலாந்தில், தெற்கிலும் கிழக்கிலும் உள்ள அனேக பட்டணங்களும் லண்டன் நகரும் பார்லிமெண்ட் கக்ஷியில் சேர்ந்தன. வடக்குப் பாகமும், மேற்குப் பாகமும் அரசன் கக்ஷியிலிருந்தன. பொதுவாக வியாபாரிகளும் குடியானவர்களும் பார்லிமெண்ட் கக்ஷியிலும், பிரபுக்கள் அரசன் கக்ஷியிலுமிருந்தார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும்,பட்டணத்திலும் இரண்டு கக்ஷியினருக்கும் வேண்டியவர்கள் பலர் இருந்தனர். கப்பற் படைக்கு அரசன் சரிவரச் சம்பளம் கொடுத்து வராதபடியால் அது பார்லிமெண்டுடன் சேர்ந்து கொண்டது. ஆகையால் வெளியூரிலிருந்து அரசனுக்கு உதவி செய்ய ஒருவரும் வர முடியவில்லை. அரசன் கக்ஷிக்காரர்களுக்கு "கவலியர்" (குதிரை வீரர்கள்) என்றும் பார்லிமெண்ட் கக்ஷியாருக்கு "ரவுண்ட் ஹெட்" என்றும் பெயரிடப்பட்டது.

7. எட்ஜ்ஹில் யுத்தம் (Battle of Edgehill) கி. பி. 1642.—அரசன் நாட்டிங்ஹாம் பட்டணத்தில் தன் கொடியை நாட்டிச் சண்டையை ஆரம்பித்தான். பிறகு இராஜ சேனை லண்டனை நோக்கிச் சென்றது. எட்ஜ்ஹில் என்னுமிடத்தில் பார்லிமெண்ட் படைவீரர் அவர்களைச் சந்தித்துப் போர் புரிந்தனர். அச்சண்டையில் ஜயாபஜயம் ஒருவருக்கும் நிச்சயமாக ஏற்படவில்லை. இராஜ சேனை லண்டனைச் சமீபித்ததும் அத்தலைநகரைப் பாதுகாக்க ஏராளமான படைக் கூட்டம் வெளியிலிருப்பது கண்டு, அரசன் ஆக்ஸ்வோர்டுக்குச் சென்று அங்கு மாரி காலத்தைக் கழித்தான். அதற்குள் பார்லிமெண்டாருக்குத் தங்கள் சேனையைச் சேகரிக்கவும், யுத்தப் பயிற்சி செய்யவும் அவகாசம் அகப்பட்டது.




உள் நாட்டுப் பெரும் போர்

8. மார்ஸ்டன் மூர் (Marston Moor) யுத்தம்.—இவ்விதம் இரு கக்ஷிக்கும் நிச்சயமான ஜயம் ஏற்படாமல் அடுத்த வருடம் முழுதும் சண்டை நடந்துகொண்டிருந்தது. சார்லஸுக்குச் சில அயர்லாந்து காதலிக்குகளைத் தவிர வேறு உதவிச் சேனை ஒன்றும் கிடைக்கவில்லை. பார்லிமெண்டார் ஸ்காட்லாந்தருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி பார்லிமெண்டார் தங்கள் சர்ச்சைப் பியூரிடன் சர்ச்சாக மாற்ற உடன்பட்டனர். அதற்குப் பதிலாக ஸ்காட்லாந்தர் 20,000 வீரர்களை அனுப்பி உதவுவதாக வாக்களித்தனர். கி. பி. 1644-ஆம் ஜனவரி மாதத்தில் ஸ்காட் படைவீரர் பார்லிமெண்டுடன் சேர்ந்துகொண்டு மார்ஸ்டன் மூர் என்னுமிடத்தில் கவலியர்களைத் தாக்கினர்கள். பார்லிமெண்ட் கக்ஷியில் 26,000 வீரர்களும், எதிர்க் கக்ஷியில் 17,000 வீரர்களு மிருந்தனர். சார்லஸின் தங்கை மகனாகிய ரூபர்ட் (Rupert) இராஜ சேனையை நடத்தினான். மாலை வேளையில் சண்டை ஆரம்பித்ததால் இனி இன்று சண்டை நடவாதென்று நினைத்துக் கவலியர்கள் தங்கள் விடுதிகளுக்குத் திரும்பிப் போய் விட்டார்கள். திடீரென்று ரவுண்ட் ஹெட்டுகள் அவர்களைத் தாக்கினார்கள். கிராம்வெலும் அவனது வீரரும் (Ironsides) மன்னன் படையை மூன்றுமுறை தாக்கினர். ரூபர்ட்டின் குதிரைப் படை தோல்வியுற்று ஓடலாயிற்று. ரூபர்ட் தீரமுள்ள குதிரை வீரனாயினும் தலைவனாக விருந்து சைனியத்தை நடத்துவதில் அவனுக்குச் சாமர்த்தியம் போதாது. ஆகையால் அரசப்படைகள் சின்ன பின்னமாயின. இங்கிலாந்தின் வட பாகம் முழுவதையும் அரசன் இழந்து விட்டான்.

9. புதுமாதிரிப் படையும் (New model Army) நேஸ்பி யுத்தமும்.—இந்த வெற்றியாலும் கவலியர்களின் பலம் ஒடுங்கினபாடில்லை. ஆதலின் பார்லிமெண்டார் தங்கள் இராணுவத்தைச் சீர்திருத்தம் செய்யலாயினர். தமது படையெல்லாம் சிதறுண்டு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தலைவர்களின் கீழ் இராது ஒரே தலைவன் கீழிருக்கும்படியாக ஒரு

சாசுவத இராணுவத்தை அவர்கள் உண்டாக்கி, அதற்குச் சம்பளத்தையும் ஒழுங்காகக் கொடுத்துவந்தனர். படை வீரர்கள் கடுமையான ஆணைக்கு உட்பட்டிருந்தமையால், அவர்கள் தங்களிஷ்டப்படி வீட்டிற்குப் போகவேனும், அதிக பணம் கொடுப்பதாக எதிரிகள் ஆசை காட்டினாலும் அவர்களோடு சேர்ந்து கொள்ளவேனும் முடியாமற் போயிற்று. இந்த நவீன முறைப் படைக்கு தாமஸ் பார்பக்ஸ் (Thomas Fairfax) என்பான் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டான். கிராம்வெல் அவனுக்குக் கீழ் அதிகாரியானான். இப்புதுப்படையானது கவலியர்களை நேஸ்பி (Naseby) என்ற விடத்தில் சந்தித்து நன்றாய் முறியடித்து விட்டது. அந்த யுத்தத்தில் அரசன் காலாட்படை முழுவதும், குதிரைப் படையில் பாதியும் அழிவுற்றன. அதே சமயத்தில் மான்ட்ரோஸ் எனும் பிரபு ஸ்காட்லாந்தில் அரசனுக்கு உதவி செய்ய நினைத்து, ஆங்குள்ள பார்லிமெண்ட் கட்சியாரை எதிர்த்து பிலிப்பா என்னுமிடத்தில் போர்புரிந்தான். ஆனால் அவனும் அச்சண்டையில் தோல்வியுற்றதனால் அரசன் நம்பிக்கை யாவும் இழந்தான். சிறிது காலம் அவன் அலைந்து திரிந்து கி. பி. 1646-ல் நியூவார்க் (Newark) என்ற பட்டணத்தில் இருந்த ஸ்காட் படையைச் சரணமடைந்தான்.

10. சார்லஸின் விசாரணையும் அவனது மரண தண்டனையும் (கி. பி. 1649)—உள்நாட்டுப் போர் ஒருவாறு முடிந்தபோதிலும், சார்லஸ், தான் மறுபடியும் சிம்மாதனத்தில் அமரலாமென்றே பகற் கனவு கண்டு கொண்டிருந்தான். அப்பொழுது தேசத்தில் ஸ்காட்டுகள், பார்லிமெண்டு, இராணுவம் எனும் மூன்று பெரிய கக்ஷிகளிருந்தன. இம்மூவரும் ஒருவர்க்கொருவர் விரோதித்துக் கொண்டிருந்தனர். சார்லஸ் யாதேனும் ஒரு கட்சியாவது தன்னுடன் சேரக்கூடுமென்று எதிர்பார்த்தான். ஸ்காட் மதத்திற்கு அவன் இணங்காதபடியால் அவனை ஸ்காட்லாந்தர் பார்லிமெண்டாரிடம் கைதியாக ஒப்புவித்தனர். இராணுவத்தின் பலம்

விருத்தியடையவே அவர்கள் அரசனைப் பார்லிமெண்டாரிடமிருந்து கைப்பற்றி, எல்லாத் துயரத்திற்கும் அரசனே காரணமென்று அவனைத் தூக்கிவிடத் தீர்மானித்தனர். பார்லிமெண்டிலுள்ள பிரதிநிதிகளில் பலர் அவனை அவ்விதம் செய்ய இசையவில்லை. கிராம்வெல் ஒரு படைத் தலைவனைச் சபைக்கு அனுப்பித் தன் ஆணைக்கு மீறி நடக்கும் மெம்பர்களை வெளியேற்றிவிடக் கட்டளையிட்டான். அதன்படி 143 மெம்பர்கள் வெளிப்படுத்தப் பட்டனர். மிகுந்த 90 பேர்களும் சார்லஸை விசாரித்து அவன் தேசத்துரோகம் எனும் பெருங்குற்றம் செய்தான் எனத் தீர்மானித்தனர். சார்லஸ் அச்சபை அநீதச் சபையென மதித்து பதில் பேச மறுத்துவிட்டான். ஏழு நாள் விசாரணை நடந்த பின்னர் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஒயிட்ஹால் அரண்மனைக்கு எதிரில் ஏற்படுத்தப்பட்ட கொலைக்களத்தில் அக்கொடுந் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

11. சார்லஸ் தன் மரணத்தறுவாயிலும், சிறிதேனும் ஆண்மையிலும், அரச குணத்திலும் குன்றாது, தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த பிஷப் ஜக்ஸன் என்னும் நண்பனிடம் பரிகாசமாக "அழிவடையக்கூடிய மகுடத்தைவிட்டு அழிவிலா மகுடத்தை யான் வகிக்கப் போகிறேன்" என்றுரைத்தான். கொலை மேடையில் சாந்தமாக ஏறி அந்நிருபன் மண்டியிட்டான். கொலை முடிந்த பின்னர், கொலையாளி இரத்தம் பெருகும் இராஜசிரத்தைக் கையில்ஏந்தி "இதுதான் துரோகியின் தலை" என்று கூவினான். அதைக் கேட்டோர் அனைவரும் ஆ! என்று அலறினார்கள். இவ்வடாத செயலைக் கண்ணுற்ற ஜனங்கள் அரசனது கொடுங்கோன்மையை மறந்து, அவனை மகான் எனக் கருதி அத்தகைய தண்டனை விதித்த பாவிகளை முற்றிலும் வெறுத்தார்கள்.

அப்பியாசங்கள்

1. உள்நாட்டுப் போரின் முக்கிய காரணங்கள் என்ன?

2. சார்லஸின் அரசு ஸ்காட்லாந்தருக்கு ஏன் வெறுப்பைத் தந்தது?

3. எந்த ஜில்லாக்கள் அரசன் கட்சியி லிருந்தன? ஒரு படத்தில் வரைந்து காட்டுக.

4. பார்லிமெண்ட் கக்ஷி ஜயம் பெற்றதற்கு இரண்டு காரணங்கள் கூறுக.

5. சார்லஸின் ஆப்த மந்திரிகள் யாவர்? அவர்களை ஜனங்கள் ஏன் வெறுத்தனர்?

6. உள்நாட்டுப் போரில் நடந்த யுத்தங்கள், அவை நடந்த வருடம், ஜயித்த கக்ஷி, இருபக்கத்திலும் சேனைத் தலைவர் இவைகளை ஒரு சட்டத்தில் போட்டுக் காட்டுக.

---

## அதிகாரம் 3

# கிராம்வெல்—முடிசூடா மன்னன்

குடியரசு.—கி.பி. 1649-ல் சார்லஸ் கொலையுண்ட பிறகு நீடித்த பார்லிமெண்டில் மிகுந்த ரம்ப் (Rump) என்னும் சபை எல்லா அதிகாரத்தையும் அடைந்தது. இனிமேல் அது இங்கிலாந்தில் பொதுஜன நன்மையை நன்கு விருத்தி பண்ணுவதற்குக் குடியரசே தகுந்தது என்று தீர்மானித்தது. அதிலுள்ள ஜனப் பிரதிநிதிகள் பிரபுக்கள் சபையை ஒழித்ததுமன்றி, இனி எவருக்கும் அரசன் என்னும் பட்டத்தைக் கொடுப்பது தேசத் துரோகக் குற்றமாகுமென்று ஒரு சட்டமும் செய்தனர். மேலும் அவர்கள் இராஜாங்க விஷயங்களைக் கவனிக்க ஒரு நிர்வாக சபையை ஏற்படுத்தினர். ஆயினும் உண்மையில் தேசத்தை ஆண்டது இராணுவமே.

2. அயர்லாந்திலும் ஸ்காட்லாந்திலும் கலகங்கள்.—ஸ்டூவர்ட் வம்சக் கக்ஷியைத் தாங்கி அனேகர் அயர்லாந்திலும், ஸ்காட்லாந்திலும் குடியரசுக்கு விரோதமாகக் கலகஞ் செய்தார்கள். முதலில் கிராம்வெல் அயர்லாந்திற்குப் போய்

இராஜ கக்ஷியை அடக்கிவிட்டுப் பிறகு ஸ்காட்லாந்திற்குப் போனன். அங்குச் சார்லஸ் இளவரசனே 'இரண்டாவது சார்லஸ்' என்று யாவரும் கொண்டாடினர்கள். கிராம்வெல் கி. பி. 1650-ல் ஸ்காட் சேனையை டன்பார் (Dunbar) என்ற இடத்தில் தோற்கடித்தான். ஆயினும் ஸ்காட்லாந்தர் சார்லஸை ஸ்கோனில் முடி சூட்டிய பின்னர், மலை நாட்டார் மிகுந்த ஒரு சேனையுடன் இங்கிலாந்துக்குள் படையெடுத்து வந்துவிட்டனர். அவர்கள் எதிர்பார்த்தபடி இராஜ



கிராம்வெல் ரம்ப் பார்லிமெண்டைக் கலைத்தது

கக்ஷியார் ஒருவரும் அங்கு அவர்களுடன் சேரவில்லை. கிராம்வெல் கி. பி. 1651-ல் வார்ஸ்டரில் (Worcester) அச்சேனையைச் சின்னபின்னமாக்கித் துரத்திவிட்டான். அதைக் கண்டு அவனே பின்னும் மிகவும் இரங்கினன். அதன் பின் சார்லஸ் அனேக ஆபத்துக்குள்ளாயினும் தப்பிப் பிழைத்துப் பிரான்ஸுக்கு ஓடிவிட்டான்.

3. கிராம்வெல் ரம்ப் பார்லிமெண்டைக் கலைத்தல் கி. பி. 1653.—கிராம்வெல் ரம்ப் பார்லிமெண்ட் ஒன்றுக்கும்

பயனில்லை என்று கருதி அச்சபையைத் தான் கலைத்து விட்டதாகப் பிரசுரித்தான். ஆனால் அச்சபையோர் "நாங்கள் கலைய மாட்டோ" மென்று மறுத்தபடியால் கிராம்வெல் துருப்புடன் போய் அதை வெளியில் நிறுத்தி, தான்மட்டும் உட்புகுந்தான். அப்பொழுது அச்சபையில் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் நடந்துகொண் டிருந்தது. கிராம்வெல் முதலில் சாந்தமாகப் பேசிப் பிறகு அவர்கள் அநீதத்தையும், சுயநலத்தையும், இன்னும் மற்ற குற்றங்களையும் குறித்து வெகுவாகக் கூறினன். அதைத் தடுத்துப் பேச ஒருவர் எழுந்ததும் கிராம்வெல் "போதும், போதும்; உளருதே, வாயை மூடு" என்று சொல்லிக் கோபத்தோடு தரையில் உதைத்து "இனிமேல் நீங்கள் இங்கு உட்காருவது தகுதியன்று; எழுந்திருந்து பிறருக்கு இடங் கொடுங்கள்" என்று ஆக்கிரகத்துடன் மொழிந்து பிறகு சேவகனைப் பார்த்து "வெளியில் நிற்கும் வீரர்களைக் கூப்பிடு" என்றனன். உடனே வீரர்கள் துப்பாக்கியும் கையுமாய் உட்புகுந்து கிராம்வெல் ஆணையின்படி மெம்பர்களை வெளியே தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டனர். கிராம்வெல் இவ்விதம் நீடித்த பார்லிமெண்டின் மிகுதியைக் கலைத்தது சரித்திரத்தில் முக்கியமான சம்பவங்களில் ஒன்று.

4. கிராம்வெல் ரக்ஷகப் பிரபுவானது.—இராணுவத்தின் அதிகாரம் இவ்விதம் ஓங்கிவிட்டது. கிராம்வெல் இங்கிலாந்து முழுமைக்கும் அதிபனாகிவிட்டான். பார்லிமெண்டின் உதவியால் தானும் ஆளுவதாக ஜனங்களுக்குத் தெரியட்டுமென்று பியூரிடன்கள் அதிகம் அடங்கிய சபையொன்றைக் கூட்டினன். அச்சபையினர் அவனை ரக்ஷகப் பிரபுவாக நியமித்தனர். சிலர் மகுடத்தைத் தரிக்குமாறு அவனை வேண்டினார்கள். இராணுவம் அதை வெறுக்கு மென்று தெரிந்துகொண்டு கிராம்வெல் மறுத்து விட்டான்.

5. இராணுவ ஆட்சி.—கிராம்வெல் ஸ்காட்லாந்தையும், அயர்லாந்தையும் இங்கிலாந்தோடு ஒரே அரசின் கீழ்ச் சேர்த்துவிட முயன்றான். அந்தக் கோரிக்கை அவனுடன்

தொலைந்தது. இராஜ கக்ஷியரோ அரசனைக் கொலை செய்த பாவியென்று அவனைப் பழித்தனர்; ஸ்காட்லாந்தரும், அயர்லாந்தரும் அவனை அன்னியனென்று கருதி அவனை வெறுத்தனர். ஆதலின் கிராம்வெல், தன் ஆளுகையை இராணுவத்தின் உதவியைக் கொண்டே நிலை நிறுத்த வேண்டியிருந்தது. இங்கிலாந்தைப் பத்து ஜில்லாக்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒரு சேனைத் தலைவனை அவன் நியமித்தான். புஜபலத்தால் வென்றதை புஜபலத்தாலேயே காக்க நேரிடுமன்றோ? கிராம்வெல் போரில் தீரனாயினும், இராஜாங்க விஷயங்களில் அதிக சமர்த்தனாயினும், குடிகளின் நன்மையை உண்மையில் கருதினவனாயினும் நெடுநாள் நீடித்திருக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டை அவனால் செய்ய முடியவில்லை.

6. பியூரிடன்களது சுதந்திரம்.—கிராம்வெல் மத விஷயத்தில், பியூரிடன் வகுப்பினர் எல்லாருக்கும் பூரண சுதந்திரம் கொடுத்தான். இங்கிலாந்து முழுதும் பியூரிடன் மயமாய் விட்டது. எல்லாரும் தம்மைப் போலக் கடுமையான விரதங்களை அனுஷ்டிக்குமாறு பியூரிடன்கள் கட்டாயப் படுத்தவே, ஜனங்களுக்கு அவர்களிடம் துவேஷம் உண்டாயிற்று. அழகிய உடைகள் தரிப்பதும், கிராமத்து மைதானங்களில் மே மாதத்தில் வேடிக்கையாக ஆடுவதும், நண்பர்கள் கூடிக் குடிப்பதும் மதக் குற்றமாகும் என மதித்து கிராம்வெல் அங்ஙனம் நடப்போரைக் கடுமையாகத் தண்டித்தான்.

7. ஸ்டூவர்ட் வம்சத்தின் மீட்பு.—தன் வேலைகள் முடியு முன்னரே கிராம்வெல் நோய் கண்டு கி.பி. 1658-வது ஆண்டில் காலகதியடைந்தான். அவன் குமாரன் ரிச்சர்டு கிராம்வெல் ரக்ஷகப் பிரபுவாக நியமிக்கப்பட்டான். தகப்பனைப் போல் அவனிடம் வீரமும், அறிவும் அணுவளவுமில்லை. ஒரு வருடத்திற்குள் இராணுவத்துடன் சண்டை போட்டுக்கொண்டு அவன் வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டான். அதன்பின் சேனைத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டபடியால் தேசத்தில் பெரிய

குழப்பம் உண்டாயிற்று. அதைக் கண்டு ஸ்காட் சேனையின் தலைவன் ஜெனரல் மாங்க் (General Monk) என்போன் அந்நிலையை ஒழுங்குபடுத்தத் தீர்மானித்து, 7,000 வீரர்களுடன் லண்டனுக்கு வந்து சேர்ந்தான். ஜனப்பிரதிநிதிகள் கொண்ட ஒரு சபையை அவன் கூட்டினான். ஒரே மனதுடன் சார்லஸ் இளவரசனை மறுபடியும் வரவழைக்க வேண்டுமென்று யாவரும் கூறினர். சார்லஸ், ஜனங்கள் வேண்டுகோட்கிணங்கி இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து தன் குதிரையின்மீது லண்டனுக்குள் புகுந்ததும், ஜனங்கள் சந்தோஷத்தால் ஆரவாரித்தனர். அப்போது சார்லஸ் "இதுவரையில் வராதது என் பிசகுதான். யாரைக் கண்டாலும் தங்கள் வரவுக்கு வெகுநாளாக ஆவல் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்களே" என்று தனக்குள் நினைத்தான்.

### அப்பியாசங்கள்

1. கிராம்வெல்லின் கொடுமை, உண்மை, மன உறுதி இவைகளை உதாரணங்களால் விளக்கிக் காட்டுக.

2. கிராம்வெல் ஜயித்த யுத்தங்களை வரிசையாக எடுத்தெழுதுக.

3. ஸ்டூவர்ட் வம்சத்தினர் மீண்டும் மகுடம் பெற்றதற்கு எது சமீப காரணம்?

---

## அதிகாரம் 4

# இரண்டாவது சார்லஸ்

**சார்லஸின் குணாதிசயங்கள்.**—சார்லஸ் முடிசூடிய போது தேசமெங்கும் இராணுவத்தின் கொடுமையினின்றும் விடுபட்டமைக்காகக் கொண்டாட்டங்கள் நடந்தன. கருணை பொருந்திய சார்லஸ் தன் பேச்சினாலும், நடக்கையினாலும், ஜனங்களை வசீகரப் படுத்தக் கூடியவனே. ஆனாலும் அவன் குடி நலம் கருதாது சுய நலத்தையே கருதிவந்தான். துஷ்ட

சகவாசத்தினுல் செல்வமனைத்தையும் வீணில் செலவழித் தான். முன்போல் வல்லரசை ஸ்தாபிக்க வேண்டுமென்பதும், இங்கிலாந்தை மறுபடியும் காதலிக் தேசமாகச் செய்ய வேண்டு மென்பதும் அவனது விருப்பம். வெளிக்கு ஆங்க லிகன் என அவன் நடித்தாலும் உள்ளுக்குள் அவன் காதலிக் மதத்தைச் சார்ந்தவன்.

2. அவன் ஆளுகையில் முதலில் நிகழ்ந்தவைகள்.—புதுமாதிரி இராணுவம் கலைக்கப்படினும் அதன் ஒரு பகுதி மட்டும் இருந்து வந்தது. தற்காலம் வழங்கும் சாசுவத இராணுவத்திற்கு அதுதான் ஆரம்பம். அரசனுக்கு விரோதக் கக்ஷியில் போர் புரிந்தவர் யாவரும் மன்னிக்கப்பட்டனர். ஆனுல் சார்லஸின் மரணசாஸனத்தில் கையெழுத்திட்ட 13 பேர்கள் மட்டும் தூக்கி விடப்பட்டனர். கிராம்வெல்லின் சவத்தைப் பூமியிலிருந்து தோண்டி எடுத்து டைபர்ணில் தூக்கிட்டுத் திரும்ப அதன் கீழேயே புதைத்தார்கள். பின்னர், அரசன் வரவழைத்த பார்லிமெண்டில் கவலியர் தாம் அதிகமாயிருந்தனர். அச்சபை அரசனுக்கு வருடந்தோறும் ஏராளமான தொகையும், ஆயுள்பர்யந்தம் இறக்குமதிகளில் வரி வாங்கும் உரிமையையும் கொடுத்தது. பியூரிடன்களுக்கு விரோதமாக அநேக கொடும் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. ஆகையால் அநேகர் அமெரிக்காவிற்குக் குடியேறப் போய்விட்டனர். சிலர் சிறையிலும் வைக்கப்பட்டனர். அவர்களுள் கீர்த்திபெற்ற மில்டன், பன்யன் என்னும் ஆங்கிலக் கவிகள் முக்கியமானவர்கள்.

2. பெரும் கொள்ளைநோய்.—கி.பி. 1665-ம் வருடத்தில் லண்டனில் பெருங் கொள்ளைநோய் ஒன்று உண்டாயிற்று. அக்காலத்தில் தெருக்கள் ஒடுக்கமாயும், அசுத்தமாயும், வீடுகள் காற்றுப் போக்கின்றியும் இருந்தன. அதன் பயன் கி. பி. 1348-ல் வந்த கறுப்புக் கொள்ளை நோயைப் போல் பயங்கரமான நோபொன்று நாடெங்கும் பாவிற்று. அவ்வருடம் ஜூன் மாதம் மிக்க வெப்பமாகவும், மாரி காலம் மழை யின்றியும் இருந்தபடியால்

அந்நோய் வேகமாகப் பரவலாயிற்று. அனேக வீடுகளில் "நம்மீது கடவுள் கருணை வைப்பாராக" என்று ஒரு சிவப்புச் சிலுவைக் குறியுடன் எழுதப்பட்டிருந்தது. சில வாரங்கள் சென்றபின் நகரில் துக்கம் குடிகொண்டது. அனேகர் தங்கள் வீடு வாயில்களை விட்டு ஓடினர். நகர் எங்கும் நிச்சப்தமாயிருந்தது. நிசியில் சவங்களைக் கொண்டு போகும் வண்டிகளின் ஓசையும் "உங்கள் வீட்டிலுள்ள பிணத்தைக் கொண்டுவந்து போடுங்கள்" என்ற கோரமான கூச்சலும்தான் கேட்டன. சில வீடுகளில் ஒருவர்கூடப் பிழைக்கவில்லை. கடைசியாக டாக்டர்களும், குருமார்களும் கூட ஓடி விட்டார்கள். ஆறு மாத காலத்தில் லக்ஷம் மனிதர்களுக்கு மேல் மாண்டனர். லண்டனிலிருந்து மற்ற விடங்களுக்கும் அந்நோய் பரவினபோதிலும் அங்கு அவ்வளவு கொடூரமாயில்லை.

3. இராஜாங்கத்துக் கப்பற்படை இலாகாவிற்குக் கொஞ்ச காலம் காரியதரிசியாக விருந்த ஸாமுவல் பேப்ஸ் (Samuel Pepys) என்பவன் எழுதிவைத்திருக்கும் டைரியில் லண்டனின் துர்தசையைப் பற்றி விவரமாக வாசித்தறியலாம். அதில் ஒரு பரிதாபகரமான கதை சொல்லப்பட்டிருக்கிறது. நகரத்தில் அந்நோய் உலவியபோது ஒருவரும் நகரைவிட்டு வெளியே போகக் கூடாதென்று சட்டம் பிறப்பிக்கப்பட்டது. நோய் வியாபித்திருந்த ஒரு வீட்டிலிருந்த குழந்தையை வெளியே கொண்டு வந்ததற்காக ஒரு மனிதன் குற்றஞ் சாட்டப்பட்டான். நீதிபதி அதை விசாரிக்கும் போது அக்குழந்தை ஜேணம் செய்யும் ஒரு தொழிலாளியின் புத்திரியென்றும், மற்றக் குழந்தைகள் இறந்துவிடவே, அவ்வொன்றையாவது தாய் தந்தையர்கள் காப்பாற்ற வெண்ணி, அதைத் தங்கள் நண்பனிடம் ஜன்னல் வழியாக வஸ்திரமின்றிக் கொடுத்ததாகவும், அதை அவன் கிரீன்விச்சுக்குக் கொண்டுபோனதாகவும் வெளியாயின. அதைக் கேட்ட நீதிபதி அக்குழந்தை அங்கேயே இருக்கட்டும் என்று உத்திரவு அளித்தான்.

5. பெருந் தீ கி.பி. 1666.—அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் அந்நகருக்கு இன்னொரு ஆபத்தும் நேரிட்டது. லண்டன் பாலத்திற் கருகிலுள்ள பட்டிங் லேனில் (Pudding Lane) ரொட்டிக் கிடங்கு தீப்பற்றிக் கொண்டது. வீடுகள் பெரும்பாலும் மரத்தால் கட்டப்பட்டு வைக்கோல், நாணல் முதலியவைகளால் வேய்ந்த கூரைகளுடனிருந்தபடியால் தீ வெகு துரிதமாகப் பரவிற்று. காற்றும் அதற்கு அனுகூலமாக வீசிற்று. ஐந்து நாட்கள் தீ விடாது எரிந்து பட்டணம் முழுவதையும் கொளுத்தி நாசமாக்கிவிட்டது. பெப்ஸ் என்போன் "கடவுளே, இப்படிப்பட்ட காட்சியை இனி நான் காணுதபடி வா மளிப்பீராக. பதினுயிரம் வீடுகள் ஒரே ஜ்வாலையில் எரிவதைக் கண்டேன். அக்கினி பரவும்போது உண்டாக்கிய இடியோசையை ஒத்த பேரொலியும், பெண்டு பிள்ளைகளின் கூக்குரலும், ஜனங்களின் துயரமும், கோயில்கள், கோபுரங்கள் இடிந்து விழுதலும், அப்பப்பா, என்ன கோரமான காட்சி! தீக்குச் சமீபத்தில் ஒருவரும் போகமுடியவில்லை. புகைக் கூட்டம் 56 மைல் பரவியிருந்தது. லண்டன் முன்பு இருந்தது; ஆனால் இனிக் கிடையாது" என்று அவன் தினக்குறிப்பில் எழுதி வைத்துளன். கடைசியாக அனேக வீடுகளை வெடிமருந்தால் இடித்துத் தள்ளித் தீ பரவாதபடி மடக்கினர்.

6. சுமார் 13,000 வீடுகளும், 89 மாதாகோயில்களும் எரியுண்டன. அவைகளுள் பழைய ஸெண்ட்பால் கோயில் ஒன்று. அனேக ஏழைகள் எல்லாச் சொத்தையுமிழந்து திக்கற்று நின்றனர். அக்காலத்தில் பேர்பெற்ற கிரிஸ்டபர் ரென் (Christopher Wren) என்ற சில்பி ஒருவனிருந்தான். ஸெண்ட்பால் கோயிலை அவனே புதிதாகக் கட்டினன். அத் தீ ஒரு விதத்தில் நன்மையே செய்தது. பழைய அசுத்த வீடுகள் போய்விட்டபடியால் புதிதாய்க் கட்டிய வீடுகள் சுத்தமாயும், காற்றுப் போக்குள்ளனவாயும், தெருக்கள் அகலமாயும் ஏற்பட்டன. அதன் பிறகு உண்டாகிய நகரம் பார்ப்பதற்கு நேர்த்தியாகவும், வசிக்க ஆரோக்கியமாகவு மிருந்தது.

### அப்பியாசங்கள்

1. இரண்டாவது சார்லஸின் முக்கிய நோக்கங்கள் எவை?

2. லண்டன் நோய்க்கு எளிதில் இரையானதேன்?

3. பெருந்தீயால் என்ன நன்மை உண்டாயிற்று?

4. ஸாமுவல் பெப்ஸ், ரென் இவர்கள் யார்? அவர்களைப்பற்றி ஒரு விஷயம் கூறுக.

---

## அதிகாரம் 5

# இரண்டாவது ஜேம்ஸும் புகழ்பெற்ற புரட்சியும் (கி. பி. 1688) (Glorious Revolution)

விலக்கு மசோதாவும் (Exclusion Bill) ஜேம்ஸு பட்டத்திற்கு வந்ததும்.—இரண்டாவது சார்லஸ் மனத்துள் காதலிக்கா யிருந்தபடியால் பிரிட்டன் முழுவதும் காதலிக் மதத்தைத் தழுவின், மிக்க சந்தோஷித் திருப்பான். அப்படிச் செய்யப் புகின் மகுடம் நிலைக்காமற் போய்விடுமே என்று எண்ணியே அவன் அங்ஙனம் செய்யத் துணியவில்லை. அவன் தம்பி ஜேம்ஸோ காதலிக் மதத்திலுள்ள பற்றினை வெளிப்படையாகக் காண்பித்தனன். ஆதலால் இரண்டாவது சார்லஸுக்குப் பின் ஜேம்ஸ் முடிசூடுதற்கு உரியனல்லன் என்று கருதி பிராடெஸ்டண்டு குடிகள் அவனை விலக்க ஒரு மசோதா கொண்டு வந்தனர். அம்மசோதா மூன்று முறை காமன்ஸ் சபையில் நிறைவேறிய போதிலும் பிரபுக்கள் சபை அதை அங்கீகரிக்க மறுத்துவிட்டது. ஆகையால் இரண்டாவது சார்லஸ் இறந்ததும் ஜேம்ஸ் கி. பி. 1685-ல் ஒரு தடங்கலுமின்றிச் சிங்காதன மேறினான்.

2. மாண்மத்தின் கலகம் (Monmouth's Rebel-

lion).—அப்பொழுது ஸ்காட்லாந்திலும், இங்கிலாந்திலும் இரண்டு பிராடெஸ்டன்டு கலகங்கள் உண்டாயின. பிரஸ்பிடீரியர்கள் தம்முடன் சேர்வார்களென்று ஆர்கைல் (Argyll) பிரபு மலை ஜாதியார்களைக் கிளப்பிவிட்டான். அவன் முயற்சி தோற்று விடவே அவனைப் பிடித்துத் தூக்கி விட்டுவிட்டார்கள். மான்மத் கோமகன் தான் இரண்டாவது சார்லஸின் புதல்வனென்றும், தனக்குத் தான் பட்டம் கிடைக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு டார்ஸெட் (Dorset) என்னுமிடத்தில் வந்திறங்கினான். அவனுடன் அனேக குடியானவர்கள் சேர்ந்துகொண்டனர். ஜேம்ஸ், மார்ல்பரோ பிரபு (Duke of Marlborough) என்று பின்னர் பெயர்பெற்ற ஜான் சர்ச்சில் என்பவனது தலைமையின் கீழ் ஒரு சேனையை அனுப்பினான். மன்னவன் அனுப்பிய இப்படையை வழியில் ஸெட்ஜ்மூரில் (Sedge-moor) மறைந்து தாக்க மான்மத் வெகு பிரயத்தனப்பட்டும் அது வீணாயிற்று. ஏனெனில் சர்ச்சில் ஒரு நொடியில் தன் சேனையை அணிவகுத்துக் கலகக்காரரைச் சின்னபின்னமாக்கினான். இங்கிலாந்தில் நடந்த யுத்தங்களில் இதுதான் கடைசியானது. ஒரு விசாரணையுமின்றி அனேக கலகக்காரர் கொலை செய்யப்பட்டனர். ஜெப்ரேஸ் (Jeffreys) என்னும் கொடிய நீதிபதி நகரம் நகரமாகச் சென்று எளிய கூலிகளுக்கும் மரண தண்டனை விதித்துப் பெரும்பழி தேடிக் கொண்டான். 300 பேர்களுக்குமேல் சிரஸாக்கினை செய்யப்பட்டபடியால் அவன் நியாய விசாரணையை "நரக விசாரணை" என்று அனைவரும் பழித்துரைத்தனர்.

3. ஜேம்ஸ் இங்கிலாந்தில் காதலிக் மதத்தை ஸ்தாபிக்க முயலுதல்.—மேற்கூறிய கலகங்களை அடக்கிவிட்டு ஜேம்ஸ் தன் மதத்தை இங்கிலாந்து முழுதும் பரவச்செய்ய முயன்றான். காதலிக்குகளுக்குத் துரைத்தனத்தில் உத்தியோகம் கொடுத்தால் ஆங்கிலிகன் மதத்திற்கு ஆபத்திற் கிடமாகுமென்று எண்ணி இரண்டாவது சார்லஸின் காலத்தில் பார்லிமெண்டார் சோதனைச் சட்

டத்தை (Test Act)ப் பிறப்பித்தனர். அதன்படி உத்தியோகத்திற்கு வரும் ஒவ்வொருவரையும் ஆங்கிலிகன் மதஸ்தரா அல்லவா என்று பரிசோதித்துப் பிறகுதான் உத்தியோகத்தில் வைக்கவேண்டும். அச்சட்டத்தை ரத்து செய்யப் பார்லிமெண்ட் இப்பொழுது மறுத்துவிட்டபடியால் ஜேம்ஸ் அச்சட்டத்தை விலக்கிவைக்கத் தனக்கே அதிகார மிருக்கிறது என்று சொல்லிவிட்டான். இராணுவத்தை 30,000 பேர்களுக்கு அதிகரித்து அதில் காதலிக்குகளைத் தலைமையில் வைத்தான். தன் கருத்துக்கிணங்க அனைவரும் அடங்கி அஞ்சி நடக்குமாறு ஒரு விசாரணை ஸ்தல மேற்படுத்தி அதில் ஜெப்ரேஸை நீதிபதியாக நியமித்தான். துரைத்தனத்தில் காதலிக்குகள் உயர்ந்த உத்தியோகங்கள் பெற்றனர்.

4. ஏழு பிஷப் மார்களின் விசாரணை.—கி.பி. 1687-ல் காதலிக்குகளுக்கு விரோதமான சட்டங்களை ரத்து செய்ய வெண்ணிப் "பொறுத்தல் அறிக்கையை" (Declaration of Indulgence) ஜேம்ஸ் வெளியிட்டான். மேலும் சிறையிடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான பியூரிடன்களை விடுதலை செய்து விட்டான். இதனால் பியூரிடன் கக்ஷியினர் தன்மீது நேசம் பாராட்டுவர் என்று ஜேம்ஸ் எண்ணினான். ஆனால் காதலிக் மதத்தை மீண்டும் நாட்டில் ஸ்தாபிக்க வேண்டுமென்பதே ஜேம்ஸின் மனக்கருத்து என்று அவர்கள் எளிதில் அறிந்து கொண்டனர். கி.பி. 1688-ல் "பொறுத்தல் அறிக்கையை" எல்லா மாதா கோயில்களிலும் படிக்க வேண்டுமென்று அரசன் கட்டளையிட்டான். காண்டர்பரி ஆர்ச் பிஷப்பும் மற்ற ஆறு பிஷப்புகளும் அதைப் படிக்கக் கட்டாயப்படுத்தா வண்ணம் மன்னிக்குமாறு அரசனுக்கு மனுச் செய்தனர். ஜேம்ஸ் வெகு அகங்காரங் கொண்டு அம்மனுவை எழுதியதற்காக அவ்வெழுவரையும் விசாரணைக்குக் கொண்டுவந்தான். லண்டன் ஜூரர்கள் அவர்கள் "குற்றவாளிகளல்லர்" என்று உரைத்தனர். அதைக்கேட்ட ஜனங்கள் சந்தோஷமடைந்து தங்கள் வீடுகளை அலங்கரித்

துத் தீபங்கள் ஏற்றினர். கோயில்களில் மணிகள் அடித்தன. அச்சந்தோஷ ஆரவாரத்தில் ஜேம்ஸ் நம்பியிருந்த படை வீரர்களும் மெய்மறந்து சேர்ந்து கொண்டார்கள்.

5. வில்லியத்தை அழைத்தது.—ஜேம்ஸுக்கு வயது 55-க்கு மேலாகிவிட்டபடியாலும், அவனுக்குப் புதல்வன் இல்லாமையாலும் அக்கொடுங் கோன்மை அவனுடன் ஒழிந்து விடுமென்று ஜனங்கள் பொறுத்திருந்தார்கள். ஆனால் அவ்வருடம் ஜேம்ஸுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனும் காதலிக்காக வளர்க்கப்படின் காதலிக் வம்சம் ஒழியாதென்று ஜனங்கள் பயப்படலாயினர். லண்டனில் எழு பிரமுகர்கள் தங்கள் மதத்தையும், சுதந்திரங்களையும் காப் பாற்ற ஒரு சேனையுடன் இங்கிலாந்திற்கு வருமாறு வில்லி யத்திற்கு அழைப்புக் கடிதம் அனுப்பினர். ஐரோப்பாவில் பிரான்ஸ் அரசனுக்கு விரோதமாகப் பிராடெஸ்டன்டுகளை எல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டிருந்த வில்லியம் அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் மகிழ்ச்சி மிகுதியும் கொண்டான்.

6. புகழ்பெற்ற புரட்சி.—கி. பி. 1688ஞு நவம்பர் மாதம் 5-ந்தேதி வில்லியம் ஒரு டச்சுச் சேனையுடன் டார்பி (Torby) என்னுமிடத்தில் இறங்கி ஒரு தடையு மின்றி லண்டனை நோக்கிச் சென்றான். இராணுவர், கப்பற் படை இவைகளின் அதிகாரிகள் அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். ஜேம்ஸை எல்லாரும் கைவிட்டு விட் டார்கள். அவன் அன்பார்ந்த மகள் ஆனும், சேனாதிபதி சர்ச்சிலும் கூட அப்படியே செய்தனர். இனி ஒன்றும் செய்ய இயலாதென்று ஜேம்ஸ் பிரான்ஸுக்கு ஓடிப் போயினன். பார்லிமெண்டார் வில்லியத்தையும் மேரி யையும் சிங்காதனத்தில் வைத்தனர். அவர்கள் ஜனங்களின் உரிமைகளை ஒரு பத்திரத்தில் எழுதி அதில் அரசன், அரசி இவ்விருவருடைய கையொப்பத்தையும் வாங்கினர். ஆங்கில இராஜாங்க முறை அபிவிருத்திக்கு இந்த உரிமைச் சாஸனம் (Bill of Rights) அதி முக்கியமாயுளது. அதன்படி அரசனுக்கும் மேலாகப் பார்லிமெண்டே சகல அதிகாரங்

களையும் பெற்றது. அவ்வுரிமைச் சாஸனத்தின்படி ஒரு காதலிக்கும் இங்கிலாந்தில் அரசுபுரியக் கூடாது. ஆகையால் மேரியும், ஆனும் சந்ததியின்றி இறந்தால் ஹானேவரிலுள்ள ஸோபயாவும், அவளது பிராடெஸ்டன்டு சந்ததிகளுமே இங்கிலாந்தின் மகுடத்திற்கு வார்ஸுகள் என்று ஏற்படுத் தப்பட்டது. இவ்விதம் அரசவம்சத்தில் உண்டாகிய மாற் றமே புகழ்பெற்ற புரட்சி என்று ஆங்கில சரித்திரத்தில் கூறப்படும். இத்துடன் பார்லிமெண்டுக்கும் அரசனுக்கு மிருந்த நீடித்த விவாதம் முடிந்தது. அரசன் ஒருவன் இருக்கவேண்டுமென்று ஜனங்கள் விரும்பினாலும் அவன் பார்லிமெண்டின் ஆணையை மீறி நடவா வண்ணம் ஏற் படுத்தி விட்டார்கள்.

## அப்பியாசங்கள்

1. ஜேம்ஸுக்கு விரோதமாக யார் யார் எக்காரணத் திற்காகக் கலகஞ் செய்தனர் ?

2. ஜேம்ஸ் இங்கிலாந்தில் காதலிக் மதத்தை எவ் விதம் திரும்பவும் ஸ்தாபிக்க முயன்றான் ?

3. பொறுத்தல் அறிக்கை, சோதனைச் சட்டம், நரக விசாரணை—இவைகளைப்பற்றி எழுது

4. அரச வம்சம் இங்கிலாந்தில் மாறுபட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறுக.

5. ஆங்கில சரித்திரத்தில் புகழ்பெற்ற புரட்சி என் பது எது ? அதனால் என்ன பயன் ஏற்பட்டது ?

அதிகாரம் 6

# மூன்றுவது வில்லியமும் ஆங்கில வார்ஸஃப் போரும் (கி. பி. 1689—1702.)

போரின் ஆரம்பம்.—பிரான்ஸ் அரசனுகிய பதினுன்காவது லூயி (Louis XIV) என்பான் தன் விரோதியாகிய வில்லியம் இங்கிலாந்தில் ஆள்வதைக் கண்டு மனம் பொருது மீண்டும் ஜேம்ஸ் ஸ்டூவர்டுக்கு முடிசூட்ட எண்ணங்கொண்டு பெரிதும் முயன்றுன். அதன் நிமித்தம் நடந்த போருக்குத்தான் ஆங்கில வார்ஸஃப்போர் என்ற பெயர் வந்தது. கி. பி. 1689 முதல் 1697 வரையிலும் ஸ்காட்லாந்து, அயர்லாந்து, நெதர்லாந்திலும் சுற்றியுள்ள சமுத்திரத்திலும் யுத்தம் பல நடந்தன.

2. கில்லிக்கிராங்கி யுத்தம்.—ஸ்காட்லாந்தில் டன்டீ பிரபு (Viscount Dundee) மலை ஜாதியார்களை ஜேம்ஸின் சார்பில் கலகம் செய்யுமாறு தூண்டினன். ஜேம்ஸின் கக்ஷிக்காரர்களுக்கு ஜாகபைட்டுகேள் (Jacobites) என்று பெயர். வேனிற் காலத்தில் ஒருநாள் டன்டீ தன் சேனையைக் கில்லிக்கிராங்கிக் கணவாயின் உயர்ந்த செங்குத்தான குன்றில் அணி வகுத்திருந்தான். வில்லியத்தின் படைகள் திணறிக்கொண்டு அம்மலையின்மீது ஏறின. அச்சமயத்தில் ஸ்காட் சேனைகள் எதிரிகளின் மேல் விழுந்து தாக்கி அநேகரை வாளுக்கிரையாக்கின. அதைக் கண்டு ஆங்கிலேயர் ஓட்டம் பிடித்தனர். ஆயினும் டன்டீ பிரபு யுத்த களத்தில் இறந்துவிட்டமையால் ஸ்காட் ஹைலாந்தர்கள் கலைந்துபோய் விட்டார்கள். ஆகையால் தன் படை தோற்றுப் போயினும் வெற்றியால் உண்டாகும் பலனினும் மேலான பலனை வில்லியத்திற்குக் கிடைத்தது.

3. கிளேன்கோ படுகொலை கி.பி.1691 (Massacre of Glencoe).—இன்னமும் சில கூட்டத்தார்கள் வில்லி

யத்தை அரசன் என ஒத்துக்கொள்ளச் சம்மதிக்கவில்லை. கி. பி. 1691-ல் டிஸம்பர் மாதத்திற்குள் தன்னிடம் வந்து வணங்கிப் போவோர் மன்னிக்கப்படுவர் என்று வில்லியம் பிரசுரித்தான். கிளென்கோவிலுள்ள மாக் அயான் (Mac Ian) என்னும் தலைவன் கடைசிவரையில் தாமதித்துக் கடைசி தினத்தில் தப்பான இடத்திற்குப் போனபடியால் அவன் கீழ்ப்படியும்போது ஆறு நாள் கூட ஆகிவிட்டது. ஸ்காட்லாந்து கவர்னர், மாக்டோனல்டு ஜாதியார் துரோகிகள் என்று வில்லியத்தினிடம் வேண்டுமென்றே எடுத்துக் கூறி "அத்திருட்டுக் கூட்டத்தை" ஒழித்துவிட அனுமதி பெற்றான். அக் கொடூரமான வேலையை மோசடியாகச் செய்து முடித்தான், சில படை வீரர்களைக் கிளென் கோவிற்கு அனுப்ப அவர்களும் நண்பர்களென வேஷம் போட்டனர். அக்கிராமவாசிகள் இரண்டுவாரம் அவர்களை நன்கு ஆதரித்து வந்தனர். திடீரென்று ஓர் இரவு நடுநிசியில் வஞ்சகப் படைவீரர்கள் கிராமவாசிகளை எதிர்த்து அவர்கள் குடிசைகளில் புகுந்து அவர்களைப் படுக்கைகளினின்றும் இழுத்துத் தள்ளி இரக்கமின்றிக் கொன்றுவிட்டனர். அக் கொடூரத்தினின்றும் தப்ப முயன்றவர்கள் குளிராலும் பசியாலும் வருந்திமாண்டார்கள். இப்படுகொலையை ஸ்காட்லாந்தர் மறக்கவே யில்லை. வில்லியத்தின் நற்குணத்திற்கு இது ஒரு பெருங்களங்கமாயிற்று.

3. அயர்லாந்தில் கலகம்.—பிரெஞ்சுத் துருப்புடன் ஜேம்ஸ் அயர்லாந்தில் வந்திறங்கினான். ஐரிஷ் ஜனங்கள் அனேகமாகக் காதலிக் மதஸ்தர்கள். சில ஆங்கில பிராடெஸ்டன்டுகளும் அந்நாட்டில் பரவியிருந்தனர். அவர்கள் அதிகமா யிருந்தவிடம் அல்ஸ்டர் (Ulster) என்ற பெயருடையது. காதலிக் ஜனங்கள் அவர்களைத் துரத்திக்கொண்டு பாயில் (Foyle) நதிக்கரையிலுள்ள லண்டன்டரி (Londonderry) பட்டணத்தை முற்றுகை போட்டார்கள். அவர்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுவரும் கப்பல்கள் அணுகாதபடி நதியில் அணை போட்டார்கள். சுமார் 8,000

பிராடெஸ்டன்டு ஜனங்கள் பசியால் வருந்தி இறக்கநேரிட்டது. வில்லியம் அனுப்பிய சில கப்பல்களே அந்த அணையை உடைத்து அந்நகருக்கு ஆகாரத்தைக் கொண்டு உதவின. ஆகையால் ஐரிஷ் ஜனங்கள் முற்றுகையைவிட்டு ஓடிவிட்டார்கள். அடுத்தவருடம் வில்லியம் நேரில் அயர்லாந்துக்குப் போய் பாயின் (Boyne) என்ற இடத்தில் நடந்தயுத்தத்தில் காதலிக்குகளை நன்ருக முறியடித்தான். ஜேம்ஸ் பிரான்ஸுக்கு ஓடிவிடவே அங்குச் சண்டையும் நின்று விட்டது.

4. கப்பற் சண்டைகள்.—வில்லியம் அயர்லாந்தில் இருக்கும்பொழுது ஒரு பிரெஞ்சுக் கப்பற்படை டச்சு, ஆங்கிலக் கப்பற்படைகளை பீசி ஹெட் (Beachy Head) என்றவிடத்தில் தோற்கடித்தது. இங்ஙனம் இங்கிலீஷ் சானலில் வெற்றியடைந்த பின்னர் இங்கிலாந்தின் மேல் படையெடுக்கத் துணிவுகொண்டு ஒரு பெருஞ் சேனையைப் பிரெஞ்சுக்காரர் தயாரித்தனர். அச்சமயத்தில் அட்மிரல் ரஸல் (Russel) என்பவன் தலைமையின்கீழ் ஒரு ஆங்கிலக் கப்பற்படை அனுப்பப்பட்டது. அவன் 'லாஹோக்' (La Hogue) என்னுமிடத்தில் பிரெஞ்சுக் கலகங்களைத் தோற்கடித்துப் பலவற்றை எரித்துவிட்டான். இச்சண்டைக்குப் பின்னர் பிரெஞ்சுக்காரர் இங்கிலாந்தின்மீது படையெடுக்கத் துணிவு கொள்ளவில்லை.

5. நெதர்லாந்தில் யுத்தம்.—நெதர்லாந்தில் வில்லியத்திற்கு அதிக ஜயம் கிடைக்கவில்லை. வருடந்தோறும் அங்கு போனலும் லூயியின் படையை எதிர்த்து மடக்க முடியவில்லை. ஆனல் லூயிக்கும் வெற்றி வந்தும் மிகுந்த லாபமேற்படவில்லை. கி. பி. 1695-ல் நாமூர்க் கோட்டையை வில்லியம் திரும்பக் கைப்பற்றிவிட்டான். பிரான்ஸும் சண்டை செய்து அலுத்துப்போய் விட்டபடியால் கி. பி. 1697-ல் ரிஸ்விக் என்ற இடத்தில் சமாதானம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் லூயி, வில்லியத்தையே இங்கிலாந்தின் சரியான அரசனென்று ஒத்துக்கொண்டான். இந்த யுத்தத்

தால் இங்கிலாந்து சமுத்திரத்தில் மேன்மை யடைந்தது. மேலும் அச்சண்டையில் ஏற்பட்ட பயிற்சி பிரான்ஸுடன் இனி வரும் போருக்கு நன்குதவிற்று.

அப்பியாசங்கள்

1. மூன்றாவது வில்லியத்தின் காலத்தில் நடந்த சண்டைகள் எவை? எந்தெந்த தேசங்களில் அவை நடந்தன?

2. ஏன் அச்சண்டையை வார்சுப்போர் என்று சொல்லுகிறார்கள்.

3. சமுத்திரத்தில் நடந்த சண்டைகளையும் அவைகளின் பயன்களையும் பற்றி எழுதுக.

4. கிளென்கோ படுகொலை நடந்ததற்குக் காரணமென்ன? வில்லியத்தினிடம் அதன் நிமித்தம் ஏதாவது குற்றமுண்டா?

---

அதிகாரம் 7

## ஆன் அரசி (கி. பி. 1702-1714)

## ஸ்பெயின் வார்ஸுப் போர்

ஆன் இராணியின் குணாதிசயங்கள்.—வில்லியம், ஹாம்படன் கோர்ட்டுக்குச் சமீபத்தில் குதிரையினின்றும் கீழே விழுந்து மரணமடைந்தான். அவனுக்குச் சந்ததி யின்மையால் ஆன் எனும் அவன் மைத்துனி அரசியானாள். அவள் தான் ஸ்டூவர்ட் வம்சத்தில் இங்கிலாந்தைக் கடைசியாக ஆண்டவள். அவள் பெண்களுக்குரிய பேதைக் குணம் மிகவும் வாய்ந்தவள். மார்ல்பரோவின் மனைவியாகிய ஸாரா ஜென்னிங்ஸும், பிறகு மிஸ்ஸஸ் மாஷம் என்னும் பெண்மணியும் அவளுக்கு ஆப்தர்களாகிப் போதித்து

வந்தனர். அப்போதனையின்படியே அவள் நடந்தாள். அவ்விரு ஸ்திரீகளும் அரண்மனையிலும், கொலுமண்டபத்திலும் அதிக செல்வாக்குள்ளவர்களா யிருந்தார்கள். ஆன் அரசி டென்மார்க்கின் இளவரசன் ஜ்யார்ஜை மணந்தாள். அவள் கணவனும், 19 மக்களும் அவளுக்கு முந்தியே இறந்துவிட்டார்கள். அவள் ஆட்சியில்தான் இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும் ஒன்றுசேர்ந்து ஒரே பார்லிமெண்டின் ஆளுகைக்குள்ளடங்கின. கி.பி. 1707-ல் உண்டாகிய ஐக்கியச் சட்டத்தின்படி ஆங்கிலப் பார்லிமெண்டுக்கு ஸ்காட்லாந்தர் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினார்கள். அவர்களுக்குத் தனியேயிருந்த பார்லிமெண்டு அன்றுடன் போய்விட்டது. காமன்ஸ் சபைக்கு 45 மெம்பர்களும், பிரபுக்கள் சபைக்குப் 16 பேர்களுமாக ஸ்காட்லாந்தர் அனுப்பப்பட்டனர். தங்கள் நியாயஸ்தலங்களையும், பிரெஸ்பிடீரியன் மதத்தையும் முன்போல் ஒருவித இடையூறுமின்றி அவர்கள் வைத்துக்கொள்ளவும், ஆங்கிலேயர் குடியேறின நாடுகளுடன் வியாபாரம் செய்யவும் அனுமதி கிடைத்தது.

2. ஸ்பெயின் வார்ஸுப் போருக்குக் காரணம்.— ஆன் அரசி காலத்தில் நடந்த பெருத்த சம்பவம் ஸ்பெயின் வார்ஸுப் போர் ஒன்றே. ஸ்பெயின் அரசனது ஆளுகைக்குள் ஸ்பெயின், பெல்ஜியம், மிலான், நேபில்ஸ், ஸிஸிலி, ஸர்டினியா, இன்னும் அமெரிக்காவில் ஏராளமான நாடுகள் பலவும் இருந்தன. ஆர்மடா யுத்தத்தில் தோல்வியுற்ற பிறகு, ஸ்பெயின் சாம்ராஜ்யம் நாளடைவில் பலம் குன்றி வந்தது. அதன் அரசனாகிய இரண்டாவது சார்லஸ் புத்திரனின்றிச் சாகும் தறுவாயிலிருந்தான். அநேக ஐரோப்பிய அரசர்கள் அவனுக்கு உறவினர்கள். அவனது அத்தையும், சகோதரியும் பிரெஞ்சு அரசர்களை விவாகஞ்செய்து கொண்டிருந்தார்கள். இன்னொரு சகோதரி ஆஸ்டிரியா சக்கரவர்த்தியை மணந்திருந்தாள். இருவருள் யாரேனும் ஸ்பெயின் சாம்ராஜ்யத்தை அடைந்தால் ஐரோப்பிய அமைதிக்கு ஆபத்துண்டாகுமென்று நினைத்து ஸ்பெயின் சாம்ராஜ்யத்தை மூன்று பாகங்களாகப் பங்கிட வில்லியமும்

லூயியும் தீர்மானித்தார்கள். அதற்குச் சம்மதியாமல் தான் சாவதற்குமுன் சார்லஸ் தன் இராஜ்யங்கள் முழுமையும் லூயியின் பேரனை பிலிப்பே அடைய வேண்டுமென்று ஒரு சாஸனத்தை எழுதிவிட்டுப் போனான். இது காரணமாகப் பெருத்த ஐரோப்பியப்போர் துவங்கும் போலிருந்தது. சார் லஸின் சாஸனப்படி ஸ்பெயின் இராஜ்யத்தைக்கைப்பற்ற லூயி தயாராயிருந்தான். ஜேம்ஸ் ஸ்டூவர்ட் கி. பி. 1701ல் இறந்ததும் அவன் மகன்தான் இங்கிலாந்துக்குப் பாத்தியமுள்ள

மார்ல்பரோ

அரசன் என்று லூயி பிரசுரித்தமையால் இங்கிலாந்து அப்போரில் தலையிட வேண்டிவந்தது. அப்போர் சுமார் 10 வருடம் இடாலி, ஜர்மனி,ஸ்பெயின், நெதர்லாந்து நாடுகளில் நடந்தது. ஒரு கக்ஷியில் இங்கிலாந்து, உலாந்து, ஆஸ்டிரியா, சில ஜர்மன் மாகாணங்களும், எதிர்க்கக்ஷியில் பிரான்ஸ், ஸ்பெயின், பவேரியாவும் சேரலாயின.

4. மார்ல்பரோ.—நேசப் படைத் தலைவனாக மாரல்பரோ நியமனம் பெற்றான். இங்கிலாந்தில் பிறந்த சேனாபதி

களுக்குள் அவன் மிக்க கீர்த்தி வாய்ந்தவன். வெற்றி பெருது அவன் வீடு வந்ததே இல்லை. முற்றுகையிட்ட நகரை அவன் பிடியாமல் விடான் என்று அவனைப் பற்றிச் சொல்லுவார்கள். கி. பி. 1650-ல் பிறந்து 17-வது வயதிலேயே இராணுவ சேவையில் அமர்ந்தான். ஐந்து வருடங் கழித்து ஒரு சேனைப் பகுதிக்குத் தலைவனுனன். அவன் எப்பேற்பட்ட கஷ்டத்தையும் பொறுக்கும் ஆற்றலும், எல்லா விஷயங்களையும் நன்கு நிதானித்து அறிந்து தீர்மானிக்கும் புத்தி கூர்மையும், யுத்த அமளியில் சாந்தமும், சமயோசித புத்தியும் கொண்டவன். அவன் மனைவி, ஆன் அரசியின் ஆப்தையா யிருந்தபடியால், சீக்கிரத்தில் மேன் மேலும் அவன் உத்தியோகம் உயர்ந்துகொண்டே வந்தது. சண்டையை எவ்விதமேனும் நடத்த அவனுக்குச் சர்வாதிகாரமும் வழங்கப்பட்டது.

5. அவன் ஜயம்பெற்ற சண்டைகளுள் பிளென்ஹீம் (Blenheim) முக்கியமானது. அப்போரில் பிரெஞ்சுப் படை நன்ருய் முறியடிக்கப்பட்டது. 100 பீரங்கிகளும், 11,000 கைதிகளும் பிடிக்கப்பட்டனர். இதுகாறும் தோல்வியுரு பிரெஞ்சு சேனை அபஜய மடைந்தது நேசக் கக்ஷிக்காரருக்கு மிகுந்த மனேதைர்யத்தை உண்டாக்கியது. அதே வருடம் ஜிப்ரால்டர் கோட்டையை ஆங்கிலக் கப்பற்படை பிடித்துவிட்டது. அதுமுதல் அக்கோட்டை ஆங்கிலேயர் வசமே இருந்து வருகிறது.

6. மார்ல்பரோவின் மற்ற வெற்றிகள்.—அடுத்த இரண்டு, மூன்று வருடங்கள் மார்ல்பரோ நெதர்லாந்தில் சண்டை போட்டு ராமிலிஸ், ஔடர்நேட் என்ற விடங்களில் வெற்றி பெற்றுப் பிரெஞ்சுப்படையைப் பெல்ஜியத்திலிருந்துவிரட்டி விட்டான். அதன் பிறகு சிலகாலம் ஒருவருக்கும் அதிக ஜயமின்றி சண்டை மும்முரமின்றி நடந்தது. வரவர லூயியின் பலம் ஒடுங்கிவிட்டது. தான் அதிகாரத்தி லிருப்பதற்காகவே சண்டையை அனுவசியமாக மார்ல்பரோ நடத்துகிருன் என்று கருதி ஆங்கிலேயரும் அதில் ஊக்கத்தை




ஸ்பெயின் வார்ஸாப்போர்

இழந்தனர். ஆகையால் கி. பி. 1713-ல் உட்ரேக்ட் உடன் படிக்கையால் (Treaty of Uttrecht) சண்டைமுடிவிற்கு வந்தது.

7. ஆங்கிலேயரின் லாபம். — அவ்வுடன்படிக்கைப்படி லூயியின் பேரன் பிலிப் அமெரிக்கன் நாட்டுடன் ஸ்பெயின் தேசத்துக்கும் அரசனாக விருக்கலாமென்றும், ஆஸ்டிரியாவின் அதிபனான சார்லஸ் பெல்ஜியத்தையும், இடாலியில் ஸ்பெயினுக்குச் சொந்தமான நாடுகளையும் அடையவேண்டுமென்றும் ஏற்பட்டன. இங்கிலாந்திற்கு அமெரிக்காவிலுள்ள நோவா ஸ்கோஷியாவும், நியூபவுண்லாந்தும், மத்திய தரைக் கடலிலுள்ள ஜிப்ரால்டரும், மைனார்காவும் கிடைத்தன. அன்றியும் ஸ்பானிஷ் அமெரிக்காவில் அடிமைகளைக் கொண்டு விற்கவும், வருடந்தோறும் அவ்விடத்திற்கு ஒரு கப்பல் நிறைய வியாபாரத்திற்குச் சாக்குகளை அனுப்பவும் ஆங்கிலேயருக்குப் பாத்தியம் கிடைத்தது. இவ்விதம் இங்கிலாந்துக்கு வியாபாரத்திலும், குடியேற்றத்திலும் அனுகூலமுண்டாயிற்று.

## அப்பியாசங்கள்

1. மார்ல்பரோ ஜயித்த சண்டைகளை ஒரு படத்தில் எழுதிக் காட்டுக.

2. ஸ்பெயின் சாம்ராஜ்யத்தில் சேர்ந்த தேசங்கள் எவை ?

3. இங்கிலாந்து, ஸ்பெயின் வார்ஸுப் போரில் ஏன் சேர்ந்துகொண்டது ?

4. பிளென்ஹீம் சண்டையின் பயன் யாது ?

5. ஸ்பெயின் வார்ஸுப் போரினால் இங்கிலாந்திற்குக் கிடைத்த லாபம் என்ன ?

6. ஐக்கியச் சட்டத்தால் ஸ்காட்லாந்தர் அடைந்த உரிமைகள் எவை ?

## ஸ்டூவர்ட் அரசர்கள் காலத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்

கி. பி. 1603 முதல் ஜேம்ஸ் சிங்காதன மேறுதல்.
,, 1605 வெடி மருந்து சதியாலோசனை.
,, 1660 யாத்திரை சென்ற பெரியோர் அமெரிக்காவுக்குப் புறப்படுதல்.
,, 1625 முதல் சார்லஸ் பட்டத்திற்கு வந்தது.
,, 1628 உரிமை விண்ணப்பம்.
,, 1640 நீடித்த பார்லிமெண்டு கூடியது.
,, 1642 எட்ஜ்ஹில் யுத்தம். உள்நாட்டுப் போர் ஆரம்பம்.
,, 1644 மார்ஸ்டன்மூர் யுத்தம்.
,, 1645 நேஸ்பி யுத்தம்.
,, 1649 சார்லஸின் மரண தண்டனை. குடியரசு ஏற்பட்டது.
,, 1650 டன்பார் யுத்தம்.
,, 1651 வார்ஸ்டர் யுத்தம்.
,, 1653 நீடித்த பார்லிமெண்டு கலைக்கப்பட்டது.
,, 1654 கிராம்வெல் ரக்ஷகப் பிரபுவானது.
,, 1658 கிராம்வெல்லின் மரணம்,
,, 1660 சார்லஸின் மீட்பு.
,, 1665 பெருங் கொள்ளைநோய்.
,, 1666 பெரும் தீ.
,, 1673 சோதனைச் சட்டம்.
,, 1688 விலக்கு மசோதா.
,, 1685 இரண்டாவது ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தது. மான்மத்தின் கலகம்.
,, 1688 புகழ்பெற்ற புரட்சி.
,, 1689 லண்டன்டரி முற்றுகை.

கி. பி. 1690 பாயின், பீசி ஹெட் யுத்தங்கள்.
,, 1692 கிளென்கோ படுகொலை. லாஹோக் யுத்தம்.
,, 1699 ரிஸ்விக் சமாதானம்.
,, 1702 ஆன் அரசி சிங்காதன மேறியது.
,, 1705 பிளென்ஹீம் சண்டை.
,, 1707 ஸ்காட்லாந்து இங்கிலாந்துடன் ஐக்கியமாதல்.
,, 1713 உட்ரெக்ட் உடன்படிக்கை.
,, 1714 ஆன் அரசியின் மரணம்.

## VI ஹானோவர் ஆட்சி (Hanoverian Period.)

ஹானோவர் வம்சாவளி

ஜேம்ஸ் I

எலிஸபெத் = பாலடையன் இலெக்டர்

ஸொபையா = ஹானோவர் இலெக்டர்

ஜ்யார்ஜ் I (கி. பி. 1714–27)

ஜ்யார்ஜ் II (கி. பி. 1727–60)

பிரிடெரிக் (கி. பி. 1751-ல் மரணமடைந்தான்)

ஜ்யார்ஜ் III (கி. பி. 1760–1820)

ஜ்யார்ஜ் IV (கி.பி. 1820–30)

வில்லியம் IV (கி.பி. 1830–37)

எட்வர்டு கெண்ட் கோமகன்

விக்டோரியா மகாராணி (கி. பி. 1837–1901) = ஆல்பர்ட்

எட்வர்டு VII (கி. பி. 1901–10)

ஜ்யார்ஜ் V = மேரி (கி. பி. 1910)

எட்வர்டு, வேல்ஸ் இளவரசன்

அதிகாரம். 1

# முதலாவது ஜ்யார்ஜூம் (கி. பி. 1714—27) இரண்டாவது ஜ்யார்ஜூம் (கி. பி. 1727—60)

# (George I George II)

**புது அரசர்கள்.**—இங்கிலாந்தை ஆண்ட புது அரசர்கள் ஹானோவர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஆன் அரசிக்குப் பிறகு ஹானோவர் என்ற சிறிய இராஜ்யத்தை ஆண்டுவந்த ஜ்யார்ஜ் தான் சமீபித்த பிராடெஸ்டன்டு வார்சுதாரன். ஸ்டூவர்ட் வம்சத்திலுதித்த ஜேம்ஸ் இன்னும் உயிருடனிருந்த போதிலும் அவன் ரோமன் காதலிக்காகையால் விலக்கப்பட்டான். ஆதலின் ஓர் ஆங்கிலவார்த்தை கூடப் பேசத் தெரியாத அன்னியனாகிய ஜ்யார்ஜ் என்பான் கி. பி. 1714-ல் சிங்காதனத்தில் வைக்கப்பட்டான். அவனுக்குப் பின்னர் அவன் மூத்த குமாரன் பட்டத்திற்கு வந்தான். அவ்விருவரையும் ஆங்கிலேயரில் அனேகர், ஜர்மானியரென்று வெறுத்தனர். ஆங்கிலேயருக்கு அவர்கள் சுபாவங்கள் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை. ஆயினும் வேறு விதியில்லையே என்று அவர்கள் பொறுத்திருந்தார்கள். தங்கள் மதத்தையும் பார்லிமெண்டின் சுதந்திரங்களையும் பாதுகாக்க அன்னியராகிய இவ்வரசர்கள் அவசியமாயினர். ஸ்டூவர்ட் அரசர்களுக்கு வேண்டிய சில ஆங்கிலேயர்—ஜாகோபைட்டுகள்—முதலாவது, இரண்டாவது ஜ்யார்ஜ் அரசர்களுக்கு விரோதமாகக் கலகஞ் செய்தனர்.

2. **கி. பி. 1715-ம் வருடக் கலகம்.**—ஜ்யார்ஜ் சிங்காதன மேறிய மறு வருடம் நார்த் தம்பர்லாந்திலும், கம்பர்லாந்திலும், ஸ்காட்லாந்து மலைநாடுகளிலும் கலகங்கள் உண்டாயின. மார் (Mar) என்னும் பிரபு ஸ்காட் ஹைலாந்தர்களை நடத்திக்கொண்டு சமவெளிகளுக்கு வந்தான். அங்கு இருந்தோர் ஆர்கைல் பிரபுவின் (Earl of Argyle) தலைமையின் கீழ் ஜ்யார்ஜின் சார்பில் கிளம்பி ஹைலாந்தர்களுடன்

ஷெரிப்மூர் (Sheriffmoor) என்ற விடத்தில் போர்புரிந்தார்கள். ஒரு கக்ஷியும் நிர்ணயமாக ஜயிக்கவில்லை. சண்டை முடிந்த பின் ஹைலாந்தர்கள் கலைந்து போய் விட்டார்கள். சிலநாட்கள் கழித்து ஜேம்ஸ் ஸ்காட்லாந்தில் வந்திறங்கினான். ஆனால் யாவரும் எதிர் பார்த்தபடியே அவன் பிரெஞ்சுத் துருப்புகள் கொண்டு வராததாலும், அவன் தோற்றம் ஜனங்களின் மனதைக் கவராதபடியாலும் ஸ்காட்லாந்தர் அவன் கக்ஷியில் சேரவில்லை. பின்னர், இரண்டொரு வாரங்களில் அவனும் பிரான்ஸுக்குத் திரும்பிப் போய்விட்டான்.

3. கி. பி. 1745-ம் வருடக் கலகம்—இரண்டாவது ஜ்யார்ஜ் அரசு புரியுங்கால் இங்கிலாந்து ஐரோப்பிய யுத்தத்தில் பிரவேசிக்கலாயிற்று. அதுவே தக்க சமயமெனச் சில ஜாகோபைட்டுகள் ஸ்டூவர்ட் வம்சத்தை மீட்க விரும்பி ஒரு முறை பிரயத்தனப் பட்டார்கள். ஜேம்ஸின் புதல்வன் சார்லஸ் ஸ்காட்லாந்தில் வந்திறங்கினான். இராஜ லக்ஷணங்கள் பொருந்திய அவனுடன் ஹைலாந்தர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுடன் சார்லஸ் எடின்பரோவுக்குப் போனான். ஹோலி ரூடில் (Holy Rood) இருந்த பழைய அரண்மனையைத் தன் வாசஸ்தானமாகக்கொண்டான். அவன் அழகிய உருவமும், சபையை நடத்திய ஒழுங்கும் ஜனங்களின் மனதைக் கவர்ந்தன. அவன் எதிர்த்த ஒரு சிறிய இராஜ சேனை பிரெஸ்டன் பான்ஸ் (Preston Pans) என்ற விடத்தில் தோற்கடிக்கப்பட்டமையால் சார்லஸ் தைரியங் கொண்டு லண்டனுக்கு நேராகப் போகத் தீர்மானித்தான். மேற்குப்பக்கமாக இங்கிலாந்தில் நுழைந்து டர்பி (Derby) என்னும் பட்டணத்திற்கு அவன் ஹைலாந்தர்களுடன் வந்து சேர்ந்தான்.

4. கலகத்தை அடக்கியது.—அது கண்டு மருண்ட ஆங்கில துரைத்தனத்தார் ஐரோப்பிய யுத்தத்துக்குப் போயிருந்த ஜ்யார்ஜின் புதல்வன் கம்பர்லாந்துக் கோமகனை வரவழைத்து அவனுடன் ஒரு பெரும் படையைக் கூட்டி அக் கலகத்தை அடக்க அனுப்பினார். சார்லஸ் கக்ஷியில் ஒரு

ஆங்கிலேயரும் சேரவில்லை. ஹைலாந்துச் சேனையோ நாளுக்கு நாள் சோர்வடைந்தது. ஆகையால் சார்லஸ் தன் சேனையைப் புறங் காட்டி யோடக் கட்டளை யிட்டான். கம்பர்லாந்தின் வீரர்கள் விரட்டவே ஹைலாந்தர் தட்டுத் தடுமாறி வடக்கே ஓடினர். கடைசி முயற்சியாகச் சார்லஸ் ஆங்கிலப் படையைக் கல்லோடன் (Culloden) என்னுமிடத்தில் திடீரெனத் தாக்கினான். ஹைலாந்தர்கள், பகைவர் படையின் முதல் வரிசையைப் பிளந்து கொண்டு நுழைந்தனர். கம்பர் லாந்தின் பீரங்கிகள அவர்களை ஒழித்துவிட்டன. நூற்றுக் கணக்கான ஹைலாந்தர்கள் ஆங்கிலேயர் கையில் பிடி பட்டுக் கொலையுண்டனர். அந்தத் தோல்விக்குப் பிறகு சார் லஸ் நாலைந்து மாதம் அலைந்து திரிந்து பிரான்ஸுக்குத் தப் பித்து ஓடிவிட்டான். ஹைலாந்தர்களை அடக்கிப் போட வெகு கடுமையான சட்டங்கள் செய்யப்பட்டன. ஹைலாந் திலுள்ள வகுப்புத் தலைவர்களின் அதிகாரத்தைப் பிடுங்கி அவர்கள் தரித்துவந்த ஒரு வகைச் சுதேச உடையை (Kilt) இனி தரிப்பதுத் சட்ட விரோதமென்று செய்தார்கள். நல்ல ரஸ்தாக்கள் அத்தேச மெங்கும் அமைத்து அமைதி யுண்டா மாறு ஏற்பாடு செய்தார்கள். பின்னர், சில ஹைலாந்தர்கள் ஆங்கில இராணுவத்தில் சேர்க்கப் பட்டார்கள்.

---

அதிகாரம் 2

## ஸர் ராபர்ட் வால்போல் (Sir Robert Walpole) ஆங்கில முதல் மந்திரி.

**காபினெட் என்ற நிர்வாக சபை ஏற்படுதல் (Cabinet).**—ஹானோவர் வம்சத்து அரசர்கள் ஆளத் தொடங்கி யதிலிருந்து இராஜ்யாதிகாரம் முழுமையும் மந்திரிகளுக் குக் கிடைத்தது. அம்மந்திரிகள் கூடிய நிர்வாக சபைக் குக் காபினெட் (Cabinet) என்று பெயர். ஒவ் வொருவரும் இராஜாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவின் தலைமை வகிக்கலாயினர். இம்மந்திரிகளே எல்லா இராஜாங்க

விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து நடத்தி வந்தனர். முதலாவது ஜ்பார்ஜ் அரியணை ஏறியதிலிருந்து இந்த நவீன ஆட்சிமுறை ஏற்பட்டது. இதற்கு முன் மந்திரிகள் ஆலோசனை செய்யக் கூடும்பொழுது அரசனே அக்கிராசனம் வகித்து இராஜ்ய தந்திரங்களைப் பற்றி அவர்களுடன் கலந்து பேசுவது வழக்கம். ஆனால் இப்பொழுதோ ஹானோவர் அரசர்களுக்கு ஆங்கில பாஷை தெரியாததால் மந்திரிகளுள் ஒருவனே அக்கிராசனம் வகிக்கவேண்டி வந்தது. ஆகை

ஸர் ராபர்ட் வால்போல்

யால் அவன் மற்றவர்களைக் காட்டிலும் மேல் அதிகாரம் வாய்ந்த முதல் மந்திரியாயினன். அப்படி முதல் தடவை அந்த உத்தியோகத்திற்கு வந்தவன் ஸர் ராபர்ட் வால்போல்.

2. வால்போலின் சரிதை.—வால்போல் கி.பி. 1676-ல் நார்போக் (Norfolk) மகாணத்தில் பிறந்தவன். பால்யத்தில் அவனுக்கு வேட்டையிலும், குடியிலும் விருப்பம் அதிகம். அவன் கருத்துடன் கல்வி கற்கவில்லை. கல்வியில் மிகுந்த தேர்ச்சி பெறாவிடினும் வரவு செலவுத் திட்டம் போடுவதில் அவன் வெகு சமர்த்தன். பால்யத்திலேயே பார்லிமெண்டு சபையில் ஜனப் பிரதிநிதியாக அமர்ந்து

கி. பி. 1708-ல் யுத்த இலாகாவின் காரியதரிசி உத்தியோகத்தை அடைந்தான். அவன் தென் கடற் குமிழி நிகழ்ந்ததிலிருந்து உன்னத பதவியை அடைந்து கி. பி. 1721 முதல் கி. பி. 1742 வரையில் முதல் மந்திரியாகவும் பொக்கிஷாதிகாரியாகவும் இருந்தான்.

3. தென் கடற் குமிழி (South Sea Bubble) கி.பி. 1720.—தென் கடலைச் சார்ந்த தேசங்களில் வியாபாரம் செய்யக்கருதிச் சிலர் ஒரு கம்பெனி ஏற்படுத்தினர். அந்நாளில் இராஜாங்கத்தாருக்குக் கடன் மிகுதியும் சுமந்து இருந்தது. துரைத்தனத்தார் வாங்கி யிருந்த கடன் தொகையில் பெரும்பாகத்தை வருடத்திற்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்துவந்தனர். தென் கடல் வியாபாரக் கம்பெனியார் அமெரிக்காவுடன் ஏகபோக வியாபாரம் செய்யும் சுதந்திரம் பெற்று, அதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் லாபத்திலிருந்து இராஜாங்கத்துக் கடனில் ஒரு பாகத்தைத் தீர்க்க ஒத்துக்கொண்டனர். கம்பெனிக்கு ஆரம்பத்தில் ஏராளமான லாபம் வந்தபடியால் அதன் 100 பவுன் பங்கின் விலை ஆயிரம் பவுன் வரையில் விற்றது. அதே காலத்தில் அனேக போலிக் கம்பெனிகள் உண்டாயின. அவைகளில் பங்குகள் வாங்கின ஜனங்கள் ஏமாறி விட்டார்கள். தென் கடல் கம்பெனியும் அப்படிப் போய்விடுமோ என்று ஜனங்கள் பயந்து பங்குகளை யெல்லாம் விற்க ஆரம்பித்தனர். ஆனால் வாங்குவோர் ஒருவருமில்லை. தேசமெங்கும் ஓரே அமளியாயிருந்தது. தென் கடல் கம்பெனி டைரக்டர்கள் ஒன்றும் தோன்றாது விழிக்கலாயினர். அனேக ஏழைக் குடும்பங்கள் பெரு நஷ்ட மடைந்து அதோ கதியாயின. அந்நிலையில் தேசத்தில் அமைதியை உண்டாக்கக் கூடியவன் வால்போல் ஒருவனே என்று யாவரும் கருதினார்கள். அவ்வண்ணமே அவன் மந்திரி ஸ்தானத்தை அடைந்து கம்பெனி டைரக்டர்களுக்குப் பெருத்த அபராதம் விதித்து அதினின்றும் கிடைத்த தொகையிலிருந்து பங்குகளின் பெறுமானத்தில் மூன்றில் ஒரு பாகத்தை ஜனங்களுக்குக் கொடுத்

தான். தேசமும் ஒருவாறு நிம்மதியாயிற்று. அதுமுதல் 20 வருடகாலம் வால்போல் முதன் மந்திரி ஸ்தானத்தை வகித்து வந்தான்.

4. வால்போலின் முக்கிய வேலை.—அவன் தன் சாமர்த்தியத்தால் இராஜாங்கச் செலவைக் குறைத்தது மன்றி வருமானத்தையும் விருத்தி செய்தான். இங்ஙனம் மிகுந்த பணத்திருந்து கடனைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்க்கவே, நாணயமும், நம்பிக்கையும் நாட்டில் உண்டாயின. வியாபாரத்திற்கு இடையூறாக நின்ற ஏற்றுமதி இறக்குமதி வரிகளை அவன் எடுத்துவிட்டான். திருட்டுத்தனமாகத் தேசத்திற்குள் சாமான்கள் கொண்டு வருவதை நிறுத்த 'எக்ஸைஸ்' மசோதா (Excise bill) ஒன்று கொண்டுவந்தான். அதாவது கப்பல்களிலிருந்து துறைமுகங்களில் சாமான்களை இறக்கும்போது வரி விதிப்பதற்குப் பதிலாக அச்சாமான்களை விற்பனைக்குக் கிடங்குகளில் கொண்டு வரும்போது வரி விதித்தல். ஆனால் பார்லிமெண்ட் அம்மசோதாவை ஒத்துக் கொள்ளவில்லை. வால்போல் தனக்கு மந்திரி அதிகாரம் நீடித்திருக்க வேண்டிப் பலருக்கு உத்தியோகங்களையும், பணத்தையும் கொடுத்து அவர்கள் ஆதரவைப் பெற்றான். ஆகையால்தான் அவன் அவ்வளவு காலம் முதல் மந்திரி ஸ்தானத்தில் இருக்க முடிந்தது.

5. சமாதான நோக்கம்.—சண்டை யென்றால் வால்போலுக்கு வெறுப்பு. அவன் காலத்தில் இங்கிலாந்து மற்ற தேசங்களுடன் சண்டை சச்சரவின்றி சமாதானமாக இருந்தது. அடிக்கடி அவன் "இத்தேசத்திற்குப் பெருத்த கேட்டை விளைவிக்கக் கூடியது யுத்தமே; போர் நேரிடின் நமக்குச் செலவு ஏராளமாக ஏற்படும்; அன்றியும் போர் முடியும்போது ஒரு லாபமும் கிடைக்காது" என்று சொல்வான். பார்லிமெண்டிலும், தேசத்திலும் அனேகர் அவனை எதிர்த்தார்கள். அன்னிய நாட்டுச் சண்டைகளில் கலவாமல் இருப்பது வெகு பிரயாசையாயிருந்தது; ஆனால் அவனது உத்தியோகத்தின் இறுதியில் ஸ்பெயின் தேசத்துடன்

யுத்தம் செய்வது அவசியமாயிற்று. அதுவே அவன் வீழ்ச்சிக்குக் காரணமாக முடிந்தது.

6. ஜெங்கின்ஸ் காதறு சண்டை (War of Jenkins Ear) கி. பி. 17:9.—உட்ரெக்ட் உடன்படிக்கைப்படி வருடந்தோறும் ஸ்பானிஷ் அமெரிக்காவுக்கு ஆங்கிலேயர் ஒரு கப்பலை வியாபாரத்திற்காக அனுப்ப உரிமை பெற்றிருந்தனர். அவ்வொரு கப்பலைத் துறைமுகத்தில் கொண்டுபோய்ச் சாமான்களை இறக்கிவிட்டு இரவில் வெளியே காத்துக்கொண்டிருக்கும் மற்றக் கப்பல்களினின்றும் சாமான்களைத் திருட்டுத்தனமாக நிரப்பிக் கொள்வார்கள். இவ்விதம் திருட்டுத்தனமாகச் சாமான்கள் ஏற்றுவதைக் கண்டு ஸ்பானியர்கள் கோபித்துத் தங்கள் காவலாட்களைக்கொண்டு ஆங்கில மாலுமிகளைப் பிடித்துத் தண்டிப்பர். எனினும் இது வழக்கமாக நடந்து வந்தது. ஒரு சமயம் ஜெங்கின்ஸ் என்னும் வியாபாரியின் காதை அவர்கள் அறுத்துவிட்டதாகவும், அப்பேர் அவமானத்தைச் செய்ததற்காக ஸ்பெயினோடு யுத்தம் செய்யவேண்டுமென்றும் தேசமெங்கும் பெருத்த கூக்குரல் உண்டாயிற்று. வால்போல வேண்டா வெறுப்புடன் யுத்த விளம்பரம் செய்தான். அதைக் கண்டு எங்கும் மணியோசை முழங்க ஜனங்கள் சந்தோஷித்தனர். "ஜனங்கள் மணியடித்து, மகிழ்ச்சிகொண்டு நிற்பினும் கூடிய சீக்கிரம் கையைப் பிசைந்து கண்ணீர் சொரிந்து நிற்பரே" என்று வால்போல் இரங்கிக் கூறினன். ("They may ring their bells now, but they soon will be wringing their hands.") ஆங்கிலக் கப்பற்படை அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டது. ஆனல் அது ஒரு வெற்றியும் பெறவில்லை. அதற்கு வால்போல்தான் காரணமென்று அவன் பகைவர்கள் பிரசுரித்து கி. பி. 1742-ல் பிரதம மந்திரி வேலையினின்றும் ராஜீநாமா கொடுக்குமாறு செய்துவிட்டார்கள்.

---

அதிகாரம் 3

## ஜ்யார்ஜ் II (தொடர்ச்சி)

பிரான்ஸுடன் யுத்தம்.—இரண்டாவது ஜ்யார்ஜ் அரசு புரியுங்கால் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் அடிக்கடி போர் நடந்துகொண்டே வந்தது. அதன் முக்கிய காரணம் யாதெனில் அவ்விரு தேசங்களும் தங்கள் வியாபாரத்தையும் சாம்ராஜ்யத்தையும் விருத்திபண்ண அவாக்கொண்டு ஒருவர்க்கொருவர் போட்டி போட்டதுதான். ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பித்தவுடன் அந்நாட்டினர் குடியேறிய நாடுகளிலும் சண்டை தொடுப்பார்கள். கி. பி. 1740-ம் வருடம் ஆஸ்டிரியர் மகுடப்போர் உண்டாயிற்று. (War of the Austrian Succession). ஆஸ்டிரியாவின் அரசனை ஆறுவது சார்லஸ் மேரியா தேரேஸா (Maria Theresa) என்னும் தன் குமாரத்தியே இராஜ்யத்துக்கு வார்ஸுதார் என்று எல்லா ஐரோப்பிய அரசர்களையும் ஒத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டான். அவர்களும் அதற்கு இணங்கினர். ஆனல் அவன் இறந்ததும் தங்கள் வாக்குக்கு விரோதமாக பவேரியா இலெக்டரும், ப்ரஷ்யா அரசன் பிரிடெரிக்கும் மேரியா தெரெஸாவுக்குச் சொந்தமான சில நாடுகளைக் கைப்பற்றினர். அவர்களுக்குப் பிரான்ஸ் அரசனும் உதவினன். தெரெஸா அரசிக்கு ஒருவரும் துணை யில்லாதது கண்டு ஆங்கில மன்னன் ஜ்யார்ஜ் தன் படையுடன் ஐரோப்பா கண்டத்திற்குப்போய் அவள் விரோதிகளை டெட்டின்ஜென் (Dettingen) என்ற விடத்தில் தோற்கடித்தான். இது தான் கடைசி முறை ஆங்கில அரசன் போர்க்களத்தில் முன் வந்து நின்றது. கி. பி. 1748 வரையிலும் ஐரோப்பாவில் இந்த யுத்தம் நடந்தது. ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் இந்தியாவிலும், அமெரிக்காவிலும் இது காரணமாகவே போர் புரிந்தார்கள்.

2. அமெரிக்காவில் நடந்த விஷயங்கள்.—முதலாவது ஜேம்ஸ் காலத்தில் ஆங்கிலேயர் சிலர் அமெரிக்காவுக்குக் குடிப்போக ஆரம்பித்தன ரன்றோ? அது முதல் அனேகர் அங்குக் குடியேறி அட்லாண்டிக் சமுத்திரக் கரையோரமாகப் பதின்மூன்று மாகாணங்களை (Colonies) ஸ்தாபித்துக் கொண்டனர். அதற்கு வடக்கிலுள்ள (Canada) கனடாவிலும் தெற்கிலுள்ள (Louisiana) ல்யூஷியானாவிலும் பிரெஞ்சுக்காரர் குடியேறினர். அல்லிகனி மலைக்கும் சமுத்திரத்திற்கும் இடையே ஆங்கிலேயரை இருத்தித் தங்கள் இருமாகாணங்களையும் ஐக்கியப் படுத்த நினைத்துப் பிரெஞ்சுக்காரர் கோட்டைகளைத் தொடராகக் கட்ட ஆரம்பித்தனர். அதைத் தடுக்க, அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயரால் முடியவில்லை.

3. இந்தியா விஷயங்கள்.—இந்தியாவில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் பல வியாபார ஸ்தலங்களை அமைத்து இருந்தனர். அப்பொழுது புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சு கவர்னராகிய டூப்ளே (Dupleix) பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபிக்கலா மென்று மனக்கோட்டை கட்டினான். அவன் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிடலாயினன். அவனுக்குச் சில வெற்றிகளும் கிடைக்கவே பிரெஞ்சுக்காரரிடம் இந்தியருக்கு மிக்க மதிப்புண்டாயிற்று. கி. பி. 1746-ல் அவன் சென்னையைக் கைப்பற்றி ஆங்கில வியாபாரிகளை அங்கிருந்து துரத்திவிட முயன்றான். கி. பி. 1748-ல் ஐரோப்பாவில் அந்நாட்டினர் இருவருக்கும் சமாதானம் ஏற்படவே ஆங்கிலேயரிடம் சென்னை திரும்பக் கொடுக்கப்பட்டது. இந்த யுத்தத்தை முதல் கர்னாடக யுத்தமென்று இந்திய சரித்திரத்தில் சொல்வது வழக்கம்.

4. சமாதானம் உண்டாகிய போதிலும் அவ்விரு தேசத்தாரும் குடியேறியுள்ள காலனிகளில் சண்டையை நிறுத்தவில்லை. அமெரிக்காவில் ஆங்கிலேயர் உள்நாட்டில் பிரவேசிக்க முடியாதபடி பிரெஞ்சுக்காரர் கோட்டைகளைக் கட்டி விட்டனர். டுக்வேன் (Duquesne)

என்ற கோட்டை அத்தொடரைப் பூர்த்தி செய்தது. ஆங்கிலேயர் அதைக் கண்டு திகிலடைந்தனர். அவர்கள் அதைத் தாக்கியும் பயனில்லை. அதே மாதிரி இந்தியாவிலும் பிரெஞ்சுக்காரர் கையே ஓங்கி வந்தது. டூப்ளே தன் சேனையைக் கொண்டு சண்டா சாஹிப் என்பவனுக்கு உதவி புரிந்து அவனைக் கர்னாடக நவாப் எனும் உயர் பதவியில் வைத்தான் பிரெஞ்சுக்காரர் அதனால் அதிக லாபத்தையும், கீர்த்தியையும் அடைந்தனர். பழைய நவாபின் குமாரன் மகமத் ஆலி என்பானைத் திருச்சிராப்பள்ளியில் பிரெஞ்சுக்காரரும், ண்டா சாஹிப்பும் சேர்ந்து சூழ்ந்துகொண்டு முற்றுகையிட்டனர். அவ்வூர் அவர்கள் கைவசமாகி யிருந்தால் ஆங்கில வியாபாரிகள்பாடு திண்டாட்டமாகவே முடிந்திருக்கும்.

5. கிளைவ்.—அவ்வாபத்தினின்றும் ஆங்கிலேயரைத் தப்புவித்தவன் கிளைவ் எனும் ஆங்கில தீரன். அவன் யோசனையின் வண்ணமே கர்னாடகத்துக்குத் தலை நகராகிய ஆர்க்காட்டை அடைந்து ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டனர். அந்நகரை நவாப் மீட்க முடியாதபடி கிளைவ் அதனை நன்கு காப்பாற்றினான். அதுமுதல் பிரெஞ்சுக்காரர் அபஜயமடையலாயினர். கி. பி. 1752-ல் ஆங்கிலேயர் மகமத் ஆலியைத் திருச்சியினின்றும் விடுவித்து நவாப் பதவியில் வைத்தார்கள். டூப்ளே அனாவசியமாகச் சண்டை யிடுவதாக எண்ணிப பிரெஞ்சு துரைத்தனத்தார் அவனை வரவழைத்துச் சிறையிவிட்டார்கள். பின்னர், கொஞ்ச காலம் சண்டை நின்றது. பின்னர் ஏழாண்டுப்போர் துவக்கியது.

6. ஏழாண்டுப் போர் (கி. பி. 1756—63).—தான் முந்தி யிழந்த நாடுகளை மேரியா தெரெஸா அடைய எண்ணி, ப்ரஷ்ய அரசன் பிரிடெரிக்கை எதிர்த்தாள். இப்பொழுது பிரான்ஸூ அவளுக்கு உதவியது. தனது ஹானோவர் இராஜ்யத்திற்கு அபாயம் ஏற்படுமோ என்று பயந்து ஆங்கில அரசன் ஜ்யார்ஜ் ப்ரஷ்யாவுடன் சேர்ந்தனன். இங்ஙனம் ஏழாண்டுப் போரில் இங்கிலாந்தும் சம்பந்தப்படலாயிற்று.

7 வில்லியம் பிட் (William Pitt) போர் மந்திரி.— முதலில் அபஜயம் தான் இங்கிலாந்துக்குக் கிடைத்தது. ஆங்கிலேயரிடமிருந்த மைனார்காத் தீவை பிரெஞ்சுக் கப்பற் படை தாக்கியது. அதை மீட்க அட்மிரல் பிங் (Admiral Byng) உபயோகமற்ற ஒரு சிறு படையுடன் அங்கு அனுப்பப்பட்டான். அவன் எதிரியைக் கண்டு பயந்து சண்டை போடாமலே திரும்பி வரவே ஜனங்கள் அவனைப் பழித்தனர். அவன் இராணுவச் சட்டத்தின்படி சுடப்பட்டான். பிறகு, வில்லியம் பிட் முக்கிய மந்திரியாக வந்து போரை நடத்தத் தலைப்பட்டான். யுத்தம் நடத்துவதில் சாமர்த்தியமுள்ள மந்திரிகளில் அவன் ஒருவன். அவனிடம் ஜனங்களுக்கு முழு நம்பிக்கையுண்டு. அவன் தக்க மனிதர்களை இராணுவத்தில் அதிகாரிகளாக்கினான். இங்கிலாந்தின் சாம்ராஜ்யம் வெளிநாடுகளில் ஓங்கவேண்டின், சமுத்திரத்தில் ஏகாதிபத்தியம் அவசியமென்று அவன் அறிந்தான். பிரிடெரிக்குக்குக் கொஞ்சம் தனமும், உதவிச்சேனையும் அனுப்பியதுமன்றி, அவன் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான அன்னிய நாடுகளை எதிர்க்கவும் பல படைகளை எங்கும் அனுப்பினான்.

8. கனடா ஆங்கிலேயர் வசமானது (கி. பி. 1760).— உல்ப் (Wolfe) என்னும் வீரதீரத் தலைவன் ஒரு சிறு சேனையுடன் லாரன்ஸ் நதி முகத்துவாரத்தின் வழியாகச் சென்று கனடாவின் தலை நகராகிய க்விபெக் (Quebec) என்ற பட்டணத்துக்கருகில் போய்ச்சேர்ந்தான். பிரெஞ்சுக்காரர், நதிக்கரையில் பலத்த சுவர்கள் எழுப்பி ஆங்கிலேயரைக் கரையேற வொட்டாமல் தடுத்துவிட்டார்கள். உல்ப் சில வாரங்கள் பார்த்தும் ஒன்றும் பயன்படாதென்று நினைத்தான். தற்செயலாய் 'ஹைட்ஸ் ஆப் ஏப்ரஹாம்' (Heights of Abraham) என்ற குன்றுக்கு ஒரு வழி தென்பட்டது. க்விபெக் கோட்டை அக்குன்றின் மீதே அமைந்துளது. நிசியிலேயே ஒருவரும் அறியாது ஆங்கிலப்படை அதன்மீது ஏறி யுத்தத்துக்கு அணிவகுத்து நின்றன. அவர்களைத்

தூரத்தப் பிரெஞ்சு கவர்னர் மாண்ட்காம்(Montcolm) ஓடி வந்தான். ஆங்கிலேயர் வெற்றியடைந்து க்விபெக்கைக் கைப் பற்றினர். மாண்ட்காம், உல்ப் இருவரும் அமர்க்களத்தில் மாண்டனர். மறுவருடத்தில் மாண்ட்ரீல் (Montreal) நகரையும் விட்டுவிட்டு பிரஞ்சுக்காரர் ஓடிவிடவே கனடா முழுவதும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

9. இந்தியாவில் இறுதி யுத்தம்.—வங்காள நவாபு பிரெஞ்சு உதவியைக்கொண்டு கல்கத்தாவை ஜயித்தனன். பின்பு, கிளைவ் சென்னையிலிருந்து கடுகிப்போய் பிளாஸி யுத்தத்தில் நவாபை முறியடித்து நவாபின் சேனாதிபதியான மீர் ஜாபரைச் சிங்காதன மேற்றினான். அதன் பலனாக ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கும் 24 பர்காணங்கள் கிடைத்தன. கர்னாடகத்திலும் ஆங்கிலேயர் வந்தவாசியில் பிரெஞ்சுக்காரரை முறியடித்து புதுச்சேரியையும் முற்றுகை போட்டார்கள். இவ்விதம் இந்தியாவில் பிரெஞ்சு பலம் ஒடுங்கி விட்டது.

10. பாரிஸ் சமாதானம். கி. பி. 1763.—இவ்வெற்றிகளின் பத்தியில் ஜ்யார்ஜ் காலகதி யடைய அவன் பேரன் மூன்றாவது ஜ்யார்ஜ் என்ற பட்டத்துடன் சிங்காதன மேறினான். அவனுக்குப் பிட்டினிடம் நல்லபிப்பிராய மில்லாத படியால் பிட் மந்திரி வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டான். புதிய மந்திரியோ பிரான்ஸுடன் பாரிஸ் சமாதானத்தைச் செய்துகொண்டு சண்டையை நிறுத்திவிட்டான். அதன்படி ஆங்கிலேயருக்குக் கனடாவும் சில மேற்கு இந்தியத் தீவுகளும் கிடைத்தன. ஆங்கில சாம்ராஜ்யமும் நன்றாய் வேரூன்றி விட்டது.

அப்பியாசங்கள்

1. 'தென் கடற் குமிழி' என்றால் என்ன?

2. ஜெங்கின்ஸ் என்பவன் யார்? அவனால் எவ்விதம் யுத்தம் நேரிட்டது?

3. வெளிநாட்டு விஷயங்களைப் பற்றி வால்போலின் நோக்கம் யாது? இவ்விஷயத்தில் அவனுக்கும் பிட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறுக.

4. பிரானஸுடன் சண்டையிடக் கருதி பிட் செய்த ஏற்பாடுகள் யாவை?

5. ஸ்காட்லாந்தில் எந்த இடங்களில் ஜாகோபைட்டுகள் யுத்தஞ் செய்தனர்? அவர்கள் ஏன் தோல்வி யடைந்தார்கள்?

6. வால்போல், பிட் இவர்கள் இங்கிலாந்துக்குச் செய்த நன்மைகளைப் பற்றி எழுதுக.

7. அமெரிக்காவில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்களின் காலனிகளைக் காட்டும் படமொன்று வரைக.

8. பின் வருபவைகளைப் பற்றி நீங்கள் படித்ததைச் சுருக்கி எழுதுக:—டெட்டின்ஜென், உல்ப், சார்லஸ் இளவரசன், பிரிடெரிக், மேரியா தெரெஸா.

---

அதிகாரம் 4

## மூன்ருவது ஜ்யார்ஜ் (கி. பி. 1760—1820)

## அமெரிக்க சுயாதீனப் போர்

**ஜ்யார்ஜின் குண விசேஷங்கள்.**—மூன்ருவது ஜயார்ஜ் இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்தவன். ஆதலின் அவன் ஆங்கிலன் என்று சொல்லி அளவிலா மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தான். பாட்டனுக்குப் பின் அறுபது வருடகாலம் ஆண்டான். அரசாட்சியின் இறுதியில் பயித்தியம் பிடித்ததால் அவன் புதல்வனே ரக்ஷகனுக நியமிக்கப்பட்டான். மூன்ருவது ஜ்யார்ஜுக்கு முதல் இரண்டு ஜ்யார்ஜ்களைப்போல் எல்லா அதிகாரத்தையும் முதல் மந்திரியிடம்

விட்டுவிட இஷ்டமில்லை. ஆதலால் அவனே மந்திரிகளை நியமித்துத் தேசத்தைத் தன் மனம்போல் ஆள எண்ணினுன். அவன் மந்திரிகள் ஆங்கிலேயருக்கு உட்பட்டிருந்த குடியேற்ற நாடுகளின்மீது ஆலோசனையின்றி அதிகாரம் செய்யத் தொடங்கினபடியால் இங்கிலாந்து அமெரிக்கக் காலனிகளை இழக்க நேரிட்டது.

2. அமெரிக்க சுயாதீனப் போரின் காரணங்கள்.— ஏழாண்டுப் போரினுல் இங்கிலாந்துக்கு ஏராளமான கடன் உண்டாயிற்று. காலனிகளுக்குப் பேருதவி புரியவே இங்கிலாந்து அப்போரில் கலந்து கொண்டதென்றும், ஆகையால் அக்கடனைத் தீர்க்கக் காலனிகளே பணம் கொடுக்க வேண்டுமென்றும் மூன்ருவது ஜ்யார்ஜும் அவன் மந்திரிமார்களும் கருதினர். அமெரிக்கரோ இப்பொழுது பிரெஞ்சு பயம் நீங்கி விட்டபடியால் பணம் நாம் ஏன் கொடுக்கவேண்டுமென்று நினைத்தார்கள். மூன்ருவது ஜ்யார்ஜும் மந்திரிமார்களும் அமெரிக்கர்மேல் வரி விதிக்க ஆங்கிலப் பார்லிமெண்டுக்கு அதிகாரமுண்டென்று கூறி அமெரிக்கர் முத்திரைக் காகிதங்களை எல்லா விவகாரங்களிலும் உபயோகிக்கவேண்டுமென்ற ஸ்டாம்புச் சட்டத்தை (Stamp Act) கி.பி. 1765-ல் பிறப்பித்தார்கள். தங்கள் பிரதிநிதிகள் ஆங்கிலப் பார்லிமெண்டுக்கு அனுப்பப்படாதபடியால் தங்கள் மேல் வரி விதிக்க அச்சபைக்கு அதிகாரமில்லையென்று அமெரிக்கர்வாதாடினுர்கள். அடுத்த வருடம் ஸ்டாம்புச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. ஆனுலும் ஆங்கில கவர்மெண்டார் கி. பி. 1767-ல் அமெரிக்காவின் இறக்குமதிச் சாமான்களின்மீது வரி போட்டனர். பிறகு எல்லா வரிகளையும் எடுத்துவிட்டுத் தேயிலைக்கு மட்டும் வரி விதித்தனர். அமெரிக்கர்களுக்குக் கோபம் பொங்கவே கி. பி. 1773-ல் அமெரிக்கர் சிலர் மாறுவேடம் பூண்டு பாஸ்டன் (Boston) துறைமுகத்திலிருந்த கப்பல்களிலேறி வரி விதிக்கப்பட்ட தேயிலைப் பெட்டிகளை எடுத்துச் சமுத்திரத்தில் எறிந்தார்கள். ஆங்கில கவர்ன்மெண்டார் அத்துறைமுகத்தை மூடி

விட்டு அக்காலனியில் இராணுவச் சட்டத்தைப் பிரயோகப் படுத்தி இம்சிக்க ஆரம்பித்தார்கள்.

3. சுயாதீன அறிக்கை (Declaration of Independence) கி. பி. 1776.—அமெரிக்காவில் குடியேறியவர் அனைவரும் ஜ்யார்ஜ் வாஷிங்டன் (George Washington) என்பவனைத் தலைவனாகக் கொண்டு ஆங்கிலக் கொடுங்கோலினின்று தங்களை விடுவித்துக்கொள்ளத் தீர்மானித்தார்கள். ஆண்மையிலும், குணத்திலும் சிறந்த வாஷிங்டன் தலைவனானது அவர்களது பாக்கியமே. கி. பி. 1775-ல் ஆரம்பித்த யுத்தம் சுமார் ஏழு வருடங்கள் நடந்



ஜார்ஜ் வாஷிங்டன்

தது. பாஸ்டனுக்கு அருகில் அமெரிக்கர் ஒரு சிறிய பிரிட்டிஷ் படையை அடித்துத் துரத்திவிட்டனர். அதனால் தைரியங்கொண்டு ஒவ்வொரு காலனியிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் பிலடெல்பியாவில் (Philadelphia) ஒரு சபை கூடி ஆங்கில ஆளுகையினின்றும் சுயேச்சை யடைந்து "ஐக்கிய இராஜ்யங்கள்" என்ற குடியரசை ஏற்படுத்தி விட்டதாக அறிக்கை செய்தார்கள்.

4. ஆங்கிலேயரின் அபஜயம்.—ஆங்கிலேயர் சண்டையை நன்கு நடத்தவில்லை. அவர்கள் அனுப்பிய படை சொற்பமாகவும் தலைவர்கள் சுருசுருப்பில்லாமலும் இருந்த காரணத்தால் அமெரிக்கர்களுக்கு எளிதில் வெற்றி கிடைத்தது. கி. பி. 1777-ல் கனடாவில் இருந்த பர்காயின் (Burgoyne) என்பவனைத் தெற்கே போய் நியூயார்க்கிலிருக்கும் படையுடன் சேர்ந்துகொள்ளும்படி ஆங்கில கவர்ன்மெண்டார் கட்டளையிட்டார்கள். அவன் வரும் வழியில் ஸாரடோகா (Saratoga) என்ற விடத்தில் காலனிப் படை அவனைச் சூழ்ந்துகொள்ளவே, தன் படைவீரர்களுடன் அவன் சரணமடையலாயிற்று.

5. அதன் பிறகு பிரான்ஸூம், ஸ்பெயினும் பிரிட்டனுக்கு விரோதமாக அமெரிக்கர் கக்ஷியில் சேர்ந்து கொண்டன. ஆங்கிலேயர் சமுத்திராதிபத்தியத்தை இழந்துவிட்டபடியால் புதிய துருப்புகளை அமெரிக்காவுக்கு அனுப்ப முடியவில்லை. காரன்வாலிஸ் பிரபு கலோனியரை அடக்க முயன்றுகொண்டிருந்தான். ஆனால் அவனும் கி.பி. 1781-ல் யார்க் டவுனில் கலோனியருக்குச் சரணமடைய நேரிட்டது. இத்துடன் அமெரிக்காவில் யுத்தம் முடிந்துவிட்டது. இன்னும் இரண்டொரு வருடங்கள் ஆங்கிலேயர் அட்மிரல் ராட்னி (Admiral Rodney)யின் கீழ் பிரெஞ்சுக்காரருடன் சமுத்திரத்தில் சண்டை போட்டு மேற்கு இந்தியத் தீவுகளுக்கு அருகில் பிரெஞ்சுக் கப்பற்படையைத் தோற்கடித்தனர்.

6. வெர்ஸே (Versailles) சமாதானம் கி.பி. 1783.—வெர்ஸே உடன்படிக்கைப்படி அமெரிக்கர் சுயாதீனத்தை ஆங்கிலேயர் ஒத்துக் கொண்டார்கள். மைனார்காவையும், பிளாரிடாவையும் ஸ்பெயின் தேசம் அடைந்தது. டுபாகோ என்னும் தீவு பிரான்ஸூக்குக் கிடைத்தது. ஆங்கிலேயருக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அமெரிக்கர் வெற்றிக்குக் காரணமாயிருந்த வாஷிங்டனே அக்குடியரசுக்கு முதல் பிரஸிடெண்டாக அமர்ந்தனன். அவன் போரிலும், துரைத்




அமெரிக்க சயாதினப் போர்

தனம் புரிவதிலும் சிறந்து விளங்கவே தேசத்தாரால் நன்கு மதிக்கப்பட்டான். அவன் பெயரும், புகழும் அமெரிக்காவில் எந்நாளும் விளங்கும். தாய் நாட்டுடன் எதிர்த்துப் போராட மனமில்லாத சில கலோனியர்கள் கனடாவுக்குக் குடிப் போய் விட்டார்கள்.

### அப்பியாசங்கள்

1. கலோனியர்களுக்கு என்ன குறைகள் இருந்தன?

2. ஆங்கில பார்லிமெண்ட் அமெரிக்காவில் வரி விதித்தது ஏன்?

3. சுயாதீனப் போரில் சம்பந்தப்பட்ட பிரிட்டிஷ் தளகர்த்தர்கள் யாவர்? அவர்களைக் குறித்து நீங்கள் படித்ததைச் சுருக்கி எழுதுக.

4. அமெரிக்க சுயாதீனப் போரினுல் உண்டான பயன்கள் யாவை?

---

## அதிகாரம் 5

# மூன்றுவது ஜ்யார்ஜ் (தொடர்ச்சி)

# (War of the French Revolution.)

**பிரஞ்சு தேசப் புரட்சி யுத்தத்தின் காரணங்கள்.**— நெடுநாளாக பிரான்ஸ் தேசம் சரியாக ஆளப்படவில்லை. அரசனும், பிரபுக்களும் ஏராளமாகச் செலவு செய்ததுடன் குடியானவர்களையும், ஏழைகளையும் தங்களுக்காக வேலை செய்யுமாறு வருத்தினர். ஏழை ஜனங்களே எல்லா வரிகளையும் கொடுத்து வந்தபோதிலும் அவர்களுக்குக் கொஞ்சமேனும் சுதந்திரம் கிடைக்கவில்லை. 18-வது நூற்றுண்டின் இறுதியில் ஆங்கிலேயர் அதிக சுதந்திரம் அடைந்திருப்பதையும்

அமெரிக்கர் சுயாதீன மடைந்ததையும் கண்டு தாங்களும் சகல உரிமைகளேயும் அடைய அந்நாட்டினர் தீர்மானித்தார்கள்.

2. 18-வது நூற்றுண்டில் நிகழ்ந்த போர்களால் பண முட்டுப்பாடு மிகுதியும் ஏற்பட்டுப் பதினுருவது லூயி எனும் பிரெஞ்சு அரசன் கி. பி. 1789-ல் ஸ்டேட்ஸ் ஜெனரல் (States-General) என்னும் பிரஞ்சு பார்லிமெண்டைக் கூட்டினன். அதில் கூடிய பொதுஜனங்கள் தாங்களே தேசீய சபையென்று சொல்லி, பல சீர்திருத்தங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். அதற்குள் பாரிஸ் ஜனங்கள் மூர்க்கத்தனமாக பாஸ்டில் (Bastille) என்னும் சிறையைத் தாக்கி அங்கு அடைபட்டிருந்த கைதிகளை விடுவித்தார்கள். அரச தண்டனைக்கும், கோபத்துக்கும் பயந்து அவர்கள் சிறு படை ஒன்றும் தயாரித்துக்கொண்டார்கள். அதனல் அவர்கள் தைரியங்கொண்டு பிரான்ஸில் இனி முடியரசில்லை, குடியரசே என்று பிரசுரித்து கி. பி. 1793-ல் அரசனையும், அரசியையும் தூக்கிலிட்டு விட்டார்கள். அவர்கள் கருத்துக்கிணங்காது விரோதமாயிருந்த சுமார் 1500 பேர்களும் கொலையுண்டனர். இவ்விதம் பிரான்ஸில் ஒரு பெரிய புரட்சி உண்டாயது.

3. இங்கிலாந்து அப்போரில் சேர்தல்.—முதலில் பிரான்ஸில் நல்ல துரைத்தனம் ஏற்படுமென்று நினைத்து ஆங்கிலேயர் சந்தோஷித்தனர். ஆனல் பாரிஸ் கூட்டத்தார் புரிந்த கொடுஞ் செயல்களைக் கண்டு அனைவரும் திடுக்கிட்டார்கள். இங்ஙனமே அரசர்களுக்கு விரோதமாக வேறு நாட்டினரும் கலகஞ் செய்தால் அவர்களுக்கு உதவி புரிவதாகப் பிரெஞ்சு கலகக்காரர்கள் வாக்களித்தனர். இக்கலகக்காரர் பெல்ஜியத்தைப் பிடித்துவிடவே, ஆஸ்டிரியா, ப்ரஷ்யா, ஸ்பெயின் இங்கிலாந்து இவைகள் ஒன்று சேர்ந்து பிரான்ஸைத் தாக்கலாயின.

4. பிரேஞ்சுக்காரர் வெற்றி.—பேரரசர்கள் ஒன்று கூடவே பிரான்ஸ் நசுக்குண்டு போகும் போலிருந்தது.

ஆனல் நேசக் கக்ஷியார் பொருமைகொண்டு ஒவ்வொரு வரும் தங்களுக்கு ஏதேனும் லாபம் கிடைக்குமா என்று பார்த்தார்களே தவிர கலகக்காரர்களை அடக்க ஆவல்கொள்ள வில்லை. பிரெஞ்சு ஜனங்களோ உத்ஸாகத்துடனும் மனே திடத்துடனும் சண்டையிட்டு எதிரிகளைத் துரத்திவிட்டார்கள். கி.பி. 1794-ல் பிரெஞ்சுத் துருப்புகள் பெல்ஜியத்திலும், உலாந்திலும் புகுந்தன. ஆகையால் உலாந்தும், ப்ரஷ்யா

நெபோலியன் போனபார்ட்

வும், ஸ்பெயினும் இங்கிலாந்தைக் கைவிட்டு பிரான்ஸுடன் சமாதானம் செய்து கொண்டன. நெபோலியன் போன பார்ட் (Napoleon Bonaparte) எனும் பேர்பெற்ற

பிரெஞ்சு தளகர்த்தன் இடாலியின் வடபாகத்தில் படையெடுத்துப்போய், ஆஸ்டிரியர்களைத் தோற்கடித்து அங்கிருந்து துரத்திவிடவே, அவர்களும் பிரான்ஸுடன் சமாதானம் செய்து கொண்டார்கள். இவ்விதம் இங்கிலாந்து தன்னந்தனியே நிற்க நேரிட்டது.

5. நேபோலியனும் நெல்ஸனும் (Nelson).—கி. பி. 1797-ல் பிரிட்டன் துணையின்றித் தத்தளித்துக் கொண்டிருந்தது ; நேசக்கக்ஷிக்காரர் கைவிட்டனர் ; நெதர்லாந்து முழுதும் பிரெஞ்சுக்காரர் வசமிருந்தது ; இராணுவமோ மெலிந்தும், பயிற்சியும் ஆயுதங்களுமின்றியுமிருந்தது ; ஆங்

ஹொரேஷியோ நெல்ஸன்

கில மாலுமிகளும் கலகஞ் செய்யலாயினர். இங்ஙனமிருந்த போதிலும் கப்பற்படைதான் இங்கிலாந்தை அப்பொழுது காப்பாற்றியது. ஜர்விஸ் (Jervis) என்பவன் ஸெண்ட் வின் ஸெண்ட் முனையில் ஸ்பானிஷ் கப்பற் படையைத் தோற்கடித்தான். அதில் ஹொரேஷியோ நெல்ஸன்(HoratioNelson)

ஆறு பெரிய கலங்களை எதிர்த்துப் பெருங் கீர்த்தி யடைந்தான்.

6. நெல்ஸனின் சரிதை—நெல்ஸன் கி. பி. 1758-ல் நார்போக் ஜில்லாவில் ஒரு மத குருவுக்குப் பிறந்தவன். குழந்தைப் பருவத்தில "பயம் என்பது என்ன" என்று அவன் கேட்பானாம். தீரச் செயல்களில் அவனுக்கு விருப்பமிருப்பதாக அப்பொழுதே தெரிந்தது. அவன் பதினாறும் வயதில் இராஜாங்கக் கப்பற்படையில் சிறிய உத்தியோகத்தைப் பெற்றுத் தன் சாமர்த்தியத்தால் தலைவன் பதவிக்கு 21 வயதில் வந்துவிட்டான். கி. பி. 1793-ல் மத்தியதரைக் கடலில் "அகமெம்னன்" கப்பல் தலைவனாக இருந்து அனைவர்க்கும் தைரியம் புகட்டினான். ஆதலின் அவனது வீரர்கள் எதிரிகள் அடித்த குண்டுகளைப் பட்டாணிக் கடலைகளைப்போல் பாவித்தார்கள். ஸெண்ட் வின்ஸெண்ட் யுத்தத்தில் ஆறு கலங்களின் கதியை அவன் தீரமும் திறமையும் காட்டி நிறுத்தியதால் எதிரிகளின் ஏற்பாடுகள் அனைத்தும் நாசமாகிவிட்டன.

7. நயில் நதி யுத்தம்—கி. பி. 1798-ல் மைசூர் அரசன் திப்பு சுல்தானின் தூண்டுகோலால் இந்தியாவை ஜயிக்கலாமென்று எண்ணி இரகசியமாகப் புறப்பட்ட நெபோலியன் முதலில் வழியிலுள்ள ஈஜிப்டு தேசத்தை எதிர்த்தான். அதை அறிந்து ஆங்கில கவர்ன்மெண்டார் நெல்ஸனை அங்கு அனுப்பினார்கள். நயில் நதி முகத்துவாரத்தில் இருந்த பிரெஞ்சுக் கலங்களை நெல்ஸன் ஹதம் செய்தான். அங்கிருந்த பதின்மூன்று கப்பல்களில் இரண்டு கப்பல்களே தப்பியோடின. இச்சண்டையில் நெல்ஸனுக்கு மண்டையில் பெருத்த காயம்படவே அவனைக்கீழ்த்தட்டுக்குக் கொண்டுபோனார்கள். அவனைக் கண்ட இரணவைத்தியன் தான் சிகிச்சை செய்து கொண்டிருந்த வேறு ஒரு நோயாளியை விட்டு நெல்ஸனிடம் ஓடிவந்தான். "அவசரமில்லை. என் துணைவனுக்குச் சொஸ்தம் பண்ணின பிறகு எனக்குச் செய்தால் போதும்" என்று நெல்ஸன் உரைத்தான். என்னே அவனது மனத்தின்

மாண்பு! இந்த வெற்றிக்காக நெல்ஸனுக்குப் பிரபுப் பட்டம் கிடைத்தது.

8. எமியன்ஸ் (Amiens) சமாதானம்.—நயில் நதி யுத்தத்திற்குப் பிறகு மற்ற தேசங்கள் மறுபடியும் இங்கிலாந்தோடு சேர்ந்து கொண்டன. கி. பி. 1801-ம் வருடம் வரை சண்டை தொடர்ந்து நடந்து எமியன்ஸ் சமாதானத்தால் கொஞ்சகாலம் நின்றது. கி. பி. 1802-ல் நெபோலியன் பிரெஞ்சு சக்கரவர்த்தியெனச் சிங்காதனமேறி, ஐரோப்பாவையும், ஈஜிப்டையும், பிரிட்டனுக்குச் சொந்தமான பிற நாடுகளையும் ஜயிக்க ஏற்பாடுகள் பல செய்தான். அம்முயற்சிக்குப் பெரும் தடையாக இருந்தது பிரிட்டனுகையால் அதை முதலில் கைப்பற்றவேண்டு மென்று அவன் தீர்மானித்தான்.

9. இங்கிலீஷ் சானலில் ஆங்கிலக் கப்பல்கள் இல்லாதிருக்கும் தருணம்பார்த்து இங்கிலாந்தின்மீது படையெடுக்க எண்ணி லக்ஷம் வீரர்களை போலோன் துறைமுகத்தில் நெபோலியன் தயாரித்து வைத்தான். "இக் கால்வாயில் போய் வர ஆறுமணி நேரம் அவகாசம் கிடைத்தால் நான் பூமண்டலாதிபதியாகி விடுவது திண்ணம்" என்று அவன் உரைத்தான். ஆங்கிலக் கலங்கள் தேனீக்களைப்போல் கூட்டங் கூட்டமாக உலாவிக்கொண்டிருந்தன. ஆங்கிலேயரை ஏமாற்ற நெபோலியன் ஒரு யுக்தி செய்தான், தன் கப்பற் படை மேற்கிந்தியத் தீவுகளுக்குப் போவதுபோல் போக்குக் காட்டி இரகசியமாக ஐரோப்பாவுக்குத் திரும்பி வந்துவிடும்படி கட்டளை யிட்டான். அவன் எதிர்பார்த்தபடி அதைப் பின்பற்றிப் போன நெல்ஸன் அங்கே எதிரியைக் காணாமல் மோசம் போய்விட்டோமென்று கண்டு ஓடோடியும் வந்தான்.

10. டிரபால்கர் யுத்தம் (Trafalgar) கி.பி. 1805.—இரண்டு படைகளும் டிரபால்கர் முனைக் கருகில் சந்தித்தன. பிரெஞ்சு ஸ்பானிஷ் கலங்கள் 33-ம், பிரிட்டிஷ் கலங்கள் 27-ம் இருந்தன. "ஒவ்வொரு வீரனும் அவ

னவன் கடமையைச் செய்வானென இங்கிலாந்து எதிர் பார்க்கிறது" என்ற நெல்ஸனது வீரவசனம் பொருந்திய கொடி அவன் கப்பலின்மீது பறக்க அதைக்கண்டு ஆங்கிலப்படை குதூகலங்கொண்டு சிங்கநாதம் செய்தது. அதைக் கேட்ட வில்லெனே (Villenue) எனும் பிரெஞ்சுத் தலைவன் தங்கள் ஆட்டம் அவர்களிடம் பலியாது என்று மனங் கலங்கினான். ஆங்கிலேயர் கலங்களை இரண்டு வரிசையாகப் பிரித்துநின்றனர். நெல்ஸன் 'விக்டரி' எனும் கப்பலில் ஏறி முன்னே சென்று பிரெஞ்சுக் கப்பல்களைத் தாக்கி அவர்கள் கலவரிசையைப் பிளந்து விட்டனன். பிரெஞ்சுக் கலங்கள் சின்னபின்னமாய்க் கலைந்து போயின. வெற்றிமாலை சூடியதும், நெல்ஸனுக்கு மரணகாயம் பட்டது கேட்டு யாவரும் துக்கம் கொண்டனர்.

11. "கடவுளுக்கு வந்தனம்; என் கடமையை நான் செய்துவிட்டேன்" என்பதுதான் நெல்ஸன் கூறிய இறுதி மொழி. அவன் ஆண்மையும், தேசாபிமானமும், வேலையின் மீது கருத்தும் எந்நாளும் அழியாப்புகழை அவனுக்கு அளிக்கும். சமுத்திரத்தில் பிரெஞ்சு பலம் ஒடுங்கிவிடவே ஆங்கில ஏகாதிபத்தியம் ஸ்தாபிதமாயிற்று. டிரபல்கார் யுத்தத்தில் கிடைத்தவெற்றியைக் கேள்வியுற்ற பிட் எனும் ஆங்கில முதன் மந்திரி "ஆங்கிலேயர் தங்கள் வீரத்தால் வெற்றி பெற்று தேசத்தைக் காப்பாற்றினர்! அதுபோலவே மற்ற ஐரோப்பிய நாடுகளும் வெற்றியடையும்" என்று கூறினான்.

12. நெபோலியனும் வெல்லிங்டன் பிரபுவும் (Duke of Wellington)—நெல்ஸன் டிரபால்கரில் பிரெஞ்சுக்காரது கப்பல்பலத்தை ஒழித்தாலும் தரைப்படையில் நெபோலியன் நிகரற்ற வீரனாக விளங்கினான். கி. பி. 1805-ம் வருடம் ஆஸ்டிரியர்களும் ரஷ்யர்களும் கூடிய படையை அவ்வீரன் ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்றவிடத்தில் தோற்கடித்ததால் ஐரோப்பா முழுதும் அவன் ஆணைக்குள்ளாகும் போலிருந்தது. பிரிட்டனின் வர்த்தகத்தை நாசம் செய்து விட்டால் அதன் பலம் ஒடுங்கிவிடுமென்று அவன் நினைத்

துப் பிரிட்டனிலிருந்தேனும், அதன் காலனிகளிலிருந்தேனும் எந்த ஆங்கிலக் கப்பலும் பிரெஞ்சுக் துறைமுகங்களுக்கேனும் பிரஞ்சு தேசத்துடன் நேசம் பூண்டிருக்கும் தேசத்திய துறைமுகங்களுக்கேனும் வரக் கூடாதென்று கட்டளையிட்டான். ஆனாலும் ஆங்கில தேசத்திய சாமான்கள் ஸ்பெயின் போர்ச்சுகல் தேசங்களின் வழியாய் பிரான்



வெல்லிங்டன்

ஸுக்குள் வருவதைக் கண்டு நெபோலியன் அவ்விரு தேசங்களையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவரத் தீர்மானித்தான்.

13. வெல்லிங்டன் போர்ச்சுகலில் சண்டை யிடுதல்.— நெபோலியன் ஸ்பெயின்மீது படையெடுத்துத் தன் தம்பி ஜோஸப்பை அச்சிங்காதனத்தில் அமர்த்தினன். அத்தேசத்து ஜனங்கள் யாவரும் ஒருங்கே கலகஞ் செய்யத் தலைப்பட்டனர். ஆங்கில கவர்ன்மெண்டார் ஸ்பானியர்

களிடம் அதிக கருணை பாராட்டி (Sir Arthur Wellesley) ஸர் ஆர்தர் வெல்லெஸ்லி எனும் தலைவனை ஒரு உதவிச் சேனையுடன் அனுப்பினார்கள். இங்கிலாந்தின் கீர்த்திபெற்ற தளகர்த்தர்களில் வெல்லெஸ்லி ஒருவன். அவன் இந்தியாவில் மகாராஷ்டிரருடன் யுத்தஞ் செய்து வெற்றி பெற்றவன். அவனைத் தலைவனாகப் பெற்ற ஆங்கில வீரர்கள் ஒப்பற்று விளங்கினர். பிரெஞ்சுக்காரர் எவ்வளவு முயன்றும் வெல்லிங்டனை போர்ச்சுகலி லிருந்து துரத்த முடியவில்லை. மேலும் வெல்லிங்டன் தன் படைகளை ஸ்பெயினுக்குள் செலுத்தி வெற்றிமேல் வெற்றி யடைந்தான். ஒரு யுத்தத்திலேனும் தோல்வி என்பதை வெல்லெஸ்லி அறியான்.

14. நெபோலியன் மாஸ்கோ நகரின் மீது படையெடுத்துப் போதல் (கி.பி. 1812)—ஆஸ்டிரியாவிலும் ஜர்மனியிலும் நெபோலியன் ஆட்சியைத் தள்ளிவிட தேசீயக் கலகங்கள் மும்முரமாக ஏற்படவே அவன் ஸ்பெயினுக்கு நேரில் வரமுடியவில்லை. இவ்விதமிருக்க, ரஷ்யர்கள் பிரிட்டனிலிருந்து சாமான்கள் வாங்குவதை அவன் அறிந்து அவர்களைத் தண்டிக்க 6 லக்ஷம் மனிதர்களடங்கிய ஒரு பெரும் படையுடன் ரஷ்யா மீது படையெடுத்துப் போனான். அவன் மாஸ்கோவுக்குப் போனதும் அந்நகர் காலியா யிருந்ததை கண்டு தன் சேனையுடன் அங்குக் கொஞ்சகாலம் தங்கினான். ஓர் இரவு ரஷ்யர்கள் அந்நகருக்குத் தீ வைத்து விட்டார்கள். பின்னர் ரஷ்யாவை ஜயிக்கும் எண்ணத்தை விடுத்துப் பிரான்ஸுக்குத் திரும்பி ஓட்டம் பிடிக்கும்படி நெபோலியன் சேனைக்குக் கட்டளையிட்டான். வழியில் குளிராலும், பசியாலும் பீடிக்கப்பட்டு அநேக பிரெஞ்சு வீரர்கள் மடிந்தார்கள். 6,00,000 பேரில் 60,000 பேர்தான் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

15. நெபோலியனின் தோல்வி.—மாஸ்கோவுக்குப் போய் வந்ததுதான் நெபோலியன் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். அதற்குள் வெல்லிங்டன் பிரெஞ்சுக்காரரை ஸ்பெ

பினிலிருந்து வெளியே துரத்தி பிரனீஸ் மலையைக் கடந்து டூலூ (Toulouse) என்ற விடத்தில் கி. பி. 1813-ல் அவர்களை நன்ருய் முறியடித்தான். அவ்வேளை ஆங்கில நேசக் கக்ஷிக்காரர் கிழக்குப் புறமாகப் பிரான்ஸில் புகுந்தனர். நெபோலியன் தன் பதவியையும், பலத்தையுமிழந்து எல்பா எனும் தீவுக்குக் கைதியாக அனுப்பப்பட்டான். அந்நாள் ஐரோப்பிய இராஜ்யங்களின் எல்லைகளைத் தீர்மானிக்க ஒரு சபை கூட்டப்பட்டது.

16. வாடர்லூ யுத்தம்.—அச்சபையின் வேலை முடிவதற்குள் நெபோலியன் எல்பாவிலிருந்து தப்பி யோடி வந்தான். அவனிடம் பற்றுள்ள அனேகர் அவனைச் சக்கரவர்த்தியென்று ஏற்றுக் கொண்டார்கள். வெல்லிங்டன் பெல்ஜியத்தில் படையைச் சேகரித்து யுத்தத்துக்கு ஆயத்தமானன். ப்ரஷ்யர்கள் ப்ளுஷர் (Blucher) என்ற தளகர்த்தன் தலைமையின் கீழ் ஆங்கிலேயருடன் சேரவந்தனர். நெபோலியன் ப்ரஷ்யர்களை அடித்துத் துரத்திவிட்டு, வாடர்லூ (Waterloo) கிராமத்தில் வெல்லிங்டனை எதிர்த்தான். பகல் முழுதும் சண்டை நடந்தது. மாலையில் ப்ரஷ்யர்கள் திரும்பி வருவதைத் தூரத்தில் பார்த்து ஆங்கிலப் படையின் வரிசையைப் பிளக்க நெபோலியன் கடைசி முறை முயன்ருன். ஆனல் பலிக்கவில்லை. வெல்லிங்டன் உடனே தன் சேனையின் முழு பலத்தோடு எதிரிகளைத் தாக்கினன். பிரெஞ்சுப்படை முறிபட்டுப் பின்னேட ஆரம்பித்தது. ப்ரஷ்யர்கள் அவர்களைத் துரத்திக்கொண்டு போயினர். நீண்ட காலமாய் நடந்த இந்த யுத்தமும் முடிவிற்கு வந்தது. ஐரோப்பாவிலும் அமைதி ஏற்பட்டது.

17. சண்டையின் முடிவு.—ஆங்கிலேயர் நெபோலியனைப் பிடித்து ஸேண்ட் ஹெலீனு (St. Helena) என்னும் தீவுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு ஆறு வருடங்கள் கழித்து அவன் மரண மடைந்தான். வியன்னுவில் கூடிய காங்கிரஸ், புரட்சி யுத்தத்துக்கு முன் இருந்த நிலைமையை ஒட்டி ஐரோப்பிய தேச எல்லைகளை நிர்ணயித்தது. பிரான்




பிரெஞ்சுப் புரட்சி யுத்தங்கள்.

வின் பழைய அரச வம்சம் சிங்காதனத்தில் வைக்கப்பட்டது. ப்ரஷ்யாவுக்கு ரைன் நதிக்கரையிலுள்ள சில நாடுகள் கிடைத்தன. பெல்ஜியம் உலாந்தோடு சேர்க்கப்பட்டது. பிரிட்டன் மால்டா, மோரிசு தீவுகளையும், நன்னம்பிக்கை முனைப் பிரதேசத்தையும் கைக்கொண்டது. பிரிட்டனுக்கு அதிக லாபம் கிடைக்கவில்லை. ஆனால் பிரிட்டன் சமுத்திரத்தில் தனது ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்ததால் வியாபாரத்தையும், சாம்ராஜ்யத்தையும் ஒருவித இடையூறுமின்றி யதேச்சையாய் விருத்திபண்ண எளிதாயிற்று.

## அப்பியாசங்கள்

1. பிரெஞ்சு தேசப் புரட்சிக்குக் காரணங்கள் எவை?

2. முதலில் பிரான்ஸுக்கு விரோதமாக எந்த தேசங்கள் சேர்ந்தன?

3. நெல்ஸன் தொடுத்த சண்டைகளை வரிசைப்படி எழுதுக.

4. இப்புரட்சிப் போரில் நடந்த நிலச் சண்டைகளையும், சமுத்திர யுத்தங்களையும் தனியே இரண்டு ஜாப்தாக்களில் எழுதுக.

5. புரட்சிப் போரால் இங்கிலாந்துக்கு என்ன லாபம் கிடைத்தது?

அதிகாரம் 6

## ஆலைகளின் வரவு (தொழிற் புரட்சி)

குடிசைத் தொழில்.—பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் தொழிற்சாலைகள் மிகுதியும் ஏற்படவில்லை. சில ஜில்லாக்களில் குடிகள் வீடுகளிலேயே நெசவுத் தொழில் நடத்தி வந்தனர். ஒவ்வொரு குடிசையிலும் ஒரு கைராட்டினமும் ஒரு தறியுமிருந்தன. குடியானவர்கள் விவசாய வேலை இல்லாத காலங்களில் தறிகளில் வேலை செய்வது வழக்கம். குடும்பத்தார் யாவரும் சேர்ந்து இயன்ற மட்டும் தொழில் செய்து ஆடைகள் நெய்து வந்தனர்.

2. நூதன இயந்திரங்கள்.—இந்த நூற்றுண்டின் பின் பாகத்தில் அனேக இயந்திர சாஸ்திர விற்பன்னர்கள் நூதன இயந்திரங்களைக் கண்டுபிடித்தார்கள். அவைகளைக் கொண்டு நூற்றலும் நெசவுத் தொழிலும் மிகுதியாக நடைபெறலாயின. ஹார்க்ரீவ்ஸ் (Hargreaves) என்பவன் ஸ்பின்னிங் ஜென்னி (Spinning Jenny) என்ற நூற்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தான். அதனுல் ஒரே மனிதன் ஒரே தடவையில் அனேக இராட்டினங்களைச் சுற்ற முடியும். அந்த மாதிரி நெசவுத் தொழில் வேகமாக நடக்க, கார்ட்ரைட் (Cartwright) இயந்திரத் தறிகளை உண்டுபண்ணினுன். இப்படிப்பட்ட தறிகளும், இராட்டினங்களும் நூற்றுக்கணக்காக ஆலைகள் (Factories) என்ற பெரிய கட்டிடங்களில் வைக்கப்பட்டன. முதலில் இயந்திரங்கள் தண்ணீரின் சக்தியால் இயங்கின. ஆதலின் ஓடும் தண்ணீர் ஏராளமாயிருந்த யார்க்ஷயரிலும், லங்காஷயரிலும் நெசவுத் தொழில் நன்கு விருத்தியடைந்தது.

3. இங்கிலாந்தின் மேற்கு, வடக்கு, மத்திய பாகங்களில் நிலக்கரியும், இரும்பும் சுரங்கங்களில் ஏராளமாய் அகப்பட்டன. இரும்பு மலிவாகி விட்டபடியால் இயந்திரங்கள்

இரும்பால் செய்யப்பட்டன. தொழிலாளர்கள் இரும்பு, நிலக்கரி அகப்படும் ஜில்லாக்களில் வந்து கூடவே அங்கு அனேக நகரங்கள் உண்டாயின. இரும்புச் சாமான்கள் செய்யும் தொழில் எங்கும் அதிகரித்தது.

4. நீராவி இயந்திரங்கள்.—முதலில் இயந்திரங்கள் தண்ணீரின் சக்தியால் ஓட்டப்பட்டன என்று கூறினோம். இப்பொழுது ஜேம்ஸ் வாட்(James Watt)என்பவர் இயந்திரங்களை நீராவியால் ஒட்டலாமென்று கண்டுபிடித்தார். இவ்வழி அதிக சுலபமாயும், மலிவாயு மிருந்தது. லங்காஷயரின் சீதோஷ்ண நிலை பருத்தி நெசவுக்கு ஏற்றதாயிருந்ததால் அனேக பஞ்சு ஆலைகள் அங்கு ஏற்பட்டன. லங்காஷயரின் தென்பாகம் முழுதும் ஒரே நகரம் மாதிரி தோற்றும்படி அவ்வளவு ஜனங்கள் அங்குப் பரவிவிட்டார்கள். இரும்புத் தொழிலும் நெசவைப்போல் மேன்மை யடைந்தது. மற்றும் வெளுத்தல், ஜரிகை செய்தல் போன்ற அனேக தொழில்களுக்கும் நீராவி இயந்திரங்களையே உபயோகித்தார்கள்.

5. இருப்புப்பாதைகள்.—மூன்றாவது ஜ்யார்ஜ் அரசு புரியுங்கால் சாமான்கள் உண்டாக்கும் வழிகளில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. இதற்குத் தான் தொழிற் புரட்சி யென்று சொல்வது வழக்கம். ஆலைகளில் சாமான்கள் ஏராளமாகவும், மலிவாகவும், சீக்கிரமாகவும் உண்டு பண்ணப்பட்டன. அக்காலத்தில் போக்குவரவு சாதனங்களிலும் மாறுதல் ஏற்பட்டது. ஜ்யார்ஜ் ஸ்டீபன்ஸன் (George Stephenson) கி. பி. 1814-ல் இரும்புத் தண்டவாளங்களில் ஓடக்கூடிய நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தான். கி.பி. 1830-ல் லிவர்பூரிலிருந்து மான்செஸ்டர் வரையில் முதல் இருப்புப்பாதை போடப்பட்டது. ஸ்டீபன்ஸனின் ராகெட் (Rocket) மணிக்கு 35 மைல் ஓடிற்று. கி. பி. 1814-1850-க்குள் இங்கிலாந்தில் பெரிய இருப்புப்பாதைகள் போடப்பட்டன.

6. இவை காரணமாக ஜனங்களது வாழ்க்கை நிலைமையிலும் பல மாறுதல்கள் உண்டாயின. வீடுகளில் தொழில் செய்யும் வழக்கம் நின்றுவிட்டது. பெரிய ஆலைகள் ஏற்பட்டன. தொழிலாளர்களுக்குக் கூலிதான் ஜீவனுதாரமாயிற்று. பண்டைக் காலத்துத் தொழிலாளர்களுக்கு வேலை அகப்படவில்லை. பெரிய முதலாளிகள் ஆலைகளையும், கட்டிடங்களையும் சொந்தத்தில் கட்டி ஏராளமான லாபமடைந்து வந்தனர். புருஷர்களைக் காட்டிலும், ஸ்திரீகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் குறைந்த கூலி கொடுத்தால் போதுமென்று கண்டு அவர்களையே அதிகமாக வேலைக்கு முதலாளிகள் எடுத்துக் கொண்டார்கள். தொழிலாளர் அதிக நேரம் வேலை செய்து தேகம் மெலிந்துபோய் நோய்க்கிரையாயினர். அதுகண்டு பார்லிமெண்டார், வேலை செய்யும் நேரம், கூலி இவைகளை ஒழுங்குபடுத்த ஆலைச் சட்டங்கள் (Factory Acts) பிறப்பித்தார்கள். அநேக தொழில்களிலிருந்த கூலிக்காரர்களும் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்தித் தமது குறைகளைக் கூறித் தகுந்த கூலி கொடுக்கும்படி வற்புறுத்தினர்.

## அப்பியாசங்கள்

1. கி. பி. 1760 முதல் 1820 வரையில் என்ன நூதன இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன? அவைகளைக் கண்டு பிடித்தவர் யாவர்?

2. 'குடிசைத் தொழில்' என்றால் என்ன?

3. ஆலைகள் ஏற்பட்டதால் என்ன நன்மைகள் உண்டாயின?

4. தொழிற் புரட்சியால் ஜனங்களின் வாழ்க்கை நிலை எங்ஙனம் மாறுபட்டது?

---

அதிகாரம் 7

## விக்டோரியா மகாராணி

## (Queen Victoria)

### தானியச் சட்டங்களை ரத்துசெய்தல்.

**நா**ன்காம் ஜ்யார்ஜூம் நான்காம் வில்லியமும்.—கி. பி. 1820-ல் மூன்றும் ஜ்யார்ஜ் இறந்ததும் அவன் குமாரன் நான்காம் ஜ்யார்ஜ் சிங்காதன மேறினன். அவன் பத்து

பார்லிமெண்டு மகா சபை

வருடம் ஆண்டபின் அவன் தம்பி நான்காம் வில்லியம் பட்டத்திற்கு வந்தான். அப்பொழுது அவனுக்கு வயது 65. ஆகையால் அவன் ஏழு வருடங்கள் தான் ஆண்டான். தன் கடமையைச் செய்வதில் ஆவலும் ஜனங்களிடம் கருணையும் அவன் பாராட்டிய படியால் யாவரும் அவனை நேசித்தனர். அவனுக்குக் கப்பல் யாத்திரைகளில் வெகு பிரியம்.

ஆதலின் அவனை "மாலுமி அரசன்" என்று ஜனங்கள் அழைத்தார்கள். அவனது காலத்தில் பார்லிமெண்டைச் சீர்திருத்தும் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதன்படி தொழிற் சாலைகளின் காரணமாக உண்டான புதிய பட்டணங்களும் பார்லிமெண்டுக்கு மெம்பர்களை அனுப்பும் உரிமை பெற்றன.

விக்டோரியா மகாராணியார்

2. விக்டோரியா மகாராணி.—விக்டோரியா மகாராணி கி. பி. 1837-ல் பட்டத்திற்கு வந்தார். அவர் நான்காம் வில்லியத்தின் தம்பியாகிய கெண்ட் கோமகனின் (Duke of Kent) புதல்வி. கி. பி. 1819-ல் விக்டோரியா பிறந்தாள். ஒரு வருடத்திற்குள் அவள் தந்தை இறந்து

விட்டபடியால் அவள் தாய் தன் இளங் குமாரியைக் கென்ஸிங்டன் அரண்மனையில் செல்வமாக வளர்த்து வந்தாள். தான் மகாராணிப் பதவியை அடையப்போகும் சமாசாரத்தைக் கேட்டதும் அவள் "நான் நன்மையே செய்வேன்" என்று மொழிந்தனள். அவ்வாறே அவர் அரசு புரிந்தார். இதற்குமுன் ஒரு வேந்தனாவது அவரைப் போல் ஜனங்கள் நன்மைக்கு உழைத்ததுமில்லை; ஜனங்கள் நேசத்தைப் பெற்றதுமில்லை. அவர் அரசாட்சியைப்போல் நீடித்தது ஆங்கில சரிதையிலேயே கிடையாது. அவரது ஆட்சியில் எல்லா [illegible] ஆங்கிலநாடு மேன்மையடைந்தது.

3. தானியச் சட்டங்கள்.—பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தி வரையில் இங்கிலாந்தில் விவசாயம் அதிகமாய் நடந்தபடியால், போதுமான அளவு தானியம் விளைந்தது. மிராசுதார் நன்மைக்காக கவர்ன்மெண்டார் அன்னிய நாட்டிலிருந்து வரும் தானியத்தின்மீது வரி விதித்திருந்தபடியால் தானியத்தின் விலை உயர்ந்திருந்தது. தொழிற் புரட்சிக்குப் பிறகு, ஆலைகளில் வேலை செய்யும் கூலிகளுக்கு அது கஷ்டமாய் முடிந்தது. இங்கிலாந்தில் விளையும் தானியமோ போதவில்லை. ஏழைகளுக்கு இன்னும் அனேக துன்பங்கள் உண்டாயின. சண்டைகளில் நேரிட்ட நஷ்டத்தை ஈடு பண்ண கவர்ன்மெண்டார் வரியையும் உயர்த்தலாயினர். கூலியும் மிகவும் குறைவாகவே கிடைத்து வந்தது.

4. தானியச் சட்டத்திற்கு விரோதக் கட்சி.—நாளுக்கு நாள் விருத்தி யடைந்து வரும் ஜனத்தொகைக்குப் போதுமான தானியம் இங்கிலாந்தில் விளையாதென்றும் வெளிநாட்டிலிருந்து குறைந்த விலைக்கு வரும் தானியத்தின்மீது வரி போட்டு அதனால் சிலர் லாபமடைவது அக்கிரமமென்றும் யாவரும் கருதினர். அனேக நகரங்களில் கலகங்கள் ஏற்பட்டன. கி. பி. 1838-ல் தானியச் சட்டத்திற்கு விரோதமாக ஒரு சங்கம் மான்செஸ்டரில் ஸ்தாபிக்கப்பட்டது பிரசங்க வன்மையுடையவர்களான ரிச்சர்ட் காப்டன், ஜான் பிரைட் (Richard Cobden and John Bright) என்பவர்கள்,

நகரம் நகரமாகச் சென்று தானிய வியாபாரத்தில் வரி ஏது மின்றி சர்வ சுதந்தரம் வேண்டுமென்று கேட்க ஜனங்களைத் தூண்டினார்கள்.

5. தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டமை.—கி.பி. 1845-ல் அயர்லாந்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. அவர்களுக்கு முக்கிய உணவான உருளைக் கிழங்கு அவ்வருடம் விளையவே யில்லை. பஞ்சத்தினால் அநேகர் நோய்கண்டு மாண்டனர். அப்படிப்பட்ட துயரம் பெருத்த கலகத்தை விளைவிக்குமோ என்று பயந்து ராபர்ட் பீல் (Robert Peel) என்ற பிரதான மந்திரி கி. பி. 1846-ல் தானியச் சட்டங்களை ரத்துசெய்துவிட்டார். அது முதல் பிரிட்டனில் இறக்குமதி வரியின்றி வியாபாரம் மிகுதியும் வளர்ந்தது. கைத்தொழில் ஆலைகளுக்கு மலிவாக சாமான்கள் அன்னிய நாட்டிலிருந்து வர ஆரம்பித்தபடியால் ஆங்கில வர்த்தகம் விருத்தி யடைந்தது. அது முதல் இங்கிலாந்தில் தடையற்ற வர்த்தகம் (Free trade) நடந்து வருகிறது.

---

## அதிகாரம் 8

## கிரிமியன் யுத்தம் (Crimean War)

போரின் துவக்கம்.—மகாராணியின் ஆட்சியில் அநேக யுத்தங்கள் நேரிட்டன. அவைகளில் அநேக இராணுவ வீரர்களும் மாலுமிகளும் புகழ்பெற்றார்கள். கி.பி. 1854 முதல் கி. பி. 1856 வரையில் இங்கிலாந்து கிரிமியன் போரில் இறங்கி யிருந்தது. டான்யூப் நதிப் பிரதேசத்தில் துருக்கியருக்குச் சொந்தமாயிருந்த நாடுகளை ரஷ்யா கைப் பற்றியது. ரஷ்யாவிற்கு விரோதமாக பிரிட்டனும், பிரான்ஸும் துருக்கியுடன் சேர்ந்து கொண்டன. ரஷ்யர்களை அவ்விடமிருந்து துரத்திய பின்னரும், கருங்கடலில் ரஷ்யாவிற்குச் சொந்தமாயிருந்த கிரிமியா தீபகல்பத்தில் ஸிபாஸ்டபூல் (Sebastopol) என்ற பெரும் அரணைக் கைப்பற்ற

நேசக் கக்ஷிக்காரர் தீர்மானித்தனர். ஆனாலும் அவர்கள் ஆல்மா சண்டையில் ஜயித்தவுடன் ஸிபாஸ்டபூலுக்கு நேரே போகாமல் தாமதித்ததால் ரஷ்யர்களுக்கு அக்கோட்டை யைப் பலப்படுத்த அவகாசம் ஏற்பட்டது.

2. பாலக்லாவா (Balaclava) யுத்தம்.—ஆறு மைலுக்கு அப்பாலுள்ள பாலக்லாவா என்ற கிராமத்தில் உணவுப் பொருள் முதலியவைகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு நேசக் கக்ஷிக்காரர் அக்கோட்டையை முற்றுகை போட்டார்கள். முற்றுகை சுமார் இரண்டு வருட காலம் நடந்தது. ஒரு சமயம் பாலக்லாவாவில் நேசக் கக்ஷிக்காரர் நுழையா வண்ணம் ரஷ்யர் தடுக்க முயன்றார்கள். அந்த யுத்தத்தில் ஆங்கிலக் குதிரைப் படையில் இரண்டு பகுதிகள் எதிரியை வீரமுடன் தாக்கின. ரஷ்யரது படை மத்தியி லிருந்த பீரங்கிகளைத் தாக்கும்படி மதிப் பிசகான உத்திரவு பிறந்ததும் அக்குதிரைப் படையிலுள்ள ஒவ்வொரு வீரனும் பேராபத்து விளையுமென்று நன்கு தெரிந்தும் பின் வாங்கா மல் தீரமுடன் முன் சென்று பலியாயினன். 607 வீரர்கள் போனதில் 198 பேர்தான் திரும்பி வந்தனர். அச்செய்தி யைக் கேட்டு ஐரோப்பியர் யாவரும் வியப்புற்றார்கள். அதைப் பற்றி டென்னிஸன் அழகிய கவியொன்று இயற்றி யிருக்கிறான். (Charge of the Light Brigade)

3. இங்கர்மான் யுத்தம்.—(Battle of Inkerman) மேற் கூறிய சம்பவங்கள் நிகழ்ந்த இரண்டு வாரங்களுக்கெல் லாம் இன்னொரு சண்டை நடந்தது. எங்கும் மூடுபனி பரவி யிருந்ததால் ரஷ்யர் நெருக்கத்தில் வரும் வரையில் ஆங்கிலே யருக்குத் தெரியவில்லை. இங்கர்மான் பீடபூமியில் சொற்ப பிரிட்டிஷ் படைதான் இருந்தது. தேனீக்களைப் போன்று கும்பலாக ரஷ்யர்கள் உயர ஏறித் தாக்கியும் பிரிட்டிஷ் வீரர் களின் தீரத்தால் அவர்கள் துரத்தப்பட்டார்கள்.

4. நைடிங்கேல்.—இங்கர்மான் யுத்தம் முடிந்த பிறகு நேசக் கக்ஷிப் படைகள் மாரி காலத்தின் கொடுமையால் பீடிக் கப்பட்டு வருந்தின. ஜுரம் முதலிய நோய்கள் பரவ ஆரம்

பித்தன. அதைக் கண்டு யுத்த இலாகா அதிகாரிகள் பிளா ரென்ஸ் நைடிங்கேல் (Miss Florence Nightingale) என்னும் பெண்மணியை ஸ்கூடரியிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பினர். அவள் பல தாதிமாருடன் அங்குப்போய் கவனமாகவும், முழுமனதுடனும் நோயாளிகளைப் பார்த்துப் பராமரித்துவந்ததால் அநேகர் குணமடைந்தார்கள். இரவும் பகலும் ஒரு பிரதியுபகாரத்தையும எதிர்பாராமல் உழைத்து அவள் என்றுமழியாப் புகழ்பெற்றாள்.

நைட்டிங்கேல்

5. பாரிஸ் சமாதானம்.—எவ்வளவு துயர முற்றுலும் முற்றுகையை விடாது மேன்மேலும் அக்கோட்டையை நேசக் கக்ஷிக்காரர் தாக்கி வரவே ரஷ்யர்கள் கடைசியில் அதை விட்டுவிட்டார்கள். அத்துடன் யுத்தம் முடிவிற்கு வந்தது. கி. பி. 1856-ல் பாரிஸில் நடந்த சமாதானத்தின்படி துருக்கியின் சாம்ராஜ்யத்தைப் பின்னப் படுத்தக்கூடாதென்றும் கருங்கடலில் ஒரு தேசத்தாரும் போர்க் கலங்களை வைத்திருக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

அதிகாரம் 9

## பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அபிவிருத்தி

விக்டோரியா மகாராணியார் காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அதிக விருத்தியடைந்தது. வெள்ளைக் காரர்கள் குடியேறிய கனடா, ஆஸ்டிரேலியா, தென் ஆப்பிரிக்கா தேசங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் குடியரசாகி இருந்து வருகின்றன. 19-வது நூற்றாண்டில் பிரிட்டனிலிருந்து அனேகர் அன்னிய நாட்டிற்குக் குடிப்போனார்கள். பிரெஞ்சுக்காரரிட மிருந்து ஜயித்தது முதல் கனடா அதிசயிக்கத் தக்கவாறு மேன்மையடைந்து கி. பி. 1867-ல் சுயாட்சி பெற்றது. ஆஸ்டிரேலியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின் அனேக ஆங்கிலேயர் அங்குப்போய்த் தங்கலாயினர். அவர்களும் கனேடியர்போல் கி. பி. 1901-ல் குடியரசைப் பெற்றனர். தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலக் குடிகளுக்குக் கொஞ்சம் துன்பம்நேரிட்டது. அங்கு அவர்களுக்குமுன்னமே 'போயர்' (Boer) என்று பெயருள்ள உலாந்து தேசத்தார் சென்று, அத்தேசத்து அதிபர்களாகி ஆண்டு வந்தனர். ஆங்கிலேயர் அதிகமாகி விடவே போயர்கள் அவர்களைத் துன்புறுத்தலாயினர். அதுகண்டு மனங்கொள்ளாமல் இங்கிலாந்து கி.பி. 1899-ல் யுத்தத்திற்கு ஆரம்பித்தது. தென் ஆப்பிரிக்காவின் ஆதிபத்தியம் யாருடையது என்று போயரும் பிரிட்டானியரும் சண்டையிட்டதால் அப்போருக்கு போயர் யுத்தமெனப் பெயர் வழங்கியது. இராணியார் வாழ்நாளுக்குப் பிறகுகூட யுத்தம் தொடர்ந்து நடந்தது. ராபர்ட்ஸ் (Lord Roberts) எனும் தளகர்த்தர் பெரிய சேனையோடு தென் ஆப்பிரிக்காவுக்குப் போய், போயரை முறியடித்துப் பிரிட்டிஷ் ஜயக்கொடியை அங்கு நாட்டினார். கி. பி. 1902-ல் தென் ஆப்பிரிக்காவில் அமைதியும் ஏற்பட்டது.

2. மேற்கூறிய சுயாட்சியுடைய காலனிகள் தவிர, அனேக நாடுகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் அடங்கியிருக்கின்றன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுவில்

ஸூயஸ் கால்வாய் (Suez Canal) ஆங்கிலேயர் வசம் வந்தது. அதன் பாதுகாப்பின் நிமித்தம் ஆங்கிலேயர் ஈஜிப்டின் இராஜாங்க விஷயங்களில் பிரவேசிக்க வேண்டியிருந்தது. அதனால் அத்தேசத்து ஜனங்கள் அதிருப்தி யடைந்து ஈஜிப்டிலும், ஸூடானிலும் கலகஞ் செய்தார்கள். ஈஜிப்ட் கலகத்தை ஆங்கிலேயர் சுலபமாக அடக்கிவிட்டார்கள். ஸூடானிலோ கலகக்காரர் பிரபலமடைந்து ஜெனரல் கார்டனையும் (General Gordon) அவனது சேனையையும் கார்ட்டூம் (Khartum) என்ற பட்டணத்தில் சூழ்ந்துகொண்டனர். உதவிச் சேனை வரத் தாமதித்ததால் கார்டனும் மற்ற ஆங்கிலப் படைவீரர்களும் இறக்க நேரிட்டது. அதன் பிறகு லார்டு கிச்சனர் (Lord Kitchener) அங்கு அனுப்பப்பட்டார். அவர் கலகத்தை முற்றிலும் அடக்கிவிட்டார். அதுமுதல் ஈஜிப்டு தேசத்தின் சுல்தான் ஆங்கில சக்கிரவர்த்திக்குக் கீழ்ப்படிந்து நடந்து வருகிறார். பிரிட்டிஷ் கவர்னர் ஸூடானை ஆண்டு வருகிறார்.

3. இந்திய சாம்ராஜ்யம்.—18-வது நூற்றாண்டில் பிரெஞ்சு பலம் இந்தியாவில் ஒடுங்கியதென்றும் பிரிட்டிஷ் ஆதிபத்யம் ஆரம்பமாயிற்றென்றும் நீங்கள் முந்திய அத்தியாயத்தில் படித்தீர்கள். அதுமுதல் கம்பெனியார் அனேக மாகாணங்களை ஜயித்து இந்தியாவில் மூன்றில் இரண்டு பங்குக்கு அதிபர்களாகிவிட்டனர். மிகுந்திருந்த சுதேச அரசர்களும் கம்பெனியின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியச் சம்மதித்தார்கள். ஆனால் கி. பி. 1857-ல் டில்லி, கான்பூர் முதலிய இடங்களில் சிப்பாய்கள் ஆங்கில அரசுக்கு விரோதமாகக் கலகம் விளைத்தனர். கலகத்தை அடக்குவது மிகக் கடினமாகவேயிருந்தது. இனி இந்தியாவை ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஆள்வது தகுதியல்ல என்று நினைத்து இந்திய இராஜாங்கத்தை இராணியாரே ஏற்றுக்கொண்டு இந்தியா சக்கரவர்த்தினி என்று பட்டம் வகித்து 1858-ல் இராஜ விளம்பரம் (Royal Proclamation) ஒன்றும் வெளியிட்டனள்.

அதிகாரம் 10

# நூதன விஷயங்கள்—இராணியார் ஆட்சியின் சிறப்பு

இருப்புப் பாதைகள்.—முதலில் ரயில் பிரயாணம் செய்வது என்றால் பணம் அதிகம் செலவாகும். ஆதலின் ஏழைகளுக்கு அது எட்டாது. ஒரு மைலுக்கு ஒரு பென்னி வீதம் வாங்கி இருப்புப்பாதை வண்டிகள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லவேண்டுமென்று கி. பி. 1846-வது ஆண்டில் சட்டம் ஒன்று ஏற்பட்டது. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள்தான் அதிகமென்றும் அவர்களால்தான் இருப்புப்பாதைகளுக்கு லாபமென்றும் மூன்றாவது வகுப்பு வண்டிகளை அதிகமாகப்போட ஆரம்பித்தனர். முந்தி, கூலிகள் தாங்கள் பிறந்த கிராமங்களிலேயே வாழ்நாட்களைக் கழிப்பார்கள். இருப்புப்பாதைகள் ஏற்பட்ட பிறகு எங்கு வேண்டுமானாலும் கூலிகள் இஷ்டம்போல போய் நல்ல வேலையையும், கூலியையும் பெற மிகுதியும் சாதகம் உண்டாயிற்று.

2. நீராவிக் கலங்கள்.—இது வரையிலு மிருந்த பாய்மரக் கப்பல்களுக்குப் பதிலாக நீராவிக் கப்பல்கள் ஏற்பட்டன. முதல் நீராவிக் கப்பல் மணிக்கு 8 மைல் வேகத்துடன் 14 நாட்களில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்தது. இப்பொழுதோ லண்டனிலிருந்து நியூயார்க்குக்கு 5 நாட்களில் போய்விடலாம். பிரிட்டிஷ் கப்பற்படையிலுள்ள சில படகுகள் மணிக்கு 33-மைல் செல்லும். முதலில் கப்பல்கள் மரத்தால் கட்டப்பட்டன. தற்காலத்துப் பெருங் கலங்கள் எஃகினால் செய்யப்படுகின்றன. அவைகளில் மின்சார விளக்குகளும், சாப்பாட்டறையும், படுக்கையறையும், விளையாட்டறைகளும், இன்னும் சகலவித சௌகரியங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

3. தந்தி.—கி. பி. 1866-ம் வருஷத்தில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் நீர் மட்டத்தின் கீழ் செல்லும் தந்திக்

கம்பிகள் போடப்பட்டன. அப்படிப்பட்ட அனேக தந்திக் கம்பிகளால் பூலோகத்தின் நானு தேசங்களும் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இப்பொழுது கம்பிகளே இல்லாமல் சமாசாரத்தை அனுப்பும் நூதன வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகாச அலைகளின் மூலம் சப்தம் சென்று கேட்பதால் இதற்குத் தரங்கத் தபால் (Wireless) என்று பெயர். இந்தத் தரங்கத் தபாலின் மூலமாய் நடு சமுத்திரத்தில் தத்தளிக்கும் கலங்களிலிருந்து உதவி யனுப்பும்படி எந்த தேசத்திற்கு வேண்டுமானாலும் சமாசாரம் அனுப்பலாம். ஆகையால் சமுத்திர யாத்திரைகளில் உண்டாகும் அபாயங்கள் மிகக் குறைந்துவிட்டன.

4. தபால்.—கி. பி. 1840-ல் ரோலண்டு ஹில் (Rowland Hill) என்னும் பெரியார் பென்னித் தபால் கண்டு பிடித்தார். தபால் கூலி முந்தி அதிகமாயிருந்தது. ஏழை ஜனங்களுக்கும், வர்த்தகத்துக்கும் அதுபெருந் தடையாக இருந்தது. பின்னர், கார்டுகளில் சமாசாரங்கள் எழுத உரிமையும் கிடைத்தது. ஒருவர்க்கொருவர் பணமனுப்பும் வேலை முதலில் ஒரு கம்பெனியால் நடத்தப்பட்டு வந்தது. அதனை இராஜாங்கத்தார் எடுத்துக்கொண்டு விட்டார்கள். தபாலாபீஸில் ஸேவிங்ஸ் பாங்க் என்னும் க்ஷேம நிதிகளும் ஏற்பட்டதால் ஏழைகள் தங்கள் கையில் மிஞ்சி யிருக்கும் சொற்பப் பணத்தை அதில் போட்டுச் சேர்த்து வைக்கச் சாதகமாயிற்று.

5. கல்வி அபிவிருத்தி.—19-வது நூற்றாண்டு ஆரம்பத்தில் சர்ச்சுகளில் சில பள்ளிக்கூடங்கள் உண்டாயின. இராஜாங்கத்தார் அவைகளுக்குப் பணஉதவி கொடுத்தாலும் கல்வி தேசமெங்கும் பரவுவதற்கு அவைகள் போதவில்லை. கி. பி. 1870 முதல் பிள்ளைகள் படிப்பை இராஜாங்கத்தார் நன்கு கவனிக்கலாயினர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் உண்டாக வேண்டுமென்று ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அனைவரும் கட்டாயமாகக் கற்கவேண்டுமென்று கி.பி. 1876-ல் ஒரு சட்

டம் ஏற்பட்டது. சில வருஷங்களுக்குப் பிறகு பிரதமப் படிப்பு எல்லாச் சிறுவர்களுக்கும் சம்பளம் ஏதுமின்றி இனமாகக் கற்பிக்குமாறு திட்டங்களுண்டாயின.

6. இராணியார் ஆட்சியின் சிறப்பினைப்பாராட்ட கி.பி. 1887-லும் 1897-லும் இரண்டு கொண்டாட்டங்கள் நடந்தன. கி.பி. 1897-ல் நடந்ததற்கு டயமண்டு ஜூபிலி (Diamond Jubilee) என்று பெயர். இரண்டு தடவைகளிலேயும் சாம்ராஜ்யத்திலுள்ள பிரதான புருஷர்கள் இராணியாரைக் கௌரவப்படுத்த இங்கிலாந்துக்கு வந்தார்கள். இராணியார் குடும்பத்தோடு வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலுக்குத் தொழப் போகும் வழி முழுதும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்று வாழ்த்தினார்கள். இக்கொண்டாட்டம் லண்டனில் மாத்திரமன்றி மற்றெல்லாப் பட்டணங்களிலும் நடைபெற்றது. இம்மேன்மை பொருந்திய மகாராணியார் கி. பி. 1901-ல் மரணமடைந்ததும் யாவரும் துக்கித்தனர். நெடுநாளாக இளவரசரென்று மதிக்கப்பட்ட அவருடைய மூத்த குமாரர் ஏழாவது எட்வர்டு சிங்காதனமேறினார்.

## அப்பியாசங்கள்

1. தானியச் சட்டங்கள் எவை? ஏன் அவை ரத்து செய்யப்பட்டன?

2. கிரிமியன் யுத்தத்தில் ஆங்கிலேயர் சேரக் காரணமென்ன?

3. கிரிமியன் யுத்தத்து முக்கிய சம்பவங்களைக் காட்டும் படம் ஒன்று வரைக

4. மகாராணியார் காலத்தில் போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் எவை?

5. பிளாரென்ஸ் நைடிங்கேல், கார்டன், ரோலண்ட் ஹில், ராபர்ட்ஸ் இவர்களைப் பற்றி முக்கிய விஷயங்களைக் கூறுக

6. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள சுயாட்சி புரியும் தேசங்களையும் இதர தேசங்களையும் எழுதுக.

அதிகாரம் 11

## ஏழாவது எட்வர்டும் ஐந்தாம் ஜ்யார்ஜும்

**சா**மோபாய எட்வர்டு. — (1901–1910) இளவரசராக இருக்கையில் எட்வர்டு இராஜாங்க அலுவல்களைக் கவனிப்பதில் இராணியாருக்கு உதவிபுரிந்து தம் நாட்டிலும் பிற நாட்

ஏழாம் எட்வர்டு

டிலும் உள்ள ஜனங்களின் நேசத்தைப் பெற்றார். அவரைப் போல் வேறெந்த தேச மன்னனும் தனது குடிகளால் கொண்டாடப்படவில்லை. இங்கிலாந்திற்கும் பிறநாடுகளுக்

கும் நேசத்தை விருத்தி பண்ணுவதிலேயே கண்ணும் கருத்துமா யிருந்தார். அவரது காலத்தில் ஐரோப்பா முழுதும் அமைதியாயிருந்தது. இங்ஙனம் அனைவருடனும் சமாதானமாக வாழ விரும்பி அவர் உழைத்ததற்காக வெகு விசுவாசத்துடன் யாவரும் அவரை இன்றும் நினைக்கிறார்கள்.

2. கி. பி. 1910-வரு மே-மீ 6-உ எட்வர்டு சக்கரவர்த்தி சொற்ப நாள் வியாதியாயிருந்து மரணமடைந்தார். அச்சமாசாரத்தைக் கேட்கவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுதும் துக்க சாகரத்தில் ஆழ்ந்தது. அவரது மேன்மையான குணங்களுக்கும் செயல்களுக்கும் அவரை வியந்த பிற நாட்டினரும் தங்கள் துயரத்தை வெளியிட்டார்கள். மறுநாள் அவரது புத்திரர் ஐந்தாம் ஜ்யார்ஜ் முடிசூடினர்.

3. தந்தையைப் போலவே ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியும் சகல நற்குணங்களும் பொருந்தியவர். கி. பி. 1911-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 2-உ ஜ்யார்ஜ் மன்னரும் மேரி மகாராணியும் இந்தியாவுக்கு வந்து டில்லியில் இந்தியச் சக்கரவர்த்தியென முடிசூடினர். இந்தியாவில் வந்து மகுடாபிஷேகம் செய்துகொண்ட ஆங்கில அரசர் அவர் ஒருவரே. அவரை மரியாதை செய்ய அனேக மகாராஜாக்களும் இதர ஜனங்களும் டில்லியில் போய்க் கூடினார்கள். அந்நாளை நமது நகரங்களிலும் கிராமங்களிலும் திருவிழாவாக அனைவரும் கொண்டாடினர். அன்று முதல் ஒவ்வொரு வருடமும் டிஸம்பர்-மீ 12-உ தர்பார் தினமென்று எங்கும் கொண்டாடப்படுகிறது. அன்று வரையில் கல்கத்தா நகரம் இந்தியாவுக்குத் தலைநகராக இருந்து வந்தது. அன்று முதல் டில்லி நகரமே நமது தேசத்துக்குத் தலைநகராகி விளங்குகின்றது.

4. ஜர்மன் மகாயுத்தம்; காரணங்கள்.—நமது சக்கரவர்த்தியின் ஆளுகையில்தான் பெரிய ஐரோப்பிய யுத்தம் நடைபெற்றது. இது போன்ற கோரயுத்தம் இதற்கு முன் நடந்ததில்லை. இப்போருக்கு முக்கிய காரணம் ஜர்மானியரின் இராணுவபல கர்வமும் பேராசையுமே. பத்தொன்பதாவது

நூற்றுண்டின் இறுதியில் ஜர்மன் வர்த்தகமும் செல்வமும் வளரலாயின. ஜர்மன் சக்கரவர்த்தியாகிய இரண்டாவது வில்லியம் கெய்ஸர் எவ்விதத்திலேனும் ஜர்மன் சாம்ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்த விரும்பினன்; ஜர்மானியர் குடிப்போக அயல் நாடுகளைக் கைக்கொள்ள நினைத்தனன்; வியாபாரக் கலங்களைப் பாதுகாக்க, போர்க் கலங்களைத் தயாரிக்கலாயினன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் தோற்கடித்து ஜர்மன் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று அவ்வேந்தன் மனோராஜ்யம் பண்ணினன். ஜர்மன் இராணுவம் ஐரோப்பாவில் உள்ள படைகளில் முதன்மையாக நிலைபெற்றிருந்தது. அதன் கப்பற்படையோ பிரிட்டிஷ் படைக்கு அடுத்தது என்று சொல்லலாம். ஏதாவது ஒரு முகாந்திரத்தைக் கொண்டு பிரான்ஸோடு போர் தொடுக்க கெய்ஸர் ஆவலுடன் இருந்தான் என்று யாவரும் நினைத்தனர்.

5. இவ்விதம் போர் செய்யக் காத்திருந்த ஜர்மானியருக்கு ஏற்ற தருணம் ஒன்று கிட்டியது. ஆஸ்டிரியா இளவரசன் பாஸ்னியா மாகாணத்துத் தலைநகராகிய ஸராஜீவோவில் (Sarajevo) கி.பி. 1914-ல் கொலையுண்டனன். ஸெர்வியா தேசத்தினர் அதில் சம்பந்தப்பட்டதால் அவர்களுக்குத் தக்க சிக்ஷை செய்யும்படி ஸெர்வியாவை ஆஸ்டிரியர் வற்புறுத்தினர். ஆஸ்டிரியர்களின் நிபந்தனைகளுக்கெல்லாம் உட்படுவது அவமானத்துக் கிடமாகும் என்று நினைத்து ஸெர்வியா இணங்க மறுத்துவிட்டது. பிறகு மற்ற ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து மத்தியஸ்தம் பண்ணுமாயின் அதற்குக் கட்டுப்படுவதாய் ஸெர்வியா சொல்லிற்று. ஆஸ்டிரியா ஜர்மனியால் தூண்டப்பட்டு அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆகையால் போர் தொடங்கியது.

6. பிரிட்டன் போரில் சேர்ந்த காரணம்.—ஆஸ்டிரியா தன் சேனையைச் சேகரித்தது. கி.பி. 1882-ல் உண்டாகிய உடன்படிக்கையின்படி ஜர்மானியும், ஆஸ்டிரியாவும், இடாலியும் கட்டுப்பட்டுக்கொண்டிருந்தன. அதன்படி ஜர்மனி ஆஸ்டிரியாவுக்கு உதவி செய்ய வந்தது. ஆனால் இடாலி

சேரவில்லை. ஸெர்வியர்களைக் காப்பாற்ற ரஷ்யர் படை ஒன்று அனுப்பினர். பிரான்சு தேசம் ரஷ்யருக்குத் துணை புரிய நிர்ணயித்தது. யாது செய்வதென்று பிரிட்டன் தயங்கிக்கொண்டிருந்தது. பெல்ஜியத்தின் ஜோலிக்கு ஒருவரும் போகக்கூடாதென்று ஏற்கெனவே ஓர் உடன்படிக்கை உண்டு. அதற்கு முற்றிலும் விரோதமாகக் கெய்ஸர் தன் படைகளைப் பாரிஸுக்குக் குறுக்கு வழியென பெல்ஜியத்தின்மீது விழுந்துபோக உத்திரவிட்டனன். பெல்ஜியர்கள் சண்டை போட்டும் தடுக்க முடியவில்லை. அந்நாட்டின் அழகிய வயல்களெல்லாம் ஜர்மானியரால் பாழாயின; வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டன. கிராமங்களைக் கொளுத்தியும், ஸ்திரீகளையும் பாலர்களையும் இரக்கமின்றிக் கொன்றும் ஜர்மானியர் அக்கிரமம் செய்தனர். அதைக் கண்டு மனங் கசிந்து பிரிட்டன் உடன்படிக்கையை நிறைவேற்ற உறுதி பூண்டு ஆகஸ்டு-மீ 4-உ சண்டையில் பிரவேசித்தது.

7. மேற்குக் களம்.—ஜர்மானியர் முந்தியே யாவையும் தயாரித்துக்கொண்டு திடீரென்று பிரான்ஸ் மேல் விழுந்து தாக்கியபடியால் நேசக் கக்ஷிக்காரருக்கு முதலில் கொஞ்சம் திண்டாட்டமாயிற்று. பிரான்ஸின் உதவிக்காக ஒரு சிறிய ஆங்கிலப் படை ஸர் ஜான் பிரெஞ்சு (Sir John French) என்னும் தளகர்த்தரின் கீழ் அனுப்பப்பட்டது. அவை மான்ஸ் (Mons) என்னுமிடத்தில் ஜர்மன் படையைச் சந்தித்தன. ஜர்மானியர்முன் நின்று சண்டைபோட இயலாமல் அப்படை பின்னேட்டம் பிடித்து மாரன் (Marne) நதிக் கரைக்கு வந்து சேர்ந்தது. பாரிஸ் நகரம், ஜர்மானியர் முற்றுகையிடுவர் எனத் தெரிந்து தயாராக இருந்தது. பின்னேடிய பிரிட்டிஷ் படை கலக்கமடைந்திருக்குமென்று எண்ணிய ஜர்மன் தளகர்த்தர்கள் ஆங்கிலேயரையும், பிரெஞ்சுக்காரரையும் எளிதில் துரத்திவிடலாம் என்று கருதி எதிர்த்தார்கள். ஆனல் ஆங்கிலேய வீரர்கள் ஆவேசத்துடன் போர்புரிந்து ஜர்மானியர்களை எயின் (Aisne) நதிக்கப்பால் துரத்திவிட்டார்கள். இனிப் பாரிஸைத் தாக்குவது

அசாத்தியமெனக் கண்ட ஜர்மானியர் இங்கிலீஷ் சானலி லுள்ள துறைமுகங்களைத் தாக்க யத்தனித்தனர். யூப்ரிஸ் என்ற விடத்தில் நேசக் கக்ஷிக்காரர்கள் 10 நாள் கடும்போர் புரிந்து ஜர்மானியரைத் தடுத்துவிட்டார்கள்.

8. கிழக்குக் களம்.—கிழக்கில் ரஷ்யர்கள் தங்கள் படைகளை ஆஸ்டிரியாவுக்குள் கொணரவே ஜர்மானியர் ஆஸ்டிரியாவின் உதவிக்குப் போய் ரஷ்யர்களை அடித்து அவர்களை அதிக நஷ்டப்படுத்தினர். பின்னர், அவர்களைத் துரத்தித் தங்கள் சேனைகளை ரஷ்யாவிற்குள்ளும் கொண்டு போய்விட்டார்கள். கி. பி. 1917-ல் ரஷ்யாவில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. இரண்டாவது நிகோலஸ் (Nicholas II) என்ற அரசனைச் சிங்காதனத்திலிருந்து விலக்கி விட்டுக் குடியரசு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பால்ஷ்விக்ஸ் (Bolsheviks) என்ற கொடிய கட்சிக்காரரிடம் அதிகாரம் வர அவர்கள் ஜர்மானியருடன் உடன்படிக்கை செய்து கொண்டுவிட்டார்கள். 1915-ல் இடாலி, நேசதேசங்களுட னும் துருக்கி ஜர்மனியுடனும் சேர்ந்தன. துருக்கியர் ஸூயஸ் கால்வாயைத் தாக்கினர்; ஆனால் ஜயம் பெறவில்லை. இந்தியாவிலிருந்து ஆங்கிலப் படை பாஸ்ராவில் இறங்கி மெஸபடோமியா வழியாகப் பாக்டாட்டுக்கு போய்த் துருக் கிக்கு விரோதமாகச் சண்டையிட்டன.

9. கப்பற் சண்டைகள்.—பிரிட்டனுக்கு ஆகார சாமான் கள் கொண்டுவரும் வர்த்தகக் கலங்களை உடைத்தெறிந் தால், பிரிட்டனை எளிதில் தோற்கடித்து விடலாமென்று எண்ணி ஜர்மன் போர்க் கலங்கள் பிரிட்டிஷ் வர்த்தகக் கப் பல்களை எதிர்த்தன. சிலி (Chile) தேசத்துக் கரைக்கருகில் சில பிரிட்டிஷ் கலங்கள் சமுத்திரத்தில் அமிழ்த்தப் பட்டன. கி. பி. 1916 ஜூன் மாதம் அட்மிரல் ஜெல்லிகோ (Admiral Jellicoe) என்பவர் ஜட்லாந்துக்கருகில் ஜர்மன கப்பற் படையை முறியடித்து பிரிட்டிஷ் சமுத்திராதிபத்தி யத்தை நிலை நிறுத்தினர். ஜர்மன் கலங்கள் வெளிக்கிளம்ப வும் பயந்தன. நீரில் மூழ்கிச் செல்லும் (Sub-marines)

கப்பல்களால் பிறநாட்டுக் கப்பல்களைத் தொலைக்க ஜர்மானியர் முயன்றார்கள். அதுவரையிலும் சண்டையில் பிரவேசியாத தேசங்கள்கூட ஜர்மானியரின் அக்கிரமங்களைக் கண்டு அருவருப்புற்றன. அமெரிக்காவின் கப்பல்களை அமிழ்த்திய காரணத்தால் 1917-ல் ஐக்கிய இராஜ்யம் நேசக் கக்ஷியாருடன் சேர்ந்துகொண்டது. நேசக் கக்ஷியாரும் தகுந்த வழி கண்டுபிடித்து ஜர்மானியரின் நீர்மூழ்கிக்கலங்களை நாசப்படுத்தி வந்தனர். ஆதலின் ஜர்மன் மாலுமிகள் அவைகளில் செல்ல மறுத்துவிட்டார்கள்.

10. அரண்யுத்தம் (Trench warfare).—இந்தப் போரின் முக்கிய சண்டை மேற்குக்களத்தில்தான் நடந்தது. அங்கு 1914-ம் வருடம் அக்டோபர்மீ முதல் நான்கு வருடங்கள் நேசக் கக்ஷிக்காரர் ஜர்மானியரைத் தாக்கி அவர்களது முயற்சிகளை எல்லாம் தடுத்து வந்தார்கள். கோடை வெய்யிலிலும், மாரிப் பனியிலும் படைகள் அனுபவித்த கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்துரைகக் இயலாது. இருதிறத்தாரும் எதிரில் குழிகளைத் தோண்டி அவைகளில் மறைந்து நின்று பீரங்கிகளை வெளியே வைத்துக்குண்டுகளை மழைபோல் பொழிந்தார்கள். நாளுக்குநாள் அனேகர் மாண்டனர். வெடிமருந்தும் குறைநதது. லாயிட் ஜார்ஜு (Lloyd George) என்ற பிரிட்டிஷ் பிரதம மந்திரி தன் பார்வையில் புதிய பீரங்கிகளையும் அபூர்வ சக்தியுடைய குண்டுகளையும் செய்வித்தார். இங்கிலாந்தில் 25-வயதுக்கு மேற்பட்ட மனிதர்கள் இராணுவத்தில் சேரும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். இந்தியாவிலிருந்து அனேக சிப்பாய்கள் போர்க்களம் சேர்ந்தனர். நமது சிப்பாய்கள் அரண் யுத்தத்தில் நடத்திய தீரச்செயல்களால் என்றும் அழியாப் புகழை அடைந்தார்கள்.

11. 1918-ம் வருடம் வசந்த காலத்தில் அமெரிக்கா உதவிச் சேனை அனுப்பு முன் நேசக் கக்ஷியின் படைகளை நசுக்கிவிட ஜர்மானியர் கடைசி முறை முயன்றார்கள். மார்ச், ஜூன் மாதங்களில் அனேகவெற்றிகளை அடைந்து பிரெஞ்சு

ஆங்கிலப் படைகளைப் பிரித்துவிடப் பார்த்தார்கள். அது வரையிலும் நேசக் கக்ஷிக்காரர் தனித்தனியே தங்கள் தங்கள் தளகர்த்தர்களின் கீழ் சண்டையிட்டார்கள். அதனால் தான் எதிரிகள் வெற்றி பெறலாயிற்று எனக் கண்டு லாயிட் ஜ்யார்ஜ், கீர்த்தி வாய்ந்த மார்ஷல் பாக் (Marshal Foch) என்னும் பிரெஞ்சு தளகர்த்தரை சர்வ அதிகாரத்துடன்

மார்ஷல் பாக்

நேசக் கக்ஷிப்படை முழுவதற்கும் தலைவராக நியமித்தார். அதன் பயன் உடனே தெரிந்தது. மேலும் அமெரிக்கர் உதவிப் படையும் வந்து சேர்ந்தது. ஜர்மன் வரிசைமீது அடிமேல் அடிவிழுந்தது. அவர்களது அரண்களும் பிடிக்கப்பட்டன. ஆஸ்டிரியாவும் துருக்கியும் சமாதானத்துக்கு முறையிட்டன. அந்த சந்தர்ப்பத்தில் கெய்ஸர் தன் மகுடத்தை விடுத்து உலாந்துக்கு ஓடிப்போய்விட்டான். ஆகை

யால் நேசக் கக்ஷிக்காரர்களின் நிபந்தனைகளுக்கு ஜர்மனி சம்மதிக்கவே 1918 நவம்பர்-மீ 11-உ ஆர்மிஸ்டிஸ் (Armistice - சண்டை நிறுத்தல்) பத்திரத்தில் யாவரும் கையொப்ப மிட்டனர். இப்பொழுது வருடா வருடம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் யாவரும் நவம்பர் மாதம் 11-ந்தேதி இரண்டு நிமிஷங்கள் தங்கள் வேலைகளை நிறுத்தி அந்நாளை மறவா வண்ணம் செய்கிறார்கள்.

12. வேர்ஸே உடன்படிக்கை.—எவ்விதம் உடன்படிக்கை செய்வது என்பதைத் தீர்மானிக்க எல்லா தேசத்தின் பிரதிநிதிகளும் பாரிஸ் நகரில் கூடினார்கள். நிதானித்து ஒரு தீர்மானத்திற்கு வர அனேக மாதங்கள் சென்றன. முடிவில் 1919-ம் வருஷம் ஜூன்—மீ அதாவது ஆஸ்டிரிய இளவரசன் கொலையுண்ட ஐந்தாண்டுகள் கழிந்த பின்னர், ஜர்மனி நேசக் கக்ஷிக்காரர்கள் விதித்த நிபந்தனைகளுக்குச் சம்மதித்தது.

வேர்ஸே உடன்படிக்கையின் முக்கிய ஷரத்துகள்.

1. ஜர்மனி 1871-ல் பிரான்ஸிலிருந்து ஜயித்த ஆல்ஸேஸ் லோரேன் மாகாணங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

2. ஜர்மன் காலனிகளை எல்லாம் நேசக் கக்ஷியார் வசம் ஒப்புவிக்கவேண்டும்.

3. இராணுவத்தையும் கப்பற் படையையும் குறைப்பதுடன் சண்டை நஷ்ட ஈடாகப் பெருந் தொகையையும் கொடுக்க வேண்டும்.

4. மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றும் வரையில் நேசக்கக்ஷிப்படை ரைன் நதிக்கரையில் சில நாடுகளில் தங்கியிருக்க வேண்டும். இந்த நிபந்தனைகள் யாவும் ஜர்மனியின் பலத்தை முற்றிலும் ஒடுக்கிவிட்டன. இப்பெரும் போரில் எவ்வளவோ உயிர்ச்சேதமும் தனநாசமும் ஏற்பட்டாலும் நற்பயன் ஒன்று உண்டாயிற்று. அதாவது இப்படிப்

பட்ட யுத்தம் இனி நேராதபடி தடுக்க "ஸர்வதேச சங்கம்" (League of Nations) ஒன்று ஏற்பட்டது. அச்சங்கம் வலுக்க வலுக்கப் போர் என்னும் பிணி மானிடரை விட்டு அகன்றுபோம்.

## அப்பியாசங்கள்

1. ஜர்மனி இந்தப் போரை என்ன எண்ணங்களுடன் துவக்கிற்று?
2. பிரிட்டன் என் இப்போரில் பிரவேசித்தது?
3. இப்போரின் இருகக்ஷிக்காரர் யார்?
4. அமெரிக்கா நேசக் கக்ஷியில் சேருவானேன்?
5. 'ஸர்வதேச சங்கம்' என்றால் என்ன?
6. வெர்ஸே சமாதானத்தின் நிபந்தனைகள் யாவை?
7. ஜர்மனி தோற்றுப் போனதற்கு இரண்டு காரணங்கள் கூறுக.
8. பியாட்டி, மார்ஷல் பாக், லாயிட் ஜ்யார்ஜ், பால்ஷ்விக்ஸ், இவர்களைப் பற்றி ஒரு விஷயம் எழுதுக.

## ஹானோவர் ஆட்சியில் முக்கிய சம்பவங்கள்

1714 முதலாவது ஜ்யார்ஜ் பட்டத்திற்கு வந்தது.
1715 "பதினைந்தாம் வருடக் கலகம்."
1720 தென் கடற் குமிழி.
1721 வால்போல் முதல் மந்திரி பதவியடைதல்.
1727 இரண்டாவது ஜ்பார்ஜ் அரசு ஆரம்பம்.
1739 ஜெங்கின்ஸ் காது அறு யுத்தம்.
1740 ஆஸ்டிரியன் வார்ஸாப்போர் துவக்கம்.
1745 "45-வது வருடக் கலகம்"
1748 ஆஸ்டிரியன் வார்ஸாப்போர் முடிவு.

1756 ஏழாண்டுப்போர் துவக்கம்.
1759 க்விபெக் கைப்பற்றப்பட்டது.
1760 வந்தவாசி யுத்தம்.
1763 பாரிஸ் சமாதானம்.
1773 பாஸ்டனில் தேயிலையைக் கொட்டியது.
1776 அமெரிக்க சுயாதீன அறிக்கை.
1781 காரன்வாலிஸ் யார்க் டவுனில் சரணமடைந்தது.
1783 வெர்ஸேல சமாதானம்.
1789 பிரெஞ்சுதேசப் புரட்சி.
1793 பிரிட்டன் யுத்தத்தில் பிரவேசித்தல்.
1797 ஸெண்ட் வின்ஸெண்ட் சண்டை.
1798 நைல்நதி யுத்தம்.
1802 ஏமியன்ஸ் சமாதானம்.
1805 டிரபால்கர் வெற்றி.
1807 வெலிங்டன் ஸ்பெயினில் போர் புரிதல்.
1812 நெபோலியன் மாஸ்கோவுக்குப் படையெடுத்தல்.
1813 டூலூ சண்டை
1814 நெபோலியனை எல்பாவுக்கு அனுப்பியது.
1815 வாடர்லூ சண்டை—யுத்த முடிவு.
1820 நான்காம் ஜ்யார்ஜ் சிங்காதன மேறுதல்.
1830 நான்காம் வில்லியம் சிங்காதன மேறுதல்
1837 விக்டோரியா மகாராணியார் சிங்காதனமேறியது.
1840 பென்னித் தபால்.
1846 தானிய சட்டங்களை ரத்து செய்தல்.
1854 கிரிமியன் யுத்தம்.
1866 சமுத்திரத்தின்கீழ் தந்தி போடப்பட்டது.
1885 கார்டன் கார்ட்டூமில் இறந்தது.
1897 டயமண்டு ஜூபிலி.

1898 ஸூடானை ஜயித்தது.

1899 போயர் யுத்தம்.

1901 விக்டோரியா மகாராணியின் மரணம். ஏழாவது எட்வர்டு அரசுக்கு வந்தது.

1909 தென் ஆப்பிரிக்கா ஐக்கியமானது.

1910 எட்வர்டு மன்னரின் மரணம்.

1911 டில்லியில் ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக தர்பார்.

1914 ஐரோப்பிய மகா யுத்த ஆரம்பம்: மாரன் யூப்ரிஸ் சண்டைகள்.

1915 இடாலி நேசக் கக்ஷியில் சேர்ந்தது.

1916 ஜட்லாந்தில் பியாட்டியின் வெற்றி.

1917 பால்ஷெவிக் புரட்சி; அமெரிக்கர் நேசக் கக்ஷியில் சேர்தல்.

1918 ஆர்மிஸ்டிஸ் (சண்டை நிறுத்தல்.)

1919 வெர்ஸே சமாதானம்.

---

77564
V561
N28

Printed by S. Ganesan,
at the Current Thought Press, Triplicane, Madras.